2985

T.N.L.A Debates
Official Report

Vol - 42. NO 2

4th May 1987

C

211,31 N87
N87.422
136530

வெளியீடு 16-5-1988 Issued 16-5-1988

2485

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, மே 4, 1987–தொகுதி 42–எண் 2

Monday, the 4th May 1987–Volume 42–No 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

Legislative Assembly Secretariat Fort St. George,
Madras-600 009

விலை ரூ.3.00 காசுகள்] [Price Rs-3 00 pais

ங்கள்
—359
360
—364
—365
—368
—37[illegible]
376

| | பக்கங்கள் |
|---|---|
| 6. வரவு-செலவுத் திட்டம், 1987-88 வாக்கெடுப்பு. (தொடர்ச்சி) | 379 |
| (அ) கோரிக்கை எண். 15—காவல் துறை | 380 |
| (ஆ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் | 380 |
| மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் | 380—382 |
| திருமதி டி. யசோதா | 382—403 |
| *திரு. வி. பாலகிருஷ்ணன் | 403—411 |
| திரு. அ. ரகுமான்கான் | 411—426 |
| * திரு. சைதை சா. துரைசாமி | 427—436 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 436—443 |
| திரு. கூடலூர் இ. வி. வேலு | 443—453 |
| * திரு. கே. சுப்பராயன் | 453—465 |
| திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் | 465—472 |
| 7. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் | 472—473 |


1.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## 1987, மே 4, திங்கட்கிழமை

## சித்திரை 21, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"உறுப்பமைந்து ஊறஞ்சா வெல்படை வேந்தன்
வெறுக்கையு ளெல்லாம் தலை".

எல்லா உறுப்புக்களும் நிறைந்ததாய் இடையூறுகளுக்கு அஞ்சாததாய் உள்ள வெற்றி தரும் படை, அரசனுடைய செல்வங்கள் எல்லாவற்றிலும் சிறந்ததாகும்.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

### சென்னை இராதாகிருஷ்ணன் நகரை ஒட்டியுள்ள பகுதியில் கடலரிப்பு.

567—(* வினா எண். 3182) திரு. எஸ். **வேணுகோபால் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை இராதாகிருஷ்ணன் நகரினை ஒட்டியுள்ள கடற்கரைப் பகுதிகள் அடிக்கடி கடலரிப்பால் பாதிக்கப்படுவது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், கடலரிப்பைத் தடுப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இராயபுரம், காசிமேடு பகுதிகளில் மொத்தம் 1,020 மீட்டர் நீளத்திற்கு கடலரிப்பு ஏற்பட்டிருந்தது. இங்கு பாது காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ரூ. 17.50 இலட்சத்திற்கு

ஆவணக்காப்பக நூலகம்
136530
சென்னை-600 008.

# உள்ளடக்கம்.

4—5—1987


| | பக்கங்கள் |
|---|---|
| 1. வினாக்கள்—விடைகள் : | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் .. .. | 321 —359 |
| 2. கவன ஈர்ப்பு : | |
| (அ) ஜெயங்கொண்டான் மருத்துவமனையில் ‘எக்ஸ்ரே கருவி சரியாக இயங்காதது | 360 |
| (ஆ) மண்டபத்திலுள்ள ‘தமிழ்நாடு முத்து நிறுவனம்’ செயல்படாமை | 360—364 |
| (இ) ஓமலூர் தோல் சந்தையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் பாதிப்பு | 364—365 |
| (ஈ) திடீர் நகர், கோதாமேடு குடிசைப் பகுதிகளில் மாற்றுக் குடியிருப்புகள் கட்டும் பணி. | 365—368 |
| (உ) கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை ஒன்றியங்களில் சில மேல் நிலைத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு வழங்காதது | 368—370 |
| (ஊ) துவரங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டுவதில் தடங்கல் | 371 —374 |
| (எ) நத்தம் கோயில்பட்டி கைலாசநாதர் கோயில் திருப்பணி | 374—376 |
| 3. அறிக்கை அளித்தல் : | |
| பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு | 376 |
| 4, தாவல் கோரல் : | 377 |
| 5. அரசினர் சட்ட முன்வடிவுகள் | |
| (அ) தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1987. | 377 |
| (ஆ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987. | 378 |
| (இ) திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987. | 378 |


டி.8 எ 71—1

அரசு அங்கீகாரம் அளித்தது. கற்குவியற் சுவர் கட்டும் பணி எடுத்துக் கொள்ளப்பட்டு, பணி முடிக்கப்பட்டுவிட்டது. இதன் மூலம் இராதாகிருஷ்ணன் நகரை ஒட்டியுள்ள பகுதிக்கு பாதுகாப்பு கிடைத்துள்ளது.

**திரு. எஸ். வேணுகோபால்:** பேரவைத் தலைவர் அவர்களே, இராதாகிருஷ்ணன் நகரிலே பாதிக்கப்பட்ட இடங்களில் குடியிருப்போருக்கு வேறு இடங்கள் ஒதுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்க வேண்டும். இது கடலரிப்பைப் பற்றியதால், கடலரிப்பு பற்றிய விவரம்தான் என்னிடம் இருக்கிறது.

### சித்த மருத்துவக் கல்லூரிக்கு அரசு பேருந்து

568—(* வினா எண். 4792) **டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சித்த மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு அரசு பேருந்து கல்வி சுற்றுலா செல்ல வழங்கியும் அதனை மாணவர்கள் பயன்படுத்த முடியாமல் இருக்கும் காரணம் யாது?

(ஆ) அதற்கென மாதம் 250 லிட்டர் டீசல் வழங்கப்படுகிறதா?

(இ) பேருந்து இயங்காத காலத்தில் அப்பணம் எப்படி செலவிடப்படுகிறது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) பாளையங்கோட்டையிலுள்ள சித்த மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்பட்டுள்ள பேருந்து 1985 ஆம் ஆண்டு பழுதடைந்து, பழுதுநீக்க, பணிமனைக்கு அனுப்பப்பட்டது. ஆனால் அரசு சுகாதார போக்குவரத்துத் துறை வல்லுநர்கள் பார்வையிட்டு, பேருந்து பயனற்ற நிலையில் உள்ளது என்று சிபாரிசு செய்துள்ளனர்.

(ஆ) ஆம்.

(இ) பேருந்து இயங்காத காலத்தில் அப்பணம் ஒப்புவிப்பு (Surrender) செய்யப்படுகிறது.



2485



**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பேருந்து பழுதடைந்து இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அதற்குப் பதிலாக, புதிய பேருந்து ஏதேனும் வாங்கிக் கொடுப்பதற்கு அரசு இந்த ஆண்டு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, இவ்வாண்டு அதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளப்படும்.

### கன்னியாகுமரி தொகுதியில் மூலிகைப் பண்ணை

569—(* வினா எண் 7605) **திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி தொகுதியில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் ஆரம்பிக்க திட்டமிடப்பட்ட மூலிகைப் பண்ணை என்ன நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மூலிகைப் பண்ணை அமைக்க நீர்ப்பாசன வசதியுடன் கூடிய தகுந்த நிலம் இதுவரை கிடைக்காமையால் மூலிகைப் பண்ணை அமைக்கப்படவில்லை. இருப்பினும், மாவட்ட ஆட்சியரின் ஒத்துழைப்புடன் தகுந்த நிலத்தை கையகப்படுத்தி மூலிகைப் பண்ணை அமைக்க இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி இயக்குநர் நடவடிக்கை எடுத்து வருகிறார்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் வீரப்புலி ரிசர்விலும், மருத்துவாமலையிலும் பண்ணை அமைப்பதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன என்று ஏற்கனவே இச்சட்டமன்றத்திலே சொல்லப்பட்டது. அங்கு அந்த மூலிகைப் பண்ணை அமைப்பதற்கு என்ன தடங்கல் ஏற்பட்டிருக்கிறது? அந்த இடத்திலே விரைவிலே அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட வீரப்புலி காப்புக்காட்டில் 40 ஹெக்டேர் நிலத்தில் பண்ணை அமைக்க இப்பொழுது அரசு முயற்சி எடுத்தது. ஆனால், மத்திய அரசு

வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் அதைப் பயன்படுத்தக் கூடாது என்று தடுத்த காரணத்தால், அதனுள்ளே புகுந்து, கையகப்படுத்தி, பண்ணை அமைக்க இயலவில்லை.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** தலைவர் அவர்களே, மத்திய அரசே சித்த மருத்துவத்தை ஊக்குவிப்பதற்கான நடவடிக்கைகளைத் தற்சமயம் எடுத்து வருகிறது. பாளையங்கோட்டை மருத்துவக் கல்லூரியிலே ரிசர்ச் ஏற்பாடுகளுக்கு விட்டுக் கொடுத்ததாக அமைச்சர் அவையில் சொன்னார். இந்தப் பின்னணியில் மூலிகைக்குத் தட்டுப்பாடு இருக்கிற இந்த நேரத்தில், மேலும் ஏற்றுமதிக்குத் தேவைப்படுகிற இந்த நேரத்தில், இந்த ரிசர்வ் இடத்தை இதற்காக ஒதுக்க மத்திய அரசை அணுகி அங்கே மூலிகைப் பண்ணை அமைக்க, அதை விரைவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளை அரசு பிரத்தியேகமாக எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசுக்கு எழுதவில்லை. ஆனால், ஆட்சேபம் தெரிவித்த காரணத்தால், மாற்று இடம் தேடிக் கொண்டிருக்கிறார்கள். மாற்று இடம் கிடைத்தால் உடனே அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

**தமிழ்நாட்டில் வேலை கிடைக்காத பல் வைத்தியர்கள்**

570—(*வினா எண். 11111) **திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் வேலை கிடைக்காமல் இருக்கும் பல் வைத்தியர்கள் (Dentists) எவ்வளவு பேர்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை வாய்ப்பு இயக்குநரகத்தில் 28—2—1987 வரையில் பதிவு செய்யப்பட்டுள்ள பல் வைத்தியர்கள் 31 பேர் ஆவர். இவர்களில் ஆண்கள் 24 பேர். பெண்கள் 7 பேர்.



**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கே. கே. நகர் போன்ற அரசு புறநகர்ப் பகுதி மருத்துவ மனைகளிலே பல் வைத்தியர்கள் குறைவாக இருக்கிற காரணத்தினால் வாரத்திற்கு ஒரு முறைதான் வந்து நோயாளிகளைப் பார்த்துவிட்டுச் செல்கிறார்கள். அவர்களை நிரந்தரமாக புறநகர் மருத்துவ மனைகளிலே பணியாற்றச் செய்யக் கூடிய முறையிலே வேலையில்லாதவர்களை நியமனம் செய்வதற்கு அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாதவர்களுக்கு எல்லாம் வேலை கொடுக்க இயலாது. வைத்தியம் தேவைப்படுகிற நேரத்திலே நியமனம் செய்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இடத்திலே தேவைப்படுகிற பல் வைத்தியர்களை நியமிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையில் அரசு பல் மருத்துவக் கல்லூரியை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஒன்று ஆய்வில் இருந்தது. எப்போது அது செயல்படுத்தப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு அதைப்பற்றிய செயற்குறிப்பு இருந்தது உண்மைதான். ஆனால் தற்சமயம் அது பரிசீலனையில் இல்லை.

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நல்ல பயிற்சியும் நல்ல சிகிச்சையளிக்கும் திறமையும் உள்ள பல் டாக்டர்கள் பலர் அரசாங்க உத்தியோகத்தை விட்டே வெளியே போய்விடுகிறார்கள். அதே நேரத்திலே பல் டாக்டர்கள் பலர் வேலையில்லாமல் வெளியே இருக்கிறார்கள், அதுதான் யதார்த்த நிலை. அரசாங்க வேலையில் இருந்து அவர்கள் வெளியே போவதற்குக் காரணம் அரசு அவர்களுக்கு அளிக்கிற சம்பளம், மற்ற சலுகைகள் போதாது என்ற காரணந்தானா? அப்படி யானால் அமைச்சர் அவர்கள் அவர்களுக்குப் போதுமான

[திரு. கு. ரமணி] [1987 மே 4

சம்பளம் முதலியவற்றைக் கொடுத்து அவர்கள் அரசாங்க மருத்துவ மனைகளிலேயே இருக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்வார்களா? அதோடு வேலையில்லாமல் இருக்கிறவர்கள் பட்டியல் ஒன்றைத் தயாரித்து முறைப்படி அதிலிருந்து எந்த எந்த இடங்கள் காலியாக இருக்கின்றனவோ அதைப் பார்த்து அவ்வப்போது அவர்களை அங்கங்கே நியமனம் செய்வதற்கும் ஏற்பாடுகளைச் செய்வார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல் வைத்தியர்கள் மட்டும் போய்விடுவதில்லை. மற்றத் துறைகளிலும் உள்ளவர்கள் நல்ல திறமையும் பெரும் புகழும் பெற்றதற்குப் பிறகு அரசுப் பணியிலிருந்து விலகி விடுகிறார்கள். அரசாங்கம் கொடுக்கிற ஊதியம் குறைவு என்பது காரணமாக இருக்கலாம் என்று சொன்னார்கள். அதுவும் கூட ஒரு காரணமாக இருக்கலாம். அரசாங்க நிதிநிலைமை சரியில்லாத காரணத்தினாலே அதற்குமேல் தர இயலாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். இருப்பினும், திறமைபெற்ற சிறந்த வைத்தியர்கள் எல்லோருமே போய் விட்டார்கள் என்று சொல்லமுடியாது. சென்னையிலிருக்கிற பல் மருத்துவ மனை ஆசியாவிலேயே மிகச் சிறந்த வல்லுநர்களைக் கொண்டதாக விளங்குகிறது. அது பாராட்டத் தகுந்த முறையிலே இன்றைக்கு நடந்து கொண்டிருக்கிறது. வேலையில்லாதவர்களுக்கு வேலை கொடுக்க இயலாது. எங்கெங்கு தேவைப்படுகிறதோ அங்காங்கே அவ்வப்போது நியமிப்போம்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பல் வைத்தியர்கள் மட்டுமல்ல, மற்ற வியாதிகளைப் பார்க்கிற வைத்தியர்கள் கூட ஒவ்வொரு வியாதிக்கும் ஒவ்வொரு விதமான பீஸ் வாங்குகிறார்கள். எந்த எந்த வியாதிக்கு எவ்வளவு பீஸ் வாங்கவேண்டும் என்பது குறித்த ரேட்டை நிர்ணயம் செய்ய அரசு முன்வருமா? சென்னை, மதுரை போன்ற இடங்களிலே சீனர்கள் பல் வைத்தியம் செய்து வருகிறார்கள். அங்கே கூட்டம் அதிகமாகப் போகிறது. ஆகவே அவர்களை அரசு மருத்துவ மனைகளில் வேலைசெய்யச் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா?



1987 மே 4]

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை, மதுரையிலே சீனர்கள் பல் வைத்தியம் செய்து வருவதாகச் சொல்கிறார்கள். இப்போது அதிகமாக இல்லை, இப்போது நம் நாட்டிலேயே சிறந்த பல் வைத்தியர்கள் வந்துவிட்ட காரணத்தினால் அது தேவையற்றது. அவர்களை அரசு மருத்துவ மனைகளிலே நியமனம் செய்வது என்பது முடியாத ஒன்று. ஒவ்வொரு வியாதிக்கும் டாக்டர்கள் பீஸ் வாங்குவதை நிர்ணயம் செய்யமுடியுமா என்று கேட்டார்கள். அரசாங்கப் பணியிலிருக்கிறவர்கள் அப்படி வாங்கக்கூடாது என்பது சட்டம். தனியார்கள் வாங்குவதைப் பற்றி நாம் ஒன்றும் செய்வதற்கு இல்லை.

**திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையிலே பல்மருத்துவக் கல்லூரி துவங்க செயற்குறிப்பு இருந்தது உண்மைதான், ஆனால் இந்த ஆண்டு அது இல்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சென்னைக்கு அடுத்தபடியாக பல் வைத்தியத்திற்காக அதிகமாக வருகிறவர்கள் மதுரையிலேதான், திறமையான மருத்துவர்கள் இங்கேதான் இருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆகவே அதற்காக மதுரையிலிருந்து சென்னைக்கு வந்து வைத்தியம் செய்வது கஷ்டமாக இருக்கும். ஆகவே இந்த மருத்துவக் கல்லூரியை வருகிற ஆண்டிலாவது துவக்குவதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த பல் மருத்துவக் கல்லூரி துவக்குவதாக இருந்தால் அது மதுரையில்தான் துவக்கப்படும்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. வேடசர்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்** (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவர்கள் கூடுதலாக நோயாளிகளிடம் பணம் வாங்குவதைத் தடுப்பது என்பது இயலாத நிலையில் இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தனியார் மருத்துவ மனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக 'Private Nursing Home Regulation Act' என்று ஒரு சட்டம் கொண்டு வர இருக்கிறோம் என்றுகூட சமீபத்

[மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்]
[1987 மே 4

திலே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தச் சட்டத்திலேயே அவர்கள் எவ்வளவு வசூலிக்கலாம் என்றும் அதற்கு முறையாக பில் போட வேண்டும் என்றும், கடுமையான விதிகளைப் புகுத்தி அதைக் கொண்டு வர அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் மருத்துவ மனைகளைக் கட்டுப்படுத்துவது என்று சொன்னதற்குக் காரணம் ஒரு தனியார் மருத்துவ மனை (Private Nursing Home) இருக்கிறது என்றால், குறைந்தபட்சம் என்னென்ன வசதிகள் இருக்க வேண்டும், அவை எப்படியெப்படி இருக்க வேண்டும் என்று நாம் நிர்ணயிப்பதற்காகத்தான் கட்டுப்படுத்த வேண்டுமென்று இருக்கிறோமே தவிர, வாங்குகிற பணத்தைப் பொறுத்து அல்ல. கொடுக்கின்றவர்கள் தரத்தைப் பொறுத்தது, வாங்குகின்றவர்கள் தரத்தைப் பொறுத்தது. இரண்டு பேரையும் வருமான வரி இலாகா கவனிக்க வேண்டுமே தவிர, நம்மால் கவனிக்க முடியாது.

**திரு. த. புஷ்பராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில அரசு மருத்துவ மனைகளில் பெண் டாக்டர்கள் இல்லை. அத்தகைய ஒரு சூழ்நிலையிலே ஆண் டாக்டர்களே பிரசவம் பார்க்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்தக் குறையைச் சட்டமன்ற உறுப்பினர்களாகிய நாங்கள் எடுத்துச் சொல்கின்றபொழுது, பெண் டாக்டர்கள் நியமிக்கப்படுகிறார்கள். ஆனால், அவர்கள் அந்தப் பொறுப்பை ஏற்க வருவதில்லை. இது குறித்து தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லையென்றாலும் அது போல் பெண் மருத்துவர்கள் இல்லாத இடங்களுக்குச் சிலரை நியமித்தால் போவதற்கு அவர்கள் தயங்குகிறார்கள். அது உண்மைதான். இருந்தாலும் அரசு அவர்களைக் கட்டாயப்படுத்தி போய்த்தான் தீர வேண்டுமென்று வற்புறுத்துகிறது. அதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.



1987 மே 4]

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மிகச் சிறப்பாக இயங்கி வருகிற சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறுகிற குழந்தைகளுக்கு பல் சம்பந்தப்பட்ட வியாதிகள் வந்திருக்கின்றதா என்பதை அறியும் பொருட்டு, மாதம் ஒருமுறை பல் வைத்தியர்களை வைத்து, அங்கே சோதனை நடத்தப்படுமா? 2 வயதிலிருந்து 5 வயது வரை, அந்தச் சத்துணவு மையங்களிலே படிக்கிற அந்தக் குழந்தைகளுக்கு முதல் கட்டமாக அந்தச் சோதனை நடத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குழந்தைகளினுடைய பல்லைப் பாதுகாப்பதற்காகத்தான் பற்பொடியை முதல் அமைச்சர் அவர்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**டாக்டர் அ. பொன்னுசாமி:** பெருமைபெற்ற பேரவையின் தலைவர் அவர்களே, பல் ஒழுங்காகப் பாதுகாக்கப்படாததனால், பல் நோய் மட்டுமல்லாமல், பலவிதமான நோய்களும் வருகின்றன என்பது மருத்துவக் கூற்று. ஆகவே, ஒவ்வொருவரும் ஆண்டுக்கொரு முறையாவது பல் வைத்தியம் செய்து கொண்டு, சான்றிதழ் வாங்க வேண்டுமென்ற ஒரு வரைமுறையைக் கொண்டு வர அரசு உத்தேசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அனைவரையும் இப்படி கட்டாயப்படுத்தி கேட்பது என்பது இயலாத காரியம். மாண்புமிகு உறுப்பினர் ஒரு டாக்டர். அவரே ஆண்டுக்கொரு முறை செய்துகொள்கிறாரா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது.

**திரு. வி. தங்கவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலை கிடைக்காமல் பல் வைத்தியர்களாக இருக்கக்கூடியவர்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளை, தனியாக கிளினிக் வைக்க அணுகுகின்றபொழுது அவர்கள் கடன் கொடுக்காமல் இல்லையென்று சொல்லி தொல்லை தருகிறார்கள். இப்படி வேலையில்லாத பல் மருத்துவர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் இருந்து உடனே கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய ஆவலாக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக மருத்துவர்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் கொடுக்கிறார்கள். ஏன் கொடுக்கவில்லையென்ற விவரம் எனக்குத் தெரியாது. பாராளுமன்றத்தில்தான் கேட்க வேண்டும்.

### டால்மியாபுரம் சிமெண்ட் தொழிற்சாலை.

571—(*வினா எண் 11334) **டாக்டர் ந. மாசிலாமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டால்மியாபுரம் சிமெண்ட் தொழிற்சாலையில் வெளி வரும் புகையினால் நுரையீரல் புற்றுநோய் அதிகரிப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) டால்மியாபுரம் சிமெண்ட் தொழிற்சாலையிலிருந்து வெளிவரும் புகையினால் நுரையீரல் புற்றுநோய் அதிகரிப்பதாக புகார் ஏதும் அரசுக்கு வரவில்லை.

(ஆ) எழவில்லை.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் உள்ள சிமெண்ட் தொழிற்சாலைகளிலிருந்து வெளிவரும் கரும்புகை தூசிகள் வெளியேற்றத்தைத் தடுத்து சுத்திகரிக்க அனைத்துத் தொழிற்சாலைகளையும் நவீனமயமாக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, இது தமிழ்நாடு முழுவதற்கும் இருக்கிற பொதுப் பிரச்சினையாகும். ஏன், இந்தியா முழுவதற்கும் என்றுகூடச் சொல்லலாம். சிமெண்ட் ஆலைகளிலிருந்து வெளி வருகின்ற புகையினால் பாதிக்கப்படுகிறார்கள் மக்கள் என்பது உண்மை தான். வெளியேறுகிற புகையைச் சுத்திகரிப்பதற்கு நவீன சுத்திகரிப்பு ஆலைகள் வைக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். புதிதாகத் துவங்குகின்ற ஆலைகளுக்கு அந்தச்



சுத்திகரிப்பு ஆலை வைத்தால்தான் அனுமதி வழங்கப்படும் என்ற விதியை வைத்திருக்கிறோம். ஏற்கனவே இருக்கிற ஆலைகள், புதிதாக வைக்கவேண்டுமென்று வற்புறுத்தலாமே தவிர, வேறுவழியில்லை. மீறுகின்றவர்கள்மீது வழக்குதான் தொடர முடியும் அதை அரசு தொடுத்துக் கொண்டு வருகிறது.

### கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, குனியமுத்தூர், மதுக்கரையில் பிற்படுத்தப்பட்ட மாணவர் விடுதி.

572—(*வினா எண். 11696) **திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், பேரூர் தொகுதி, குனியமுத்தூர், மதுக்கரையில் பிற்படுத்தப்பட்டோர்களுக்கான மாணவர் விடுதி ஒன்றினைத் தொடங்கிடும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

### திருமங்கலம் அரசினர் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் இல்லம்.

573—(*வினா எண் 12424) **திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமங்கலத்தில் உள்ள அரசினர் மாணவர் பிற்படுத்தப்பட்டோர் இல்லத்தில் மாணவர் எண்ணிக்கையை அதிகரிக்கும் செயற்குறிப்பு உள்ளதா?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதி குறிப்பாக, திருமங்கலம் பொருளாதார ரீதியிலே மிகவும் பிற்பட்ட பகுதி என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களே அறிவார்கள். இந்தத்

[1987 மே 4

திருமங்கலத்திலே உள்ள அரசினர் மாணவர் பிற்படுத்தப்பட்டோர் இல்லம் துவக்கப்பட்டு, 10 ஆண்டுகளாகியும் 50 மாணவர்கள்தான் சேர்க்கப்படுகிறார்கள். திருமங்கலத்தில் மட்டும் இரண்டு அரசு மேல்நிலைப் பள்ளிகள் இருக்கின்றன. மொத்தம் 3,000-க்கு மேற்பட்ட மாணவர்கள் படிக்கின்ற அந்த ஊரிலே 50 மாணவர்கள்தான் பிற்படுத்தப்பட்டோர் இல்லத்திலே சேர்க்கப்படுவது என்பது மிகக் குறைவு—யானைப் பசிக்கு சோளப் பொறியைப்போல. எனவே, இந்த 50 என்ற எண்ணிக்கையை 200 ஆக உயர்த்த அரசு நடவடிக்கை எடுக்குமா ?

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அரசு நடத்துகின்ற மாணவர் விடுதியில் 200 மாணவர் விடுதி என்று எந்த விடுதியிலும் இல்லை. 50-லிருந்து 120 வரை சேர்ந்துக் கொண்டிருக்கிறோம். இதை உயர்த்துவதற்கு இவ்வாண்டு அரசு பரிசீலிக்கும். மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள மொத்த பிற்பட்ட மாணவர் விடுதியினுடைய எண்ணிக்கை எவ்வளவு? சென்னை நகரத்தில் எத்தனை இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, பிற்பட்டோர் இல்லங்கள் 558 இருக்கின்றன. சென்னையிலே எத்தனை என்பதற்குத் தனியாகக் கேள்வி கேட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருமங்கலம் அரசினர் பிற்பட்டோர் இல்லத்தில் வருகின்ற கல்வியாண்டில் மாணவர்கள் எண்ணிக்கையை உயர்த்தி சேர்த்துக்கொள்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, அதைப்பற்றி முயற்சி எடுக்கலாம்.



1987 மே 4]

**மதுரை மாவட்டம் நிலக்கோட்டையில் பழங்கால ஓவியம்**

574—(* வினா எண் 5918) திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம் நிலக்கோட்டை அருகில் பழங்கால ஓவியங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது பற்றிய விவரம் யாது?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, மத்திய மாநில தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தால் பழங்கால ஓவியங்கள், கட்டிடங்கள், அரண்மனைகள் கண்டுபிடிக்கபபடுகின்றன. ஆனால் தனியார்கள் யாராவது கிணறு தோண்டும்போது நாணயங்களோ, கட்டிடங்களோ ஏதும் கண்டுபிடித்து அரசுக்கு தெரிவித்தால் அவர்களுக்கு சன்மானம் கொடுக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, பழைய நாணயங்கள் அப்படி கண்டுபிடிக்கப்பட்டால் அது அரசுக்குத்தான் சொந்தம். அவர்கள் சம்பந்தப்பட்ட தாசில்தாருக்கு அறிவிக்க வேண்டும். அறிவிக்கவில்லை என்றால், சன்மானம் கொடுப்பதற்குப் பதிலாக அவர்களிடமிருந்து பொருள்களைக் கைப்பற்றும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. இரா. தாமரைக்கனி:** தலைவர் அவர்களே, மத்திய மாநில தொல்பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் மூலமாகக் கட்டிடங்கள், அரண்மனைகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இந்தக் கட்டிடங்களையெல்லாம் பி.டபிள்யூ.டி. டிபார்ட்மெண்ட் பாதுகாப்பாக வைத்திருக்கிறது. ஆனால் பி.டபிள்யூ.டி. டிபார்ட்மெண்ட்டின் சில அதிகாரிகள் அந்தத் தொல்பொருள் ஆராய்ச்சிக்குச் சம்பந்தப்பட்ட கட்டிடங்களை வாடகைக்கு விடுகிறார்கள். இதனால் அந்தத் தொல்பொருள் ஆராய்ச்சியினுடைய மரியாதை கெட்டுப் போகக்கூடிய சூழ்நிலை உருவாகின்றது. இதைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, மூலக்கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற இடம், கட்டிடம் போன்றவற்றை யார் அப்படி தவறாகப் பயன்படுத்துகிறார்கள் என்ற விவரம் கொடுத்தால் அதுபற்றித் தனியாக நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. கோ. வீரய்யன்:** தலைவர் அவர்களே, இந்தப் பழங்கால ஓவியங்களைப் பாதுகாக்கக்கூடிய முறையில் தஞ்சை மன்னரால் கட்டப்பட்ட ஒரு அரண்மனை திருவிடைமருதூரிலே பாதுகாப்பு அற்ற நிலையிலே கிடக்கின்றது. அதைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கையை அரசு எடுக்குமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, தொல்பொருள் துறை இதுபற்றி ஆராய்ச்சி நடத்தி எங்கெங்கு பழங்காலத்தினுடைய புராதனக் கலைகள், ஓவியங்கள், சுவர் ஓவியங்கள் இருக்கின்றனவோ அவைகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கின்ற இடம்பற்றியும் துறை உரிய நடவடிக்கை எடுக்கும்.

மதுரை மாநகர் அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள "பாதாளக் கோவில்".

575—(* வினா எண் 9507) **திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை மாநகரில், அருள்மிகு மீனாட்சி அம்மன் கோவிலைச் சார்ந்த புதுமண்டபம் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட "பாதாளக் கோவிலை" சுற்றுலா பயணிகள் பார்க்கத் தக்கதாக ஏற்படுத்த அரசு திட்டமிட்டுள்ளதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** தலைவர் அவர்களே, மதுரையினுடைய தொன்மையை எடுத்துக்காட்டக்கூடிய இடங்கள், அமைப்புகளில் ஒன்றான இந்தச் சுரங்கப் பாதையை நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் கூட வந்து பார்வையிட்



டிருக்கிறார்கள். சுற்றுலாப்பயணிகள் பார்க்கத்தக்க வகையிலே அதை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தை ஏற்கெனவே சொல்லி யிருக்கிறார்கள். இதிலே ஒரு சுரங்கம் இருப்பதாகச் சொல கிறார்கள். நம்முடைய மீனாட்சியம்மன் கோவிலிலிருந்து அழகர் கோவில் வரை சுரங்கப்பாதை இருப்பதாகச் சொல்லப்படு கின்றது. அதைப்பற்றிய ஆராய்ச்சி மீண்டும் நடத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியில் பாதாளக் கோவில் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இங்கு பாதாளக் கோவில் எதுவும் கண்டுபிடிக்கப்படவில்லை. கீழே ஒரு சுரங்கம் இருப்பதாகவும், பள்ளம் இருப்பதாகவும் கண்பிடித்து இருக்கிறார்கள். ஒவ்வொரு கோவிலின் பின்புறத்திலிருந்து பல்வேறு இடங்களுக்குச் சுரங்கம் போவதாகச் சொல்கிறார்கள். இதுபற்றித் தனியாகத்தான் ஆய்வு நடத்த வேண்டும்.

**திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்:** தலைவர் அவர்களே, கோவில் இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் உள்ளபடியே அங்கே சிற்பங்கள் எல்லாம் இருக்கின்றன என்று உள்ளே சென்று பார்த்தவர்கள், அதிகாரிகள் எல்லாம் சொல்லி, அதற்குப்பின்னாலே முதல்வர் அவர்கள் கூட மதுரையிலே சென்று அதைப் பார்வையிட்டார்கள். அதிலே நியாயமான அர்த்தம் இருக்கிறது, அங்கே சிற்பங்கள் எல்லாம் இருக்கின்றன என்ற எண்ணத்திலேதான் மீண்டும் ஆராய்ச்சி செய்யப்படுமா என்றும், சுற்றுலாப் பயணிகள் பார்க்கத்தக்க வகையிலே அங்கே ஏற்பாடு செய்யப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு ஒரு விளம்பரப் பலகை வைக்கப் படும். என்னென்ன கண்டுபிடிக்கப்பட்டன என்பதைப் பற்றி அதிலே எழுதப்படும். அங்கே ஒரு மண்டபம்தான் கீழே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. ஏழு கிணறுக்குப் போகிற

[1987 மே 4

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இசைவைப் பெற்று அங்கு ஒரு பெரிய நூற்பாலையை ஏற்படுத்தி, அந்த நூற்பாலைக்கு சிவா அவர்களுடைய பெயர் வைக்கவேண்டும் என்ற கருத்துரு மைய அரசிற்கு அனுப்பப்பட்டு, மைய அரசின் நிலுவையிலே அது இருந்து வருகிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு இந்தியாவிலேயே காசியிலேதான் பாரத மாதா கோயில் என்று சொல்லி, ஒரு நினைவுச் சின்னம் சுதந்திரப் போராட்ட வீரரால் நிர்மாணிக்கப்பட்டு, இந்தியாவின் வரைபடத்தையே பாரத மாதாவின் திரு உருவச் சிலையாகக் கொண்டு இருக்கிறது. இன்றைக்கு சுதந்திரப் போராட்டத்தினுடைய தமிழக வீரர் சுப்பிரமணிய சிவா அவர்கள் ஒரு பாரத மாதா கோயிலுக்கு அடிகோலியிருக்கிறார் என்ற கருத்தின் அடிப்படையில் வடநாட்டில் இருப்பது போல, தமிழகத்திலேயும் இதுபோன்ற பாரத மாதா கோயிலை அமைக்க இந்த அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரத மாதா கோயிலுக்கு அடிக்கல் நாட்டப்படவில்லை. அடிக்கல் நாட்டப்பட்ட கல்லிலே உள்ள வாசகம்—"ருத்ரோத்காரி வருஷம், வைகாசி மாதம் ஸ்ரீமான் தேசபந்து ஸ்ரீசித்தரஞ்சன்தாஸ் அஸ்திவாரக்கல் நாட்டினார்." பாரதபுரம் என்ற ஒரு பெயரிடுவதற்காக நாட்டப்பட்டிருக்கிறது. அதுவும், தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு உறுதுணையாக இருந்த நண்பர் திரு. எம். சின்னமுத்து முதலியார் அவர்களது குமாரர் திரு. எம். சி. கந்தசாமி முதலியார் அவர்களுடைய வீட்டிலே இருக்கிறது.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தியாகி சுதந்திரப் போராட்ட வீரர் சுப்பிரமணிய சிவா அவர்களுடைய சமாதி எங்களுடைய தர்மபுரி மாவட்டம் பாப்பாரப்பட்டியில் அமைக்கப்பட்டு, நினைவுச் சின்னம் ஒன்று எழுப்பப்பட்டு இருப்பதாக அறிகிறேன். தர்மபுரி மாவட்டத்திலே மிகுந்த சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடிய ஒகனேக்கல் நீர்வீழ்ச்சிக்கு அருகாமையில்தான். போகிற வழியிலேயே,



1987 மே 4]

பாப்பாரப்பட்டியில் சுப்பிரமணிய சிவாவின் சமாதி இருக்கிற காரணத்தால், தர்மபுரி மாவட்டம் ஒரு பின்தங்கிய மாவட்டமாக இருக்கிற காரணத்தால், சுற்றுலா வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக ஒகனேக்கல் மற்றும் சுதந்திரப் போராட்ட வீரர் திரு. சுப்பிரமணிய சிவாவின் நினைவுச் சின்னம் ஆகியவற்றோடு பாரத மாதா கோயிலையும் ஒருங்கிணைத்து அமைத்தால் சுற்றுலா வளர்ச்சி நன்கு அமைவதோடு முன்னேற்றமடையவும் உதவியாக இருக்கும் என்பதால் அதற்கு அரசு வழிவகை செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒகனேக்கல்லின் தொங்கு பாலம் இன்னும் நான்கு அல்லது ஐந்து மாதங்களில் முடிவு பெற்றுவிடும். எனவே போகிற பாதையில் இவருடைய நினைவு இடம் இருக்குமானால் அதையும் சுற்றுலாப் பயணிகள் பார்த்துச் செல்லுவதற்கான வகையில் அதைக் கவர்ச்சிகரமாகச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கையில் அங்கே பாரத மாதா கோயில் அமைக்கப்படவில்லை என்றும், பாரதபுரம் என்பதற்கான அடிக்கல் மட்டும் நாட்டப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்கள். எனவே, குறைந்தபட்சம் பாரதபுரம் என்ற பெயரில், மறைந்த திரு. சுப்பிரமணிய சிவாவுக்கு நினைவுச் சின்னமாக அங்கே ஒரு குடியிருப்பையாவது அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய ஆவலாய் இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்துபற்றி அரசு ஆய்வு செய்யும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## சுற்றுலா மையங்கள்

577—(*வினா எண் 9534) **திரு. ஆர். ரெங்கசாமி:** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாபநாசத்தைச் சுற்றுலா மையமாக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது ஆக்கப்படும்?

[1987 மே 4

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ). திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள பாபநாசம், மாவட்ட உலாத்தலமாகத் தேர்வு செய்யப்பட்டு, அங்கு சுற்றுலா மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**திரு. ஆர். ரெங்கசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மையத்திற்கு எவ்வளவு பணம் ஒதுக்கப் பட்டிருக்கிறது, வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ. 5,40,800 மதிப்பீட்டுச் செலவில் மேம்பாட்டு வேலைகள் நடந்து வருகின்றன.

**திரு. எஸ். டேனியல்ராஜ் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரனார் மாவட்டத்தில் ஸ்ரீவைகுண்டத்திற்கு அருகில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த கொற்கையை ஒரு சுற்றுலா மையமாக ஆக்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்துத் தனியாக வினா போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இடத்தை மாவட்ட சுற்றுலா மையமாக அனுமதிப்பதற்கு என்ன வரையறைகளை அரசு கையாளுகிறது? ஒரு இடத்தை மாவட்ட மையமாக அனுமதித்தால் அந்த இடத்திற்கு என்னென்ன வசதிகளை அரசு செய்கிறது? அங்கே வருகிற யாத்திரிகர்களுக்கு அரசு ஏதாவது சிறப்பு வசதிகளைச் செய்து கொடுக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு மாவட்டத்தில் இரண்டு முக்கியமான தலங்கள் மாவட்ட உலாத் தலங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதில் சுற்றுலாத் துறை ரூ. 2 லட்சமும், போக்குவரத்துத்துறை ரூ. 3 லட்சமும் ஆக மொத்தம் ரூ. 5 லட்சம் மதிப்பீட்டில் அவைகள் மேம்பாடு செய்யப்படுகின்றன. அங்கே பயணிகள் வந்தால்



1987 மே 4]

தங்கவும், சிற்றுண்டிச்சாலையும் மற்றும் குளியல் அறையும் கழிப் பறை வசதிகளும் செய்து தர வகை செய்யப்படுகிறது. மேலும் பொழுது போக்கு வசதிகளும் செய்து தரப்படுகின்றன.

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் வினாப்பட்டியலில் ஏறத்தாழ 4 அல்லது 5 இடங்களைக் குறிப்பிட்டு இவை சுற்றுலா மையமாக ஆக்கப்படுமா என்று கேள்வி கேட்டிருக்கிற நிலையைப் பார்க் கிறோம். இதைக் காட்டிலும் அமைச்சர் அவர்களே ஒட்டு மொத்தமாக இன்னின்ன இடங்கள் சுற்றுலா மையங்களாக ஆக்கப்படும் என்றோ அல்லது இனி சுற்றுலா மையங்களாக ஆக்குவதற்கான திட்டம் அரசிடம் இருக்கிறது என்றோ அறிவித்துவிட்டால் நேரமும் மிச்சமாகும். மேலும் எல்லோருக்கும் தகவலும் கிடைக்கும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதை நான் பார்த்துக் கொள்கிறேன்.

578—(* வினா எண் 9563) **திரு. மு. மாரிமுத்து :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

"திருப்பரங்குன்றம்" சுற்றுலா மையமாக அறிவிக்கப் பெறும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. மு. மாரிமுத்து :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு படைவீடுகளில் ஒன்றான திருப்பரங்குன்றம்— முருகப் பெருமான் குடியிருக்கும் அந்த நகரத்திற்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகிறார்கள். பல்லா யிரக்கணக்கான பக்தர்கள் குடிநீர் வசதி, தங்குமிட வசதி மற்றும் கழிப்பிட வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்த வசதிகளைச் செய்து தருவதற்கு பேரூராட்சிமன்ற நிர்வாகத் திற்கு நிதிவசதி இல்லை. எனவே இதைக் கருத்தில் கொண்டு மைய—மாநில அரசுகளிடமிருந்து நிதி உதவி பெற்றிட எதிர் காலத்திலாவது திருப்பரங்குன்றம் ஒரு சுற்றுலா மையமாக அறிவிக்கப்படுமா என்று அறியவிரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலா மையத்திற்கும் திருத் தலத்திற்கும் வேறுபாடு இருக்கவேண்டும். அதுவும் திருத்தலம் என்றால்—ஆறுபடை விடுகளில் ஒன்றான முருகப் பெருமான் குடியிருக்கும் இடத்தை ஒரு வெறும் சுற்றுலாத்தலமாக ஆக்கக் கூடாது. அங்கே முக்கியமாக பக்தர்கள்தான் வர வேண்டும். சுற்றுலாப் பயணிகளும் அங்கே வரலாம். அங்கே வருபவர் களுக்கு முக்கியமான அடிப்படை வசதிகளைச் செய்து தரு வதற்கு அரசைக் கேட்கலாம். ஏற்கெனவே அரசு கோயிலுக் குள்ள இடத்தை மேம்பாடு செய்ய லட்சக்கணக்கான நிதி உதவி அளித்து வருகிறது.

(முற்பகல் 10-30)

இந்தத் துறையைப் பொறுத்தவரையில் இந்தக் கோவிலுக்கு ஒளிவிளக்கு, மற்றும் சில மேம்பாட்டுப் பணிகளுக்காக 15 இலட்சம் ரூபாய் தேவையென்று கேட்டு மைய அரசுக்கு எழுதியிருக்கிறோம்.

579—(*வினா எண் 10055) **திரு. கே. பாலாஜி :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சி மாநகரத்தை சுற்றுலா மையமாக மாற்றும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரமென்ன?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) காஞ்சிபுரத்தில் குறைந்த செலவில் சுற்றுலாப் பயணிகள் வந்து செல்வதற்காக யாத்திரி நிவாஸ் ஒன்று மத்திய அரசின் நிதி உதவியுடன் கட்டப்பட உள்ளது. இதற்கு மத்திய அரசு ரூ. 34.00 இலட்சம் உதவி செய்ய ஆணை யிட்டுள்ளது. மேலும் காஞ்சிபுரத்தில் மத்திய அரசின் நிதி உதவியுடன் பல்லவபுர சுற்றுலா வளாகம் கட்ட திட்டமிடப்

* 474-475 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



பட்டுள்ளது. இதற்கு மத்திய அரசு ரூ. 20.00 இலட்சம் அளிக்க ஆணையிட்டுள்ளது. மேலும் காஞ்சிபுரத்தில் மத்திய அரசின் பராமரிப்பில் உள்ள சுற்றுலா மாளிகை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

580—(*வினா எண் 10418) **திரு. எஸ். இராசாராமன் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக சுற்றுலா வளர்ச்சிக்காக ரூபாய் 30 இலட்சம் மைய அரசு வழங்கி உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், என்னென்ன திட்டங்களுக்காக அத் தொகை செலவிடப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) விரிவான அறிக்கை* அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விரிவான அறிக்கையிலே 13-வது இலக்கத்தில் குற்றால உணவு விடுதியைக் காட்டி மத்திய அரசு அதற்கு ரூ. 5.44 இலட்சம் ரூபாய் அனுமதி அளித்திருப்ப தாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். குற்றாலத்திலே ஒரு படகுத் துறையை அமைக்க வேண்டும் என்று சொல்லி அந்த படகுத் துறையின் அருகிலே இந்த உணவு விடுதியை அமைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பிந்துமாதவன் அவர்களிடத்திலே ஆலோசனை சொல்லி அதனை அவரும் ஏற்றுக் கொண்டிருக் கிறார். அந்தப் படகுத் துறையைத் தமிழக அரசின் சார்பாக அமைக்க தமிழக அரசு முன்வருமா ? கோடைக்கானலில் உள்ளதை விடச் சிறப்பாக horse-shoe, 'U' turn வடிவத்தில் அமைக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவருக்கு சிபாரிசு செய்திருக்கிறேன். அவர்களும் அதை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே படகுத் துறையை உடனடியாக இந்த சீசன் காலத்திலேயே அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5.44 இலட்சம் ரூபாயில் முதல் தவணையாக 2 இலட்சம் ரூபாய் கொடுக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் சொல்லுவதுபோல படகுத் துறையை ஏற்படுத்துவது பொருத்தமாக இருக்குமா என்பதைப்பற்றி ஆய்வு செய்து அறிக்கை பெற்ற பிறகு அது பற்றி நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அறிக்கையிலே 153 இலட்சம் ரூபாயில் ஏறத்தாழ 28 இலட்சம் ரூபாய் செங்கற்பட்டு மாவட்டத்திற்கே ஒதுக்கப்பட்டுள்ளது. பொதுவாக எல்லாத் தரப்பு மக்களுக்கும் சாலை வசதிகள், மற்ற வசதிகள் பெருக்கப்பட வேண்டும் என்பதும், அந்நிய நாட்டு யாத்திரிகர்களைக் கவர வேண்டும் என்பதும்தான் சுற்றுலா மையங்கள் அதிகரிப்பதன் நோக்கம். ஆகவே, இனியாவது ஒதுக்கீடு செய்யும்போது எல்லா மாவட்டங்களையும் கருத்திற்கொண்டு செய்வார்களா? திருவண்ணாமலைக்குத் தனியாக ஒதுக்கீடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்களுக்குச் சமமாக பங்கு கொடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிறார். ஏற்கெனவே வரலாற்றுச் சிறப்புமிக்க இடமாக மாமல்லபுரம் இருக்கிறது. ஆகவே அதற்கு அதிகமாக ஒதுக்கீடு செய்திருக்கிறோம். இந்த இலக்கணங்களை நாம் மட்டும் வகுப்பதில்லை. நிதி ஒதுக்குகிற மைய அரசு இந்த இலக்கணத்தைக் கடைப்பிடிக்கிறது. திருவண்ணாமலைக்கு என்ன வேண்டும், என்னென்ன விதத்திலே செய்ய வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொன்னால் நாம் அதைச் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம்.

திரு. துரை கோவிந்தராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊட்டிக்கு மட்டும் சிறிய படகுகள் விட 5.43 இலட்சம் ரூபாய் மத்திய அரசிலிருந்து ஒதுக்கப்படுகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். உலக அரங்கிலே பக்கத்திலுள்ள சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளில் ஃப்ரீ போர்ட் இருப்பதால் நிறைய பேர் சிங்கப்பூருக்கு





வருகிறார்கள். அண்மையிலே, குறுகிய தூரத்திற்குள் இருப்பது தமிழ்நாடு என்று அறிந்து தமிழ்நாட்டிற்கும் அதிகம் பேர் வந்து போகிறார்கள். பொதுவாகத் தமிழகத்திலே வெளிநாட்டிலிருந்து வருகிற சுற்றுலாப் பயணிகளைக் கவரத்தக்க இடங்களைத் தேர்ந்தெடுத்து மிகப் பெரிய ஒரு சிறப்புத் திட்டத்தைத் தயாரித்து, இப்படி 30 இலட்சம், 40 இலட்சம் என்று பெறுவதைவிட—பல கோடி ரூபாய் பெற்று அந்நியச் செலாவணி பெறத்தக்க அளவிற்குத் துரித நடவடிக்கையை இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே அறிவித்த 153 இலட்சம் ரூபாய் மட்டுமல்லாமல் இந்த வினாவிற்கு விடை அளித்த பிறகு, இந்தத் துறை மைய அரசுக்கு 180 இலட்சம் ரூபாய் நிதியளிக்கக் கோரி பல்வேறு மேம்பாட்டுத் திட்டங்களை மைய அரசுக்குப் பரிந்துரை செய்திருக்கிறது. தொடர்ந்து பரிந்துரை செய்யும். சுற்றுலாப் பயணிகளை அதிகமாகக் கவர, அதனால் வருமானத்தை அதிகமாகப் பெருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் உதவியுடன் ஒரு நிறுவனம் நமது தமிழ் நாட்டில் இராமேஸ்வரம், ஸ்ரீவில்லிபுத்தூர், கன்னியாகுமரி போன்ற இடங்களில் 30 இலட்சம் ரூபாய் செலவில் யாத்திரிகர்கள் தங்கும் விடுதி கட்ட மத்திய அரசு அனுமதித்துள்ளது. ஆனால் அந்தக் கோவில்களின் நிர்வாகத்தினர் கட்டிடம் கட்ட இடம் கொடுக்காததால், அதில் காலதாமதம் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி ஒதுக்கப்பட்டு இடம் கிடைக்கவில்லை என்றால், அதற்கு சில முறைகள் தடையாக இருக்கின்றன என்றால், அதை மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டினால் அந்தத் தடைகளை நீக்கி, விரைவில் ஒதுக்கப்பட்ட தொகையில் அந்தக் கட்டிடங்களைக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**டாக்டர் த. முகம்மது சலீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்ணா மாவட்டத்தில் உள்ள கொடைக்கானல் மலைகளின் இளவரசியாகும். இந்தியத் துணைக் கண்டத்திலிருந்து எல்லோரும் வந்து செல்லும் அந்த இடத்திற்கு மத்திய அரசால் 14 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்று அண்ணா மாவட்டக் கலெக்டரால் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது உண்மைதானா? எப்போது அந்தத் திட்டத்தை அரசு செயல்படுத்த இருக்கிறது?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையிலே அறிவித்தபடி ரூபாய் 40 இலட்சத்தில் பல்வேறு இடங்களில் நாம் பயணிகள் தங்கும் விடுதிகள் கட்டுவதாகச் சொன்னேன். அதில் 14 இலட்சம் ரூபாயில் கொடை ரோடில், சாலை வசதி செய்து, பயணிகள் தங்க விடுதியும் கட்டப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிச்சாவரம் பகுதியைச் சுற்றுலா மையமாக்க தனித் திட்டம் அறிவிக்கப்படுமென்று அறிவிக்கப்பட்டது. எனவே, அந்தத் தனித்திட்டம் தயாரித்து, செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனித் திட்டம் தயாரிக்கப்பட்டு, அது இறுதி வடிவம் பெறும் நிலையில் இருக்கிறது. மாண்புமிகு முதல்வரவர்களின் இசைவைப் பெற்று மத்திய அரசுக்கு அது அனுப்பப்படும்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எங்களுடைய தர்மபுரி மாவட்டத்தில் உள்ள தீர்த்தமலையிலே, சுற்றுலா வளர்ச்சித் துறையின் சார்பாக ஒரு சுற்றுலா விடுதி கட்ட மாண்புமிகு அமைச்சரவர்கள் அடிக்கல் நாட்டியுள்ளார்கள். அந்த விடுதி மலை அடிவாரத்தில் கட்டப்படுகிறதா அல்லது மலையின் மேல் பகுதியில் கட்டப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும் அங்கே தங்கக்கூடியவர்கள் இலவசமாகத் தங்க வசதி செய்து தரப்படுமா அல்லது குறைந்தபட்ச வாடகை வசூலிக்கப்படுமா என்பதை அறிய



விரும்புகிறேன். ஏனென்றால் அரசு சுற்றுலா மாளிகையில் வசூலிக்கக்கூடிய கட்டணம் நட்சத்திர ஓட்டல்களைவிட அதிகமாக இருக்கிறது. அதைக் கருத்திலே கொண்டு, தர்மபுரி மாவட்டம் பின் தங்கிய மாவட்டம் என்பதாலும், தீர்த்தமலையில் உள்ள தீர்த்தகிரீஸ்வரர் ஆலயம் ஒரு புண்ணிய ஸ்தலமாக இருப்பதாலும் அந்த விடுதிக்கு வந்து தங்கக்கூடியவர்கள் இலவசமாகத் தங்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இதற்குத் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. துரை அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிச்சாவரம் பகுதியில் ஸ்டீமர் படகு விட வேண்டுமென்று சொல்கிறபோது, அங்கே ஆழமில்லை, ஆகையால் ஸ்டீமர் படகுகளை விட சாத்தியமில்லை என்று அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆகையினால் கையாலே வலிக்கின்ற படகுகளை அங்கே பயன்படுத்துகிறார்கள். பிச்சாவரம் பகுதிக்கு வருகின்ற பயணிகளின் எண்ணிக்கையைக் கருத்திலே கொண்டு, ஸ்டீமர் படகுகளை விட அந்தப் பகுதியை ஆழப்படுத்த அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பிச்சாவரம் பகுதியில் 2,000, 3,000 ஆண்டுகளாக உள்ள இயற்கைச் சுற்றுப்புறச் சூழல்களைக் கெடுக்கக்கூடாது என்பதாலும், உலகத்திலேயே 2 இடங்களிலே ஒரு இடமாக உள்ள அந்த பிச்சாவரம் பகுதியில் உள்ள சுரப்புன்னை மரவளர்ச்சி பாதிக்கப்படும் என்பதாலும் விசைப்படகுகளை விடக்கூடாது என்று விஞ்ஞானிகள் சொல்லுகிறார்கள். ஆனால் வெள்ளாறு கடலில் கலக்கும் இடத்தில் விசைப் படகுகள் விட ஏற்பாடு செய்யப்படுகிறது.

**திரு. ஏ. தங்கராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொல்கிறபோது, பிச்சாவரத்திற்கு சுற்றுலா பயணிகள் வருவதற்கான, சுற்றுலா மையமாக்கும் திட்டம் இறுதி வடிவம் பெறப்பட்டு, தமிழக முதல்வரவர்களுக்கு அனுப்பியுள்ளதாகச் சொல்லுகிறார்கள். ஆகவே அங்கே சுற்றுலா மையம் மூலமாக என்னென்ன வசதிகள் செய்வதற்கு

இறுதி வடிவம் பெறப்பட்டிருக்கிறது என்பதையும் அதனுடைய திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறதா என்பதையும், அதனுடைய மதிப்பு என்ன என்பதையும் அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இது பற்றித் தனியாக வினா போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

581—(*வினா எண் 11869) **திரு. எம். சிவக்குமார் :** மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோத்தகிரி பஞ்சாயத்து யூனியனைச் சேர்ந்த தெங்குமரஹடாவை சுற்றுலா மையமாக்க திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

(முற்பகல் 10-40)

**திரு. எம். சிவக்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் கூறுகிறபோது 'இல்லை' என்று ஒரே வார்த்தையில் கூறிவிட்டார்கள். இருப்பினும் அந்தப் பகுதி இயற்கை எழில் மிக்க ஒரு பகுதியாக இருக்கின்றது. அங்கு சுற்றுலாப் பயணிகள் போய்க்கொண்டுதான் இருக்கின்றார்கள். அங்கே போகின்ற ரோடிலுடைய இரு மருங்கிலும் மயில்கள், மான் கூட்டங்கள், வண்ணவண்ணப் பறவைகள் போன்ற பல்வகைப் பறவைகள் இருக்கின்றன. அது இயற்கை எழில் மிக்க பகுதியாக இருக்கின்றது. சுற்றுலாப் பயணிகள் கண்டு களிக்கின்ற இடமாக இருக்கின்றது. அதை ஒரு சுற்றுலா மையமாக ஆக்க அரசு முயலுமா என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தில் கல்லட்டி நீர்வீழ்ச்சியும் கோடநாடு காட்சி முனையும் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றன. கல்லட்டி நீர்வீழ்ச்சியில் சுமார் 61 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் பல்வகையான வசதிகள் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. கோடநாடு





காட்சி முனையில் சுமார் ரூ. 8 லட்சம் மதிப்பீட்டில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் பல முன்னேற்றமான பணிகள் செய்வதற்குத் திட்டம் இடப்பட்டிருக்கிறது. அங்கே கோடநாடு காட்சி முனையிலிருந்து தெங்குமரஹடா இடத்திற்கு 'ட்ரெக்கிங் ரூட்' மலைவழித் தடம் உள்ளது. அதை அபிவிருத்தி செய்து தெங்குமரஹடாவில் வந்து பயணிகள் தங்குவதற்கு இடங்கள் கட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எம். சிவக்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது கோட நாடு காட்சி முனைப் பகுதியைச் சுற்றுலா மையம் ஆக்குவதற்குள்ள வேறு நடவடிக்கைகளைப் பற்றிக் கூறினார்கள். அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கேயிருந்து கோடநாடு காட்சி முனை வழியாக தெங்குமரஹடாவிற்குப் போகும் வழி சிறிய வழிப் பாதையாக இருக்கின்ற காரணத்தினால் அங்கேயுள்ள வழிப்பாதையைச் சீரமைப்பதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கும் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஆண்டே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதைப் பற்றியும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டே அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கோடநாடு காட்சி முனைப் பகுதிக்கு உதகை கோத்தகிரி வழியாகத்தான் செல்ல வேண்டும். தெங்குமரஹடா பகுதியிலிருந்து அந்தப் பகுதிக்கு வழித்தடங்களை ஏற்படுத்த வேண்டும். கோடநாடு காட்சி முனைப் பகுதிக்குப் பக்கத்திலே ரங்கசாமி மலை அற்புதமான மலை. பார்வைக்கு மிக உகந்ததாக இருக்கும். ஆகவே அந்த பகுதியில் அரசு வழித்தடங்களை ஏற்படுத்த வேண்டும். கல்லட்டி நீர்வீழ்ச்சியை அழகுபடுத்தும் போது, அதன் மெயின் சாலையிலிருந்து இறங்கிப் போவதற்கு மிகவும் மோசமானதாக இருப்பதால், தகுந்த வழிப்பாதைகளை அமைக்க அரசு முயலுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்லட்டி நீர்வீழ்ச்சியை மேம்பாடு செய்கின்றபோது நிச்சயமாக போகின்ற வழித்தடம் மேம்பாடு செய்யப்படும். அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோடநாடு காட்சிமுனைப் பற்றியும் அதன் வேறு பக்கத்திலே இருக்கின்ற மலையைச் சேர்க்கலாம் என்று சொன்னார்கள். அந்த மலையைச் சேர்த்து இந்தத் திட்டத்தில் மேம்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

### திருமதி இந்திரா காந்தி திருவுருவச் சிலை

582—(*வினா எண் 12154) **திரு. சைதை சா. துரைசாமி மற்றும் திரு. எஸ். பி. மணவாளன்:** மாண்புமிகு சுற்றுலா, மது விலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்களின் திரு உருவச் சிலையினை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தில் அந்தச் சிலை நிறுவப்பட இருக்கிறது என்பதையும், அந்தச் சிலை எப்போது திறக்கப்படும் என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய பெருமதிப்புக்கும், நன்றிக்கும் உரித்தான காலம் சென்ற பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய திருவுருவச் சிலையினை தலைநகரின் முக்கியமான இடத்தில் வைக்க வேண்டுமென்ற குறிப்பு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. எந்த இடம், எப்படிப்பட்ட உருவம் என்பதை அவர்கள் தேர்ந்தெடுப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**திரு. க. சோலைராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டுக்கு உழைக்கின்ற நல்லவர்களுக்கு எல்லாம் சிலை திறப்பது என்பது பாராட்டத்தக்கது. இருந்தாலும் இப்படிப்பட்ட சிலைகள் திறந்த வெளியில் இருப்பதால் பறவைகள் எச்சமிட்டு பாழ்படுத்துகின்றன. அதுபோல பல்வேறு அரசியல் கட்சிகளும் பொதுச் சங்கங்களும் அங்கே வண்ண வண்ண சுவரொட்டிகளை ஒட்டுகின்றன. இதை எல்லாம் கருத்திலே கொண்டு நாட்டுக்கு உழைத்த நல்லவர்களுக்கு சிலை வைக்கின்றபோது சிலைக்கு மேலே குடை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேலே குடை வைத்தால்கூட பறவைகள் வந்து எச்சம் இடத்தான் செய்யும். அதைத் தவிர்க்க முடியாது. ஆனால் சுவரொட்டிகள் ஒட்டுவதை நிச்சயமாக அப்புறப்படுத்தலாம்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டினுடைய புகழ்மிக்க பிரதமராகப் பல்லாண்டுகள் பணியாற்றியவரும், இந்திய சரித்திரத்தோடு பின்னிப் பிணைந்தவருமான அந்த வீராங்கனையினுடைய திரு உருவப் படத்தைச் சட்டமன்றத்தில் வைக்க வேண்டுமென்ற கோரிக்கை விடுக்கப்பட்ட நேரத்தில் சென்ற ஆண்டே அவர்களுடைய பிறந்த நாளில் திறந்து வைக்கப்படும் என்று உறுதிமொழி கொடுக்கப்பட்டது. எப்போது அவர்களுடைய திரு உருவப்படம் இங்கே திறந்து வைக்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமதி இந்திரா காந்தி அவர்களுடைய உருவம் ஒரு ஓவியமாக கை ஓவியர்களால் வரையப்பட வேண்டுமென்றும், மிகச் சிறந்த படங்களை அபூர்வமாக வைத்திருந்த பல பேர்களிடமிருந்து எல்லாம் வாங்கிக்கொண்டு, எந்தப் படத்தைத் தேர்ந்தெடுக்கலாம், எந்த ஓவியத்தை வைத்துப் படம் எழுதப்பட வேண்டுமென்ற முடிவு மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் விடப்பட்டிருக்கிறது. விரைவில் ஓவியம் தீட்டப்பட்டு, முன்னாள் பாரதப் பிரதமர் அவர்களுடைய திருவுருவப் படம் இங்கே திறக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## கலப்பு மணத் தம்பதிகளுக்குச் சலுகைகள்

583—(*வினா எண் 1280) திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலப்பு மணம் செய்து கொள்ளும் தம்பதியர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகள் யாவை?

(ஆ) வேலைவாய்ப்பு அளிப்பதில் இத்தம்பதியர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) விவர அறிக்கை* தனியே அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

**திரு. கோ. இரகுபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணத் தம்பதிகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் பற்றி விவர அறிக்கையில் சொல்லியிருப்பதற்கு நன்றி. ஆதி திராவிட மக்களுக்கும் மற்ற இன மக்களுக்கும் இடையே கலப்பு மணம் ஏற்பட்டால்தான் இந்தச் சலுகையா? மற்ற உயர்ந்த இனங்களுக்கும் பிற்படுத்தப்பட்ட இனங்களுக்கும் இடையே கலப்பு மணம் ஏற்பட்டால் அவர்களுக்கும் இந்தச் சலுகை அளிக்கப்படுமா? இந்த விவர அறிக்கையில் கலப்பு மணம் செய்துகொண்டவர்களுக்கு அளிக்கப்படும் சலுகைகள் பற்றி இருக்கிறது. 1986-87-ல் இவ்வாறு கலப்பு மணம் செய்துகொண்ட திருமணங்கள் தமிழ்நாடு முழுவதும் எத்தனை? இப்படிக் கலப்பு மணம் செய்து கொள்பவர்களுக்குச் சிறு தொழில்களைப் பொறுத்த வரையில் சலுகைகள் கொடுப்பதாகச் சொல்கிறீர்கள். அப்படியென்றால் மாவட்டந்தோறும் எத்தனை பேர்களுக்கு இச் சலுகையை அளித்திருக்கிறீர்கள்? அதுபோல கலப்பு மணத் தம்பதிகளுக்கு 4 ஆயிரம் ரூபாய்க்கான சேமிப்புப் பத்திரங்கள் அளிக்கப்படும் என்று சொல்கிறீர்கள். அப்படியென்றால் அது மாவட்டந்தோறும் எவ்வளவு பேர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன? 14 காரட் இப்போது தயாரிப்பில் இல்லை. அதனால் 22 காரட்

* 475-477 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



நகை வழங்கப்பட வேண்டுமென்று குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள். அப்படி என்றால் இந்த வகையில் கொடுக்கப்படாமல் நிலுவையில் இருப்பவை எத்தனை? 22 காரட் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனே எடுப்பார்களா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணம் செய்தவர்களில் ஒருவர் தாழ்த்தப்பட்டவராக இருக்க வேண்டும். மற்ற ஒருவர் பார்வர்ட் சமுதாயத்தை அல்லது பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த யாராவது தாழ்த்தப்பட்ட பெண்ணை எடுத்து கலப்பு மணம் செய்கின்றபோது அவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கப்படும் என்று சட்டம் இருக்கிறது. 1986-87-ல் கலப்பு மணம் செய்தவர்களுடைய விவரம் கேட்டார்கள். அதுபற்றிய குறிப்பு இல்லை. இருந்தாலும் 4 ஆயிரம் ரூபாய்க்கு சேமிப்புப் பத்திரம் மற்றும் 300 ரூபாய் கொடுப்பதைப் பொறுத்தவரை கிட்டத்தட்ட 2,322 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல கலப்பு மணத் தம்பதிகளுக்கு 14 காரட் தங்க நகைக்கு பதில் 22 காரட் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்று கேட்டார்கள். அது அரசின் ஆய்வில் இருக்கிறது. அதுதவிர இங்கே மாண்புமிகு உறுப்பினர் கேட்ட விவரங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டுள்ள விவர அறிக்கையிலே இருக்கிறது. அவரிடத்திலும் இந்த விவர அறிக்கை கொடுக்கப்பட்டிருக்கிறது. தனித்தனி மாவட்ட அளவிலே என்னிடம் குறிப்பு இல்லை. அதற்குத் தனியாகக் கேள்வி போட்டால் விளக்கமாகப் பதில் அளிக்கப்படும்.

(முற்பகல் 10-50)

**திரு. க. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. கலப்பு மணம் செய்து கொள்ளும் தம்பதிகள் இவ்வளவு நாட்களுக்குள் பதிவு செய்துகொள்ள வேண்டும், இதுவரை எத்தனை பேர் கலப்பு மணம் செய்து கொண்டுள்ளார்கள் என்ற விவரத்தை அறிவிக்க இயலுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கலப்பு மணத் தம்பதிகள் திருமணம் செய்து கொண்ட ஆறு மாதங்களுக்குள் ரெஜிஸ்ட்ரேஷன் செய்துகொள்ள வேண்டுமென்று முதலிலே நியதி இருந்தது. அதை மாண்புமிகு

[1987 மே 4

இதய தெய்வம் புரட்சித் தலைவரவர்கள் அந்த ஆறு மாதத்திலே செய்ய முடியாத சூழ்நிலை ஏற்படுகின்ற காரணத்தினாலே அதை இரண்டு ஆண்டுகளுக்கு உயர்த்தியிருக்கிறார்கள். மேலும் இன்னும் நீட்டிப்பதற்கு அரசு பரிசீலனையில் இருக்கிறது. நான் இப்பொழுதுதான் சொன்னேன். 2,322 பேர்களுக்கு மொத்தமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய அரசின் மூலமாக அவர்கள் சலுகை பெற்றவர்கள். மற்றும் அரசுக்கு வராமல் தனியே கலப்பு மணம் செய்து கொண்டவர்கள் நிறைய இருக்கிறார்கள். அந்தக் குறிப்பு நம்மிடம் இல்லை.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்புத் திருமணம் செய்து கொண்டு தங்கப் பதக்கமும் பெற்றதற்குப் பிறகு அவர்கள் வீடு வாங்குவதற்கு என்று அரசாங்கம் 1,200 ரூபாய் கொடுப்பதாக அறிவித்திருக்கிறதே, அதுபோல இதுவரைக்கும் யாருக்காவது கொடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கலப்பு மணம் செய்து கொள்கின்றவர்களுக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலமாகவும், குடிசை மாற்று வாரியத்தின் மூலமாகவும் வீடுகள் வாங்குவதற்கு 1,200 ரூபாய் மானியம் தரப்படுகிறது. அதற்குப் பின்னாலும் அந்தத் தம்பதிகளுக்கு 250 ரூபாய் வருமானத்திற்கு உட்பட்டவர்களாக இருக்கின்றபொழுது, 10 வீடுகள் ஒவ்வொரு ஆண்டும் குடிசை மாற்று வாரியத்திலே கொடுக்கின்ற நியதி இருக்கிறது. ஆனால் இன்றுவரை எவ்வளவு கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அந்தக் குறிப்பு என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

**திரு. சா. ஜெயச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கலப்பு மணம் செய்து கொள்வதிலே இரண்டு ரகங்கள் உண்டு. இரண்டு குடும்பத்தினரும் சம்மதித்து திருமணம் செய்து கொள்வதும் உண்டு. இரண்டு குடும்பத்தினருடைய சம்மதம் இல்லாமல், காதல் மணம் புரிந்து, இரண்டு குடும்பத்தாருக்கும் சம்பந்தம் இல்லாத சில கிராமங்களிலே—வெளி கிராமங்களிலே போய்த் தங்கி குடும்பம் நடத்துகிறார்களே, அவர்களுக்கும் அரசு உதவி வழங்க வேண்டும் என்றால் அந்தக் கல்யாணப் பத்திரிகை கேட்கின்றார்களே, எப்படி முடியும்? அப்படிப்பட்டவர்களுக்கு இரகசியப் போலீசார் மூலம்



1987 மே 4]

விசாரணை செய்து, உண்மையிலேயே அவர்கள் கலப்பு மணம் புரிந்தவர்கள்தான் என்று தெரிந்தாலே போதும், அவர்களுக்கு அரசு பரிசு வழங்கலாம் என்ற திட்டத்தைக் கொண்டு வர அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலப்பு மணம் செய்கின்றபொழுது, சில பேர்கள் சமுதாயத்திலே ஒத்துக்கொண்டு செய்கிறதும் உண்டு. ஆனால் நிறைய பேர், இப்படி மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னதைப்போல், அவர்கள் அந்தப் பெண்ணை இழுத்துக் கொண்டு போய் திருமணம் செய்து விடுகிறார்கள். அந்தக் கிராமத்திலே அப்படிப் போகின்றபொழுது ஒரு சீர்திருத்தமான சூழ்நிலையில் மக்களிடம் அவர்களுக்கு வரவேற்பு இல்லாவிட்டாலும், அந்த இரண்டு மனமும் ஒன்றுபடுகின்றபொழுது, அது திருமணமாகச் செயல்படுகின்றது. அந்த இரண்டு மனமும் ஒன்றாக இருக்கின்றபொழுது, அந்தப் பெண்ணுக்கு 18 வயது முடிந்திருந்தால் மேஜராகி இருக்கிறது என்ற சூழ்நிலை ஏற்படுகிறது. அதற்கு சட்டத்தில் இடம் கிடைக்கிறது. அதே போல் ஆணுக்கு 21 வயது என்று இருந்தால் அவரும் மேஜராகி விடுகிறார். இந்த இரண்டு பேரும் ஒத்து இருந்தால் அரசு அதற்குக் கட்டாயமாகப் பாதுகாப்பு கொடுக்கிறது.

## நிலக்கோட்டை புதூர் காட்டுநாயக்கர் வகுப்பினருக்கு சாதிச் சான்றிதழ்.

584—(*வினா எண் 8788) திரு. அ. பாலுசாமி: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை புதூரில் உள்ள காட்டுநாயக்கர் வகுப்பினருக்கு சாதிச் சான்றிதழ் வழங்க மறுப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) நிலக்கோட்டை புதூர் என்ற பகுதியில் 'காட்டு நாயக்கன்' என்ற சான்றிதழ் வழங்கும்படி யாரும் விண்ணப்பிக்கவில்லை என்றும் மேற்படி கிராமத்தில் 'காட்டு நாயக்கன்' சாதியைச் சேர்ந்தவர்கள் இல்லை என்றும் அண்ணா மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்துள்ளார்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1987 மே 4

**திரு. அ. பாலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அந்தப் புகாருக்கு வந்திருந்தார்கள். காட்டு நாயக்கர் என்று அவர்களே எடுத்துக் கூறினார்கள். அங்கு வசிப்பவர்கள் ஆறு மாத காலம் வீட்டிலேயும், ஆறு மாத காலம் காட்டிலேயும் வசிக்கின்ற காட்டு நாயக்கர் சாதியைச் சார்ந்தவர்கள். ஆகவே, அவர்களது குழந்தைகள் நல்ல முறையிலே படிப்பு மற்றும் மற்ற வளர்ச்சியைப் பெறுவதற்குச் சான்றிதழ் கேட்டால் சான்றிதழ் தருவதில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அதை மனதிலே கொண்டு, அவர்களுக்குச் சான்றிதழ் வழங்க உத்தரவு அளிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்குள்ளவர்கள் குடுகுடுப்பைச் சோதிடம் சொல்லும் தெலுங்கு பேசும் நாயக்கர் என்றும், அவர்கள் யாரும் தங்களுக்குக் காட்டுநாயக்கர் என்ற சான்றிதழ் கேட்கவில்லை என்றும் அங்கேயிருக்கின்ற மாவட்ட ஆட்சியாளர் அறிவித்துள்ளார்கள். அப்படி அவர்கள் கேட்கிறபோது அங்கே நிரந்தரமாகத் தங்கியிருந்தால், அங்கே இருக்கிற ஆர்.டி.ஓ. அவர்கள் விசாரணை செய்து அவர்களுக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்கள்.

**திரு. அ. பாலுசாமி:** தலைவரவர்களே, காட்டுநாயக்கன் என்று சான்றிதழ் பெறுவதற்கு என்ன ஆதாரத்தை அரசு நிர்ணயித்திருக்கிறது? மேலும், அவர்களுடைய பத்திரங்களில் காட்டு நாயக்கன் என்று இருந்து, அந்தப் பத்திரங்களைத் தாசில்தாரிடம் கொடுக்கும்போதும் அவர்கள் சான்றிதழ் வழங்குவதில்லை. அந்த மக்கள் தங்களிடம் நேரிலேயே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தாங்கள் அதற்கு ஒரு முடிவு செய்து, அவர்களுக்குக் காட்டு நாயக்கன் சாதிச் சான்றிதழ் வழங்க உத்தரவிடுவீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1976 ஆம் ஆண்டு ஆணைப்படி எங்கெங்கே காட்டு நாயக்கன் பழங்குடியினர் தங்கி இருந்தாலும், அவர்கள் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் பழங்குடியினருக்கான சாதிச் சான்றிதழ் வழங்கப்படுகிறது. ஆனால் தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில் 36 வகையினர் அந்தப் பட்டியலில்



1987 மே 4]

இடம் பெற்றிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி மக்களை விசாரித்து, அவர்களுடைய மூதாதையர்களைப் பற்றி அறிந்து தான், எத்தனை ஆண்டுகள் அந்தப் பகுதியிலே அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பதையும் அறிந்துதான் சர்டிபிகேட் வழங்க முடியும்.

**மானாமதுரை தொகுதி, திருபுவனம் ஊராட்சி ஒன்றியம், ஜாரி புதுக்கோட்டை கிராம ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப் பட்டா.**

585—(*வினா எண் 8926) திரு. க. பாரமலை: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரைத் தொகுதி—திருபுவனம் ஊராட்சி ஒன்றியம், ஜாரி புதுக்கோட்டை. கிராமத்திலுள்ள ஆதி திராவிடர்களுக்கு வீட்டு மனைப்பட்டா வழங்க நில ஆர்ஜித நடவடிக்கைகளை அரசு எடுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது மனைப் பட்டா வழங்கப்படும்?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம். மானாமதுரை வட்டம் எருக்தளை வெள்ளூர் கிராமம் ஜாரி புதுக்கோட்டை குக்கிராமத்தில் புல எண் 151/1-ல் விஸ்தீரணம் 4.13 ஏக்கர் புஞ்சை சிலகெங்கை (ஆதி திராவிடர் நலம்) தனித் தாசில்தாரின் நடவடிக்கை எண் ந.க. 1663/8, நாள் 9—3—1984 (அவார்டு எண் 9/83). 72 ஆதி திராவிடர்களுக்கு பட்டா கொடுப்பதற்கு நில ஆர்ஜிதம் செய்யப்பட்டது.

(ஆ) 10—7—1984-ல் 69 ஆதி திராவிடர்களுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டு விட்டன.

**திரு. க. பாரமலை:** தலைவரவர்களே, நான் கேள்வி போடுகிறபோது பட்டாக்கள் வழங்கப்படவில்லை. இப்போது பட்டா வழங்கப்பட்டிருப்பதால், அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வழங்கப்பட்டிருக்கிற பட்டா நிலங்களில் அவர்கள் வீடு கட்டிக்கொள்ள 'தாட்கோ' மூலமாக விரைவாக ஏற்பாடு செய்யப்படுமா?

[1987 மே 4

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பட்டா இப்போதுதான் வழங்கப்பட்டிருக்கிறது. முன்னுரிமை கொடுத்து, ஒவ்வொரு பகுதியாக வீடு கட்டும் திட்டத்தின்கீழ் அங்கும் வீடு கட்டிக் கொடுக்கப்படும்.

**திரு. க. பாரமலை:** தலைவரவர்களே, பட்டா கொடுக்கப்பட்டவுடனே கட்ட வேண்டுமென்று சொல்லவில்லை. 1986-87 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டில் கூட இன்னும் வீடு கட்ட ஆரம்பிக்கவில்லை. ஆகவே விரைவில் நிதி ஒதுக்கீடு செய்து, முன்னுரிமை கொடுத்து, வீடு கட்டிக்கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விரைவான நடவடிக்கை எடுக்கப்படும்.

**கூடலூர், உதகை மலைவாழ் பழங்குடியினருக்குக் குடியிருப்புகள்.**

586—(*வினா எண் 12964) **திரு. கே. உச்சி:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கூடலூர், உதகை பகுதிகளில் வாழும் மலைவாழ் பழங்குடியினருக்குக் குடியிருப்பு வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்; 1985-86 ஆம் ஆண்டு மற்றும் 1986-87 ஆம் ஆண்டு ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு காப்புறுதித் திட்டத்தின் கீழ் கூடலூர் மற்றும் உதகைப் பகுதிகளில் வாழும் மலைவாழ் பழங்குடியினருக்கு முறையே 60 வீடுகள் மற்றும் 50 வீடுகள் கட்ட வகை செய்யப்பட்டுள்ளது.

**திரு. கே. உச்சி:** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மலைவாழ் பழங்குடியினருக்கு 110 வீடுகள் கூடலூரிலும் உதகையிலும் கட்டிக் கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். எந்த எந்த இடத்தில் கட்டிக் கொடுக்கப்பட்டது என்பதை அறிவிப்பார்களா? சில ஆதிவாசிகள் காடுகளில் வனத் துறைக்குச் சொந்தமான இடங்களில் குடிசைகள் கட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா? வனத்துறைக்குச் சொந்தமான இடங்களில்



1987 மே 4]

இப்படி வீடுகள் கட்டுவதை அவர்கள் தடுக்கிறார்கள். அதற்கு ஏதாவது பரிகாரம் கண்டு, வனத்துறையின் ஒத்துழைப்பைப் பெற்றோ அல்லது உத்தரவைப் பெற்றோ ஆதிவாசிகளுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** தலைவரவர்களே, உதகையிலும் கூடலூரிலும் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன; ஆனால் அந்த இரண்டு பகுதிகளிலும் எந்த எந்த இடம் என்ற விவரம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் போல ஊட்டியைப் பொறுத்தவரையில் அங்கு வாழும் மக்கள் பெரும்பாலும் வனப் பகுதிகளில் வாழ்கிறார்கள். அந்த இடம் வனத்துறைக்குச் சம்பந்தப்பட்டிருக்கிறது. ஆகவே சம்பந்தப்பட்ட வனத்துறை அமைச்சரிடம் கேள்வி போட்டால் அவர்கள் விவரமாகப் பதில் அளிப்பார்கள்.

(முற்பகல் 11.00)

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் வட்டத்தைப் பொறுத்தவரையில் பனியர் என்ற இனத்தைச் சேர்ந்தவர்கள் கிட்டத்தட்ட 5,000 பேர்களுக்கு மேற்பட்டவர்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு இதுவரையில் எந்தவிதமான உதவியும் செய்யவில்லை என்று நான் கருதுகிறேன். காரணம், அவர்கள் ஓரிடத்தில் நிரந்தரமாக இல்லாமல் காடுகளில் பல்வேறு பகுதிகளில் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்கெல்லாம் வீட்டுவசதி செய்து கொடுத்து, வீடுகளைக் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எ. அருணாசலம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பட்டியலில் அவர்கள் வருகிறபோது, இடம் இருக்குமேயானால் கட்டாயமாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும். வசதிகள் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1987 மே 4

## 2. கவன ஈர்ப்பு.

### (அ) ஜெயங்கொண்டான் மருத்துவமனையில் 'எக்ஸ்ரே' கருவி சரியாக இயங்காதது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ந. மாசிலாமணி அவர்கள் ஒரு பொருள் குறித்துக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளார். அவருக்குப் பதிலாக திரு. எஸ். டேனியல்ராஜ் அவர்கள் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. எஸ். டேனியல் ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டான் அரசு மருத்துவமனையில் கடந்த சில மாதங்களாக எக்ஸ்ரே கருவி இயங்காததால் அப்பகுதி நோயாளிகள் படும் அவதி குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

#### அறிக்கை.

ஜெயங்கொண்டான் மருத்துவமனையில் உள்ள 100 எம்.ஏ. ஊடுகதிர் இயந்திரம் செப்டம்பர் 1986-ல் பழுதுபட்டு சரிவர இயங்கவில்லை. அது உடனே பழுது செய்யப்பட்டு, அக்டோபர் 1986 முதல் உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ஊடுகதிர் இயந்திரம் இப்பொழுது நல்ல நிலையில் இயங்கி வருகிறது. நோயாளிகளுக்கு எக்ஸ்ரே மருத்துவமனையில் எடுக்கப்பட்டு வருகிறது. நோயாளிகளுக்குத் தேவைப்படும் சிகிச்சை அளிப்பதில் எவ்வித குறைபாடுகளும் இல்லை.

### (ஆ) மண்டபத்திலுள்ள 'தமிழ்நாடு முத்து நிறுவனம்' செயல்படாமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருவாளர்கள் கு. ரமணி, எம். செல்லமுத்து, கோ. வீரய்யன் ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர் அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.



1987 மே 4]

**திரு. கு. ரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முகவை மாவட்டம், மண்டபம், தமிழ்நாடு முத்து நிறுவனம் தன்னிச்சையாகக் கதவடைப்புச் செய்துள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

#### அறிக்கை.

செயற்கை முறையில் தரமான முத்துக்களை உற்பத்தி செய்து விற்பனை செய்வதற்காக தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமும், சதர்ன் பெட்ரோகெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்போரேஷன் லிமிடெட் (Southern Petro Chemical Industries Corporation என்ற நிறுவனமும் இணைந்து 50 : 50 விகிதத்தில் ஒரு கூட்டு நிறுவனமாக 'தமிழ்நாடு முத்து நிறுவனம்' என்ற நிறுவனத்தை அக்டோபர் திங்கள் 1983 ஆம் ஆண்டு நிறுவின. ஆரம்ப கட்டத்தில், இத்திட்டத்தைச் செயல்படுத்த ரூ. 65.00 இலட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டது. இதில், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகமும், சதர்ன் பெட்ரோகெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் கார்ப்போரேஷன் நிறுவனமும் சமபங்காக ரூ. 10.00 இலட்சம் மூலதனமாக வழங்கியுள்ளன. மீதமுள்ள ரூ. 45.00 இலட்சம், கனரா வங்கி மூலம் தேசிய ஊரக வளர்ச்சி வங்கியின் மறுநிதி வசதியுடன் பெறப்பட்டது. இந்நிறுவனத்தின் பணி 1983 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் துவங்கப்பட்டது. முதலில் சோதனை முறை உற்பத்தி செய்ததில் ஏற்பட்ட விளைவுகள் ஊக்கம் அளிக்கக் கூடிய வகையில் இருந்தது. வணிக ரீதியில் செயல்படுத்த முடியும் என்ற ஊக்கத்தைக் காட்டியது. இத்திட்டத்தின் வணிக ரீதியான செயல்பாட்டிற்குத் தேவையான அளவுள்ள முத்துச் சிப்பிகள் சேகரிக்க இயலும் என்ற அடிப்படையில் இந்நிறுவனம் நிறுவப்பட்டது. ஆனால் கடற்படுகைகளில் குறைந்த அளவுள்ள சிறிய சிப்பிகள் மட்டுமே கிடைத்தன. முத்துக்கள் சேகரிக்கத் தேவையான அளவு முத்துச் சிப்பிகள் அதிக அளவில் கிடைக்கும் என்ற அடிப்படையில்தான் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டது. ஆனால் கடல் கலங்கலாலும், தெளிவின்மையா

லும், இயற்கையின் சாதகமற்ற நிலையில் கடற்படுகையில் இருக்கும் முத்துச்சிப்பிகளை மதிப்பிட இயலவில்லை. இயற்கை சதியின் காரணத்தால், முதலில் எதிர்பார்க்கப்பட்ட அளவுக்கு முத்துச்சிப்பிகள் கிடைக்காமையால், இத்திட்டம் பாதிக்கப்பட்டது. 1986-87 பருவத்தில் சிப்பிகள் தங்கும் வாய்ப்பு முறைமையாக இல்லை என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. அண்மையில் முத்துச் சிப்பிகளைச் சேகரிக்கும் பணியினை மேற்கொண்டபோது, தேவையான அளவுள்ள சிப்பிகள் ஏதும் கிடைக்கவில்லை. மேலும், சமீபத்தில் முத்துச்சிப்பிகள் கிடைக்கும் வாய்ப்புக்கான அறிகுறியும் இல்லை என்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதனால், திட்டமிட்டபடி 1—1—1987 முதல் வணிக ரீதியாக இத்திட்டத்தைச் செயல்படுத்த இயலவில்லை. ஆகவே, இந்த நிறுவனத்தின் செயல்பாட்டினை தற்போதைக்கு நிறுத்தி வைத்து முத்துச்சிப்பி பொரித்தல் குறித்த ஜப்பான் நாட்டு வல்லுநரின் தொழில் நுட்ப அறிவுரையினைப் பெற்று மேற்கொண்டு நல்ல முறையில் இந்நிறுவனத்தின் செயல்பாட்டினைத் தொடரலாம் என்று தமிழ்நாடு முத்து நிறுவனத்தின் இயக்குநர் குழுவினால் முடிவெடுக்கப்பட்டது. அம்முடிவின் அடிப்படையில், இந்நிறுவனத்தின் செயல்கள் 31—3—1987 முதல் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஆக, தமிழ்நாடு முத்து நிறுவனம் முழுமையாகக் கதவடைப்பைச் செய்யவில்லை.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, செயற்கை வழியில் முத்தைத் தயாரிப்பதற்காக அரசும் மற்றொரு ஸ்தாபனமும் கூட்டாகச் சேர்ந்து நடத்தக்கூடிய இந்த ஸ்தாபனத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட மூன்று ஆண்டுகளுக்கு மேல் செயல்படுத்தியாகி விட்டது. கடலுக்கு அடியில் போய் முத்துக்களைச் சேகரித்து வரக்கூடிய கடுமையான உழைப்பைச் செலுத்தக்கூடிய வகையில் தனியாகப் பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் இதில் ஈடுபட்டு இருக்கிறார்கள். அவர்கள் எண்ணிக்கையில் குறைவாக இருக்கலாம். நூற்றுக்கணக்கான பேர் கூட இல்லை. ஆனால், இப்போது திடீரென்று வருமானம் போதிய அளவுக்கு இல்லாததாலும், முத்துச் சிப்பிகளைச் சேகரிக்க முடியாமல் போனதாலும் அதனை நடத்த முடியாது என்ற அளவுக்கு ஒரு முடிவுக்கு வந்து அதனுடைய வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கின்றன. அது கிட்டத்தட்ட கதவு அடைப்பு என்ற அர்த்தத்திலே வருகிறது. கடலுக்கு உள்ளே இருக்கக்கூடிய





விஷயமாக இது இருப்பதால் எப்படி கதவடைப்பு செய்வது என்பது புரியவில்லை. வேலை செய்வது நிறுத்தப்பட்டு இருக்கிறது. அந்தத் தொழிலாளர்களால் உண்மையிலேயே வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. மூன்றாண்டுகளுக்கு மேல் வேலை செய்திருக்கக்கூடிய அந்தத் தொழிலாளர்கள் உயிர் வாழ்வதற்காக ஏதாவது ஒரு நடவடிக்கை மேற்கொள்கின்ற வகையில் அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, முத்து நிறுவனம் என்ற பெயரால் சதர்ன் பெட்ரோ கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் கார்ப்பரேஷன் மூலம் துவக்கப்பட்டது. அரசு 50 சதவீதம் மற்றவர்கள் 50 சதவீதம் என்று போட்டு துவக்கப்பட்டது. முத்துக்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் துவக்கப்பட்ட ஒன்று. ஆனால் இப்போது முத்துக்கள் படுகையில் இல்லை என்று சொல்லப்படுவது தெரிந்திருக்கிறது. எனவே நட்டம் வருகிற காரணத்தால் இது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது என்று அரசின் குறிப்பு வந்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது போல் தொழிலாளர்கள் சிரமப்படுவார்கள் என்பது தெரியும். அதைப்பற்றித் தனியாக அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, 31—3—1937 முதல் இந்த வேலை நிறுத்தப்பட்டுள்ளது. தொடர்ச்சியாக அந்தத் தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இது சம்பந்தமாக அவர்கள் அரசினுடைய கவனத்திற்கும் கொண்டு வந்திருக்கிறார்கள். முத்து கிடைக்காது என்ற ஒரு நிலைமை இருக்கக்கூடிய இடம் அல்ல இது. முத்துக் குளித்து ஏராளமான முத்துக்கள் எடுத்து வியாபாரம் நடக்கக்கூடிய இடமாகும் இது. இப்போது செயற்கை முத்து உருவாக்கப்படுவது என்பதைப் பொறுத்தவரையில் போதிய அளவுக்கு சிப்பிகள் கிடைக்காத காரணத்தால் இது தற்காலிகமாக மூடப்பட்டு இருக்கிறது என்பது கரக்ட். இது தொடர்ந்து நடத்தப்பட வேண்டியது. தொழில் கைவிடப்படவில்லை என்பது வரவேற்கத்தக்கது. ஆனால் இந்தத் தொழிலாளர்களை உயிரோடு வைத்

திருப்பதற்குரிய வகையில் சாதாரணமாக பாதிக் கூலியையாவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால் மூத்து எடுக்கும்போது இந்தத் தொழிலாளர்களின் சேவை மிக முக்கியம். அதனால் அதற்கு வேண்டிய ஒரு நடவடிக்கையை, அரசு துறையின் மூலம் ஏற்பாடு செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் தலைவர் அவர்களே, 31—3—1987 அன்றுதான் தற்காலிகமாக இது நிறுத்தப்பட்டு இருக்கிறது. ஒரு மாதம்தான் ஆகிறது. இதற்குள் உறுதியாக எதையும் அரசு சொல்வதற்கில்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்பற்றி அரசு பரிசீலித்து முடிவெடுக்கும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (இ) ஓமலூர் தோல் சந்தையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் பாதிப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள், திரு. கே. அன்பழகன் அவர்களுக்குப் பதிலாக மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “சேலம் மாவட்டம்—ஓமலூர் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகிலிருக்கும் தோல் சந்தையிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் பொது மக்களின் சுகாதாரம், விளை நிலங்கள் பாதிப்பது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

#### அறிக்கை.

சேலம் மாவட்டம் ஓமலூர் புதிய பேருந்து நிலையத்திற்கு அருகில் இருக்கும் வாரச் சந்தையில் தோல் பதனிடும் வேலையானது உப்பு மட்டுமே சேர்த்து சிறிதளவு தண்ணீர் தெளித்து மேற்கொள்ளப்படுகிறது. இதனால் சிறிதளவு கழிவு நீரே வெளிப்படுகிறது. இது பற்றி குறிப்பான புகார் ஏதும் பொதுச் சுகாதாரம் மற்றும் தடுப்பு மருந்துத் துறை இயக்ககத்திற்கு





வரவில்லை. எனினும் இவ்வட்டாரத்தில் தோல் பதனிடும் வேலையினால் வாரச் சந்தையில் வெளிப்படும் கழிவு நீரை சுகாதார முறைப்படி வெளியேற்றுவதற்காக கழிவு நீர் ஊடுருவ முடியாத படி தரை அமைந்துள்ள கொட்டிலை அமைக்குமாறு ஓமலூர் பேரூராட்சி நிர்வாக அலுவலருக்கு அறிவுரை வழங்குமாறு மாவட்ட சுகாதார அலுவலர், திருச்செங்கோடு, அவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்.

### (ஈ) திடீர் நகர், கோதாமேடு குடிசைப் பகுதிகளில் மாற்றுக் குடியிருப்புகள் கட்டும் பணி.

**திரு. சைதை. சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “திடீர் நகர் மற்றும் கோதாமேடு குடிசைப் பகுதிகளுக்கு மாற்று குடியிருப்புகள் கட்டும் திட்டம் அறிவிக்கப்பட்டும் பணிகள் துவங்கப்படாமல் இருப்பதால் பகுதி வாழ் மக்களுக்கு ஏற்படும் அவல நிலை குறித்த” அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

#### அறிக்கை.

தீ விபத்தினால் பாதிக்கப்பட்ட சைதாப்பேட்டை திடீர் நகர், கோதாமேடு மற்றும் சுற்றுப்புறத்திலுள்ள குடிசைவாழ் மக்களுக்கு நிரந்தர நிவாரணமாகக் குடியிருப்புகள் கட்ட குடிசைப்பகுதி மாற்று வாரிய தீர்மான எண் 43, நாள் 27—2—1986-ல் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான கீழ்க் கண்டுள்ள இரு இடங்களில் 1,152 குடியிருப்புகள், ‘அட்கோ’ நிறுவனத்தின் கடன் உதவியுடன் ரூ. 187.83 இலட்சம் செலவில் கட்ட ஒப்புதல் அளித்துள்ளது:—

| | |
|---|---|
| 1. ரிச்சர்டு பூங்கா (மாநகராட்சி பொது நிலம்) | 512 குடியிருப்புகள் |
| 2. வண்ணான்துறை (மாநகராட்சி தனியார் நிலம்) | 640 குடியிருப்புகள் |
| மொத்தம் | 1,152 குடியிருப்புகள் |

ரிச்சர்டு பூங்கா, அறிவிக்கப்பட்ட பூங்கா பகுதி என்பதால் அப்பகுதியில் குடியிருப்புகள் கட்ட இயலாது என சென்னை மாநகராட்சி தெரிவித்து விட்டமையால், குறித்த காலத்தில் பணியினை வாரியத்தால் துவங்க இயலவில்லை. பின்னர் ரிச்சர்டு பூங்காவிற்கு பதிலாக, சைதை கொத்தவால்சாவடி தெருவில் சென்னை மாநகராட்சி இடம் ஒதுக்கிடு செய்தமையால், வாரியம் முதற் கட்டமாக இப்பகுதியில் 480 குடியிருப்புகள் கட்ட உத்தேசித்து 10—1—1987 அன்று பணிகள் துவங்கப்பட்டுள்ளன. சைதை கொத்தவால்சாவடி தெருவில் உள்ள சென்னை மாநகராட்சியின் (பொது) நிலத்தில் 480 குடியிருப்புகள் கட்டவும், வண்ணான் துறை பகுதியில் 672 குடியிருப்புகள் கட்டவும், குடிசை மாற்று வாரியம் திருத்திய செயற்குறிப்பு ஒன்றை அரசுக்கு அனுப்பியுள்ளது.

2. வண்ணான்துறை திட்டத்திற்குத் தேவைப்படும் மாநகராட்சி (தனியார்) நிலம் இதுவரை வாரியத்தின் வசம ஒப்படைக்கப்படவில்லை. மேற்கூறிய நிலத்தினை உரிமை மாற்றம் செய்ய வாரியம் நடவடிக்கை மேற்கொண்டபோது, தனது ஊழியர்களுக்கு 25 சதவீதம் குடியிருப்புகளை ஒதுக்கீடு செய்தால் மேற்கூறிய நிலம் வாரியத்தின் வசம் ஒப்படைக்கப்படும் என்று சென்னை மாநகராட்சி தெரிவித்துள்ளது. மேலும் அந்நிலங்களுக்காக சந்தைவிலை தரவேண்டும் எனவும் கருத்துத் தெரிவித்து சென்னை மாநகராட்சி வலியுறுத்தி வருகிறது. சென்னை மாநகராட்சியின் கோரிக்கையின்படி மாநகராட்சி ஊழியர்களுக்கு ஒதுக்கீடு செய்ய வாரியம் ஒப்புக்கொண்டுள்ளது. மாநகராட்சி (தனியார்) நிலங்களுக்கான விலை நிர்ணயம் செய்வது குறித்து அதைத் தனியே அரசு பரிசீலனை செய்து வருகிறது. இருப்பினும் மேற்கூறிய சூழ்நிலைகளினால் மேற்கூறிய நிலங்களுக்கான விலை நிர்ணயம் செய்வது குறித்து ஒரு முடிவு எடுக்கும் வரை காத்திராமல் மேற்கூறிய நிலத்தினை வாரியத்திடம் ஒப்படைக்குமாறு சென்னை மாநகராட்சியை கேட்டுக்கொள்வதற்கும், 25 சதவீதம் குடியிருப்புகளை மாநகராட்சி ஊழியர்களுக்கு ஒப்படைப்பதற்கு அனுமதி அளிப்பது குறித்தும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. எனவே





வண்ணான்துறை (மாநகராட்சி தனியார்) நிலம் குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் வசம் ஒப்படைக்கப்பட்டவுடன், மீதமுள்ள 672 குடியிருப்புகளை வண்ணான்துறை திட்டப் பகுதியில் கட்ட வாரியம் உடனடியாகச் செயல்படும்.

* **திரு. சைதை சா. துரைசாமி** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதைப் போல கொத்தவால் சாவடி தெரு பகுதியில் ஒரு பகுதி வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கோதா மேடு பகுதியில் கட்டுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட இடம் குறித்து அதிகாரிகள் மத்தியில் கோப்புகளின் வாயிலாக கால தாமதம் ஆகிக் கொண்டிருக்கிறது. விலை நிர்ணயம் செய்வதில் கால தாமதம் ஆகிறது என்று நினைக்கிறேன். எனவே இதை ஒரு துரிதப் பணியாக எடுத்துக் கொண்டு நிர்ணயிக்கப்பட்ட கால கட்டத்திற்குள்ளாக இந்தப் பணிகள் நடக்கவில்லை என்று சொன்னால், அரசுக்கு அதிகமான நிதி பின்னால் தேவைப்படும் என்ற காரணத்தால் இந்தப் பணிகளைத் துரிதப்படுத்த, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வீட்டுவசதித் துறைச் செயலாளரையும், உள்ளாட்சித் துறை ஆணையாளரையும், வருவாய்த் துறை ஆணையாளரையும் கூட்டமாகக் கூட்டி நடவடிக்கை எடுத்தால் விரைவாக இந்தப் பணிகளைத் தொடங்க ஏதுவாக இருக்கும். எனவே, இந்தப் பணிகளை மேற்கொள்ள அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு** : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே விவர அறிக்கையில் குறிப்பிட்டதைப் போல மொத்தம் 1,152 குடியிருப்புகளில் சுமார் 480 குடியிருப்புகள் துவங்கப்பட்டிருக்கின்றன. மீதம் 672 குடியிருப்புகள் கட்டுவதற்கான இடம் சென்னை மாநகராட்சிக்குச் சொந்தமான இடமாக இருப்பதால், சென்னை மாநகராட்சியினர் அதற்குரிய விலையை மார்க்கெட் ரேட்டிலேயே கேட்கிறார்கள். முதலில் அதிகாரிகள் மத்தியில் பேச்சு வார்த்தை நடத்தி அதற்குப் பிறகு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கப்படும். அவர் சொன்னதைப்போல அதிகாரிகளை அழைத்துப் பேசி மீதம் 672 குடியிருப்புகளையும் குறிப்பிட்ட கால கட்டத்திற்குள் கட்டுவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விலை நிர்ணயம் செய்வதை எப்போது வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம். அரசு நிர்ணயிக்கின்ற தொகையைக் குடிசை மாற்று வாரியம் செலுத்த வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் பெயரில் குறிப்பிட்ட இடத்தில் குடிசை மாற்று வாரியம் பணிகளைத் துவங்குவதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி தம் பணியாளர்களுக்கு 25 சதவிதம் கட்ட வேண்டும் என்று கேட்டுக் கொண்டிருந்தது. அதைக்கூட ஒப்புக்கொண்டு விலை பின்னால் என்ன நிர்ணயம் செய்யப்படுகிறதோ அதைக் குடிசை மாற்று வாரியம் தரும். ஆனால், அந்த இடத்தை முதலிலே குடிசை மாற்று வாரியத்திற்குத் தாருங்கள் என்று கேட்டு மாநகராட்சிக்கு எழுதியிருக்கிறோம். அந்த வகையில்தான் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. முதலிலே அந்த இடத்தைப் பெற்று, அதற்குப் பிறகு குடியிருப்புகள் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

**(உ) கந்தர்வகோட்டை, புதுக்கோட்டை ஒன்றியங்களில் சில மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின் இணைப்பு வழங்காதது.**

**திரு. ஜே. முகம்மது கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம். கந்தர்வ கோட்டை மற்றும் புதுக்கோட்டை ஒன்றியங்களில் சில ஊர்களில் ஓராண்டிக்கு முன் கட்டப்பட்ட மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு இதுவரை மின்இணைப்பு வழங்கப்படாதது குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



## அறிக்கை.

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வ கோட்டை மற்றும் புதுக்கோட்டை ஒன்றியங்களில் சிறு ஊர்களில் ஓராண்டுக்கு முன் விண்ணப்பம் பெறப்பட்ட எல்லா மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கும் மின் இணைப்பு ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது. இதுவரை மின் இணைப்பு வேண்டி மேல் நிலைத் தொட்டிகளுக்கான மனுக்கள் எதுவும் வாரியத்திடம் நிலுவையில் இல்லை. எனினும் பெருங்களூரிலுள்ள மேல்நிலைத் தொட்டிக்கான மின்இணைப்பு சம்பந்தமான எல்லா வேலைகளும் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் முடிக்கப்பட்டு விட்டன. ஆனால் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மின் இணைப்பு எடுத்துக் கொள்ள இதுவரை முன்வரவில்லை.

**திரு. ஜே. முகம்மது கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, இந்த கவன ஈர்ப்பு கொடுத்ததற்குக் காரணம கந்தர்வகோட்டை. ஒன்றியத்தில், கந்தர்வகோட்டை. ஈாடிப்பட்டு, சந்தம்பட்டி, துவா, அரவணைப்பட்டி போன்ற ஊர்களுக்கும், புதுக்கோட்டை ஒன்றியத்திலே வடவாளம் ஊராட்சியில் தண்ணீர் பந்தல்பட்டி, 9-பி நத்தம் பண்ணை, எல்லைப்பட்டி, கவிநாடு கிழக்கு, ஆட்டாங்குடி, திருநாவல்பட்டி., பெருங்களூர் போன்ற பகுதிகளிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி ஓராண்டு ஆகியும் மின் இணைப்புத் தரவில்லை என்பதுதான். அதற்கு அமைச்சர் அவர்கள் அளித்த அறிக்கையில் அதில் பெருங்களூருக்கு மட்டும் தரப்படவில்லை என்று பதில் கொடுத்திருக்கிறார்கள். நேற்றையதினம் அந்த இடங்களுக்குச் சென்று நான் பார்க்கும்போது தண்ணீர் பந்தல், எல்லைப்பட்டி போன்ற பகுதிகளிலேயும் நேற்றையதினம் வரைக்கும்கூட மின் இணைப்புத் தரப்படவில்லை. தவறான தகவலை நம்முடைய அதிகாரிகள் தந்திருக்கிறார்கள். இந்த ஊர்களில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்குவதற்கும், தவறான தகவல் அளித்த அதிகாரிகள்மீது நடவடிக்கையெடுக்கவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

(பிற்பகல் 11-10)

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கந்தர்வகோட்டை ஒன்றியம், புதுக்கோட்டை ஒன்றியம் ஆகிய இரண்டிலும் சில ஊர்களில் ஓராண்டிற்கு முன்னால் கட்டப்பட்ட மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கவில்லையென்று சொன்னார்கள். ஆனால் பதிலில் ஓராண்டிற்கு முன்னால் கட்டப்பட்ட தொட்டிகளுக்கு எல்லா இடங்களிலும் மின் இணைப்பு கொடுக்கப்பட்டதாகவும், மேற்கொண்டு மின் இணைப்புக் கேட்டு மனு எதுவுமில்லையென்றும் தகவல் கொடுத்திருக்கிறார்கள். தவறான தகவல் கொடுத்திருந்தால் அவர்கள்மீது தக்க நடவடிக்கையெடுக்கப்படும் என்பதுடன், இதுவரையில் மின்னிணைப்புக் கொடுக்காத மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகளுக்கு உடனடியாக மின்னிணைப்புக் கொடுக்கவும் நடவடிக்கையெடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஜே. முகம்மது கனி :** தலைவர் அவர்களே, மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் கட்டும் பணியில் மூன்று துறைகள் இணைந்து செயல்பட வேண்டியுள்ளது. குடிநீர் வடிகால் வாரியம், மின் வாரியம் ஆகிய இரண்டு துறைகளும் வேலையை முடித்து உள்ளாட்சித் துறையிடம் ஒப்படைக்க வேண்டும். பல இடங்களில் இந்தத் துறைகள் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்ற வாய்ப்பில்லாமல் இருக்கிறது. ஆகவே இந்த மூன்று துறைகளும் ஒன்றாகச் சேர்ந்து பணியாற்றுகிற வகையில் ஏதாவது ஒரு சிறப்புத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் :** தலைவர் அவர்களே, இப்போது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியத் தலைவர்கள், துணைத் தலைவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட இடங்களில் பணியை நிறைவேற்றுவதற்கு, இந்த மூன்று துறைகளையும் ஒன்றுபடுத்துவதற்கு, டிஸ்டிரிக்ட் டெவலப்மெண்ட் ஆபீசர்கள் இருக்கிறார்கள். அப்படியும் பிரச்சினை இருக்குமானால் இந்த மூன்று துறைகளையும் இணைந்து விரைவில் செயல்படுவதற்கு சிறப்பான நடவடிக்கை, சம்பந்தப்பட்ட அமைச்சர்களைக் கலந்துகொண்டு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





**(ஊ) துவரங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம் கட்டுவதில் தடங்கல்.**

**திரு. க. சோலைராசு:** தலைவர் அவர்களே, "துவரங்குறிச்சி ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டும் திட்டத்தினை அறநிலையத் துறையினர் தடுத்து நிறுத்திவிட்டனர் என்ற அப்பகுதி மக்கள் அச்சம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறை வட்டம், மருங்காபுரி அருள்மிகு கரிகிரிவரதராசப் பெருமாள் திருக்கோவிலுக்குச் சொந்தமான துவரங்குறிச்சி கிராமத்திலுள்ள ச. எண் 23/3-பி-ல் உள்ள 4.36 ஏக்கர் நிலத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க பொதுப் பணித்துறையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டபொழுது மேற்படி திருக்கோவிலின் பரம்பரை அறங்காவலர் மற்றும் செயல் அலுவலரால் மேற்கொண்டு கட்டிடம் கட்ட முடியாதபடி மணப்பாறை மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் ஓ. எஸ். 858/80 வழக்கு தொடர்ந்து இடைக்கால தடை உத்தரவும் பெறப்பட்டுள்ளது.

திருக்கோவிலின் நிலத்தில் பிரவேசிப்பதாயின் 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையச் சட்டத்தின் பிரிவு 34-ன்படி இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையின் ஆணையரின் முன் அனுமதி பெறப்பட்டு அதன்படி நிலக்கிரயமோ அல்லது வாடகையோ குத்தகையோ கொடுக்க அனுமதி பெற்ற பின்னரே பிரவேசிக்க வேண்டும். அவ்வாறு அனுமதி பெறாமல் பிரவேசித்தால், சட்டப்படி செல்லாது என்பதாலும் திருக்கோவிலின் தன்மையைக் கருதியும் செயல் அலுவலரும், பரம்பரை அறங்காவலரும் இதனைத் தடுத்துள்ளனர். ஆணையரின் அனுமதி பெற்று நிலத்தைக் கிரயம் பெற்றோ அல்லது ஆர்ஜிதம் செய்தோ ஆரம்பச் சுகாதார நிலையம் கட்ட நடவடிக்கை மேற்கொண்டிருந்தால்

[திரு. வி. வி. சுவாமிநாதன்] [1987 மே 4

பாரம்பரை அறங்காவலர் மற்றும் செயல் அலுவலர் அவ்வாறு செய்திருக்க மாட்டார்கள். கோவில் சொத்தை பாதுகாக்க செயல் அலுவலர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது முறையான செயலாகும். நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு திருக்கோயிலுக்குச் சாதகமாக தீர்ப்பானபோதிலும் பொதுமக்களின் நன்மையைக் கருதியும், கரூர் மாவட்ட உடல் நல அலுவலர் தற்போது மேற்படி நிலத்திற்குண்டான கிரயத்தை வருவாய்த்துறை நிர்ணயிக்கும் விலையைக் கொடுத்து விடுவதாக ஒப்பந்தம் செய்து கொள்வதாகவும், நீதிமன்றத் தடை உத்தரவை நீக்கிக்கொண்டால் கிரயத் தொகையைச் செலுத்த நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளதாலும், தற்போது நிலத்தைச் சுகாதாரத் துறைக்கு விற்பனை செய்ய இந்து சமய அறநிலையச் சட்டப் பிரிவு 34-ன் கீழ் உரிய படிவத்தில் மனுவைப் பெற்று அனுப்ப திருச்சிராப்பள்ளி இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை துணை ஆணையரைக் கேட்கப்பட்டுள்ளது. துணை ஆணையரின் அறிக்கையைப் பெற்று நில விற்பனை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். நிலத்தில் கட்டப்பட்ட கட்டிடங்களையும் நீதிமன்றத் தீர்ப்பு இருந்தும் எதும் செய்யவில்லை. நிலத்தைக் கிரயம் பெற்ற பின்னர் சுகாதார நிலையம் கட்ட தடை எதும் இல்லை என்ற விபரமும் தெரிவிக்கப்படுகிறது.

திரு. க. சோலைராசு: தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் துணை ஆணையரின் அறிக்கையைப் பெற்று நில விற்பனை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. 1982 ஆம் ஆண்டில் மருத்துவத் துறையினர் அரசு நிர்ணயிக்கிற விலையைத் தரத் தயார் என்றும், அறநிலையத் துறையினர் அரசு நிர்ணயிக்கிற விலையைப் பெற்றுக்கொண்டு அந்த இடத்தை மருத்துவத் துறைக்குத் தருவதற்குத் தயார் என்றும் எழுதி ஒப்பந்தத்தைப் போட்டிருக்கிறார்கள். 1982 ஆம் ஆண்டு போடப்பட்ட அந்த ஒப்பந்தம் குறித்து அறநிலையத் துறையில் விரைவான நடவடிக்கை இல்லாததால் அந்தப் பகுதியில் மருத்துவமனை வருவது தடைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஏறக்குறைய 20 மைல் சுற்றளவில் 40,000 மக்கள் மருத்துவமனை இல்லாமல் அவதிக்குள்ளாகி இருக்கிறார்கள். எனவே, சட்டச் சிக்கல்களுக்குக் காத்திராமல் மனிதாபிமான



1987 மே 4] [திரு. க. சோலைராசு]

அடிப்படையில், மக்களுக்கு மருத்துவ வசதி செய்து தரவேண்டுமென்ற உணர்வோடு அறநிலையத் துறை விரைவான நடவடிக்கையெடுத்து, அந்தப் பகுதி மக்களுக்கு மருத்துவ வசதி செய்து தருவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, அறநிலையத் துறை ஏற்கெனவே ஒப்புதல் கொடுத்திருந்தால் நிச்சயமாக வேலை துவக்கப்படலாம். விவர அறிக்கையின்படி அறநிலையத் துறையைக் கலக்காமல் அறநிலையத் துறைக்குச் சொந்தமான மருங்காபுரி அருள்மிகு கரிகிரி வரதராசப் பெருமாள் திருக்கோவிலுக்குச் சொந்தமான ச. எண் 23/3-பி-ல் உள்ள 4.36 ஏக்கர் நிலத்தில் ஆரம்பச் சுகாதார நிலையம் அமைக்க பொதுப்பணித் துறையினர் கட்டடம் கட்டியதால்தான் அதில் சம்பந்தப்பட்ட கோவில் தக்காரும், செயல் அலுவலரும் கோர்ட்டில் தடை வாங்கியிருக்கிறார்கள். கோவிலுக்குச் சாதகமாக கோர்ட் தீர்ப்பு வழங்கியிருக்கிறது. இந்து சமய அறநிலையங்கள் சட்டப்படி செக்ஷன் 34-ன்படி அனுமதி கோரி விண்ணப்பிக்க வேண்டும். அப்படி விண்ணப்பம் கோரிய கருத்துருவை சம்பந்தப்பட்ட செயல் அலுவலரிடமிருந்து பெறுவதற்கு துணை ஆணையருக்கு அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

திரு. க. சோலைராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிமன்றத்திலே தீர்ப்பு சாதகமாக வந்திருக்கிறது என்று சொன்னார்கள். எங்களைப் பொறுத்தவரையில், நீதிமன்றத்திலேயிருந்து அறநிலையத் துறைக்குச் சாதகமாக தீர்ப்பு வருகிறதா, அல்லது மருத்துவத்துறைக்குச் சாதகமாக வருகிறதா என்பதைப் பற்றிக் கவலை கிடையாது. எங்களைப் பொறுத்தவரையில் மக்களுக்குச் சாதகமாகத் தீர்ப்பு வருகிறதா என்பதைத்தான் பார்க்கிறோம். 1982 ஆம் ஆண்டு மருத்துவத் துறையினுடைய துணை இயக்குநர் அவர்களும் இந்தத் துணை ஆணையர் அவர்களும் நிலத்தை எடுத்துக் கொள்வதற்கும், நிலத்தைக் கொடுப்பதற்கும் சம்மதிக்கின்றோம் என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்கள். அதனுடைய அடிப்படையில் மருத்துவத் துறை

[திரு. க. சோலைராசு] 1987 மே 4]

யினர் கட்டிடத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறபோது—அதற்குரிய மதிப்பு வந்துவிட்டால் பணத்தைக் கொடுத்து விடலாம் என்ற ஒரு எண்ணத்திலே அவர்கள் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கி னார்கள்—அறநிலையத் துறையினுடைய தாமதமான நடவடிக்கை யினால், எங்களுக்கு இந்த விலையை நிர்ணயித்த பிறகுதான் நீங்கள் கட்டிடத்தைக் கட்டவேண்டும் என்று சொல்லி, நிறுத்தி இருக்கிறார்கள். ஆகவே நிர்ணயித்த அந்த விலையைத் தருவ தற்கு மருத்துவத் துறை தயாராக இருக்கிறது. எனவே, விரைவிலேயே அறநிலையத்துறை நடவடிக்கை எடுத்து, மருத்துவத் துறையிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு, இந்தத் திட்டத்திற்கு விலக்கு அளித்து, மக்களுக்கு மருத்துவ வசதியைச் செய்து தருவதற்கு அமைச்சர் அவர்கள் உறுதுணை யாக இருப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு வேண்டுமானால் அறநிலையத் துறையைப் பற்றிக் கவலை இல்லா மல் இருக்கலாம். ஆனால் அரசு அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதாக இருக்கிறது. கோவிலுக்குச் சொந்தமான இடத்தைச் சட்டப்படி எடுக்காமல், இரண்டு துறையினரும் ஒப்புதல் செய்து கொண்டாலும் கூட, இந்து சமய அறநிலையத் துறை சட்டம் 34 பிரகாரம், குறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பம் எழுதி இசைவைப் பெற்றுதான் செய்ய வேண்டும். இந்த இசை வைப் பெறும்படியாக கேட்டிருக்கிறோம். அறநிலையத் துறை யால் எந்தக் காமதமும் இல்லை.

**(எ) நத்தம் கோயில்பட்டி கைலாசநாதர் கோயில் திருப்பணி.**

**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நத்தம் கோயில்பட்டியிலிருக்கும் பாண்டிய மன்னர் காலத்தில் கட்டப்பட்ட, பிரசித்தி பெற்ற அருள்மிகு கைலாச நாதர் கோவில் தற்சமயம் மிகவும் பழுதடைந்த நிலையில்



1987 மே 4] [திரு. மெ. ஆண்டி அம்பலம்]

இருப்பது குறித்த". அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

**அறிக்கை.**

மதுரை மாவட்டம், நத்தம் வட்டம், நத்தம் கோயில்பட்டி, அருள்மிகு கைலாசநாதர் சுவாமி திருக்கோயில் திருப்பணி செய்வது குறித்து மதுரை துணை ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது. துணை ஆணையர் மேற்கண்ட ஆலய திருப் பணி செய்தல் குறித்து திருப்பணிக்குழு அமைத்து அறிக்கை அனுப்ப மேற்கண்ட ஆலய செயல் அலுவலரைக் கோரியுள்ள தாகத் தெரிவித்துள்ளார்.

2. இக்கோயிலுக்குத் திருப்பணிக்குழு அமைத்து விரைவில் திருப்பணி வேலைகள் துவங்க தக்க ஏற்பாடுகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. மெ. ஆண்டி அம்பலம்:** பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பணிக்குழு 1981 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டு, அதற்கான ஆணையும் இந்தத் துறையில் பிறப்பிக்கப்பட்டது, ஆனால் இந்தத் தகவலைக்கூட இந்தத் துறையின் அதிகாரிகள் கவனத் தில் கொள்ளாமல், இந்த அறிக்கையைத் தயார் செய்து தந்துள் ளார்கள் என்பதை அரசு அறியுமா?

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை துணை ஆணையரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டிருக்கிறது. அவர், சம்பந்தப்பட்ட ஆலயத்தினுடைய செயல் அலுவலரிடமிருந்து வாங்கித் தரவேண்டும். அதுவும் விவர அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட கோயில் செயல் அலுவலர் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். திருப் பணிக் குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது. அதனுடைய மதிப்பீடு இவ்வளவு, இவ்வளவு வசூல் செய்தார்கள், இவ்வளவு எதிர் பார்க்கிறார்கள் என்ற விவரத்தைக் கோரிதான், நாம் துணை ஆணையரிடமிருந்து அறிக்கையை எதிர்பார்க்கிறோம்.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருப்பணிக் குழு செயல்பாட்டில் உள்ளதா? மேலும் 1972-ஆம் ஆண்டிலிருந்து எம்.எல்.ஏ.வாக இருந்து வரும் நானும், 1980 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து எம்.பி. யாக இருந்து வரும் சேனாதிபதி கவுண்டரும் இந்தக் குழுவிலே சேர்க்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். எனவே, எங்களையும் இணைத்து இந்தக் குழுவைத் திருத்தி அமைக்க அரசு முன்வருமா? இந்தக் கோவிலுக்கு உள்ள சொத்தின் மதிப்பு எவ்வளவு? இந்தக் கோவிலுக்கு வருமானம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இதுபற்றித் தனியாக வினா போடும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களையும் மற்றவர்களையும் சேர்ப்பது பற்றி துறை ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு எண் 8, 9 மற்றும் 10 ஆகியவை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பட்டு, பிறிதொரு நாளில் எடுத்துக்கொள்ளப்பெறும்.

## 3. அறிக்கை அளித்தல்.

### பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கையை இந்த மாமன்றத் திற்குப் பெருமையுடன் அளிக்கிறேன்.



## 4. தகவல் கோரல்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன்: பாயின்ட் ஆப் ஆர்டர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வேங்கடரமணன் உட்காருங்கள். அசெம்பளியிலிருந்து பேசுகிற மாதிரிப் பேசவேண்டும். (குறுக்கீடு). என் அலுவல் சம்பந்தப்பட்ட பிரச்சினையைப் பற்றி என்னுடைய அறைக்கு வந்து கேளுங்கள் என்று திரும்பத் திரும்பச் சொல்லியாகிவிட்டது. இங்கே கேட்க முடியாது. என்னுடைய அறைக்கு வந்து கேளுங்கள்.

(முற்பகல் 11-20)

## 5. அரசினர் சட்ட முன்வடிவுகள்.

### (அ) தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவப் பல்கலைக் கழகச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

[1987 மே 4

(ஆ) தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987-ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் கல்லூரிகள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(இ) திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1987

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** இச்சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.



1987 மே 4]

6. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண். 15—காவல் துறை.

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 117,87,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்."

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 117,87,73,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்காசியில் பாழ்பட்டு கிடக்கும் காவலர் குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய வீடுகள் கட்ட வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 117,87,73,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் முறைகேடுகளை ஒழிக்க காவல் துறை அதிகாரிகளின் சொத்துக்களைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 117,87,73,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

[1987 மே 4

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கணவன் மனைவி மத்தியில் வரதட்சணை பற்றிய தகராறு காரணமாக பெண்களை சித்திரவதை செய்யப்பட்டு கொலைகள் நடப்பது அதிகரித்து வருவதைத் தடுக்க காவல்துறை உடனடி நடவடிக்கை எடுப்பது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 117,87,73,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.”

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவலர் குடியிருப்புகளுக்கு தனி மீட்டர் (மின்சார அளவை) பொருத்துவது பற்றி விவாதிக்க நான் கீழ்க் கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 117,87,73,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.”

திரு. எஸ். ரெத்தினராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதக் கலவரத்தைத் தடுக்கும் வகையில், மேலகிருஷ்ணன் புதூரில் ஒரு காவல் நிலையம் ஆரம்பிக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மானியக் கோரிக்கை எண். 15—காவல் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 117,87,73,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.”

(ஆ) கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

[illegible]

“மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 8,79,55,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.”



1987 மே 4]

திரு. கோ. விஜயன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத் தலைநகர்களில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மானியக் கோரிக்கை எண் 16--தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 8,79,55,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.”

திரு. மு. இராசரங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணம் தீயணைப்பு நிலைய ஊர்திகள் இயங்காத நிலை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 8,79,55,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.”

திரு. பி. கே. எம். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தீயணைப்புப் படையினரின் பல நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

“மானியக் கோரிக்கை எண். 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 8,79,55,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும்.”

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, காவல் துறை பற்றிய விளக்கக் குறிப்புகளும், ** தீயணைப்புப் பணிகள் பற்றிய விளக்கக் குறிப்புகளும் விரிவாக மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு

** 477-573 229-258 ஆம் பக்கங்களில் இணைப்புகள் III, IV ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 4

ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கின்றன. அவற்றையே முன்னுரையாக நிகழ்ச்சி நிரலில் ஏற்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன். விவாதத்திற்குப் பிறகு முடிவுரை கூறுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு காவல் துறையினுடைய மானியக் கோரிக்கையின்மீதும், தமிழ்நாடு தீயணைப்புப் பணிகள் துறையினுடைய மானியக் கோரிக்கை எண். 16-ன் மீதும் பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்காக நான் சார்ந்து இருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக காவல் துறை குற்றங்களைக் கண்டுபிடிப்பதிலும் சரி, பாதுகாப்புப் பணிகளிலும் சரி மற்ற மாநிலங்களுக்கு எல்லாம் முன் உதாரணமாக இருந்து வருகிறது என்ற முத்திரையை காங்கிரஸ் ஆட்சி புரிந்த காலத்திலேயே இந்தத் துறை பெற்று இருக்கிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன். அன்று முதல் தன்னுடைய பணிகளை ஓரளவுக்கு சிறப்பாக செய்து அன்று கிடைத்த புகழை அழியாது காத்து வருகிறது என்றே சொல்லலாம். நாளுக்கு நாள் வளர்ந்து வரும் விஞ்ஞான வளர்ச்சியின் துணையோடு புது புது யுக்திகளைக் கையாண்டு குற்றம் செய்வதில் குற்றவாளிகள் கை தேர்ந்து இருக்கிறார்கள் என்பதையும் நாம் அறிய வேண்டிய ஒன்று ஆகும். அரசும் இதை எல்லாம் கருத்தில் கொண்டு காவல் துறையை எந்த அளவுக்கு நவீனப் படுத்த முடியுமோ துறையில் குற்றங்களைக் கண்டுபிடிப்பதற்கு வசதிகளை உருவாக்கி நவீனமயமாக்கி வருகிறது.

காவலர்கள் கடமை ஆற்றும்போது தன்னுடைய குடும்பத்தைப் பற்றிக் கவலை சிறிதும் இல்லாமல் துணிவோடு கடமையைச் செய்ய வேண்டும் என்பதால் அவர் தம் குடும்பத்தினருக்கு கல்வி, மருத்துவம், பொழுதுபோக்கு வசதிகள், குடும்ப வருவாயைப் பெருக்குவதற்கான முறையில் கால்நடை வளர்ப்பு, பாய் முடைதல், தறி நெய்தல், தீக்குச்சி செய்தல், பால் பண்ணை,



1987 மே 4] [திருமதி டி. யசோதா]

கோழிப்பண்ணை அமைத்தல் போன்ற திட்டங்களை நிறை வேற்றத் தவறியது இல்லை. இவ்விதம் சகல வழிகளிலும் காவ லர்களுக்கு உறுதுணையாக இருந்து வரும் அரசு மேலும் அவர் களை ஊக்குவிப்பதற்காக 10 ஆண்டுகள் தண்டனை எதுவும் இல்லாமல் பணி புரிந்தால் முதலமைச்சரின் காவலர் பதக்கம் அளிக்கும் திட்டமும் ஏற்படுத்தப்பட்டு 1986 முதல் அமல்படுத்தப் பட்டுள்ளது. 50 வயதுக்கும் மேலே உள்ள காவலர்களில் 10 ஆண்டுகள் நிரம்பியவர்கள் பெரும் அளவு இருப்பார்கள். அவர்களில் 1986 ஆம் ஆண்டில் 1,359 பேருக்கும் 1987 ஆம் ஆண்டில் 1,366 பேருக்கும் மட்டுமே பதக்கம் கிடைத்து இருக்கிறது. அப்படி யானால் மற்றவர்கள் தண்டனை அடைந்தவர்களா என்று அறிய விரும்புகிறேன்.

இதுபோலவே பத்து ஆண்டுகள் சர்வீஸ் செய்தவர்களுக்கு செலக்ஷன் கிரேடு கொடுத்து ஆக வேண்டும் என்று உத்திர விட்டுள்ளது. இதன்படி 1980-81 ஆம் ஆண்டில் செலக்ஷன் கிரேடு தேர்வுக்கு வந்து காவலர்கள் தேர்வில் கலந்து கொண்டு செலக்ஷன் கிரேடு பட்டியலில் இடம் பெற்று விட்டார்கள். ஆனால் 1987 ஆம் ஆண்டு ஆகியும் செலக்ஷன் கிரேடு கொடுக்கப்பட வில்லை. சர்வீஸ் முடிந்து வீட்டுக்குப் போகும்போது செலக்ஷன் கிரேடு கொடுப்பது என்பது வழக்கமாக இருக்கிறது. இப்படி ஒரு செலக்ஷன் கிரேடு அவசியம்தானா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

முன்பு எல்லாம் அர்த்தால், மறியல் மற்றும் போராட்ட காலங்களில் பெரிய அளவில் செய்யப்படும் பந்தோபஸ்து நேரங்களில் மோபிலைசேஷன் செய்யப்படுவது உண்டு. காவ லர்கள் அழைக்கப்படுவது உண்டு. அப்படி வரும் காவலர் களுக்கு அன்றாடம் தேவைப்படும் உணவுப் படியை 'பீடிங் அலவன்ஸ்' அவ்வப்போது பட்டுவாடா செய்து விடுவது வழக்கம். அப்படிப்பட்ட முறை இப்போது கைவிடப்பட்டிருக்கிறது. திடீர் என்று ஆணையாளர் அழைப்பு வந்தால் வரச்சொல்லும் இடத் திற்கு, வரச் சொல்லும் நேரத்திற்கு வசதி இருந்தாலும் வசதி இல்லாவிட்டாலும் ஆஜர் ஆகிவிடுகிறார்கள். அப்படி வந்த பிறகு தான் தனக்கு எங்கே என்ன வேலை என்ற உத்தரவு கொடுத்த

மாத்திரத்தில் பணியிடத்திற்குச் சென்று பொறுப்பு ஏற்றுக் கொள்கிறார்கள். அப்படிச் செல்லும் காவலர்கள் பசியோடும், பட்டினியோடும் இருக்கவேண்டிய பரிதாப நிலையில் கடமையை செய்து கொண்டு இருக்கிறார்கள். எப்படியோ ஒரு வழியாக கடமை முடிந்து சில தினங்களில் இந்தப் படி. கிடைக்கிறதா என்றால் கிடைப்பது இல்லை. மாதம் பல கடந்து ஆணையாளர் அலுவலகத்தில் பீடிங் அலவன்ஸ் பில் தயார் செய்து அனுப்புங்கள் என்று ஆணை பிறப்பிக்கும்வரை காத்து இருக்கவேண்டும். அதுவும் எத்தனை நாள் டூட்டி செய்தாலும் சரி அத்தனை நாளுக்கும் உணவுப் படி கொடுக்கப்படுவது இல்லை. ஆணை யாளர் குறிப்பிட்டுச்சொல்லும் நாட்களுக்கு மட்டுமே கொடுக்கப் படுகிறது. ஆனால் வெளியூரிலிருந்து வருபவர்களுக்கு மட்டும் உணவுப் படி உடனுக்குடன் தரப்பட்டு விடுகிறது. வெளியூரி லிருந்து வரும் காவலர்கள் எப்படி வீட்டுக்குச் செல்ல முடியாதோ அப்படித்தான் உள்ளூரில் இருந்து வருபவர்களும் வெகு தொலைவிலிருந்து வருபவர்களும் வீட்டுக்கு நேரத்திற்குச் சென்று சாப்பிட முடியாது என்பதைக் கருத்தில்கொண்டு உடனுக்குடன் அனைத்துக் காவலர்களுக்கும் உணவுப்படி வழங்குதல் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(முற்பகல் 11-30)

காவல்துறை எஸ்கார்ட் ஆயாக்கள் பெரும்பாலும் வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களாகவும், விதவைகளாகவும், கணவனால் கைவிடப்பட்டவர்களாகவும், தன்னைவிட வேலை செய்து சம்பாதித்துக்கொடுக்க வேறு எவரும் இல்லாத கஷ்ட சூழ்நிலையில் உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த உத்தி யோகத்தினால் கிடைக்கும் ஊதியத்தைக் கொண்டு ஒரு பெரிய குடும்பத்தையே காப்பாற்றி வருகிறார்கள். அரசு ஊழியர் களுக்குப் பொங்கல் பரிசு என்று ரூ. 300 தரப்படும் என்று அரசு அறிவித்ததால், அந்தப் பொங்கல் பரிசு தங்களுக்கும் கிடைக்கும் என்று நம்பியிருந்த எஸ்கார்ட் ஆயாக்கள், பலமுறை மேலதி காரிகளைச் சந்தித்துத் தங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகை கொடுக்குமாறு வற்புறுத்திப் பார்த்து, பொங்கல் பரிசுத் தொகை கிடைக்காததால் கோர்ட் மூலம் தீர்வு காணச்சென்று





விட்டார்கள். அதன் காரணமாக அவர்களைப் பழி வாங்கும் எண்ணத்துடன் காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை காத்திருக்க வைத்துவிட்டு, கடைசியில் இன்று உங்களுக்கு வேலையில்லை, போகலாம் என்று கூறி அனுப்பி விடுகிறார்கள். மாதம் ஒன்றுக்கு 5 அல்லது 6 நாட்களுக்கு மேல் வேலை கொடுப்பது கிடையாது. இதற்கு முன்பெல்லாம் மாதம் 30 நாட்களுக்கும், எங்காவது வேலை போட்டுக்கொடுத்துக் குறைந்தது மாதம் ரூ. 300 ஊதியம் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருந்திருக்கிறது. இப்போது அது இல்லாத ஒன்றாக அவர் களுக்கு செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அதற்கு ஒரே காரணம் ரூ. 300 பொங்கல் பரிசு தங்களுக்கும் வேண்டு மென்று கேட்டு, நீதிமன்றம் சென்ற காரணத்தால், நிர்வாகம் பழி வாங்குகிறதோ என்ற எண்ணம் ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. தெரிந்தோ, தெரியாமலோ அவர்கள், மற்றவர் களுக்குக் கிடைத்த பொங்கல் பரிசு பெறவேண்டி, அதுவும் இல்லாமல் கஷ்டத்தின் காரணமாக தூண்டுதலாக கோர்ட்டிற்குச் சென்று இருக்கின்ற காரணத்தால் அதை மையமாக வைத்து, அவர்களுடைய வயிற்றிலே அடிப்பது நல்லதாக இருக்க முடியாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். எஸ்கார்ட் ஆயாக்களின் கண்ணீர் இதுவரைக்கும் துடைக்கப்படுவதுபோல், அவர்களை பழி வாங்கும் எண்ணத்தைக் கைவிட்டு, அவர்களுக்கும் ஏதாவது வேலை கொடுத்து, அவர்களுடைய வறுமை நீங்க உதவ வேண்டும். ஏனென்றால், நானும் அவர்களைப்போல் பெண்ணினத்தைச் சேர்ந்தவள் என்ற காரணத்தால் உங்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

காவல் துறையினுடைய குறைகள் களையப்பட வேண்டு மென்று விரும்புவது போலவே, அவர்களுடைய கடமையிலுள்ள நறைபாடுகளும் நீக்கப்பட வேண்டுமென்று விரும்புவது நியாயம் என அவை ஏற்கும் என்று நான் நம்புகிறேன். 1985-ல் கொலை பற்றி காவல் துறைக்குக் கிடைத்த புகார்கள் 76. அவற்றில் கண்டுபிடிக்கப்பட்டவை 60. இதன் சதவீதம் 78.9 ஆகும். 1986-ல் கொலை பற்றி காவல்துறைக்குக் கிடைத்த புகார்களோ 8 தான். 1985 ஆம் ஆண்டைவிட 1986 ஆம் ஆண்டு கிடைத்த

புகார்கள் மிகவும் குறைவுதான். குறைவான புகார்கள் வந்தி
ருந்தும் கூட, கண்டுபிடிக்கப்பட்டவை கடந்த ஆண்டைவிட
சதவீதத்தில் அதிகமாக இருக்க வேண்டாமா? அதுதான் இல்லை.
நடந்த கொலைகள் 68. கண்டுபிடிக்கப்பட்டவையோ 45 தான்.
இதன் சதவீதம் 66.1. அதற்கு முந்தைய ஆண்டைவிட 11.8 சத
வீதம் குறைவாகவே கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. 1985 ஆம்
ஆண்டு கண்டுபிடிக்கப்படாத கொலைகள் 16. 1986-ல் கண்டு
பிடிக்கப்படாத கொலைகள் 23. ஆக மொத்தம் 39 கொலைகள்
கண்டுபிடிக்கப்படவில்லை என்றாகிறது. ஆக ஒவ்வொரு ஆண்டும்
நடக்கின்ற கொலைகளில் கண்டுபிடிக்கப்பட்டது போக மீதமுள்ள
கொலைகள் 'கேரீட் ஓவர்' செய்யாமல் அப்படியே விடப்பட்ட
தால் குற்றவாளிகள் தலைமறைவில் இருந்து, புதுப் புது உக்தி
களைக் கையாண்டு மறுபடியும் மறுபடியும் கொலை செய்து
விட்டு, தலைமறைவாக ஏன் இருக்கக்கூடாது என்றுதான் நான்
கேள்வியாகத் தொடுக்க விரும்புகிறேன். இப்படி கண்டுபிடிக்கப்
படாது விட்டு விட்ட கொலைகள் ஒன்றிரெண்டை அவையின்
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

1985 ஆம் ஆண்டு ஏப்ரல் 19 ஆம் தேதி எழும்பூர் ரயிலடி
அருகில், ஆல்பர்ட் சினிமாக் கொட்டகைக்கு எதிரே உள்ள
கட்டிடத்தின் ஓரமாக, சாமந்தி என்கிற ரிக்ஷாத் தொழிலாளி,
யின் ஒரே மகன் ஆண் குழந்தை பாலாஜி தூங்கிக்கொண்டிருக்
கின்ற நேரத்தில், ஆள் நடமாட்டம் எந்த நேரத்திலும் உள்ள
அந்தப் பகுதியில் எந்தவித பயமும் இல்லாமல் தூங்கிக்
கொண்டிருந்த குழந்தையை, தாய்-தந்தையருக்குத் தெரியாமல்
கொண்டுபோய், அந்தக் குழந்தை காணவில்லை என்று
போலீசிலே புகார் செய்து, கிட்டத்தட்ட 3 நாட்களுக்குப்
பிறகு எழும்பூரிலே வைகை ஓட்டலுக்குப் பின்னாலே இருக்கின்ற,
மணல் கிரவுண்டிற்கு அருகேயிருக்கின்ற ஒரு புதரிலிருந்து அந்தக்
குழந்தை வலது கை வெட்டப்பட்டு, கண்கள் எல்லாம் பறிக்கப்
பட்டு, அந்தச் சூழ்நிலையில், அந்தக் குழந்தை அழுகிய நிலையில்
கண்டுபிடிக்கப்பட்டது. அதற்குப் பிறகு போலீஸ் நாயெல்லாம்
வரவழைக்கப்பட்டது. ஆனால் இன்னும்கூட அந்தக் குற்றத்
தைச் செய்த குற்றவாளி யார் என்று நாம் கண்டுபிடிப்பதற்கு
இன்றைக்கும் தயாராயில்லை. கண்டுபிடிக்கவில்லை.





அதேபோன்று ஒரு குழந்தை மதுரையிலே, ஒரு ஆற்று ஓர
மாகக் கிடைத்தது. அந்தக் கொலையையும் இதுவரையில்
கண்டுபிடிக்கவில்லை. இதுவரையில் காவல் துறைக்கு இவைகள்
எல்லாம் விடப்பட்ட சவால்களா என்றுதான் கேட்க விரும்பு
கிறேன்.

கொள்ளை குற்றம். இது கொலை போலவேதான் 1985-ல் 53
புகார்களுக்கு 33 குற்றங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. 20
கொள்ளைகள் கண்டுபிடிக்கப்படவில்லை. 1986-ல் 79 கொள்ளைக்
குற்றங்களில் 43 கொள்ளைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.
கண்டுபிடிக்கப்படாதவை 36 கொள்ளைகள். இரண்டு ஆண்டு
களையும் சேர்த்து கணக்கிட்டுப் பார்த்தால் கண்டுபிடிக்கப்
படாதவை 56 கொள்ளைகள். இது நம்முடைய காவல் துறைக்கு
உள்ள நல்ல புகழுக்கு இழுக்கு என்று சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன். மற்ற குற்றங்களை எடுத்துக்கொண்டால் பெரிய
திருட்டு, சிறிய திருட்டு, கால்நடை திருட்டு போன்றவைகள் 1985
ஆம் ஆண்டில் நடந்தது போலவே 1986 ஆம் ஆண்டிலேயும்
குற்றங்கள் நடந்திருக்கின்றன. கண்டுபிடிப்புகளும் ஒரே சீராகவே
இருந்துள்ளன. அதன் அதன் இலக்கை எட்டிக்கொண்டிருக்
கின்றன. கண்டுபிடிப்புகளும் இலக்கில் ஒரே சீராக இருந்தாலும்
அது குறித்து சிறப்பாக கூறிவிட முடியாது. சைக்கிள்களை
திருடுகின்றவன் சைக்கிள்களை திருடிக்கொண்டிருக்கிறான்.
பாத்திரங்களை திருடுகிறவன் பாத்திரங்களைத் திருடிக்
கொண்டே இருக்கின்றான். கால்நடைகளைத் திருடுகிறவன்
கால்நடைகளைத் திருடுகின்றான். இது ஒரு மெக்கானிக்கல்
போன்றது. ஒவ்வொரு துறைக்கும் ஒரு மெக்கானிக் இருப்பது
போலத்தான் இதுவும். ஒவ்வொரு பொருளையும் திருடுவதிலே,
திருடுகின்ற வல்லுநர்கள் தனித்தனியாக இருக்கிறார்கள்.
100 இடங்களில் சைக்கிள்கள் காணவில்லை என்று புகார் வரு
கின்றது. 101-வது இடத்திலே சைக்கிள் திருடுபவன் கிடைக்
கின்றான். புலன் விசாரணை செய்கின்றபோது 100 சைக்கிள்
களும் கண்டுபிடிக்கப்படுகின்றன. என்னுடைய வேண்டுகோள்
எல்லாம் அத்தனை குற்றங்களும் நடவாமல் தடுக்கப்பட
வேண்டும் என்பதுதான்.

[திருமதி டி. யசோதா] [1987 மே 4

குண்டு வெடிப்பு சம்பவங்களை எடுத்துக்கொண்டால் நம் முடைய முன்னாள் முதல்வர் கருணாநிதி அவர்கள் கலந்து கொண்ட கட்சிக்கரைக் கூட்டத்திலே மேடைக்குப் பின்னால் வெடித்த குண்டு வெடிப்பு சம்பவமானாலும் சரி, பெரியவர் பால சிங்கம் அவர்கள் இல்லத்தில் வெடித்த குண்டு வெடிப்பு சம்பவ மானாலும் சரி, அரியலூர் இரயில் விபத்திற்குக் காரணமான குண்டு வெடிப்பு சம்பவமானாலும் சரி, தபால் நிலையங்கள், மற்ற இடங்களில் ஏற்பட்ட குண்டு வெடிப்பு சம்பவங்களானாலும் சரி, உண்மை உடனுக்குடன் கண்டறியப்பட்டிருந்தால், உண்மையான குற்றவாளிகள் நிரூபிக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக தொடர்ச்சி யான விபத்துக்கள் தவிர்க்கப்பட்டிருக்க முடியும். குண்டு யாருக்கு எதற்காக வைக்கப்பட்டிருக்கிறது என்பதுபற்றி அல்ல, அதே நேரத்தில் குண்டு வைத்தது யார் என்பதுதான் முக்கியம். அது தெரிந்தால்தான் பெரிய பெரிய விபத்துக்கள் தடுக்கப்பட முடியும். இந்த விபத்தில் காவல் துறை தவறிவிட்டதாக நான் கூற மாட்டேன். இதற்குக் காரணமே போலீஸ் கொள்கைதான் என்றுதான் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக சப்-இன்ஸ்பெக்டர் செலக்ஷன் என்பது ஆண்டுதோறும் நடத்தப்பட வேண்டிய ஒன்றாகும். ஆண்டுக்கு ஆண்டு எஸ்.ஐ. செலக்ஷன் நடத்துவது கிடையாது. 1979-ல் எஸ்.ஐ. செலக்ஷன் நடை பெற்றது. அதற்குப் பிறகு இன்றைக்கு 1987-லே எஸ்.ஐ. செலக் ஷன் நடத்துகின்றோம். கிட்டத்தட்ட 8 ஆண்டு காலத்திற்கு பிறகு இந்த எஸ்.ஐ. செலக்ஷனை நாம் நடத்துகின்றோம். அப்படி நடத்துகின்றபோது கிட்டத்தட்ட 600-க்கு மேலே 700-க் குள்ளே என்று சொல்லி நாம் தேர்ந்தெடுக்கின்றோம். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கின்றவர்கள் பயிற்சி பெறுவதற் கென்று சென்னையில் அசோக் நகரில் எஸ்.ஐ. டிரெயினிங் காலேஜ் என்று இருக்கின்றது. அது 300 பேர்களுக்குத்தான் பயிற்சி கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கக்கூடிய இடம். அந்த தேர்வில் இன்றைக்கு 700 பேர்களை தேர்ந்தெடுத்துவிட்டீர்கள் என்று வைத்துக்கொள்வோம். மீதி இருக்கின்ற 400 பேர்களுக்கு நீங்கள் எப்படி பயிற்சி அளிக்கப்போகிறீர்கள்? இதனை ஆண்டுக்கு ஆண்டு நீங்கள் செய்வீர்களானால் இது போன்ற



1987 மே 4] [திருமதி டி. யசோதா]

ஒரு இக்கட்டான நிலைமை ஏற்படுவதை தவிர்ப்பதற்குரிய வாய்ப்பு இருக்கும் என்பதைக் கூற விரும்புகிறேன். அதைப் போல போலீஸ் துறையிலே போலீஸ்காரர்களாக இருந்தாலும் சரி, தலைமைக் காவலர்களாக இருந்தாலும் சரி, இவர்களை நாம் இன்றைக்கு தேர்வு செய்ய இருக்கின்றோம். வேலூரில் இருக்கின்ற பயிற்சிப் பள்ளியிலும் சரி, கோயம்புத்தூரில் இருக் கின்ற பயிற்சிப் பள்ளியிலும் சரி, 600 பேர்களுக்கு மேலே பயிற்சி பெற முடியாது. அப்படி என்றால் 1,200 பேர்களைத்தான் நாம் எடுக்க முடியும். இரண்டு பயிற்சிப் பள்ளிகளுக்கும் நீங்கள் திடீ ரென்று 2,000 பேர்களை தேர்ந்தெடுத்து விட்டீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அப்படியானால் மீதம் இருக்கின்றவர் களுக்கு எப்படி நாம் பயிற்சி கொடுக்க முடியும்? அதிகபட்சமான நபர்கள் அங்கே திணிக்கப்படும்போது உண்மையான பயிற்சி கிடைக்கக்கூடிய சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்கு பப்ளிக் சர்வீஸ கமிஷனிலே 16 டி.எஸ்.பி.-க்களை நீங்கள் தேர்வு செய்திருக்கிறீர்கள். சீருடைப் பணிபுரிய காவலர் களும் இல்லை, தலைமைக் காவலர்களும் இல்லை. எஸ்.ஐ.யும் இல்லை. ஆய்வாளரும் இல்லை என்ற நிலையில் 16 டி.எஸ். பி.-க்கள் மட்டும் இன்றைக்கு அவசர அவசரமாக தேர்வு செய்யப் பட்டிருக்கின்றபோது—மக்களே இல்லாத நாட்டிற்கு மன்னன் இருந்து ஆட்சி செய்தது போல—அங்கே சீருடைப் பணிபுரிய பணியாளர்கள் இல்லாத சூழ்நிலையில் இன்றைக்கு டி.எஸ்.பிக் கள் பதவிகள் வரையறுக்கப்பட்டிருக்கின்றன என்பதை எல்லாம் கூறாமல் இருக்க முடியவில்லை.

அதேபோல இந்த எஸ்.ஐ. போன்ற பதவியிலே இருக்கின்றவர்கள் எல்லாம் பயிற்சி பெற்றதற்குப் பிறகு பதவிக்கு வருகிறார்கள். பதவிக்கு வந்ததற்கு பிறகு பணியிலே இடைக்காலத்திலே அவர்களுக்கு எந்தவிதமான பயிற்சியும் தருவது இல்லை. மற்ற எல்லா துறைகளிலும் பயிற்சிக்காக அவர்கள் பல்வேறு இடங் களுக்கு அனுப்பப்படுகிறார்கள். ஆனால் போலீஸ் துறையிலே பயிற்சி பெற்று வந்ததற்குப் பிறகு இடையிலே இவர்களுக்குப் பயிற்சி இல்லாத காரணத்தினாலே உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் சேத்துப்பட்டு ரயில்வே பாலத்திற்குக் கீழே

[திருமதி டி. யசோதா] [1987 மே 4

(முற்பகல் 11.40)

குண்டு இருக்கின்றது என்று சொன்னால், அந்த குண்டை சப்-இன்ஸ்பெக்டராலோ, இன்ஸ்பெக்டராலோ, காவல் துறையிலே இருக்கின்ற தலைமைக் காவலர்களாலோ எடுக்க முடியவில்லை. அதற்கு என்று எழும்பூரிலிருந்து காவல்துறை ஆணையர் உயர்திரு தேவாரம் அவர்கள் போய்த்தான் குண்டை எடுக்க வேண்டும் என்று சொன்னால், அங்கே இருக்கின்றவர்களுக்குப் பயிற்சி இல்லை. ஒரு குண்டை எடுப்பதற்கு ஆணையர் அவர்கள் போகவேண்டியுள்ளது. அதேபோல், ராஜபாளையத்தில் ஒரு ஜாதிக் கலவரம் நடக்கிறது என்றால், அதை அடக்குவதற்கு அந்த மாவட்டத்திலே இருக்கின்ற எஸ்.பி.யாலோ, டி.எஸ்.பி.யாலோ, ஆய்வாளர்களாலோ, துணை ஆய்வாளர்களாலோ முடிய வில்லை. அதற்கு இங்கேயிருந்து ஐ.ஜி. அவர்கள்தான் போக வேண்டும்., அவர் போய்த்தான் அங்கே சட்டம் ஒழுங்கை நிலை நாட்ட வேண்டும் என்று சொன்னால், இன்றைக்கு இருக்கிற அதிகாரிகளுக்குப் பயிற்சி குறைவாக இருக்கிறது அல்லது பெற்ற பயிற்சியை மறந்து இருக்கிறார்களோ என்ற ஐயம்கூட ஏற்படக் கூடிய சூழ்நிலை இருக்கிறது.

அதேபோல, போலீஸ்காரர்களுடைய குடியிருப்புகளைப் பற்றி குறிப்பிட்டிருக்கிறீர்கள். அந்தக் குடியிருப்புகள் காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு நீங்கள் 47 சதவீதம்தான் கொடுத்திருக்கிறீர்கள். தலைவர் காமராஜ் அவர்கள் காலத்திலே காவலர்களுக்கு 70 சதவிகிதம் வீடுகள் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனால் இன்றைக்கு 47 சதவிகிதம் என்று சொல்கிறபோது அது மிக, மிகக் குறைவான ஒன்றாக இருக்கிறது.

அதுமட்டுமல்ல; அந்தக் காவலர்களுடைய வீடுகளுக்கு, பராமரிப்பிற்கென்று நீங்கள் கொடுப்பது—ஒரு உதாரணத்திற்கு, பி.டபிள்யூ.டி.யிலே இருந்து எடுத்துக்கொண்டால், 100 வீடுகள் இருக்கின்றன. காவல் துறையைச் சேர்ந்தவர்களுக்கு, அங்கே பி.டபிள்யூ.டி.யிலே ஒதுக்கக்கூடிய தொகை குறைந்தபட்சம் ஒரு வீட்டிற்கு 100 ரூபாய்க்குள்ளேதான் இருக்கின்றது. அந்த ரூ. 100-க்குள்ளே அவர்களாலே எந்த மராமத்து வேலைகளை



1987 மே 4] [திருமதி டி. யசோதா]

சரியாகச் செய்துவிட முடியும். பராமரிப்பு வேலைகளை எப்படி சரி செய்து விடமுடியும்? தரையைச் சரியாக்குவது முடியுமா, கக்கூஸ், பாத்ரூமை சரியாக்குவது முடியுமா, கதவுகளைச் சரி செய்துவிட முடியுமா? வெள்ளை அடிக்கமுடியுமா என்ற நிலை இருக்கின்றது.

அதுமட்டுமல்ல, குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், காவல் றையிலே இருக்கின்றவர்களுக்கு, அவர்களுக்கு அரசாங்கத்தின் மாக வீடு இல்லாத காரணத்தால், அவர்களில் பலர் குடிசைப் திகள் இருக்கின்ற இடங்களில் அவர்களுக்கு நீங்கள் கொடுக் ன்ற வீட்டு வாடகைப்படி குறைவாக இருக்கின்ற காரணத்தால்—குடிசைப் பகுதிகள் அதிகம் இருக்கின்ற பகுதிகளில் குடியிருக்கக் கூடிய நிலை இருக்கின்றது.

அப்படி குடியிருக்கிறபோது, அங்கே சட்டத்திற்குப் புறம்பான சமுதாய விரோதக் காரியங்கள் நடைபெறுகிறபோது, அதை அந்தக் காவல்துறையைச் சார்ந்தவர்கள் கண்டும் காணாமலும் போகக்கூடிய நிலைமைதான் இருக்கின்றதே தவிர, அதுகுறித்து அவர்களால் முறையாக நடவடிக்கை எடுக்கமுடியவில்லை. முறையான நடவடிக்கை அவர்களால் எடுக்கப்பட்டால், குடிசைப் பகுதிகளில் அவர்கள் குடியிருக்க முடியாத நிலை ஏற்படுகின்றது. ஆகவே, அவர்களது வீட்டு வசதிப் பிரச்சினைகள் உடனடியாக நாம் தீர்க்க வேண்டிய ஒன்று என்பதைக் குறிப்பிட்டுச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

அதுமட்டும் அல்ல; எனக்கு ஒரு கடிதம்கூட வந்திருக்கின்றது. அதிலே அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னார்கள்—எங்களுக்கு வீடு கொடுப்பதில்லை என்பது மட்டுமல்ல; ஆயுதப் படைப் பிரிவிலே பணியாற்றிய ஆயிரம் காவலர்களுக்கு ஆயுதப் படையைச் சேர்ந்த குடியிருப்புகள் கொடுக்கப்பட்டன. அவர்கள் பாவம், தனித்தனியாகவே, எங்கெங்கோ இருந்தவர்கள் ஆயிரம் பேர் உடனடியாக அந்த வீடுகளிலே வந்து குடியமர்ந்து விட்டார்கள் குடியும், குடித்தனமுமாக. அப்படி குடும்பத்தோடு குடியமர்ந்த வர்கள் திடீரென்று 'லா அண்டு ஆர்டர்' பிரிவிற்கு மாறுதல் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அப்படி மாறுதல் செய்தவுடனே நம்முடைய ஆணையர் அவர்கள் என்ன சொல்கிறார்கள்

[திருமதி டி. யசோதா] [1987 மே 4

என்றால், அந்த ஆயிரம் பேரும் உடனடியாக வீட்டைக்
காலி செய்து கொடுக்க வேண்டும். நீங்கள் 'லா அண்டு ஆர்டர்'
பிரிவிற்கு வந்து விட்டதனால், ஆயுதப் படையைச் சேர்ந்த
இல்லத்தில் இருக்கக்கூடாது, நீங்கள் காலி செய்து தரவேண்டும்
என்று சொல்கிறார்கள். இதற்கு முன்னாலே இப்படி நடந்திருக்
கிறதா என்றால் இல்லை. இப்போது இந்த ஆணையர்
தான் இந்த சட்டதிட்டத்தைப் போட்டிருக்கிறார் என்று சொல்
கிறார்கள்.

அது உண்மையாக இருக்குமேயானால், காவல்துறையிலே
இருக்கின்ற அவர்கள், சட்டம் ஒழுங்குப் பிரிவுக்கு வந்திருக்கின்ற
வர்கள், ஆயுதப் படைப் பிரிவிலிருந்து வருகின்றபோது,
உடனடியாகக் காலி செய்யச் சொன்னால், எங்கே போவார்கள்?
அவர்களுக்கென்று, காவல்துறைக்கென்று பொருத்தமான வீடுகள்
இல்லை. இன்றைக்கு காவல் துறை ... ... லா அண்டு
ஆர்டர்' பிரிவைக் கவனிக்கிற காவலர்களுக்குச் சரியான
குடியிருப்புகள் இல்லாத காரணத்தால், அவர்களைத் திடீர் திடீ
ரென்று இப்படி மாற்றுங்கள் என்று சொல்வது. காலி செய்து
கொடுங்கள் என்று சொல்வது ஒரு நியாயமான செய்கையாக
இருக்க முடியுமா என்பதைத்தான் உங்களுடைய கவனத்திற்குக்
கொண்டு வருகிறேன்.

அதேபோல் ஓய்வுபெறுகின்ற போலீஸ்காரர்கள்—காவல்
துறையைச் சேர்ந்த காவலர்கள், தலைமைக் காவலர்கள்—அவர்
களுடைய பிள்ளைகள் அதே போலீஸ் இலாகாவிலே பணியாற்று
கிறபோது அவர்களுடைய வீடுகளை, ஓய்வு பெறுகின்ற காரணத்
தால் அவர்கள் காலி செய்ய வேண்டும் என்று சொல்கிறீர்கள்.
அவர்கள் சொல்கிறார்கள் என் மகன் இருக்கிறான். என்னுடைய
மகன் பணியில் இருக்கின்றான், ஆகவே அந்த வீட்டை அவர்
களுக்குக் கொடுங்கள் நாங்கள் பெண்டு பிள்ளைகளோடு எங்கே
நடுத்தெருவிலே போய் நிற்கமுடியுமா என்று கேட்டால்கூட
இந்த இலாக்கா அதற்கு கருணை உள்ளத்தோடு பதில் அளிப்பது
கிடையாது. 35 ஆண்டுக்காலம் இந்த நாட்டுக்காகவும் நாட்டு
மக்களுக்காகவும் நிர்வாகத்திற்கும் உண்மையாக இருந்து பணி
யாற்றி சேவை செய்தவர்களையெல்லாம் இப்படி கௌரவக்
குறைவாக நடத்தி "சர்வீஸ் முடிந்த உடனே நீ வீட்டை
விட்டு வெளியே போ" என்பதும், என் மகன் இந்த



1987 மே 4] [திருமதி டி. யசோதா]

இலாக்காவில் வேலை செய்கிறான் அவனுக்கு இந்த வீட்டைக்
கொடுங்கள் என்றாலும் அதைப்பற்றி கவலைப்படாமல்
பெட்டி படுக்கைகளையெல்லாம் வெளியிலே கொண்டு வந்து
ரோட்டில் போடுகிற கொடுமை இனியாவது வேண்டாம்
என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே
இந்த இலாக்காவில் பணியாற்றியவர்களின் பிரச்சினைகளைக்
குறித்து கொஞ்சம் கருணை உள்ளத்தோடு கவனிக்க வேண்டும்
என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே இன்றைக்கு வெடிகுண்டு சம்பவங்கள்
தொடர்பாகப் பலரை காவல் துறை கைது செய்திருக்கிறது.
ஆனால் கைது செய்யப்பட்ட அத்தனை பேர் மீதும் குற்றப்
பத்திரிகை தாக்கல் செய்து அவர்கள் மீது வழக்கு இன்னும்
வழக்கு மன்றத்திற்குச் செல்லவில்லை. ஒரு சிலர் மீது மட்டுமே
குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது. இன்னும்
பெரும்பாலானவர்கள் மீது காவல் துறை வழக்கை நீதிமன்றத்தில்
தாக்கல் செய்யவில்லை. இதன் காரணமாகப் பல தவறுகள்
நடக்க வாய்ப்பு ஏற்படுகிறது. இப்படிப்பட்ட காரணத்திற்காகக்
கைது செய்தார்கள் என்று வதந்திகள் பரவ வாய்ப்பாக இருக்
கிறது. எனவே இதைத் தடுக்க யார் யார் மீது வெடிகுண்டு
வழக்கு இருக்கிறதோ அவர்கள்மீது உடனடியாக நீதிமன்றத்தில்
குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். கோர்ட்டில் அவர்களை நிறுத்தினால் கோர்ட் அவர்
களைச் சந்திக்கும். அவர்களும் கோர்ட்டைச் சந்திப்பதற்கான
சூழ்நிலை ஏற்படும். அப்படிச் செய்யவில்லை என்றால் காவல்
துறையினர் எடுக்கிற நடவடிக்கைகள் எல்லாம் களங்கம்
ஏற்படக்கூடிய சூழ்நிலையை நாமே உருவாக்கக்கூடிய நிலைமை
ஏற்பட்டுவிடும். அது ஒரு ஆரோக்கியமான நிர்வாக அமைப்
பாக இருக்க முடியாது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

மேலும் காவலர்களுக்கு வாரத்தில் ஒரு நாள் விடுமுறை
அளிக்கப்படுகிறது. அப்படி விடுமுறை அளிக்கப்பட்ட நாட்களில்
அவர்கள் பணி செய்தால் அதற்காக ரூ. 10 அவர்களுக்குக்
கொடுக்கப்படுகிறது. ஆனால் காவலர்களை அதே அடிப்படை
யில் மொபிலைசேஷன் பணிக்காக அழைக்கிறபோது ஒரு
நாளைக்கு அவர்களுக்கு ரூ. 6 மட்டும்தான் தரப்படுகிறது.
சாதாரணமாக விடுமுறை நாட்களில் வேலை செய்தால் ரூ. 10

தாப்படுகிறபோது மொபிலைசேஷனுக்கு பயன்படுத்துகிற போது ஒரு நாளைக்கு ரூ. 6 மட்டும் கொடுக்கப்படுவது எப்படி நியாயமாகும்? ஒரு நாளைக்கு அவர்களுக்கு ரூ. 4 நட்டம் ஏற்படுகிறது. எனவே அந்தச் சூழ்நிலையை தவிர்க்க வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப் போலவே சாதாரண குற்றங்களைப் பொறு மட்டில் காவல் நிலையத்திலேயே சம்பந்தப்பட்டவர்கள அழைத்து எச்சரித்து மன்னித்து விட வேண்டும் என்பதுதா அரசின் கொள்கை என்று தமிழக முதலமைச்சர் அவர்கள் அளித் துள்ள கொள்கை விளக்கக் குறிப்பில் சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் குழாயடிச் சண்டைகள், வாய்த் தகராறுகள் இப்படிப்பட்ட குற்றங்களில் சம்பந்தப்பட்டவர்கள் காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு இரு தரப்பாரிடமும் அவர்கள் கோர்ட்டுக்குப் போனால் என்ன தண்டனைத் தொகை கட்ட வேண்டியிருக்குமோ அந்தத் தொகையை காவல் துறை யினரே வாங்கி வசூலித்துக் கொண்டு அனுப்பி விடுகிறார்கள். சம்பந்தப்பட்டவர்கள் அந்தத் தொகையைக் கொடுக்கவில்லை என்றால் வழக்குப் போட்டு நீதி மன்றத்தில் அவர்களுக்கு அதிக மான தண்டனையை வாங்கிக் கொடுத்து விடுகிறார்கள். பொது மக்கள் இதுபோன்ற கொடுமைகளிலிருந்து காப்பாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இன்றையதின காவல் துறையினரிடமிருந்து மக்களுக்கு உண்மையான பாது காப்பு தேவை. மேலும் குற்றம் நடந்தால் குற்றவாளிகளை உடனடியாகக் கண்டுபிடிக்க வேண்டும். இல்லையென்ற குற்றவாளிகளுக்குத்தான் கொண்டாட்டமாக இருக்கு ஆண்டுக்காண்டு கண்டுபிடிக்கப்படாத குற்றங்கள் அதிகமான குற்றவாளிகளுக்குத்தான் கொண்டாட்டமாக இருக்கு அத்துடன் குற்றங்களை அதிகமாக இழைக்கும் தைரியத்தையும் அவர்களுக்கு அது உண்டு பண்ணும். பொதுமக்களிடம் காவல் துறை ஏற்படுத்திக் கொண்டிருக்கிற நல்லுறவை மேலும் மேலும் வளர்த்துக் கொண்டு குற்றங்கள் நிகழாமல் விழிப்புடன் இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, லஞ்ச ஒழிப்பிலும் தீவிரமாக இருக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.





அரசியல்வாதிகள் லஞ்சம் வாங்குவதாக அரசியல் மேடையில் சொல்லுகிறோம். இன்னார் இவ்வளவு லஞ்சம் வாங்கினார், அவர் இப்படி லஞ்சம் வாங்கினார் என்றெல்லாம் அதே கட்சியைச் சார்ந்தவர்கள் அல்லது எதிர்க் கட்சியில் இருப்பவர்கள் சாடு கிறார்கள். அதற்கு மக்கள் மன்றம் தீர்ப்பு கொடுக்கிறது. அரசியல்வாதிகள் தவறுகள் செய்திருப்பார்களானால், சில அரசியல்வாதிகளை மக்கள் தண்டிக்கிறார்கள். சில அரசியல் வாதிகளை மக்கள் மன்னித்து மீண்டும் அவர்களுக்கு ஆளுகிற தகுதியைக் கொடுக்கிறார்கள். ஆக, அரசியல்வாதிகள் தவறு செய்கிறபோது மக்கள் மன்றம் தீர்ப்பளிக்கும் வாய்ப்பு இருக் கிறது. ஆனால் இன்றையதினம் அரசியல்வாதிகள் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று சொல்லிக் கொண்டே அதிகாரிகள் மட்டத்தில் மிக அதிகமாக லஞ்ச லாவண்யம் பெருக்கெடுத்து ஓடுகிறது. அதைத் தடுப்பதற்கு நாம் என்ன வழிவகைகளைக் கண்டிருக்கிறோம் என்பதை நான் இந்த நேரத்தில் இந்த மன்றத்தில் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். இதற்கென்று— அதாவது லஞ்ச ஒழிப்புக்கு என்று ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ள ஆசைப்படு கிறேன்.

(முற்பகல் 11-50)

அடுத்தாற்போல் தீண்டாமை ஒழிப்பு. தீண்டாமை ஒழிப்பைப் பொறுத்தவரையில் என்னுடைய தொகுதியில் உண்மையிலேயே பயங்கரமாக இருக்கிறது. கிட்டத்தட்ட 7 வழக்குகள் தீண்டாமை ஒழிப்புபற்றி இருக்கின்றன. உதாரணத்திற்கு நேசமணி என்ற கிராமசேவக் குன்றத்தூரில் இருக்கிறார், அவர் மேல் ஒரு தீண்டாமை வழக்கு இருக்கிறது. சந்திரசேகரன் என்ற காவல் துறை உதவி ஆய்வாளர், குன்றத்தூர், அவர் மீது ஒரு தீண்டாமை வழக்கு இருக்கிறது. ப. சிதம்பரம் என்ற அண்ணா தி.மு.க. ஒன்றியச் செயலாளர் மீது ஒரு தீண்டாமை வழக்கு இருக்கிறது. திரு. ப. சந்திரசேகரன், அண்ணா தி.மு.க. பேரூராட்சி, குன்றத்தூர், இவர் மீது ஒரு தீண்டாமை வழக்கு. பி. எஸ். மோகனலிங்கம், குன்றத்தூர் செயலாளர், இவர் மீது ஒரு தீண்டாமை வழக்கு. பொன்னம்பலம், ஜகநீசன் என்றவர் பெயரில் தீண்டாமை வழக்கு இருக்கிறது. குன்றத்தூர் வங்கி மேனேஜர் மீது ஒரு தீண்டாமை வழக்கு இருக்கிறது. அருள் என்பவர் மீது ஒரு தீண்டாமை வழக்கு இருக்கிறது. இப்படி

[திருமதி டி. யசோதா] [1987 மே 4

ஏழு தீண்டாமை வழக்குகள் நடக்கின்றன. தீண்டாமை வழக்குகளை எடுத்துக்கொள்கிறவர்கள் உண்மையிலேயே ஆய்வு செய்து அதற்குப் பிறகு வழக்குகள் உண்மையாக நடை பெற்றிருக்குமானால் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க நாங்கள் இடையூறாக இருக்கமாட்டோம். ஆனால் அதிகாரிகளை மிரட்டுவதற்கு, தங்களுடைய காரியங்களைச் செய்து கொள்வதற்கு, அதிகாரிகளைத் தங்கள் இஷ்டத்திற்குப் பணிய வைப்பதற்கு தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை பயன் படுத்துகிறவர்கள் மீது நீங்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

உதாரணத்திற்கு ஒன்று சொல்லுகிறேன். குன்றத்தூர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மானேஜர் மீது ஒரு தீண்டாமை வழக்கைத் தொடுத்தார்கள். போலீசார் லாரிகளில் வந்துவிட் டார்கள். வேறு சாதிக்காரர் என்று நினைத்துக்கொண்டு வழக்கைப் போட்டார்கள். அதிகாரிகள் விசாரணை செய்யாமலே வங்கிக்கு வண்டிகளில் வந்துவிட்டார்கள். வந்து விசாரிக்கும் போது நான் அரிசன சமுதாயத்தைச் சேர்ந்தவன், அம்பேத்கார் அமைப்பில் நான் பெரிய பொறுப்பில் இருப்பவன், என் மீது தீண்டாமை வழக்கை போட்டிருக்கிறீர்களே என்று அவர் கேட்டார். சில காரியங்களை அவர் நிறைவேற்ற முடியாது என்று சொன்ன காரணத்தால் அவர் மீது அந்த வழக்கு போடப் பட்டிருக்கிறது. கடந்த வாரம் அந்தப் புகார் வாபஸ் வாங்கப் பட்டிருக்கிறது.

அதே போல அருள் என்பவர் மீது தீண்டாமை புகார் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு பணத்தை வாங்கிக் கொண்டு அந்தப் புகாரை திரும்பப் பெற்றுக் கொண்டார்கள். அதேபோல சந்திரசேகரன் என்று சொல்லக்கூடிய காவல் துறையில் ஆய்வாளர், குன்றத்தூரில் இருப்பவர். அவர் மீதும், நேசமணி என்ற கிராமசேவக் மீதும், ப. சிதம்பரம், அல்லா திமு.க. ஒன்றியச் செயலாளர் மீதும் போடப்பட்ட வழக்குகள் அத்தனை யும் இன்றைக்கு வெவ்வேறு காரணங்களால் திரும்ப பெறப்பட் டிருக்கின்றன. ஆகவே தீண்டாமை ஒழிப்புச் சட்டத்தை மிக ஜாக்கிரதையாக கையாள வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



1987 மே 4] [திருமதி டி. யசோதா]

அடுத்தாற்போல் தீயணைப்புத் துறை. தீ விபத்துக்களைத் தடுப்பதும், தீயினாலும், இதர இயற்கைச் சீற்றங்களினாலும் பாதிக்கப்பட்டோரை மீட்டு அவர்களின் துயர் நீக்கி நிவாரணப் பணிகளை மேற்கொண்டு அழிவைக் குறைக்கும் தீயணைப்புத் துறையை நான் பாராட்டுகிறேன். மத்திய அரசிலிருந்து அளிக்கப்படும் உதவித் தொகைகளையும், மற்றும் மத்திய அரசால் அங்கீகரிக்கப்பெற்ற நிதி உதவி நிறுவனங்களிடமிருந்தும் கடன் வசதிகள் பெற்று இந்த மாநிலத்தின் நிதிநிலைமைகளுக்கேற்ப முடிந்த அளவிற்கு தீயணைப்பு நிலையங்களைத் தொடங்குவதே அரசின் குறிக்கோள் என்றும், 25 கிலோ மீட்டருக்கு ஒன்று என்ற வீதத்தில் ஒவ்வோரிடத்திலும் தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்துவதற்கு அரசு முயற்சி எடுத்து வருகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதை எவ்வளவு காலத்திற்குள் உருவாக்கப் போகிறார்கள் என்று கால வரையறையைக் கொடுக்கவில்லை. தீயணைப்பு நிலையங்களைப் பொறுத்த வரையில் ஒப்புதல் அளிக்கப்பட்டு தொடங்கப்படாமல் இருப்பவை 14. ஒப்புதல் அளிக்கப்பட்டு இதுகாறும் துவக்கப்படக்கூடிய நிலையிலே முன்னுரிமை பெற்றிருப்பது 31 என்று சொல்லியிருக் கிறார்கள். ஆனால் கடைசி பக்கத்திலே 9 இடங்களுக்குத்தான் இன்றைக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்லி யிருக்கிறார்கள். இது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. ஆகவே தீயணைப்பு நிலையங்களை அதிகமாக ஏற்படுத்தி இயற்கைச் சீற்றங்களுக்குப் பயன்படுத்தி நிச்சயமாக உங்கள் குறி யீட்டை உடனடியாக அடைய வேண்டும்.

இந்தத் துறையில் பணியாளர்கள் 5,236 பேர் இருக்கிறார்கள், நிர்வாகப் பணியில் 201 பேர் இருக்கிறார்கள். இது குறைந்த அளவாக இருக்கிறது. இதை அதிகரிக்க வேண்டும் என்பதைக் கூறி அவர்களுடைய சில கோரிக்கைகளை உங்களிடத்திலே குறிப்பிட விரும்புகிறேன். அவர்களுக்கு அடிப்படைச் சம்பளம் ரூபாய் 705 ஆக இருக்கிறது, 'ரிஸ்க் அலவன்ஸ்' ரூபாய் இருபதாக இருக்கிறது. இதையெல்லாம் நிச்சயமாக உயர்த்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துறையில் தீயணைப்பு அலுவலர்கள் சுமார் 15 ஆண்டுக் காலம் உழைத்தாலும் பதவி உயர்வு கிடைப்பதில்லை. பட்ஜெட் உரையின்போது கூட

[திருமதி டி. யசோதா] [1987 மே 4

சொல்லியிருக்கிறீர்கள். அரசு ஊழியர்கள் இருபது ஆண்டுக் காலம் பணியாற்றினால் அவர்களுக்கு விசேஷ சலுகை அளிக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறீர்கள். இதுகூட அவர்கள் விஷயத்தில் கிடைக்கவில்லை. ஆகவே கருணையோடு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல நவீன கருவிகளை அறிமுகப்படுத்த வேண்டும். பணியாளர்கள் சேம நலன்கள் அதிகமாக கவனிக்கப்பட வேண்டும். குடியிருப்பு வசதிகள் செய்துதர வேண்டுமென்று கேட்டு இறுதியாக சில விவரங்களைக் கூறி, நான் விடை பெறலாமென்று நினைக்கிறேன்.

இன்றைக்கு காவல் நிலையங்கள் இருக்கின்றன. ஆனால் ஜீப்புகள் கிடையாது. கிராமங்களிலே இருக்கின்ற காவல் நிலையங்களுக்கு ஜீப்புகள் இல்லாத காரணத்தாலே, யார் பாதிக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களே பணத்தோடு வந்து, பிரைவேட் டாக்சி எடுத்து, போலீஸ்காரர்களை அழைத்துக் கொண்டு தங்கள் பகுதிகளுக்குச் சென்றால்தான் குற்றவாளி களைப் பிடிக்க முடியும் என்பதால், இது தவிர்க்கப்பட வேண்டும்.

அடுத்து, சென்னையிலே வீடுகளைக் காலி செய்ய வேண்டு மென்றால் முறையான அணுகுமுறை கிடையாது. குடித்தனம் இருக்கிறவர்களைக் காலி செய்ய வேண்டுமென்றால், அந்த வீட்டுச் சொந்தக்காரர்கள் நீதிமன்றத்திற்குப் போவதில்லை, காவல் துறையை அணுகுவதில்லை. அதற்குப் பதிலாக ரவுடிகளை அணுகுகிறார்கள். 5,000 ரூபாய், பத்தாயிரம் ரூபாய் கொடுத்தால், ரவுடிக் கூட்டம் உள்ளே நுழையும், எல்லோரையும் அடித்து நொறுக்கும், உள்ளே இருக்கும் சாமான்களை வெளியே தூக்கிப் போட்டுவிட்டு, வீட்டைப் பூட்டி, சாவியை வீட்டுக்காரரிடம் கொடுக்கும் என்ற நிலைமை தலைநகரில் இருக்கிறது. இது நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.



1987 மே 4] [திருமதி டி. யசோதா]

இன்றைக்குக் காலையிலேகூட நம்முடைய பழைய ஐ.ஜி.-யாக இருந்த திரு. மோகன்தாஸ் அவர்கள் பற்றி பத்திரிகையிலே ஒரு செய்தி வந்திருக்கிறது. அவரே ஒப்புதல் அளித்து, நான் பதவியிலிருந்து விலகிக்கொள்கிறேன் என்று எழுதிக் கொடுத்து, அரசாங்கத்தினுடைய உத்தரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற அவர், இன்றைக்குப் பல சிறப்புக்குரிய சூழ்நிலையில் இருக்கிறார் என்பதைப் பத்திரிகையில் பார்க்கிறோம். போலீஸ் துறை ரகசியங்களைக் காப்பாற்றக்கூடிய ஒரு துறை. அந்தத் துறையில் உள்ள இதுபோன்ற செய்தி அந்தத் துறையிலிருந்து பெறப்பட்டு பத்திரிகையில் போடப்பட்டிருக்கிறதா அல்லது யாராவது பத்திரிகைகளுக்கு செய்திகளைக் கொடுத்திருக்கிறார் களா என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு போலீஸ் துறையினுடைய நிர்வாகத்தைப் பற்றி ஓரளவுக்குப் பேசிய நேரத்தில், அதனுடைய நடவடிக்கைகளைப் பற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். ஏ. பி. ஜெயபாரதி என்ற கருப்பையா—இவர் சுதந்திரப் போராட்ட வீரர். இவர் புதுக் கோட்டை மாவட்டம், ஆலங்குடி தாலுக்கா, கும்பம்பட்டி வட்டம், காத்தம்பட்டி கிராமத்தில் வசித்து வருகிறார். இவருடைய பெண்ணுக்கு இரண்டு கால்களும் நடக்க முடியாமல் முற்ற நிலையில் இருக்கிறது. மகளின் மருத்துவ வசதிக் காக அவர் கூட்டுறவு வங்கியிடமிருந்து கடன் வாங்கி இருக்கிறார். தனியார்களிடம் கடன் வாங்கியிருக்கிறார். பென்ஷனைக் காட்டி, பலரிடம் கடன் வாங்கியிருக்கிறார். ஓரளவுக்குக் குண மாகியிருக்கிற அவர் பெண்ணுக்குப் பூரணமாகக் குணமாக வேண்டுமென்றால் இன்னும் பணம் தேவை என்பதால் தனக் குள்ள நிலத்தை விற்க முயற்சி செய்கின்றார். அப்படி முயற்சி செய்கின்றபோது, அங்கே இருக்கின்ற ஒருவர் அந்த நிலத்தை வாங்க வந்திருக்கிறார். அப்படி நிலத்தை வாங்க வந்தவரிடம், தங்கராஜ் என்பவர் பயமுறுத்தி, அந்த நிலத்தை வாங்க வேண்டாம் என்று சொல்லியிருக்கிறார். அங்கே நிலச் சொந்தக் காரரை மிரட்டி, எப்படி இந்த நிலத்தை விற்கப் போகிறாய் என்று பார்க்கலாம் என்று அச்சுறுத்தப்படும் நிலையில் தகராறு கள் ஏற்பட்டு அவர் காவல் துறைக்கு மனுக்கள் எழுதி இருக்

[திருமதி டி. யசோதா] [1987 மே 4

கிறார். இந்த மனு தயாரித்த பின்பு, எனக்குக் கிடைத்த
த்கவலின்படி என்னையும், என்னுடைய குடும்பத்தைச் சேர்ந்
தவர்களையும் கொலை முயற்சி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது
என்று தெரியவருகிறது என்பதை உங்களுடைய மேலான
பார்வைக்குக் கொண்டுவருகிறேன் என்று கடைசியில் எழுதி
யிருக்கிறார். இந்த நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்த பெரிய
வர்களைக் கவுரவிக்கவில்லை என்றாலும், அவர்களுக்கு இப்படிப்
பட்ட கொடுமைகள் ஏற்படுவதை காவல் துறையினர் கவனிக்க
வேண்டாமா? அவருடைய மனுக்களை பரிசீலிக்க வேண்டாமா
என்றுதான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, சாராயத்தைப் பற்றிச் சொல்ல வேண்டுமென்றால்,
கள்ளச் சாராயம் விற்கப்படுகிறது, ஆறாக ஓடுகிறது, கடலாக
ஓடுகிறது, இப்போதுதான் ஓடுகிறது. அப்போது ஓடவில்லை என்
றெல்லாம் சொல்லவில்லை. உங்கள் காலத்திலே கள்ளச் சாராயமே
இல்லை என்றாலும் ஒப்புக்கொள்கிறேன். இதனால் அரசாங்கத்
திற்கு வந்துகொண்டிருந்த வருமானம், இன்றைக்கு காவல்
துறையில் இருக்கின்றவர்களுக்குப், சமூகவிரோதிகளுக்கும்
போகிற சூழ்நிலைதான் இருக்கிறது. எனவே நிச்சயமாக
கள்ளச் சாராயம் ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை ஒத்துக்
கொள்ள முடியாது. உதாரணத்திற்குச் சொல்கிறேன், வெள்ளக்
கோவில் ஒன்றியம், கூடலூர் ஒன்றியம் ஆகிய ஒன்றியங்களில்
நம்முடைய காவல் துறை ஆர்.ஐ. அவர்கள் அட்டனை போலிஸ்
இட்டத்திட்ட 3, 4 வண்டிகளில் போய், 7—4—1987 இரவு 12 மணி
அளவில் மூலனூர் சேர்மென் பெரியசாமி கவுடர், காங்கிரஸ் கட்சி
யைச் சேர்ந்தவர், அவர் சென்னையிலே இருக்கும்போது,
வீட்டிலே சாராயம் இருக்கிறது என்று சொல்லி, அவர் வீட்டை
காவல் துறையினர் சோதனை செய்திருக்கிறார்கள்.

(நண்பகல் 12-00)

அவர் தோட்டத்தைப் பரிசோதித்து இருக்கின்றார்கள்.
அவருடைய சகோதரனுடைய வீட்டைப் பரிசோதித்து இருக்
கின்றார்கள். அது மட்டுமல்ல, அங்கேயிருக்கின்ற அ.தி.மு.க.
செயலாளர் திரு. வி. பி. [illegible] வீட்டிலேயும், எக்ஸ்



1987 மே 4] [திருமதி டி. யசோதா]

எம்.எல்.ஏ., அப்பன் பழனிசாமி அவர்கள் வீட்டிலேயும், அ.தி.மு.க.
முன்னணித் தோழர் சிவா, பாலகிருஷ்ணன், வீரகுமார், சுவாமி
போன்ற பொறுப்பு வாய்ந்த நபர்கள் வீடுகளிலேயும் சோதனை
போட்டு வீட்டிலே இருந்த சிலரை அழைத்துச் சென்று
விசாரிப்பதாகச் சொல்லி ஒரு நாள் பூராவும் வைத்திருந்து
அனுப்பியதோடு அன்றி, ஒரு சிலர் மீது வேண்டுமென்றே வழக்கு
தொடர்ந்திருப்பதாக அவர் சொல்கின்றார். இது விவரம் சென்னை
யிலே இருந்த அவருக்கு தெரிவிக்கப்பட்டதாக இப்போது
மனு எழுதியிருக்கிறார்கள். நான் என்ன கேட்கிறேன்? பொறுப்
பானவர்கள், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சேர்மன்,
அவருடைய தம்பி, அவருக்குப் பக்கத்திலேயிருக்கின்ற அ.தி.மு.க.
ஒன்றியச் செயலாளர், முன்னாள் எம்.எல்.ஏ. அவர்கள் வீடுகளிலே
சோதனை செய்து ஏதேனும் கிடைத்திருக்குமேயானால்
அவரை விட்டுவிட வேண்டும் என்று பரிந்துரை செய்வதற்கு
நாங்கள் தயாராக இல்லை.

திரு. துரை ராமசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, அம்மையார் அவர்கள் சொல்கின்ற
[illegible]ராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர் திரு. பெரியசாமி அவர்
களுடைய மைத்துனர் மகன் கருணாநிதி என்பவர் மூலப்
பட்டியிலே சாராய தோட்டவுன் நடத்தி அங்கே சாராயம்
கைப்பற்றப்பட்டு அவரை போலீசார் கைது செய்வதற்காகப்
போகின்றபோது அவர் மறைந்து வாழ்கின்றார் என்று அறிந்து
அவர் ஒரு சமயம் அவருடைய வீட்டிலே இருப்பார்களா என்ற
அடிப்படையிலேதான் இது நடந்திருக்கும் என்பதை நான்
கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணை தலைவர்
அவர்களே, காவல் துறையினருக்குப் பரிந்துரை செய்கின்ற
நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்களை நான் பாராட்டு
கிறேன். நான் என்ன சொல்கிறேன் என்று சொன்னால் ஒரு
கிராமம் என்று எடுத்துக் கொண்டால் சொந்தக்காரர்கள்
இருந்தால் செய்வார்கள். இப்போது எனக்கு என்று எடுத்துக்
கொண்டால் எக்மோர் ஐஸ் பேக்டரி எதிரிலே ஒரு இல்லம்
இருக்கின்றது, வர்த்தாசப்புரம் என்று ஒரு பகுதி. அங்கே

[திருமதி டி. யசோதா] [1987 மே 4

மொத்தமே எங்கள் சொந்தக்காரர்கள். ஆனால் எவனோ ஒருத்தனுடைய வீட்டிலே ஏதோ ஒன்றைச் செய்தான் என்றால் ஏன் வீட்டிலே வருவது என்பது சரியாக இருக்க முடியாது. [illegible] தேர்ந்தெடுக்கப்பட்டவர் அவர், அந்த வீட்டிலே இருக்கின்றாரா என்று கேட்டிருக்கலாம். ஆனால் வீட்டுக் கதவை, எல்லாம் உடைத்திருக்கின்றார்கள். அது காங்கிரஸ் கட்சிக்காரர் வீடு. ஒன்றியப் பெருந்தலைவராக இருக்கின்றார்கள். (குறுக்கீடு) அவர் தலைவர்தான். பெருந்தலைவர் அல்ல. அவருடைய வீட்டிற்குள்ளே போய் இருக்கிறார்கள். அவர்கள் வீட்டிலே புகுந்து சோதனை செய்தது மட்டுமல்ல, அ.தி.மு.க. செயலாளர் அவர்கள் வீட்டிற்குள்ளே புகுந்திருக்கின்றார்கள். [illegible] எம்.எல்.ஏ. அவர்கள் வீட்டிற்குள்ளே நுழைந்திருக்கின்றார்கள். ஆக அந்த வீடுகளுக்குள்ளே . . . . .

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதிலே உள்நோக்கமா அல்லது எப்படியாகிலும் அந்த ஆளைப் பிடிக்கவேண்டும் என்ற நோக்கமா என்பது தெரியவில்லை. அதை ஒரு பெரிய பிரச்சினையாக ஆக்காமல் இருப்பது நல்லது.

திருமதி டி. யசோதா: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதைப் பிரச்சினை ஆக்குவது என்பதல்ல. மானம், மரியாதை, கௌரவம் என்பது எல்லோருடைய பிரச்சினை இல்லையா? அது மானத்திற்கு, மரியாதைக்கு குறை அல்லவா? ஒரு சேர்மன், ஒரு ஒன்றியத் தலைவர் என்று சொன்னால் அல்லது ஒரு அரசியல் கட்சியிலே இருக்கின்ற தலைவர் என்று சொன்னால் அவர்களுக்கு என்று ஒரு கௌரவம் இருக்க முடியாதா? அந்தக் கௌரவத்தை போலீசார் [illegible] போகின்றார்களே. உண்மையாகவே தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுத்து ஏதாவது கையிலே [illegible] [illegible] பட்டவர்கள் குற்றவாளிகளாக இருந்தால் [illegible] [illegible] இருக்கின்ற நிலைமையிலே நான் [illegible] [illegible] நான் மீண்டும் [illegible] [illegible] இதுபோன்ற நிலைமைகளை நீக்க [illegible] [illegible] என்று நான் தெரிவித்து [illegible].



1987 மே 4] [திருமதி டி. யசோதா]

இறுதியாக நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது எல்லாம் இன்றைக்கு பல நிகழ்ச்சிகள் பல இடங்களிலே வந்து [illegible] இன்றைக்கு பல [illegible] நடைபெற்றிருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன் தேர்தல்கள் நடைபெற்ற [illegible] பின்னர் அரசியல் கட்சிகள் தங்களுடைய கட்சிகளிலே வேட்பாளர்களை அந்தந்த ஊராட்சி மன்றங்களுக்குக் குறிப்பிட்டு அறிவிக்காத காரணத்தினாலேயே கட்சிக்காரர்களை கட்சிக்காரர்களே எதிர்த்து நிற்கின்ற நிலைமைகள் ஏற்பட்ட காரணத்தினாலே இன்றைக்கு வெற்றி பெற்றவர்கள் தோற்றவர்கள் மீது [illegible] நடைபெறுகின்ற படலம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. அந்தக் காரணத்தினாலே எங்கு பார்த்தாலும் அடிதடி, கலவரங்கள் ஏற்பட்டு இன்றைக்கு ஒருவருக்கொருவர் உண்டா இல்லையா என்று பார்க்கக்கூடிய சூழ்நிலையாக இருக்கின்றது. அந்த நிலைமைகளை நாம் போக்கவேண்டும். என்னுடைய தொகுதியிலே கூட ஏகனாபுரத்திலே இதுபோன்று அ.தி.மு.க.விலே போட்டியிட்டவர்தான் திருவேங்கட நாயக்கர், அவரை எதிர்த்து தி.மு.க.வைச் சேர்ந்த தேவராசு என்று சொல்லக்கூடியவர் இன்றைக்கு அ.தி.மு.க.விற்கு வந்துவிட்டார். அவர் ஏற்கனவே, இருந்த பழைய அ.தி.மு.க.காரரை [illegible] புடைத்துவிட்டார். [illegible] அவர் வெளியிலே இருக்க முடியவில்லை. [illegible] இருக்கின்றார்கள். இதுபோன்ற நிலைமைகளைத் தவிர்க்க வேண்டும் என்றுதான் இந்த நேரத்திலே குறிப்பிடுகின்றேன். [illegible] பொறுத்தமட்டில் [illegible] என்று காவல்துறையைப் [illegible] சொல்லியிருப்பதைப் போலவே, [illegible] இருக்கவேண்டும். நண்பர்களாக இருக்கக்கூடிய சூழ்நிலை [illegible] நண்பர்களாகவும், வசதியற்றவர் [illegible] நண்பர்களாகவும் அந்தத் துறையினர் இருக்க வேண்டும். வசதி படைத்தவர்கள் எந்தவிதமான பெரிய குற்றங்களைச் செய்தாலும் நாங்கள் தப்பித்துவிடலாம் என்ற நிலை [illegible] ஏழைகள் குற்றம் செய்யவில்லை என்றாலும் [illegible] இருக்கின்ற காரணத்தினாலே அவர்கள் குற்றவாளிகளாக [illegible] சூழ்நிலை இருக்கக்கூடாது என்பதை [illegible] தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். வணக்கம்.

திரு. வி. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் [illegible] மாண்புமிகு [illegible] அவர்களுடைய பொறுப்பில் இருக்கின்ற [illegible] அவர்களுடைய பொறுப்பில் இருக்கின்ற [illegible] மானியக்கனளை நடைபெறும் முத்தமிழ் இந்தத் துறை பற்றிய மானியக்கனளை

[திரு. வி. பாலகிருஷ்ணன்] [1987 மே 4

சங்கமாம் மாண்புமிகு நாவலர் அவர்கள் இங்கே சமர்ப்பித்திருக்கிறார்கள். அவர்கள் சமர்ப்பித்திருக்கின்ற காவல் துறை மற்றும் தீயணைப்புத் துறை பற்றிய மானியங்கள் மீது நான் பேச வாய்ப்பு கொடுத்தமைக்கு முதற்கண் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்குகின்றேன்.

"இன்றையதினம் தமிழகத்தில் இருக்கின்ற காவல் துறையை நல்வழிப்படுத்தி, காவல் துறையின்கீழ் பணியாற்றுகின்ற அத்தனை பணியாளர்களையும், காவல் துறையில் பணியாற்றுகின்ற அத்தனை காவல் துறை அதிகாரிகளையும் தன்னுடைய அன்பால், தன்னுடைய மதிநுட்பத்தால், அனுபவத்தால், அரவணைத்துக்கொண்டு தமிழகத்திலே சட்டம்-ஒழுங்கை நல்ல முறையில் பராமரிக்கின்ற பணியை செயல்படுத்தி வருவதற்காக இந்த நேரத்தில் காவல் துறைத் தலைமை அதிகாரியை, தலைமை இயக்குநரை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழக முதல்வர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய பொறுப்பிலே இருக்கின்ற காவல் துறையினர் செவ்வனே இருந்தால்தான் இந்த தமிழகத்திலுள்ள நம்மைப் போன்ற மக்கள் எல்லாம் எந்தவிதமான துன்பமும் இல்லாமல் வாழ முடியும் என்பதை உணர்ந்து, அந்த உயர்ந்த எண்ணத்தோடு அவர்களுக்கு பல்வேறு வகையிலே நல்ல முறையில் உதவிகளை எல்லாம் செய்து கொடுக்கின்றார்கள் என்பதையும் நான் இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். தமிழகத்தினுடைய காவல் துறை இந்தியத் துணைக் கண்டத்திலே உள்ளவர்கள் எல்லாம் பாராட்டுகின்ற வண்ணம் பல்வேறு விஷயங்களில் நல்ல பல ஆற்றல்களை வெளிப்படுத்தியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். தமிழக காவல் துறை ஏறத்தாழ அது தோன்றிய நாட்களிலிருந்து இன்று வரை சிறப்பான காவல் துறை என்று பல்வேறு வகைப்பட்ட அரசியல் கட்சித் தலைவர்களாலும், பல்வேறு பெரியவர்களாலும், பாராட்டுதல்களையும், சான்றிதழ்களையும் பெற்றிருக்கிறது என்பதை நான் இங்கே இருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 மே 4] [திரு. வி. பாலகிருஷ்ணன்]

அதேநேரத்தில் காவல் துறையிலே பணியாற்றுகின்ற காவலர்களுக்கும், காவல் துறை அதிகாரிகளுக்கும் எப்படிப்பட்ட நடைமுறைச் சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பதை எல்லாம் நான் இங்கே விளக்க ஆசைப்படுகிறேன். ஒரு குற்றவாளியை அவர்கள் கண்டுபிடிக்க வேண்டுமென்று எண்ணினால் ஒருசில பெரியவர்களின், அரசியவாதிகளின் தலையீட்டின் பெயரால் ஒரு சில இடங்களில் காலத் தாழ்வு ஏற்படுகின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தால் பல்வேறு தவறுகள் அந்த சமூக விரோதிகளால் நடைபெற்று விடுகின்றன என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அருமைச் சகோதரி மாண்புமிகு உறுப்பினர் திருமதி யசோதா அவர்கள் சமீபத்தில் நடைபெற்ற இராஜபாளையம் கலவரம்பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். இரு சமூகத் தரப்பிலுள்ளவர்களின் மன நிலையையும் நன்கு புரிந்து செயல்பட்டிருந்தால் அப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் நடந்திருக்காது என்பதை நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதை எதற்கு நான் சொல்கிறேன் என்றால் இரு சமூகத்தவர்களும் ஒன்றுக்கொன்று பின்னிப் பிணைந்துதான் அந்தப் பகுதியிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

(பிற்பகல் 12-10)

ஒரு பெரிய சமூகத்தைச் சார்ந்தவர்களிடையேதான், அதுவும் அவர்களுக்குள்ள பண்ணைகளிலும், வேறு சில இடங்களிலும் அவர்களோடு இணைந்து தொழில் சிறுபான்மை இனத்தவர்கள் செய்து பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும், மே 1 ஆம் தேதி நேரடியாகவே இராஜபாளையம் சென்று எப்படி அந்தத் தவறுகள் நடக்கின்றன என்பதை அந்த நேரத்திலே தெரிந்துகொண்டேன்.

உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்கிறேன். அங்கே மலைப்பகுதி அதிகமாக இருக்கின்றபடியால், ஒருசில வேலையில்லாத சமூக விரோதிகள் அங்கே வாடகைக்கு விடுகின்ற சைக்கிளை எடுத்துக் கொண்டு, மலையிலே இருக்கின்ற மரங்களைக் கள்ளத்தனமாக சைக்கிளின் பின்னாலே வைத்துக் கொண்டு, எப்படியேனும் மரக்கடைகளிலே விற்க வேண்டுமென்ற

குறுகிய எண்ணத்தோடு வருகின்ற நேரத்திலே, காவல் துறையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு, பிடிக்கப்பட்டு, சைக்கிளோடு அந்த நபரையும் கைது செய்கிறார்கள். அந்த சைக்கிளை தேடியாகக் காவல் நிலையத்திலே வைத்து விடுகின்றார்கள். இப்படிப்பட்ட கொடுமைகள் இருக்கின்றபடியால் அந்தக் கடைச் சொந்தக்காரர்கள் தன்னுடைய சைக்கிள் பறி போய்விடுகிறதே, காவல் நிலையத்திலே எந்த முகாந்திரத்தைச் சொல்லி எடுத்து வர முடியும் என்று அவர்கள் ஏங்கித் தவிக்கிறார்கள். ஏனென்றால் சிறிய வங்கியிலே கடனை வாங்கித்தான் அப்படிப்பட்ட சைக்கிள் கடைகளை அங்கே இருக்கின்ற நபர்கள் நடத்திக்கொண்டு இருக்கின்றார்கள். இப்படி பல்வேறு வழக்குகள், திருட்டுத்தனமாக விறகு எடுத்துச் சென்றதற்காகப் பதிவு செய்யப்பட்டதன் கொடுமையால், அங்கேயிருக்கின்ற நபர்கள் எந்த சைக்கிளையும் வாடகைக்கு விட மறுத்ததன் காரணமாக ஒரு நபருக்கும் அந்தக் கடையினுடைய உரிமையாளருக்கும் நேரடி மோதல் ஏற்படுகிறது. அதன் விளைவாக அங்குள்ள இரண்டு சமூகத்தைச் சார்ந்த பெரியவர்களும், இரண்டு நாட்களுக்கு முன்பாகவே அதைப் பேசித் தீர்த்து நல்ல முடிவை எடுத்திருக்கிறார்கள். மாவட்டத்தினுடைய காவல்துறை கண்காணிப்பாளரும், சிவகாசியிலே இருக்கின்ற அந்தக் கோட்டத்தைச் சார்ந்த துணைக் கண்காணிப்பாளரும், அங்கே இருக்கின்ற ஆய்வாளர்களும் எல்லோரும் அங்கே முகாமிட்டிருக்கின்றார்கள். அதன் பின்பு மூன்று தினங்களாக ஒன்றும் நடைபெறவில்லை. அந்த இரண்டு கொலைகளோடு முடிந்து விட்டன என்றும் அமைதி நிலவ வேண்டுமென்றும் எண்ணுகின்ற நேரத்திலே—அங்கேயிருந்து 7, 8 கிலோ மீட்டர்களுக்கு அப்பால் மலைப் பிரதேசம் வந்து விடுகிறது. அங்கே பணியாற்றுகின்ற நபர்களின் மத்தியிலே தவறான, பொய்யான, உண்மைக்குப் புறம்பான செய்திகளைச் சொன்னதன் காரணமாக நம் சமூகத்தைச் சார்ந்தவர்களையெல்லாம் இவர்கள் வெட்டி வீழ்த்துகிறார்கள். இவர்களை எப்படியும் நாம் பழி தீர்த்துக்கொள்ள வேண்டுமென்பதற்காகச் சிறிய சிறிய கோட்டங்களிலேயும் வேறு இடங்களிலேயும், காவல் புரிகின்ற அந்தப் பெரியவர்களையெல்லாம், இவர்களுடைய காழ்ப்புணர்ச்சியைத் தீர்க்கின்ற வண்ணம் கொலை செய்திருக்கிறார்கள் என்று அங்கே போய் நேரடியாகத் தெரிந்து கொண்டதன் விளைவாக இதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இப்படி அந்தக் கொலைகள் நடந்தவண்ணம் இருக்கின்ற படியால் வெளியே சென்று, காவலர்களும், காவலர்களோடு இருக்கின்ற கண்காணிப்பாளர், அவர்களோடு இருக்கின்ற அதிகாரிகளெல்லாம் காடுகளுக்குச் சென்று, அங்கே இருக்கின்ற தீய சக்திகளை ஒழிக்க வேண்டுமென்பதற்காகச் செல்ல வேண்டுமென்று கருதினார்கள். அருகிலே இருக்கின்ற அத்தனை மாவட்டங்களிலேயிருந்தும் ஏறத்தாழ 3,000 காவலர்களை உடனடியாகக் காவல் துறைத் தலைவரவர்கள் அனுப்பி வைக்கின்றார்கள். நேரடியாக நமது காவல் துறைத் தலைவரவர்கள் சென்று பார்த்து, அவர்களுக்கு இட்ட நல்ல கட்டளையினால், இரவு முழுவதும் ரோந்து சுற்றுகின்றனர். அக்காரணத்தினால், அங்கே இன்றைய சூழ்நிலையிலே அமைதி நிலவுகிறது. இரு பகுதி தரப்பினரையும் காவல் துறையினர் நேரடியாக அங்கே அரஸ்ட் செய்து, வழக்குகளைத் தொடுத்து இருக்கின்றார்கள். இரு சமூகப் பெரியவர்களையும் அழைத்து, இன்றையதினம் ஒரு நல்ல சூழ்நிலையை ஏற்படுத்தி அங்கே சமாதானம் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இன்று எந்தச் சூழ்நிலையும் அங்கே ஏற்படுகின்ற நிலைமை இல்லை என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோன்று, காவல்துறை கண்காணிப்பாளராவாலும் சரி, காவலர்களானாலும் சரி, அவர்களுக்கு உதவுகின்ற எண்ணம் பொதுமக்களுக்கு இருக்க வேண்டுமென்பதை இந்த நேரத்திலே தெளிவாகச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

காவலர் யார்? காவல் துறைக் கண்காணிப்பாளர் யார்? காவல் துறையிலே மேலதிகாரிகளாக இருப்பவர் யார்? நம்மிடையே இருக்கிறவர்கள்தான் அந்த வேலைகளைப் பார்க்கிறார்கள். அவர்களுக்கு என்று தனியாக திறமைகள் இருந்தாலும் ஒருசில குற்றங்களைச் செய்கின்ற சமூக விரோதிகளை நாமும் காட்டிக் கொடுக்கத் தயங்காமல், அவர்களுக்கு உதவிகரமாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்தில் நாம் செயல்பட்டால் தமிழ்நாட்டிலே எந்தவிதமான தீய சக்திகளையும் ஒடுக்கிவிடலாம் என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. வி. பாலகிருஷ்ணன்] [1987 மே 4

நான் முதலிலேயே சொன்னதைப்போல தமிழகக் காவல் துறை
எப்படிப்பட்ட சிறந்த காவல் துறை என்பதை இங்கே சுட்டிக
காட்ட விரும்புகிறேன். இந்தியத் துணைக்கண்டத்திலேயே
வேறு எங்கும் இல்லாத அளவுக்கு தமிழ்நாட்டுக் காவல்துறை
சிறப்பு வாய்ந்ததாக அமைந்திருக்கிறது. உதாரணத்திற்குச்
சொல்ல வேண்டுமென்றால் நம்முடைய சென்னை மாநகரி
இன்றையதினம் ஆணையராகப் பணியாற்றுகின்ற மதிப்பிற்கு
தேவாரம் அவர்கள் பொற்கோவிலில் நடந்த அத்தனை அக்கிர
களையும் ஒழித்துக்கட்டிய பெருமைக்குரியவர்கள். அவர்களுக்
உதவியாக சென்ற மற்ற காவல்துறை அதிகாரிகளும் சிறப்பாக
பணியாற்றிய பெருமை திரு. தேவாரம் அவர்களையேச் சேரும்
என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஏன்? பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த காவலர்கள் சிறந்த
வர்கள் இல்லையா? இருந்தாலும் தமிழ்நாட்டைச் சேர்ந்த காவல்
துறை அதிகாரிகள்தான் அங்கே சென்று தங்களுடைய
திறமையை நிலைநாட்டி இருக்கிறார்கள் என்பதை இந்த
நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போன்று தேசவிரோத சக்திகள் கடந்த ஆண்டில்
வெடிகுண்டு சம்பவங்களை இந்த நாட்டில் பரப்பிவிட்டார்கள்.
அதை எல்லாம் ஒடுக்குகின்ற முறையில் மிகத் திறமையாக நல்ல
முறையில் பணியாற்றினார்கள் காவல் துறைத் தலைவர் அவர்க
சமீபத்தில் நடந்த அரியலூர் வெடிவிபத்தைக்கூட கண்டுபிடி
இருக்கிறார்கள். இருந்தாலும் இன்னும் அதை ஆய்வில் வைத்
இருக்கிறார்கள். குற்றவாளிகள் எல்லாம் நிச்சயமாக வெளியிடப்
படுவார்கள்; அவர்கள்மீது வழக்குத் தொடரப்படும். என்பதை
அவர்கள் சார்பாக இங்கே குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதைப்போன்று திருநெல்வேலியிலும்
லும் இடைத்தேர்தல் நடைபெற்றது. அருப்புக்கோட்டை
நெல்லை மாவட்டத்தில் இருக்கின்ற திருப்போரைக் கோவில்
கொள்ளை நடக்கின்றது. அந்தக் கொள்ளையை யார் செய்
தார்கள் எப்படிச் செய்தார்கள் என்று பார்க்கின்றபோது பல்வே
வகைகளில் உண்மைக்குப் புறம்பான செய்திகளை எல்லாம் எதிர்க்



1987 மே 4] [திரு. வி. பாலகிருஷ்ணன்]

கட்சியினர் பரப்பி வந்தனர். தமிழ்நாட்டில் காவல் துறைக்கு
ஒரு சவாலாக அந்த நேரத்தில் அவர்கள் எல்லாம் பேசித் தீர்த்
தார்கள். அதையெல்லாம் முறியடிக்கின்ற வகையில் நடவடிக்கை
எடுக்கப்பட்டது. மதுரை மாநகரில் இருக்கிற குற்றப்புலனாய்
வுத் துறை (CB, CID) யைச் சேர்ந்த அதிகாரிகள் நேரடியாக
அழைக்கப்பட்டு, அந்தக் கொள்ளையைக் கண்டுபிடிக்க உத்திர
விடப்படுகிறது. அவர்கள் சென்ற பத்து நாட்களில் அந்தக்
கொள்ளைக் கூட்டம் பிடிக்கப்பட்டு, அத்தனை நகைகளும் மீட்கப்
பட்டு உரியவர்களுக்குக் கொடுத்துவிட்டார்கள். இப்படிப்பட்ட
சாதனைகளைப் புரிகின்ற காவல்துறைதான் தமிழ்நாட்டில்
இருக்கிற காவல் துறை என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட்டுச்
சொல்ல விரும்புகிறேன்.

எத்தனை வெடிகுண்டு சம்பவங்கள் நடந்தாலும் அத்தனை
யையும் தாங்கிக்கொண்டு உழைக்கின்ற சக்தி படைத்தவர்கள்
தமிழகக் காவல் துறையினர். இப்படி உழைக்கின்ற காவல் துறை
யினருடைய வீட்டிலே நல்லது கெட்டது நடைபெறுகின்றபோது
அவர்கள் வீட்டிலே இருக்க முடிகிறதா என்று பார்த்தால் பெரும்
பாலும் இருக்க முடிவதில்லை. அவர்கள் இந்த நாட்டு மக்களுக்
காகவே உழைக்கிறார்கள். மக்களுக்காக உழைக்கின்ற அவர்
களுக்கு மக்களும் உதவிகரமாக இருக்க வேண்டுமென்று வேண்டிக்
கேட்டுக் கொள்கிறேன்.

சமீப காலமாக தமிழகக் காவல் துறையினர் மத்தியிலே ஒரு
சில ஜாதி சமய உணர்வுகள் தலைதூக்குவதாகத் தெரிகின்றது.
பொறுப்பான பணியில் ஈடுபட்டிருக்கின்ற அவர்களுடைய மனம்
அத்தகைய உணர்வுகளுக்கு இடம் கொடுப்பது சரியாகாது. நாம்
எப்படி அரசியல் அமைப்புச் சட்டத்தின் அடிப்படையில் பதவிப்
பிரமாணம் எடுத்து, இந்த நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும்
உழைப்போம் என்ற நல்ல எண்ணத்தோடு வருகிறோம், அதைப்
போன்று காவல் துறையிலே பணியாற்றுகின்ற நபர்களும் தங்க
ளுடைய சுய ஜாதி, சுய மதம் என்பன போன்றவைகளுக்கு இடம்
கொடுக்காமல் தூய எண்ணத்தோடு, தூய சிந்தனையோடு நல்ல
முறையில் பணியாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றையதினம் காமராஜர் மாவட்டத்திலே இராஜபாளையம் பரந்திருக்கிற ஒரு பகுதியாக இருக்கிறது. சேத்தூர் வத்திராயிருப்பு போன்ற பகுதிகள் எல்லாம் தீவிர கம்யூனிஸ்டுகள் நடமாடுகின்ற இடங்களாக இருக்கின்ற காரணத்தால் இராஜபாளையத்தை மையமாகக் கொண்டு தனி சப்டிவிஷன், உட்கோட்டம் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சிவகாசி, இராஜபாளையம் நகரங்களில் போக்குவரத்து காவல் பிரிவு அமைத்துத் தர வேண்டுகிறேன்.

அதைப்போன்று சிவகாசி, சாத்தூர், விருதுநகர் ஆகிய இடங்களில் காவல் துறையினருக்கு குடியிருப்பு கட்டுவதற்காக இடங்கள் கொடுக்கப்பட்டு ஏறத்தாழ ஓராண்டுக்கு மேலாகிறது. வீடுகள் கட்டுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை, குறிப்புகளை காவல் துறைக் கண்காணிப்பாளர் அனுப்பி வைத்திருக்கிறார். இந்த ஆண்டிலே அந்த முப்பெரும் நகரங்களில் காவல் துறையினருக்கு குடியிருப்புகளை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

முகவை மாவட்டத்தினுடைய சேமப்படைப் பிரிவு மதுரையிலே இருந்தது. இப்போது முகவை மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்ட நிலைமையில் காமராஜர் மாவட்டத்தினுடைய தலைநகராக விருதுநகர் இருக்கிறது. அந்த சேமப் படைப் பிரிவை உடனடியாக விருதுநகருக்கு நீங்கள் மாற்றித் தரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

அதேபோன்று தாயில்பட்டி கிராமத்தை மையமாக வைத்து புதிய காவல் நிலையத்தை இந்த ஆண்டே திறக்க வேண்டும் என்ற கோரிக்கையை இந்த நேரத்திலே வைக்க நான் விரும்புகிறேன்.

தீயணைப்புத் துறையைப் பொறுத்தவரையில் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். சிவகாசியைப் பொறுத்தவரையில் தீப்பெட்டித் தொழில், பட்டாசுத் தொழில் ஆகியவை அதிகமாக நடக்கிற நகரமாகும். அந்த நகரத்தைப் பொறுத்தவரையில் ஏறத்தாழ 35 ஆண்டுகளுக்கு முன்பு வழங்கப்பட்ட தீயணைப்பு வண்டிதான் இப்போதும் இருக்கிறது. தீயணைப்புத் துறையிலே





பணியாற்றுகிற காவலர்கள் அந்த வண்டியைத் தள்ளிக்கொண்டு செல்கிற கோரக் காட்சியைக் கண்ணால் காணுகின்ற நிலைமை இருக்கிறது. அந்த நகரத்தைப் பொறுத்தவரையில் குறைந்தது ஆண்டில் ஒருமுறையாவது அங்கே தீப்பெட்டித் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் தீப் பிடித்துவிடுகின்ற நிலைமை இருக்கிறது. அப்போதெல்லாம் உடனடியாக அருகிலே இருக்கிற சாத்தூர், விருதுநகர் போன்ற இடங்களோடு தொடர்பு கொண்டு வண்டிகளை வரவழைக்க வேண்டி இருக்கிறது. சிவகாசியில் இருக்கின்ற வண்டிகள் இரண்டுமே பழுதடைந்த நிலைமையில் இருக்கின்றன. அவை 35 ஆண்டுகளுக்கு முன்பு சிவகாசிக்குக் கொடுக்கப்பட்ட வண்டிகள் என்பதால் உடனடியாக சிவகாசியில் உள்ள தீயணைப்புப் பிரிவுக்கு இரண்டு புதிய வண்டிகளை வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழாயிரம் பண்ணைப் பகுதியில் அதிகமான தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்றன; பட்டாசுத் தொழிற்சாலைகளும் இருக்கின்றன. ஆனால் அந்தப் பகுதியில் தீயணைப்பு நிலையம் இல்லை. எனவே, இந்த ஆண்டு தீயணைப்பு நிலையம் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு இந்த நல்ல வாய்ப்பினைக் கொடுத்த மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்திலே நான் சார்ந்திருக்கிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக சில கருத்துக்களைத் தெரிவிக்க விரும்புகிறேன். இன்றைக்குக் காவல் துறையைப் பொறுத்தவரையில் ஒரு வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், உயர்மட்ட போலீஸ் அதிகாரிகளே லஞ்சம் வாங்குகிறார்கள் என்று இங்கே குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்பட்டு பெயர்கள்கூட கொடுக்கப்பட்டிருக்கிறது. துணை இன்ஸ்பெக்டர் ஜெனரல் திரு. கந்தசாமி அவர்கள் அதிகாரபூர்வமாக சஸ்பெண்டு செய்யப்பட்டு இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் லஞ்ச ஊழல் இலாக்காவில் பல புகார்கள் வந்திருக்கின்றன. இன்றைக்கு வருமானத்திற்கு மேலே சொத்துக்களைச் சேர்த்திருக்கிறார்கள் என்ற புகார்கள் எல்லாம் வருகின்றன. ஆகவே, நான் ஒன்றைக் கேட்க விரும்பு

கிறேன். உயர்மட்ட போலீஸ் அதிகாரிகளே இதுபோன்ற காரியங்களில் ஈடுபட்டால் இலாக்கா எந்த இலட்சணத்தில் இருக்கும் என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். ஏழைகளுக்கு நீதி கிடைக்குமா என்பதைத் தயவுசெய்து எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து ஒன்றை இந்த அரசினிடத்திலிருந்து உங்கள் மூலம் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். டி.ஜி.பி-யாக குற்றப்புலனாய்வுத் துறையிலே இருந்தவர் திரு. மோகன்தாஸ் அவர்கள். உங்களுக்கெல்லாம் தெரியும். முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவிலே உடல் நலம் இல்லாமல் இருந்தபோது டி.ஜி.பி.-யாக இருந்த திரு. மோகன்தாஸ் அவர்களை திடீரென்று நிர்வாக சீர்திருத்தத் துறை, பணியாளர் மற்றும் பயிற்சித் துறை, செக்ரட்டேரியட்டுக்கு பதவி இறக்கம் செய்தார்கள், அந்த நேரத்திலே இங்கே பொறுப்பிலே இருந்தவர்கள். பிறகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அமெரிக்காவிலே இருந்து இங்கே வந்தவுடனே அவர்களை அந்தத் துறையிலே இருந்து மாற்றி பழையபடி டி.ஜி.பி.-யாக பதவி நியமனம் செய்தார்கள். முதல் உத்தரவு அவர் போட்டது அதுதான். ஆனால் இப்போது என்ன நிலைமை என்று கேட்டால் பழையபடியும் முதலமைச்சரே, அன்றைக்கு அவர் அமெரிக்காவிலிருந்தபோது எந்தத் துறையில் இருந்தாரோ அதே துறைக்கு, செக்காட்டேரியட்டுக்கு அவரைப் போட்டு, அவர் விடுப்பு கொடுத்து, பிறகு தன்னைக் கட்டாய விடுப்பில், விட்டால் போதும் என்று சொல்கிற நிலைமை வந்திருக்கிறது. ஏன்? முதலிலே ஏன் மாற்றினார்கள்? பிறகு ஏன் டி.ஜி.பி.-யாக ஆக்கினார்கள்? பிறகு ஏன் பழைய இடத்திற்கு அனுப்புகிறார்கள்? இதற்கு என்ன காரணம்? அவர் சிங்கப்பூருக்குப் போய்விட்டு வந்தார் என்று சொல்கிறார்களே, அதுதான் காரணமா? போராளிகளின் ஆயுதத்தைக் கைப்பற்றியது குறித்து மத்திய அரசுக்குத் தெரியாது என்று சொல்கிறார்களே, அது காரணமா? மாநில சர்க்கார், முதலமைச்சருக்கும் தெரியாது என்று சொல்கிறார்கள். அப்படியானால் இவர்தான்





கைப்பற்றினார் என்ற காரணமா? என்ன காரணம்? ஏன் இந்தப் பிரச்சினையில் இப்படிப்பட்ட நிலைமைகள் என்பதை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் விளக்குவார்களா என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல. அவர்களுடைய மனைவியே ரிட் பெட்டிஷன் போட்டு கோர்ட்டிலே, என்னுடைய கணவரின் உயிருக்கு ஆபத்து என்று சொல்கிற நிலை, அதாவது டி.ஜி.பி-யாக இருந்த ஒருவருடைய மனைவியே இவ்வாறு ரிட் பெட்டிஷன் போடுகிற நிலைமை இருக்கிறது என்றால்—அப்படிப்பட்ட அபாயங்கள் இன்றைக்கு நாட்டிலே இருக்கிறதா? இதனுடைய பின்னணி என்ன என்பதை எல்லாம் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அடுத்து சப்-இன்ஸ்பெக்டர் தேர்வு என்பது 1971, 1979, 1983, 1984, 1985 என்று ஆண்டுதோறும் இந்தத் தேர்வுகளுக்காக விளம்பரம் செய்யப்பட்டு—அப்ளிக்கேஷன் 25 ரூபாய், அப்படி என்றால் ஆயிரக்கணக்கில் எவ்வளவு பேர் போட்டிருப்பார்கள் என்பதைப் பார்த்துக்கொள்ளுங்கள்—இப்போதுதான் செலக்ஷன் முடிந்ததாகச் சொல்கிறார்கள். இதிலேகூட ஊழல் நடந்துவிட்டது என்று சொல்லி முதலமைச்சர் அவர்கள் அந்த செலக்ஷனை நிறுத்திவிட்டார்கள். பிறகு இப்போது—அதே அதிகாரியோ அல்லது வேறு அதிகாரியோ தெரியவில்லை—லிஸ்ட் பிரிப்பேர் ஆகிட்டதாகச் சொல்கிறார்கள். அது முதலமைச்சரின் மேஜையில் இருப்பதாகத் தகவல். ஏன் லிஸ்ட் வெளியேற மறுக்கிறது? என்ன காரணம்? செலக்ஷன் நடைபெறவில்லையா? இதையெல்லாம் குறித்து வைத்துக்கொண்டு நிதியமைச்சர் அவர்கள் விளக்கம் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் அப்ளிகென்ட்டைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு வயது ஆகிறது. வேறு வேலைக்குப் போகவில்லை. மேற்படிப்புக்கும் போகவில்லை. எனவே. இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் குறித்து நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மே 4

அதைப்போலவே காவல் துறையைச் சேர்ந்த பெண்
வார்டர்கள், 8 மணி நேரம், பாவம், வேலை செய்கிறார்கள்,
மாதச் சம்பளம் ரூ. 143. சிறையிலிருந்து பெண் கைதிகளை நீதி
மன்றங்களுக்கும், மருத்துவமனைககும் அழைத்துச் செல்லு
பவர்கள். அவர்கள் எல்லாம் கண்டின்ஜன்சி ஸ்டாப் என்ற
வகையில் தற்காலிகமாக இருந்தார்கள். அவர்களை நிரந்தர
மாக்க வேண்டும் என்று சொல்லி அதுவும் 1982 ஏப்ரலுக்குள் நிரந்
தரமாக்கப்பட வேண்டும் என்ற உத்தரவை அரசே போட்டிருக்
கிறது. ஜி.ஓ.வே போடப்பட்டிருக்கிறது. ஆனால் சம்பந்தப்
பட்ட அதிகாரிகள் அதைச் செய்கிறார்களா என்றால் கிடையாது.
அவர்களுக்கு பெண் என்ற வகையில் எந்தச் சலுகையும்
கிடையாது. அவர்கள் கேட்கக்கூடிய மற்ற சலுகைகளும்
கிடையாது. இவைகளையெல்லாம் கேட்டால் ஷோ-காஸ்
நோட்டீஸ் கொடுத்து உங்களை வேலையை விட்டே காலி செய்து
விடுவோம் என்று சொல்ல, பாவம் அந்தப் பெண்கள் பதறிப்
போய் நீதிமன்றம், ஹைகோர்ட்டிற்குப் போக, நீதிமன்றமும் ஒரு
உத்தரவு போட்டிருக்கிறது. நான் கேட்கிறேன். இந்தக் காவல்
துறை அதிகாரிகள் அரசாங்கத்தினுடைய ஜி.ஓ.வை அமலாக்
காமல் இருப்பதற்கு என்ன காரணம்? அதற்குப் பதில் ஷோ-காஸ்
நோட்டீஸ் கொடுத்து அந்த ஏழைப் பெண்களை, எளிய பெண்
களை வேலையை விட்டே காலி செய்து விடுவோம் என்று
சொல்வது நியாயம்தானா, முறைதானா என்று நான் தெரிந்து
கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொரு முக்கியமான போலீஸ் அதிகாரி.
அவர் ஏ.டி.எஸ்.பி. யாக மதுவிலக்கு கூடுதல் கண்காணிப்பாளராக
இருக்கிறார்கள். அவருடைய மனைவி, மகள் எல்லோரும்
சேர்ந்து பராசக்தி சிட் பண்ட் என்று வைத்திருந்தார்கள். நான்
வேண்டுமானால் நிதியமைச்சரிடத்தில் ஆதாரம் தருகிறேன்.
என்னிடத்தில் ஆதாரம் இருக்கிறது. அதிலே ஏமாந்து போன
வர்கள் 70 பேர்கள். ஏமாற்றப்பட்ட தொகை ஏறத்தாழ
4 லட்சத்து 34 ஆயிரம் ரூபாய். புகார் கொடுத்திருக்கிறார்கள்
கேஸ் எல்லாம் இருக்கிறது. அதிலே வேடிக்கை என்னவென்றால்
அந்த ஏ.டி.எஸ்.பி.-தான் முதல் அக்யூஸ்டாக பதிவாகி இருக்
கிறார்கள். இன்னும் புலன் விசாரணை போய்க்கொண்டே



1987 மே 4] [திரு. அ. ரகுமான்கான்]

இருக்கிறது. நடவடிக்கை இல்லை. இப்படிப்பட்ட நிலைமை இருக்
கிறதே, இது குறித்து என்ன நடவடிக்கை? ஒரு போலீஸ்
அதிகாரி எந்தத் தப்பும் செய்யலாம் என்று எண்ணுகிறார்களா
என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொன்றையும் நான் தெரிவிக்க விரும்பு
கிறேன். எனக்குக் கிடைத்த தகவலைச் சொல்லுகிறேன்.
தவறாக இருந்தால் நிதியமைச்சர் திருத்தலாம். 1980 ஆம் ஆண்டு
101 சிலைகள் திருடு போய் இருக்கின்றன. 1981 ஆம் ஆண்டு 113
சிலைகள் போயிருக்கின்றன. 1983 ஆம் ஆண்டு 98 சிலைகள்
போயிருக்கின்றன. 1984 ஆம் ஆண்டு 103 சிலைகள், 1985 ஆம்
ஆண்டு 116 சிலைகள் போயிருக்கின்றன. மூன்று நாட்களுக்கு
ஒரு சிலை என்று சராசரியாக திருடு போயிருக்கிறது. போலீஸ்
இலாகா என்ன செய்து கொண்டிருக்கிறது? சட்டம்—ஒழுங்கு
என்ன ஆகிறது என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதைப்பற்றியெல்
லாம் நீங்கள் முன்னாடியே பேசியிருக்கிறீர்கள். அதற்கு
இந்த அவையிலேயே பதில் அளிக்கப்பட்டது. வேறு ஏதாவது
பேசினால் அவையின் நேரம் மிச்சப்படும். அதனால் ரெப்பிடி
ஷன் வேண்டாம்.

**திரு. அ. ரகுமான்கான்:** மன்றத்தினுடைய துணைத் தலைவர்
அவர்களே, 1986 ஆம் ஆண்டு மட்டும் தமிழ்நாட்டில் கற்பழிப்பு
சம்பந்தப்பட்ட கேஸ்கள் 158. 1986 ஆம் ஆண்டு மானபங்கப்
படுத்தப்பட்ட வழக்குகள் 515. 1986 ஆம் ஆண்டு வரதட்சணை
சாவு 17. ஆக நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர
விரும்புகிறேன். இன்றைக்கு இந்த அரசாங்கத்தில் இருக்கக்
கூடிய சட்டம்—ஒழுங்கு நிலைமைகள் என்ன ஆயிற்று என்று
நான் கேட்க விரும்புகிறேன்.

அதைப்போலவே ஆபாச தடைச் சட்டம் என்று ஒன்று இருப்
பதை நீங்கள் அறிவீர்கள். நமது மரியாதைக்குரிய டெபுடி
கமிஷனர் திலகவதி அம்மையார் தலைமையில்கூட ஒரு குழு நிய
மிக்கப்பட்டிருக்கிறது. ஆபாசமான படங்கள் இருந்தால்,

[திரு. அ. ரகுமான்கான்] [1987 மே 4

போஸ்டர்கள் இருந்தால் விசாரித்து வழக்கு போடலாம் என்று இருக்கிறது. ஆனால், அந்த நேரத்திலே ஒன்றை நான் தெரிவிக்க விரும்புகிறேன். மாலை முரசு என்ற ஒரு பத்திரிகையின் ஆசிரியர் பபிதா என்ற ஒரு நடிகையின் படத்தை வெளியிட்ட குற்றத்திற்காக கைது செய்யப்பட்டு வழக்குகள் போடப்பட்டன. ஆனால் அந்த மாதிரி போஸ் கொடுத்த அம்மாவை கைது செய்ய வில்லை. ஏன் என்று கேட்க விரும்புகிறேன். என்னுடன் வரச் சொல்லுங்கள் அதிகாரிகளை சென்னை நகரத்தில் பல போஸ்டர் களை நான் காட்டுவேன். சபையின் நாகரிகம் கருதி மைல்டாக சொல்லுகிறேன். முத்தக் காட்சிகள் அடங்கிய பல போஸ்டர்கள் அண்ணா சாலையிலே பல இடங்களில் இருக்கிறது, காட்டுகிறேன். அவைகள் மீதெல்லாம் வழக்கு போடக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு இல்லாமல் இருக்கிறது. ஆனால் மாலை முரசு ஆசிரியர், கொடுத்த ஸ்டில்லை போட்டார் என்ற ஒரே காரணத் திற்காக—உண்மையில் என்ன காரணமோ தெரியவில்லை—கைது செய்யப்பட்டு வழக்கு இருக்கிறது. கம்ப்ளையின்ட் கொடுத்தவர் களுடைய அப்பா பெயர் அதாவது இனிஷியல் அதிலே தெரிவிக்கப் படவே இல்லை. ஆக நான் கேட்கிறேன், இதுபோன்ற நிலைமை ஏன். இதைப்போன்று பல போஸ்டர்கள் அச்சகப் பெயர் இல்லாமலேயே இருக்கின்றன. துக்ளக் பத்திரிகை ஆசிரியரைப் பற்றி, அந்த ஆள் ப்ளூ பிலிம் காட்டுகிறார் என்று ஒரு போஸ்டர் வந்தது. அதைப்போலவே முரசு பத்திரிகை ஆசிரியர் மீது விபச்சார விடுதி நடத்துகிறார் என்ற புகாரில் ஒரு போஸ்டர் வந்தது.

(பிற்பகல் 12-30)

அதைப்போல எங்களுடைய கலைஞரைப்பற்றி ஒரு ரெயிலைப் போட்டு ரெயிலைக் கவிழ்த்தது கருணாநிதிதான் என்று தாய்மார்கள் கருணாநிதி ஒழிக என்று சொல்கிற போஸ்டர். அதிலும் அச்சகப் பெயர் இல்லை, அடித்தவர் பெயர் இல்லை. என்ன நடவடிக்கையெடுக்கப்பட்டிருக்கிறது? இதுபற்றி அக்கறை காட்ட வேண்டாமா என்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 மே 4] [திரு. அ. ரகுமான்கான்]

அடுத்து துப்பாக்கிச் சூடுகள் ஏராளமாக நடைபெற்றுக்கொண் டிருக்கின்றன. 26 துப்பாக்கிச் சூடுகள் நடந்துள்ளன.

* * * *

* * * *

**திரு. ப. த. இராமச்சந்திரன்:**

* * * *

போலீசை, காவல் துறையைக் கண்டிப்பது எந்தவகையில் நியாயம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிற போது

* * * *

குறிப்பிட்டார்கள். முற்றிலும் உண்மைக்குப் புறம்பான ஒன்று. பத்திரிகையில் வந்த செய்தியை வைத்துக்கொண்டு பேசுகிறார் என்று கருதுகிறேன். அவர் சொன்னது அத்தனையும் உண்மைக்குப் புறம்பான ஒன்று என்பதை மட்டும் இந்த நேரத்தில் வற்புறுத்திக் கூற விரும்புகிறேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே, இதை விசாரிப்பதற்கு ஒரு ஜுடிஷல் என்குயரி, ஒரு நீதிபதியைக் கொண்டு ஒரு விசாரணை நடந்தால் ஓரளவிற்கு . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர் களே, உண்மைக்குப் புறம்பான செய்தியைச் சொல்வது, கேட் டால் நீதி விசாரணை என்று சொல்வது வாடிக்கையாகப் போய் விட்டது. அவர் சொன்னது உண்மைக்குப் புறம்பான செய்தி. கொஞ்சமும் ஆதாரமற்ற செய்தி.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1987 மே 4

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேசுகிறபோது ஆதாரத்தைக் கொடுத்துவிட்டு பேசினால் சரியாக இருக்கும். இல்லாவிட்டால் குறுக்கீடுகள் ஏற்பட்டு நேரம் போய்விடும். ஆதாரம் கொடுத்துவிட்டுப் பேசுங்கள். (குறுக்கீடு) இல்லை யென்றால் மணியடித்தால் நேரம் கொடுப்பதில்லை என்று பேசுகி றீர்கள். ஆதாரம் இருந்தால் கொடுத்துவிட்டுப் பேசுங்கள். அதிலே ஆட்சேபணை இல்லை.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:**

* * * *

இப்படி உண்மைக்குப் புறம்பான செய்தியை எந்தவிதமான ஆதாரமும் இல்லாமல், ஏதோ ஒரு பத்திரிகையில் வந்து, அதை வைத்துக்கொண்டு பேசுவது சரியல்ல. இப்படி ஆதாரமற்ற செய்திகளைச் சொல்லி அனுமதித்துக் கொண்டு போவது என்று சொன்னால் பல கதைகள் இப்படி ஆதாரமற்றவைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம். அதனால் அவையின் நேரமும் வீணாகும், கௌரவமும் குறையும். ஆகவே, ஆதாரமில்லாத செய்திகளை அனுமதிப்பது முறையல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. வே. இரா. ஜெயராமன்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ரகுமான்கான் அவர்கள் பேசுகிறபோது கலைஞர் அவர்கள் ரெயிலைக் கவிழ்த்தார் என்று போஸ்டர் போட்டு ஒட்டினார்கள் என்றும், போஸ்டர் அச்சடித்த இடம் தெரியவில்லையென்றும் சொன்னார்கள். நான் அவரிடம் திரும்ப கேட்கிறேன். நீங்கள் நீதிக்குத் தண்டனையா என்று போஸ்டர் ஒட்டினீர்களே, அதை ஒட்டியது யார் என்று அதையும் கூற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1987 மே 4]

**திரு. அ. ரகுமான்கான்:** துணைத் தலைவர் அவர்களே,

* * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

* * * *

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே,

* * * *

* * * *

**திரு. எம். இராசரத்தினம்:**

* * * *

* * * *

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழக்கிற்குள் நுழைய வேண்டியது இல்லை * *

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:**

* * * *

சம்பந்தமாகப் பேசிய உங்களுடைய பகுதியும் நீக்கப்படுகிறது. அதற்கு உறுப்பினர் திரு. இராசரத்தினம் என்கிற மணி அவர்கள் அளித்த விளக்கத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தர விடுகிறேன். ஆதாரம் இருந்தால் கொடுங்கள். குறைந்தபட்ச ஆதாரத்தையாவது கொடுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:**

* * * *

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:**

* * * *

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1987 மே 4

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் சொன்னது, கொடுத்த விளக்கம் இரண்டையும் நீக்கிவிட்டேன். * *

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:**

* * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதை நீக்கிவிட்டேன். அமைச்சர் அவர்கள் பேசியதையும், இதையும் சேர்த்து நீக்கிவிட்டேன். இந்த நிகழ்ச்சியே இருக்காது. அதை முழுவதையும் நீக்கிவிட்டேன்.

**திரு. அ. ரகுமான்கான்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீக்குவதைப் பற்றி நான் கவலைப்படவில்லை. ஆனால் நஞ்சுண்டன் கமிஷன் என்பதிலே நீதிபதி சொன்னார்—ஒரு தவறான தகவலை இந்த அவையிலே சொன்னார்கள்—ஒரு அரிசனப் பெண்மணி அநியாயமாகப் போலீஸ் லாக்கப்பிலே கற்பழிக்கப்பட்டு, அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கிறார், இது தற்கொலை அல்ல, என்று தீர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். போலீஸ் லாக்கப்பிலே நடந்திருக்கிறது. இதுவரைக்கும் இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஆகவே போலீஸ் லாக்கப்பிலே ஒரு அரிசனப் பெண்மணி கற்பழித்து—தற்கொலை அல்ல—கொலை நடந்திருக்கிறது என்று நீதிபதி நஞ்சுண்டன் அவர்கள் கொடுத்த ரிப்போர்ட், இந்தச் சபையின் டேபிளிலே வைத்ததற்குப் பிறகு என்ன நடவடிக்கையை நீங்கள் எடுத்திருக்கிறீர்கள், இதிலே சட்டம் ஒழுங்கு இருக்கிறதா? என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொன்றையும் நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் பொதுக்கூட்டங்களுக்குப் போகிறார்கள். ஆனால் அதற்குப் போலீஸ் பாதுகாப்பு உண்டா என்றால் கிடையாது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர், எனது இனிய நண்பர் திரு. திருநாவுக்கரசு

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.



1987 மே 4] [திரு. அ. ரகுமான்கான்]

அவர்கள்கூடச் சொன்னார்கள், கூட்டம் அதிகமாகக் கூடுபவர்களுக்குத்தான் நாங்கள் போலீஸ் பாதுகாப்பு கொடுக்க முடியும் என்று சொன்னார்கள். எங்கள் தலைவருக்கும் கூட்டம் அதிகமாகக் கூடுகிறது. ஆனால் போலீஸ் பாதுகாப்பு உண்டா என்றால் கிடையாது. ஆனால் அதே நேரத்தில் உங்களுடைய கட்சியின் கொள்கை பரப்புச் செயலாளர் அவர்களுக்கும், அதே போல் இன்னும் பலருக்கும், இன்னும் சொல்லப்போனால் அமைச்சர் பொறுப்பிலே இல்லாதவர்களுக்கும் கூட ஏராளமான போலீஸ் பாதுகாப்புகள் தரப்படுகிறதே, ஏன் இந்த வேறுபாடு? இந்த நாட்டிலே சட்டத்தின் முன்னால் அனைவரும் சமம். பாதுகாப்பது அரசாங்கத்தினுடைய கடமை. ஏன் இந்த வேறுபாடு என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொரு சம்பவத்தையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வெள்ளக்கோவிலிலே எங்களுடைய தலைவர் பேசுகின்ற மேடைக்கு தீ வைக்கப்பட்டது. அந்தக் குற்றவாளியைக் கைது செய்ய வேண்டியது காவல் துறையினுடைய கடமை. எங்கள் தலைவர் பேச வேண்டிய நிலைமை. குற்றவாளியைக் கைது செய்து, அந்த இடத்தைப் பாதுகாத்து, பேசுவதற்கான வாய்ப்பைத் தருவதற்குப் பதிலாக, அவர்களிடம், நீங்கள் பேசக்கூடாது, தடை உத்தரவு, எனவே கைது செய்கிறோம் என்று சொல்லக்கூடிய நிலைமை, போலீஸ் யுக்தி இருக்கிறது என்று சொன்னால், இது என்ன நியாயம் என்பதை நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்னொன்றையும் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். போலீஸ் துறை சம்பந்தமாக நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் வாக்குறுதி கொடுத்தார்கள். இங்கே பதில் சொல்லப்படும் என்று. ஆனால் எந்தக் கேள்விகளுக்கும் பதிலே இல்லை. இது நியாயந்தானா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

[1987 மே 4

(பிற்பகல் 12-40)

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது சிலபல கேள்வி களுக்குப் பதில் சொல்லிக்கொண்டு இருக்கிறேன். கவன ஈர்ப்பு மூலமாகவும் சொல்லி இருக்கிறேன். பல கேள்விகளுக்கு நானே கையெழுத்துப் போட்டு அனுப்பி இருக்கிறேன். மாண்புமிகு முத லமைச்சர் அவர்களின் காவல் துறையைப்பற்றியும் பல துறை களைப் பற்றியும் தனக்கு வருகின்ற கேள்விகளுக்கு நானே பதில் சொல்லலாம் என்று சொல்லி இருக்கிறார்கள். அந்தக் கோப்பு களையெல்லாம் எனக்கு திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். நான் கையெழுத்துப் போட்டு அனுப்பி இருக்கிறேன். விரைவிலே அது பற்றிய கேள்விகளையெல்லாம் மாண்புமிகு தலைவர் அவர்கள் எடுத்துக்கொள்கின்றபோது இந்த அவையிலே பதில் சொல்லப் படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. ரகுமான்கான் :** அடுத்து, இப்போது மலிவு விலையிலே காவல் துறையினருக்கு உணவுப் பொருள்களை வழங்குகின்ற திட்டத்திலே 24 கிலோ அரிசி வழங்குவதற்குப் பதிலாக 12 கிலோ அரிசிதான் தருகிறார்கள். நான்கு மாதங்களுக்கு ஒருமுறைதான் அவர்களுக்கு 'பாம் ஆயில்' தரப்படுகிறது. அது சரியாகத் தரப்படவேண்டும். 'ஆர்டர்லி' முறையை ஒழித்து 5—9—1979-லே உத்தரவு போடப்பட்டது. அது நடைமுறைப்படுத்தப்படாத நிலை; கொத்தடிமைத்தனம் இன்னும் காவல்துறையில் இருக் கிறது. போலீஸ்காரர்களின் வாரிசுதாரர்களுக்கு காவல் துறையில் வேலைவாய்ப்புத் தரவேண்டும். காவலர் குடியிருப்பு களில் வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டும். (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்களின் நேரம் முடிந்து விட்டது. 'இண்டாப்ஷனுக்காக' இரண்டு நிமிடங்கள் கொடுக்கப்பட்டன. சீக்கிரம் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான்:** அதைப்போலவே இன்னொன்றையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். போலீஸ் சங்கத்தை அங்கீகரித்து 1978-லே தேர்தல் நடக்கும் என்று சொல்லப்பட்டது. அதற்கு சென்னை உயர்நீதி மன்றமும் அனுமதி வழங்கியிருக்





கிறது. ஆனால் இன்னமும் அது அங்கீகரிக்கப்படாமல், 1983-லே
போராட்டத்திலே கலந்து கொண்டவர்கள் இந்த அரசைக் கவிழ்ப்
பதற்காக ஆயுதம் தாங்கிய போராட்டம் நடத்தினார்கள் என்று
சொல்லி இந்த அரசாங்கம் பொய் வழக்கு போடுவது நியாயந்
தானா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதைப்
போலவே காவல்துறை

என்று நான் சொல்கிறபோது, வியாசர்பாடி போலீஸ் ஸ்டேஷ
னிலே புகார் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் நான் தெளி
வாகச் சொல்ல விரும்புகிறேன். ஆதாரங்களும் இருக்கின்றன.

போலீஸ்காரர்கள் அதைக் கண்டுபிடித்து அவர்களைக் கைது
செய்து இருக்கிறார்கள். வழக்கும் போட்டு இருக்கிறார்கள் **
சட்டம் ஒழுங்கு பாதுகாக்கப்படுமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எந்த ஒரு
நிகழ்ச்சியையும் குறிப்பிட்டுச் சொன்னால் நடவடிக்கை எடுப்
பார்கள்.

அது உங்களுக்கும் நல்லதல்ல; நாட்டுக்கும் நல்லதல்ல. ஒரு
இன்ஸிடெண்டைச் சொன்னால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.
என்கின்ற வார்த்தையை நீக்கிவிடுங்கள். நீங்கள் ஒரு நிகழ்ச்சி
யைச் சொல்கிறீர்கள். அது அமைச்சர் அவர்களுக்கோ அல்லது
அரசாங்கத்திற்கோ தெரிந்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.
ஏதாவது ஒன்றைப் பேசக்கூடாது. (குறுக்கீடு).

**மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ரகுமான்கான் அவர்கள் சொல்கின்றபடி இருக்கலாம்; ஒன்றிரண்டு திருட்டு நடந்திருக்கலாம். அவர்களைப் பிடித்தவர்களும் போலீஸ்காரர்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1987 மே 4

கள் என்று அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். அதையும் காவல் துறையினர்தான் செய்கிறார்கள் என்பதை அவர்கள் சொல்கிறார்கள். ஒன்றிரண்டு இருக்கலாம்; இல்லையென்று சொல்லவில்லை. ஆகவே அதை கண்டுபிடித்தார்களா, இல்லையா என்பதுதான் முக்கியம்; கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. க. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சபைக்கு ஒரு தகவல். நேற்றைய தினம் நான் 'இண்டியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிக்கையிலே பார்த்தேன். இங்கிலாந்திலே இருக்கிற போலீஸ்காரர்கள்கூட, டியூட்டி இல்லாத நேரங்களில் இந்த மாதிரி திருடுகிறார்கள் என்று ஒரு செய்தி வந்திருக்கிறது. ஆகையினால், திருடுவது என்பது சமுதாயத்திலே ஏற்பட்டிருக்கின்ற ஒரு குற்றம். காவல்துறை அதைக் கண்டுபிடித்திருக்கிறது என்று காவல்துறையைப் பாராட்டுகின்ற வகையிலேதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** ஆகவே ஸ்பெசிபிக்காகச் சொல்லுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** 'திருடாதே பாப்பா திருடாதே' என்று பாப்பாவுக்குத்தானே சொன்னார்; நமக்குச் சொல்லவில்லை என்று வலியுறுத்தக் கூடாது. ஆகவே, மன்றத்தினுடைய துணைத் தலைவர் அவர்களே, இங்கே நான் சொல்வது. . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'திருடாதே தம்பி' என்று தானே அந்தப் பாட்டு; பாப்பா என்றா அந்தப் பாட்டு?

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

**திரு. அ. ரகுமான்கான் :** இந்த நாட்டிலே இருக்கும் தம்பிகள் பாப்பாக்களாக இன்னும் இருக்கிறார்கள். ஆகவே, இங்கே நான் இன்னொன்றையும் தெரிவிக்க விரும்புகிறேன். ஆயுதப் போலீஸ் படையைச் சார்ந்தவர்கள்—நம்முடைய நாவலர் அவர்கள்கூட சொன்னார்கள்—நான் ஒட்டுமொத்தமாக காவல்



1987 மே 4] [திரு. அ. ரகுமான்கான்]

துறையைக் குறைத்துப் பேசவில்லை; அங்கே பண்பாளர்கள் இருக்கிறார்கள்; சிறப்பாகப் பணி புரிபவர்கள் இருக்கிறார்கள். அத்தனை பேரையும் நான் சொல்ல மாட்டேன். அவ்வளவு தெரியாத ஆளில்லை. களவு செய்கின்றவர்களைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்டுகிறேனே தவிர, மற்றபடி அல்ல. அதைப்போலவே 'ஆன் தி அபென்ஸ்' போலீஸ் ஸ்டேசனிலே புகார் செய்யப்பட்டு, இன்ஸ்பெக்டர் கைது செய்து ஜாமீனிலே விட்டிருக்கிற விவகாரங்கள். ஆயுத போலீஸ் படையைச் சேர்ந்தவர்கள், மாட்டு வண்டியிலே ஒரு விவசாயி கொண்டு போன 12 அரிசி மூட்டைகளை—எந்த ஊர் என்று கேட்டால், கிருஷ்ணகிரி காவல் நிலையத்திலே இருப்பவர்—தருமபுரி மாவட்டத்தில் முதல்வர் சுற்றுப்பயணம் வந்தபோது, பாதுகாப்புக்காக, காமுப்பாடிக்கு வந்தவர், ஒரு விவசாயி மாட்டு வண்டியிலே 12 மூட்டை அரிசியைக் கொண்டுபோய் இருக்கிறார் (மணியடிக்கப் பட்டது).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அதிக நேரம் ஆகிவிட்டது. 20 நிமிடங்களைத் தாண்டி விட்டது. சீக்கிரம் பேசி முடித்து விடுங்கள்.

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே அதிலே 2, 3-ஐ கொண்டு போய் விட்டதாக புகார், கைது, வழக்கு இருக்கிறது. அடுத்து ஒரு முக்கியமான பிரச்சினையைச் சொல்லி என்னுடைய இந்த உரையை முடிக்க விரும்புகிறேன். இன்றைக்கு திருட்டுகள் எந்த அளவுக்கு அதிகமாகி இருக்கின்றன என்பதற்கு இது ஒரு உதாரணம்.

மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் திருக்கல்யாண மண்டபம் அருகில் உள்ள சாமான்கள் வைக்கும் அறையில் 25 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள வெள்ளிப் பாத்திரங்கள் திருடு போய் இருக்கின்றன.

அடுத்து ஒரு சுவையான செய்தி, கேட்டால் நீங்களே சிரிப்பீர்கள். மலையாள வில்லன் நடிகர், அவர் பெயர் சந்தோஷ். சென்னைக்கு வந்து இருக்கிறார், டிரஸ்டுபுரம், மறைந்துபோன நடிகர் அசோகன் வீட்டிலே நண்பர்களைப் பார்த்துவிட்டு இரவு

11 மணிக்கு வந்திருக்கிறார். வழியில் அவரைப் பார்த்து தீப் பெட்டி கேட்டிருக்கிறார்கள். தீப்பெட்டியை கொடுத்த நேரத்தில் கத்தி முனையைக் காட்டி 22 ஆயிரம் ரூபாய் பெறுமானமுள்ள— அவரே வில்லன் நடிகர், வில்லன் நடிகர் இடத்திலேயே—அந்த நகையை திருடிக் கொண்டு போய்விட்டார்கள். இவைகளை எல்லாம் எதற்குச் சுட்டிக்காட்டுகிறேன் என்றால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வில்லன் நடிகர் தானே, வில்லன் இல்லையே?

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னதான் நாம் அதிகாரிகளை அதிகப்படுத்தியிருந் தாலும்; மற்ற காரியங்களைச் செய்தாலும் இன்னும்கூட என்னி டத்தில் குறிப்புகள் இருக்கின்றன. நீதிபதி வீட்டிலே திருட்டு, வக்கில் வீட்டிலே திருட்டு, இப்படி பல்வேறு காரியங்கள் இருந்து கொண்டிருக்கின்றன. (மணியடிக்கப்பெற்றது) இன்னும் ஒன்றை நான் இங்கே சொல்லி என்னுடைய உரையை முடிக்கிறேன். கடைசியாக என் சம்பந்தப்பட்டது.

குறிப்பாக கலைஞர் அவர்கள் கடற்கரையில் பேசியபோது வெடி குண்டு சம்பவம், யார் குறறவாளி என்று புலன் ஆய்வுத் துறை இன்னும் சொல்லவில்லை. என்னுடைய வீட்டில் வெடி குண்டு வீசப்பட்டது, யார் குற்றவாளி என்று இதுவரைக்கும் புலன் ஆய்வுத் துறை சொல்லவில்லை. அதுபோலவே பால சிங்கம் வீட்டில் ஒரு வெடி குண்டு வீசப்பட்டது, யார் குற்றவாளி என்று இன்னும் புலன் ஆய்வுத் துறை சொல்லவில்லை. எக்மோரில் தீப் பற்றி எரிந்தது. தீ வைத்தவர்கள் யார் என்று இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. மற்ற அக்கான்ஸ்களிலே அப்பான்ஸ்களிலே, அக்கறை காட்டுகிற போலீஸ் துறை அதிலும் அக்கறை காட்டும், அப்படி அக்கறை காட்டுபவர்கள்தான் போலீஸ்காரர்கள். ஆனால் அக்கறை காட்டுவதற்குத் தயக்கம் இருக்கிறது என்று நான் கருதுகிறேன். எனவே சட்டத்தின் முன்னாலே அனைவரும் சமம். நம்முடைய தமிழகக் காவல் துறை சிறப்பாகச் செயல்படுவதற்கு அதனுடைய காத்தை கட்டுகின்ற காரியத்தை இந்த அரசு செய்யக்கூடாது என்று கேட்டு அமை கிறேன்.





* **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறை மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில உணர்வுகளைச் சொல்வதில் நான் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். காரணம் உலகத்தில் உள்ள மிகச் சிறந்த காவல் துறைக்கு இணையாக பெயர் பெற்ற ஒன்றாகத் தமிழகக் காவல் துறை பணியாற்றிக்கொண்டு இருக்கிறது. அதை நான் பாராட்டு வதில் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைக்கு தமிழகத்தில் பார்ப்பீர்களானால் பல கொள்ளை, கொலை, ரயில் கவிழ்ப்பு, குண்டு வெடிப்பு சம்பவங்கள் என்று நாடு முழுவதும் ஒரு பீதியை உருவாக்கி மக்களுக்குத் தொல்லை தரவேண்டும் என்ற நோக்கத்தோடு பலர் செயல்பட்ட நேரத்தில் அந்த குண்டு வெடிப்பு சம்பவங்களை எல்லாம் துரிதமாகக் கண்டு பிடித்து மக்களுக்கு எந்தவிதமான பீதியும் ஏற்படாமல், ரயிலில் செல்வதற்கு, பஸ்ஸில் செல்வதற்கு, விமானத்தில் செல்வதற்குக் கூட அஞ்சிய நேரத்தில் அஞ்ச வேண்டாம் என்ற வகையில் மக்களை பாதுகாக்கின்ற முறையில் துரிதமாகக் குற்றவாளி களைக் கண்டுபிடித்து குண்டு வெடிப்பு சம்பவங்கள் இல்லாமல் செய்து இருக்கின்ற காவல் துறையை நான் பாராட்டுகிறேன். குறிப்பாக சமீபத்தில் திருச்சிக்கு அருகில் நடைபெற்ற ரயில் கவிழ்ப்பு சம்பவத்தில் குற்றவாளிகளைத் துரிதமாகக் கண்டு பிடித்தது மட்டும் அல்லாமல் இன்றைக்கு எங்கேயும் அதுபோன்ற சம்பவங்கள் இல்லாமல் நடவடிக்கை எடுத்துக்கொண்டு இருக்கி றார்கள் காவல் துறையைச் சார்ந்தவர்கள். அதற்காகக் காவல் துறையைச் சேர்ந்த அனைத்து அதிகாரிகளையும் நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய அருமை நண்பர் மாண்புமிகு உறுப் பினர் திரு. ரகுமான்கான் அவர்கள் ஆபாச சுவரொட்டி களைப் பற்றி சொன்னார்கள். ஆபாச சுவரொட்டிகளை தடை செய்யவேண்டும், ஆபாச சுவரொட்டிகள் எங்கேயும் இருக்கக் கூடாது என்ற வகையில் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேநேரத்தில் நீதிக்குத் தண்டனையா என்று

[திரு. சைதை சா. துரைசாமி] [1987 மே 4

சொல்லி இடது கையில் பணம், வலது கையில் நீதி என்ற வகையில் நியாயமானதைக் குறை சொல்லுகின்ற வகையில சுவரொட்டிகளை ஒட்டுகின்ற சமூகவிரோதிகள் மீதும் நடவடிக்கை எடுக்கவேண்டும என்று கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-50)

சமுதாயத்தில் இன்றைக்கு காவல்துறையைச் சேர்ந்தவர்கள் நடவடிக்கைகள் எடுக்கும்போது வன்முறையாளர்கள் சூழ்ந்து கொண்டு தாக்குகிறார்கள். அந்த நேரத்தில் துப்பாக்கிகளைப் பயன்படுத்த வேண்டி வருகிறது. இதனால் துப்பாக்கிச் சாவுகள் ஏற்படுகின்றன. ஆகவே அரசுக்கு இதிலே கெட்டப் பெயர் ஏற்படுகிறது. யாரோ சில சமூக விரோதிகள் செய்கின்ற நேரத்தில் துப்பாக்கியைப் பயன்படுத்துவதைத் தவிர காவல்துறைக்கு வேறு வழி இல்லை என்ற நேரத்தில் அதை அவர்கள் பயன்படுத்துகிறார்கள். அதனால் சாவு ஏற்படுகிறது. அதைத் தவிர்ப்பதற்காக இங்கிலாந்து நாட்டிலே ஒரு முறை வைத்திருக்கிறார்கள். கார்க் என்கிற துப்பாக்கி ரவை வைத்திருக்கிறார்கள். அந்த ரவையினால் சுட்டால் உயிர்ச் சேதம் ஏற்படாது. அது போன்ற முறையையோ அல்லது, ஒரு பெரிய வன்முறை கும்பல் சூழ்ந்து கொண்டு பொதுமக்களுக்குத் தொல்லை தருகின்ற வகையில், பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவிக்கின்ற நேரத்தில், மயக்க மருந்துள்ள துப்பாக்கி ரவைகளைப் பயன்படுத்தினால், சாவு இல்லாமல் மக்களைப் பாதுகாக்கலாம், சமூக விரோதிகள் யார் என்றும் கண்டுபிடிக்கலாம். எனவே அந்தப் புதிய முறையை, நவீன முறையை, துப்பாக்கி ரவைக்குப் பதிலாக, காவல்துறையிலே கொண்டுவரவேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

காவல்துறையைச் சார்ந்தவர்கள் குறைந்த வருவாயுள்ளவர்களாக 24 மணி நேரமும் பணிபுரிந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அப்படி பணி புரிந்துகொண்டிருப்பவர்கள், சமுதாயத்தில் நல்ல ஒழுக்கமுள்ளவர்களாகவும், நேர்மையுள்ளவர்களாகவும், பணி செய்யும் வகையில் காவல்துறையைச் சார்ந்தவர்களை



1987 மே 4] [திரு. சைதை சா. துரைசாமி]

உற்சாகப்படுத்துகின்ற வகையில், ஓய்வுபெறும்போது, அவர்களுக்கு அரசு கொடுக்கவேண்டிய எல்லா தொகையோடு சேர்த்து, தனியாக அந்த காவல்துறையைச் சார்ந்த அதிகாரி நல்ல முறையில், நேர்மையுள்ளவராக, ஒழுக்கமுள்ளவராக எந்தவிதமான தவறுகளுக்கும் ஆட்படாது இருந்தால், அவருக்கு அரசின் சார்பாக ரூபாய் 1 இலட்சம் பணம் கொடுக்கும் முறையைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்யும் விதத்தில், தவறு செய்யும் அதிகாரிகள் தவறு செய்வதை விட்டுவிட்டு, தன்னுடைய இறுதி நாளில் தானும் அந்தத் தொகையைப் பெறவேண்டுமென்பதற்காக, நாணயமாகவும், நேர்மையாகவும் அவர் பணியாற்ற ஒரு வாய்ப்பாக இருக்கும். எனவே அந்த முறையைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

'பல்லாண்டு வாழ்க' என்ற திரைப்படத்தில் புரட்சித் தலைவர் அவர்கள் சமூக விரோதிகளைத் திருத்துவதற்காக அந்தத் திரைப் படத்தைக் கொண்டு வந்தார்கள். அதைப்போன்று இன்று காவல்துறையைச் சார்ந்தவர்கள், அந்த முயற்சியின்கீழ் பல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறார்கள். நான் சமீபத்தில் கூட ஒரு பத்திரிகையைப் பார்த்தேன். ஒரு இளம் குற்றவாளி, பல தவறுகளைச் செய்து, சிறை சென்றவன். அவனைத் திருத்தி, ஒரு வேலையில் அமர்த்தி, அவனுக்கு ஒரு திருமணத்தையும் காவல்துறையைச் சேர்ந்தவர் நடத்தியிருக்கின்றார்கள். எனது தொகுதியைச் சார்ந்த ஏ. சி. மாணிக்கம் என்பவருக்கு செய்திருக்கிறார்கள். அதைப்போன்று மற்ற இடங்களிலும் இப்படி சமுதாய விரோதச் செயல்களைச் செய்தவர்களை, குற்றவாளிகளாக இருப்பவர்களைத் திருத்துவதற்கு காவல்துறையினர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும். காவல்துறை உங்களுடைய நண்பன் என்ற அடிப்படையில் இன்றைக்குப் பணியாற்றிக்கொண்டிருக்கிறது. அந்தப் பணிகளை மேலும் நல்ல முறையில் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று இன்றைக்கு சென்னை மாநகரத்தில் சிலர் வங்கிகளில் கடன் வாங்கி, சைக்கிள் கடைகள் வைத்திருக்கிறார்கள். அந்த வங்கிகளில் கடன் வாங்கி, வைத்திருக்கின்ற கடைகளில் இருக்கின்ற சைக்கிளை வாடகைக்கு எடுத்துக்

கொண்டு செல்கிறார்கள். அப்படிச் செல்கின்றபோது அவர்களில் சிலர் சமுதாய விரோதச் செயல்களைச் செய்கிறார்கள் அல்லது தகராறுகளைச் செய்கிறார்கள். ஏதாவது ஒரு வழக்கிலே மாட்டிக்கொண்டுவிடுகிறார்கள். அந்த சமயத்தில் காவல் முறையைக் கொண்டுவரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சென்று விடுகிறார்கள். பிறகு அந்த சைக்கிளைப் பெறுவதற்கு ஆறு மாதம் அல்லது ஒரு வருடமாகின்றது. அதற்குள் அந்த சைக்கிள் வீணாகிப் போய்விடுகிறது. யார் குற்றவாளியோ, அந்தக் குற்றவாளி அந்த சைக்கிளை எடுத்தவன் என்று அந்தக் கடைக்காரர் கோர்ட்டிலே சாட்சி சொன்னால் போதும் என்ற உத்தரவாதத்தைக் கொடுத்து, அந்த சைக்கிள் கடைக்காரருக்கு உரிய சைக்கிள்தானா என்ற விபரத்தை சரி பார்த்துவிட்டு, வண்டியை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதேபோன்று இன்றைக்குப்பல சமுதாய விரோதச் செயல்களைத் தொடர்ந்து செய்பவர்கள், குறிப்பாக ஜேப்படித் திருடர்கள், இப்படிப்பட்டவர்களை எல்லாம் மக்கள் அடையாளம் கண்டுகொள்வதற்கு சட்டத்தில் இடம் இருக்கிறதா என்று பார்க்கக்கூடாது. குற்றவாளிகள் முகத்திலே, இந்தத் தவறுகளை செய்தவர்கள் என்று பச்சை குத்தவேண்டும். அப்போது தான் மீண்டும் தவறு செய்ய மாட்டான். முகத்தில் பச்சை குத்தி, அவன் ஜேப்படித்திருடன், கொள்ளைக்காரன், கொலைகார்ன் என்று தொடர்ந்து செய்கின்ற குற்றவாளிகளை, திருத்தவே முடியாத குற்றவாளிகளை, இந்த சமுதாயத்தில் குற்றங்களைப் புரிந்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களை, அவர்களுடைய முகத்தில் இப்படிப்பட்ட பச்சை குத்தினால், நிச்சயமாக மக்கள் கண்டுகொண்டு அவர்களை எச்சரிக்கையுடன் பார்த்து நடந்துகொள்வார்கள். எனவே அந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





அதுபோன்று ரயிலிலே அடிபட்டு இறந்தால், இன்றைக்கு அந்த இறந்த உடலைப் பெறுவதற்கு 2, 3 தினங்கள் ஆகின்றன. அதை உடனடியாக ரயில்வே காவல்துறை மருத்துவமனைக்கு அனுப்பி, அந்த பாடியை 'போஸ்ட் மார்ட்டம்' செய்து உரியவர்களிடம் ஒப்படைக்கவேண்டும். அப்படியில்லாமல் அந்த பாடியை அங்கேயே ஒரு நாள், இரண்டு நாள், மூன்று நாள் என்று வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த முறையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கள்ளச் சாராயம் விற்பவர்களை மிசா சட்டத்தில் போட வேண்டும். கடுமையான மிசா சட்டத்தில் போட்டால் கள்ளச் சாராயத்தை முழுமையாக ஒழித்து விடலாம்.

தமிழகத்தில் இன்றைக்கு ஜனத்தொகை பெருகி வருகின்றது. பெருகி வருகின்ற ஜனத்தொகைக்கு ஏற்றாற்போல் காவல்துறை எண்ணிக்கையையும அதிகப்படுத்த வேண்டும். சென்னை நகரம் அதிகமான மக்கள்தொகை கொண்ட பகுதி. ஒவ்வொரு காவல் நிலையத்தையும் பார்ப்போமானால் காவலர்கள் எண்ணிக்கை குறைவாக இருக்கின்றது. ஆகவே அந்த குறைவான எண்ணிக்கையை அதிகப்படுத்துகின்ற வகையில் காவலர்களையும் நேரடியாக சப்-இன்ஸ்பெக்டர்களையும் தேர்வு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல, எல்லா அரசியல் கட்சிகளையும் அழைத்துப் பேசி, பொதுக் கூட்டத்தை 10 மணிக்குள்ளாக முடிக்கவேண்டுமென்று வரைமுறை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்பொழுதுதான் பொது மக்களுக்கும் இடையூறு இருக்காது. அரசியல்வாதிகளுக்கும் இடையூறு இருக்காது. காவல்துறைக்கும் இடையூறு இருக்காது. சென்னை நகரத்தில் இரவு 12 மணி, 1 மணி வரை பொதுக்கூட்டம் நடத்துவதால் பொது மக்களுக்கும் தொல்லையாக இருக்கிறது. காவல் துறைக்கும் தொல்லையாக இருக்கிறது. எங்களைப் போன்ற அரசியல்வாதிகளுக்கும் தொல்லையாக இருக்கிறது. அதற்கு மறுநாள்

மக்கள் பணிகளைப் பார்க்க சிரமமாக இருக்கிறது. எனவே இதை வரைமுறைக்கு கொண்டு வந்து 10 மணிக்குள்ளாக பொதுக் கூட்டங்களை முடிக்க வேண்டுமென்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

காவல்துறையைச் சார்ந்த அனைத்து காவலர்களுக்கும் பஸ் பாஸ் வழங்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது மாணவர்களுக்கு பாஸ் வழங்குகின்றோம். உடல் ஊனமுற்றோர்களுக்கு வழங்குகின்றோம். ஆனால் சமுதாயத்தில் 24 மணி நேரமும் பணிசெய்து கொண்டிருக்கின்ற காவலர்களுக்கு இலவச பஸ் பாஸ் வழங்குவதால் பெருத்த நஷ்டம் வந்து விடாது. எனவே இதைப் பரிவுடன் கவனித்து இலவச பஸ் பாஸ் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காவல்துறையைச் சார்ந்தவர்கள் குறிப்பாக அதிகமான குழந்தைகளைப் பெற்றுக்கொள்கிறார்கள். ஆகவேதான் இன்றைக்கு அவர்களுக்கு பொருளாதாரத்திலே சிரமம் ஏற்படுகிறது. குழந்தைகள் எண்ணிக்கையைக் குறைக்க வேண்டும். அவர்கள் 1, 2 குழந்தைகளுக்கு மேல் பெற்றுக்கொள்ளக் கூடாது என்று கட்டாயப்படுத்துவது மாத்திரம் அல்ல, அந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துகின்ற காவல் துறையைச் சார்ந்தவர்களுக்கு பதவி உயர்வு என்று சட்ட திருத்தம் கொண்டு வருமோமேயானால் பயன் உள்ளதாக இருக்கும். எனவே இதைக் கட்டாயப்படுத்த வேண்டும், நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அனைத்து காவல் நிலையங்களிலும் எமர்ஜென்சி விளக்கு தேவைப்படுகிறது. சில நிலையங்களில் மின்சாரம் பழுதடைந்து போய் விட்டால், ஸ்டேஷன்கள் இருளில் மூழ்கிவிடுகின்றன. ஆகவே எமர்ஜென்சி விளக்குகள் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

எல்லா காவல் நிலையங்களிலும் ஒயர்லெஸ் கருவி அமைக்க வேண்டும். எல்லா காவல் நிலையங்களுக்கும் ஜீப்புகள் வழங்கப்படவேண்டும். முன்பு ஜீப்புகளுக்கு கொடுத்த பெட்ரோல் அளவை இப்போது குறைத்து இருக்கிறார்கள். அதை அதிகப்





படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால் ஒரு நாளைக்கு 4, 5 முறைகள் ஏரியாக்களில் ரௌண்ட்ஸ் வந்தால் தான் குற்றவாளிகள் எந்தவிதமான தவறும் செய்யாமல் இருப்பார்கள். பெட்ரோலைக் குறைக்கின்ற காரணத்தினால் காவல் துறையைச் சார்ந்தவர்கள் ஏரியாக்களில் அதிகமாக ரவுண்ட்ஸ் வருவதில்லை. இதனால் குற்றவாளிகளுடைய கொட்டம் அதிகமாகி விடுகிறது. எனவே காவல் துறைக்கு அதிகமான அளவிற்கு பெட்ரோலை வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மணியடிக்கப்பெற்றது.)

இராணுவத்தில் பணிபுரிகின்ற ஒரு வீரரின் குழந்தைக்கு முன்னுரிமை வழங்குவதைப் போல, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் காவல்துறையைச் சார்ந்தவர்களுடைய குழந்தைகளுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டுமென்று வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். காவல்துறையில் காவலர்கள் முதல் தலைமைக் காவலர்கள் வரை ஓய்வு நாட்களில் பணி புரிந்தால் அவர்களுக்கு E.D.R. 10 ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால் அந்தத் தொகை சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு வழங்கப்படுவதில்லை. எனவே அந்தத் தொகை அவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல்துறையைச் சார்ந்தவர்களுக்கு வயது நிர்ணயம் என்பதைவிட அவர்கள் உடல் ஆரோக்கியம் நல்லமுறையில் உள்ளவரை காவல்துறையில் பணி புரியலாம். அதற்கு பிறகு அவர்கள் வேறு அரசுத்துறையில் பணிபுரிகின்ற ஒரு வரைமுறையைக் கொண்டுவந்தால், அது காவலர்களுக்கும் பயன் உள்ளதாக இருக்கும். இந்த நாட்டிலே சட்டம் ஒழுங்கைப் பாதுகாப்பதற்கும் வாய்ப்பாக இருக்கும். எனவே அந்த முறையைப் பயன்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

குடும்பச் சண்டை காரணமாக, இன்றைக்கு காவல் நிலையங்களில் 75-வது பிரிவில் வழக்கைப் பதிவுசெய்கிறார்கள். அந்த முறையை அறவே ஒழிக்கவேண்டும். வேறு ஏதாவது அடி-தடி தகராறைத் தவிர, வாய்ச் சண்டை, குடும்பச் சண்டை என்பதில்

[திரு. சைதை சா. துரைசாமி] [1987 மே 4

சாதாரண, மிக ஏழ்மையான நிலையிலே உள்ளவர்கள்மீது காவல் நிலையத்திற்கு அழைத்து சென்று வழக்கைப் போடுவதால், அவர்களுக்கு மறுநாள் நீதிமன்றத்திற்குச் சென்று பணம் கட்டுவதற்கு வசதி இல்லாத நிலைமை இருக்கின்றது. எனவே, அந்த 75-வது பிரிவை குடும்பச் சண்டைகளுக்கு எந்தக் காரணத்தைக் கொண்டும் போடக்கூடாது என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல், 41—கிளாஸ்—சந்தேக வழக்குகள். அந்த சந்தேக வழக்குகளை பல நேரங்களில் காவல்துறையைச் சார்ந்தவர்கள் பயன்படுத்திக் கொண்டு விடுகிறார்கள். அந்த 41—கிளாஸ் என்ற முறையை ஒழிக்க வேண்டும். குற்றவாளிகள் யார் என்று காவல் துறைக்கே தெரியும். அவர்கள் மீது 41 கிளாஸை போடலாம். அப்பாவிகள், இரவில் சினிமா பார்த்து விட்டு வருபவர்கள், மாணவர்கள் இப்படிப்பட்டவர்களை இரவு நேரங்களில் பிடித்துக் கொண்டு வந்து அடைத்து விடுவதும், பிறகு உரிய முகவரி தந்தாலும் அவர்களை விட மறுப்பதும், தேவை இல்லாத ஒன்று. எனவே அந்த 41—கிளாஸ் என்ற பிரிவை எடுத்து விடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு தீயணைப்புத் துறை, சென்னை மாநகரத்தில் மிகவும் அத்தியாவசியமான பணிகளைச் செய்துகொண்டிருக்கிறது. கடந்த வருடம் எனது தொகுதியிலே தீப்பிடித்தபோது, அந்த தீயணைப்புப் பணியில் காவல் துறையினரும், தீயணைப்புத் துறையினரும் ஒன்றாக இணைந்து நல்ல முறையில் பணியாற்றினார்கள். அந்தத் தீயணைப்புத் துறைக்கு இன்னும் நவீனமான கருவிகளை வாங்க வேண்டும். தீயணைப்புத் துறையில் எல்லா விதமான நவீன கருவிகளை வாங்கவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தீயணைப்புத் துறைக்கு ஒயர்லெஸ் கருவிகளைப் பயன்படுத்தினால் விரைந்து வந்து தீயை அணைக்க வாய்ப்பாக இருக்கும். ஒயர்லெஸ் பொருந்திய அந்த வாகனங்களையும் அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 மே 4] [திரு. சைதை சா. துரைசாமி]

காவல்துறைக்கு ஊதியம் வழங்கப்படுவதைப் போல், தீயணைப்புத் துறை ஊழியர்களுக்கும் ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல்துறையை இந்த அளவுக்கு தமிழகத்தினுடைய முதல்வர் அவர்கள் இன்றைக்குச் சிறப்பாகவும், செம்மையாகவும் நடத்தி மக்களைப் பாதுகாப்பதற்கு நல்ல பல பணிகளைச்செய்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பணிகளை எல்லாம் கொச்சைப் படுத்துகின்ற வகையில், கேவலப்படுத்துகின்ற வகையில் இன்றைக்கு ஆபாசமான முறையில் திரைப்படங்கள்—அரசியல் வாதிகளைப் பற்றியும் எடுக்கிறார்கள்; காவல்துறையைப் பற்றியும் எடுக்கிறார்கள்; எனவே, அப்படி திரைப்படம் எடுப்பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். ஒரு காவல்துறை என்று சொன்னால், அது கண்ணியத்திற்குரியதாகவும், காவல் துறை என்று சொன்னால் அது ஒரு கட்டுப்பாடுள்ளதாகவும், காவல்துறை என்று சொன்னால், பொதுமக்கள், அவர்களைக் கண்டு என்றைக்கும் எந்தவிதமான தவறும் செய்யக்கூடாது என்ற நிலையை உருவாக்குகின்ற வகையில். மக்களுக்கு அந்த உணர்வை ஏற்படுத்தவேண்டுமே தவிர, காவல்துறை என்று சொன்னாலே, ஒரு கேவலமான நிலைக்குக் கொண்டு வருகிற வகையில் இன்றைக்கு திரைப்படங்கள் எடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். அப்படிப்பட்ட முறையை மாற்றியமைக்கவேண்டும். அப்படிப் பட்ட திரைப்படங்கள் திரையிடுவதைத் தடை செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்தினுடைய காவல்துறை மிகச் சிறந்த காவல்துறையாக எல்லோரும் பாராட்டுகின்ற வகையில் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. எந்தக் குற்றம் நடைபெற்றாலும், அந்தக் குற்றத்தை உடனுக்குடன் கண்டுபிடித்து விடுகிறார்கள். எங்கே தவறு நடந்தாலும் அந்தத் தவறுகளை உடனடியாகக் கண்டு பிடித்து, இன்றைக்கு எல்லாத் தரப்பு மக்களையும் பாதுகாக்கின்ற வகையிலே பணியாற்றி வருகிறார்கள்.

[திரு. சைதை சா. துரைசாமி] [1987 மே 4

இன்றைக்கு பார்ப்பீர்களேயானால், ஒரு கொலை நடக்கிறது; கொள்ளை நடக்கிறது; இவைகளைப் பற்றி செய்திகள், இன்வெஸ் டிகேஷன் என்ற நிலையிலே இருக்கும்போதே கூட, செய்தியாக வெளியே வந்து விடுகின்றன. இதனால் கொள்ளைக்காரர்கள், கொலைகாரர்கள் அடுத்தமுறை அவர்கள் கொலை, கொள்ளை யடிக்கத் திட்டமிடும்போது அப்படிப்பட்ட குறைகளை எல்லாம் அவர்கள் தெரிந்துகொள்ள வாய்ப்பாக இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட நிலையை உருவாக்காமல், அப்படிப்பட்ட செய்தி களை வெளியே சொல்லாமல், இந்தக் கொலை, கொள்ளைகளைச் செய்த குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கவேண்டும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிற காவல்துறை மற்றும் தீயணைப்புத்துறை ஆகியவை களுக்கான மானியக் கோரிக்கை மீது ஜனநாயகப் பேரியக்கத்தின் சார்பில் பேசுவதற்கான வாய்ப்பு அளித்தமைக்கு முதலாவது நன்றியைக் கூறிக்கொண்டு ஒரு சில கருத்துக்களை உங்கள் முன் னாலே வைக்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் அவர்கள் தமிழகத்தின் முதலமைச் சராக இருந்த நேரத்தில் தமிழகத்தின் ஒரே ஒரு ஐ.ஜி.யின் கீழ் இயங்கி வந்த காவல்துறை இன்றைக்கு எத்தனையோ பிரிவு களாகப் பரவி, பிரிந்து இயங்குகிறது. அதையெல்லாம் கணக் கிட்டுப் பார்க்கிற நோக்கில் இத்தனை டி.ஜி.பி.க்கள் மற்றும் ஐ.ஜி.க்கள் என்று நியமிக்கப்பட்ட பிறகும்கூட தமிழகத்தில் குற்றங்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறதா என்று பார்த்தால் இல்லை என்று சொல்லுகிற நிலைதான் இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இங்கே கொள்கை விளக்கக் குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிற கணக்கைப் பார்த் தாலேகூட, 1985 ஆம் ஆண்டில் 35,276 புகார்கள் கூறப்பட்டுள்ள தாகவும் அதில் 24,622 பட்டும் கண்டுபிடிக்கப்பட்டதாகவும், அதேபோலவே 1986 ஆம் ஆண்டில் 34,695 புகார்கள் கொடுக்கப் பட்டதாகவும் அதில் 24,025 மட்டும் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது.



1987 மே 4] [டாக்டர் தே. குமாரதாஸ்]

இப்படி ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக 10 முதல் 11,000 புகார்கள் கண்டுபிடிக்கப்படாமலேயே, நிவர்த்தி செய்யப்படாம லேயே போகிறது என்றால் இந்த நாட்டில் சட்டம் ஒழுங்கு எப்படிப் பாதுகாக்கப்பட்டிருக்கிறது என்று கேட்க ஆசைப்படு கிறேன்.

அதுமட்டுமல்ல, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்த வரை அங்கே செயல்படக் கூடிய காவல்துறை அதிகாரிகள் எல்லாம் பெருவாரியாக ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு உதவியாக இருப்பதாக எண்ணிக்கொண்டு ஏழை எளிய மக்க ளுக்குத் துன்பத்தைக் கொடுக்கிற வகையில் செயல்படுக் கொண்டு வருகிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எங்கள் மாவட்டத்தில் ஏற் பட்ட ஒரு நிகழ்ச்சியைச் சொல்ல விரும்புகிறேன். எங்கள் பகுதியில் ஒரு பிரச்சினை ஏற்பட்டு, ஒரு ஆளும் கட்சி உறுப்பினர் மேடையில் தகாத முறையில் பேச, அதையொட்டி சிலர் கலாட்டா செய்கிற நேரத்தில் நான் வேறு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்தேன். அப்படிப் பேசிக் கொண்டிருக்கிற அந்த நேரத்தில் கூட எப்.ஐ.ஆர்.-ல் என்னுடைய பெயரையே முதலாவது எதிரியாகப் போட்டு வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள் என்றால் —அதாவது ஒரு சட்டமன்ற உறுப்பினரான எனக்கே ஒரு நியாயம் வழங்காத பட்சத்தில் ஏழை எளிய மக்களுக்கு எப்படி நியாயம் கிடைக்கும் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

அடுத்து எங்கள் கருங்கல் பகுதியில் கொலைகள், கொள்ளைகள் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டே வருகின்றன. கன்னியா குமரி மாவட்டத்தில் ஒரு மாதத்திற்கு 2 முறை—அதாவது 15 நாட்களுக்கு ஒரு கொலை, கொள்ளை என்ற அளவில் நடக்கிறது. சட்டம் ஒழுங்கு முறையாகச் செயல்பட்டால் அப்படிப்பட்ட சூழ் நிலைகளைத் தடுத்திருக்க முடியும்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அங்கே நியமிக்கப்பட்டிருக்கக்கூடிய எஸ்.ஐ. அதாவது உதவி ஆய்வாளர் களில் பெரும்பான்மையானவர்கள் ரேங்க்-புரமோட்டட் என்ற

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1987 மே 4

அடிப்படையில் வந்திருக்கிறார்கள். நேரடியாக எஸ்.ஐ. ஆக
வந்திருந்தால் அவர்கள் லஞ்ச ஊழல்களுக்கு இடம் கொடுக்காத
முறையில் செயல்படக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டிருக்க முடியும்.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிற
போது கன்னியாகுமரி மாவட்டத்தில் மாதத்திற்கு 2 கொலைகள்
நடக்கின்றன, காவல் துறை சரியாகச் செயல்பட்டிருந்தால்
அவற்றைத் தடுத்திருக்கலாம் என்று சொன்னார்கள். அவரிடம்
அதுபற்றிய விவரம் இருக்கும்போல் இருக்கிறது. அந்த விவரத்
தைச் சொன்னால் காவல் துறை நிச்சயமாகக் கண்டுபிடிக்கும்,
நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அப்படி ஒவ்வொரு கொலையைப் பற்றியும் பட்டியல்
போட்டுச் சொல்லிக் கொண்டிருந்தால் அதற்குத்தான் நேரம்
போதும் என்பதால் அந்தப் புள்ளிவிவரத்தை அப்படியே முடித்து
விட்டேன். மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் நேரம் தந்தால்
நாளைக்கே புள்ளிவிவரமாகக் கூறுவதற்குத் தயாராக இருக்
கிறேன்.

அங்கே நடைபெறுகிற அந்தக் கொலை, கொள்ளைகளுக்கும்
குற்றங்களுக்கும் புகலிடமாக ஆய்வாளர்களிடம் போய்ச் சொன்
னால் அவர்கள் அதைக் கண்டு கொள்வதே கிடையாது. ஒரு
முறை கருங்கல்லில் இருக்கிற எஸ்.ஐ.-யிடம் நான் போனில்
தொடர்பு கொள்ள முயற்சித்தேன். அப்போது அவர் ஸ்டே
ஷனில் இருந்தார். அங்கே ஒரு இடத்தில் கலாட்டா நடக்கிறது
என்று என்னிடம் சொன்னார்கள். அதன் அடிப்படையில் நான்
காவல் நிலையத்திற்குப் போன் செய்தேன். அங்கே இருந்த
ஹெட் கான்ஸ்டபிள் போனை எடுத்தார். யார் பேசுகிறீர்கள்
என்று கேட்டார். நான் "எம்.எல்.ஏ. குமாரதாஸ் பேசுகிறேன்"
என்று சொன்னேன். உடனே அந்த ஹெட் கான்ஸ்டபிள்
போனை வைத்துக்கொண்டே எஸ்.ஐ.யிடம் கேட்கிறார். குமார
தாஸ் உங்களிடம் பேச வேண்டுமென்று கேட்கிறார் என்ன சொல்ல
வேண்டும் என்று கேட்டார். எஸ்.ஐ., நான் இங்கே இல்லை



1987 மே 4] [டாக்டர் தே. குமாரதாஸ்]

என்று சொல்லிவிடு என்று சொன்னார். அதுவும் போனில்
கேட்கிறது. இவ்வளவு தூரத்திற்கு ஒரு சட்டமன்ற உறுப்பின
ராக இருக்கிற நான் பேசுகிறேன் என்று தெரிந்தும்கூட அந்த
எஸ்.ஐ. போனில்கூட பேச முன்வராத நிலையில் இப்படிப்பட்ட
அதிகாரிகளைக் கொண்டு எப்படி நாட்டில் சட்டம் ஒழுங்கைக்
காப்பாற்ற முடியும் என்று கேட்க விரும்புகிறேன். அடுத்து
பாஞூர் என்கிற பகுதியில் ஒருமுறை கலாட்டா நடக்கிறது என்று
எனக்குப் போன் பண்ணிச் சொன்னார்கள். இங்கே இரண்டு
குரூப் அடி போட்டுக் கொண்டிருக்கிறார்கள். போலீசுக்குத்
தகவல் கொடுத்து சமாதானம் செய்யுங்கள் என்றார்கள். அதற்
காக நான் போன் செய்தேன். காவல் துறையில் இருப்பவர்கள்
இப்படி நடந்து கொண்டால் நாம் அவர்களிடம் எப்படி ரெப்ர
சன்ட் செய்வது என்றே எனக்குப் புரியவில்லை.

அதோடு எந்த இடத்தில் எந்தப் பிரச்சினை நடந்தாலும்
அவர்களிடம் சொல்லி இங்கே இந்தப் பிரச்சினை இருக்கிறது
நீங்கள் நேரில் போய் தீர்த்து வைக்க வேண்டுமென்று சொன்
னால் நாங்கள் போக வர வாகன வசதி கிடையாது என்று
சொல்லி முதலாவதாக ரூ. 250 அட்வான்ஸ் பெற்றுத்தான் டேக்சி
எடுத்துச் செல்லுகிற சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவிக்க
விரும்புகிறேன்.

(பிற்பகல் 1-10)

அது மாத்திரமல்ல. என்னுடைய தனிப்பட்டதொரு பிரச்
சினையை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.
என்னுடைய நிலத்தில் இன்னொருவர் இறங்கும் நேரத்தில் இது
என்னுடைய நிலம் என்று சொன்னதற்குப் பிறகும் கேட்காமல்,
ஐ.பி.எஸ். அதிகாரி, ஏ.எஸ்.பி. அவர்கள், போலீஸ் காவலுடன்
சென்று என்னுடைய தோட்டத்தை அழிக்கிறார்கள். போலீஸ்
முன் நின்று என்னுடைய நிலம் அழிக்கப்படுகிறது. மீண்டும்
நிலம் என்னுடையது என்று சொன்ன நேரத்தில், வருவாய்த்
துறையில் இருந்து சான்றிதழ் வாங்கி வந்து தந்தால் நடவடிக்கை
எடுக்கிறேன் என்று சொன்னார்கள். வருவாய்த் துறையிலிருந்து
சான்றிதழை வாங்கிக் கொடுக்கிறேன். அதன் பிறகும் நடவ

டிக்கை எடுக்கவில்லை. எங்களைப் போன்றவர்களுக்கே போலீஸ் பாதுகாப்பு இந்த அளவிற்கு இருக்கிறது என்றால், சிவில் மேட்டரில் ஐ.பி.எஸ். அதிகாரி, ஏ.எஸ்.பி. இவ்வளவு கீழ்த்தரமாக நடந்து கொள்கிறார் என்றால், உண்மையைத் தெரிந்துகொள்ளாமல் நடக்கிறார் என்றால், சட்டமன்ற உறுப்பினருக்கே ஒரு சிக்கலை உருவாக்குகிறார் என்றால் ஏழையெளிய மக்களை எப்படிக் காப்பாற்ற முடியும் என்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அது இந்தியாவில்தானா இருக்கிறது, குறிப்பாக தமிழகத்தில்தானா இருக்கிறது என்று கேட்கும் எண்ணம் எங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. அங்கே அரசியல் பிரச்சினைகளுக்காக, அரசியல் பொதுக் கூட்டங்கள் நடத்த வேண்டுமென்று சொன்னாலும், அங்கே மதக் கலவரம் நடப்பதால் ஒலிபெருக்கி வைக்கக்கூடாது என்று சொல்லுகிறார்கள். அதை ஒத்துக்கொள்கிறேன், வரவேற்கிறேன். அதே சட்டத்தை எல்லா அரசியல் கூட்டங்களுக்கும் பயன்படுத்தினால் பரவாயில்லை. அமைச்சர்கள் வரும்போது நடத்தப்படுகிற அரசியல் கூட்டங்களுக்கு ஒலிபெருக்கி வைக்க அனுமதி கொடுக்கிறார்கள். எங்களைப் போன்றவர்கள் மிகச் சிறிய கட்சியாக இருப்பதால், நாங்கள் பொதுக்கூட்டம் நடத்தும் போது பாக்ஸ் டைப் ஸ்பீக்கர் வைக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். அரசியல் சட்டத்தில் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு மட்டும் விதிவிலக்கு இருக்கிறதா என்பதைக் கேட்க விரும்புகிறேன். கொடுப்பதாக இருந்தால் எல்லாக் கட்சிகளுக்கும் ஒலிபெருக்கி வைக்க அனுமதி கொடுங்கள். கொடுக்கக் கூடாது என்றால், எல்லாக் கட்சிகளையும் தடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில், தமிழ்நாடு மெர்கெண்டைல் பேங்கில் கேஷியராகப் பணியாற்றிய நபர் இரண்டரை மாதங்களுக்கு முன்பு அழகப்பபுரம் பகுதியில் கொலை செய்யப்பட்டார். இன்றுவரை அவரைக் கொலை செய்தது யார் என்று கண்டுபிடிக்கப்படவில்லை. அழகப்பபுரம் பகுதியில் ஒரு இரட்டைக் கொலை நடந்தது. கொலையாளி இதுவரையில் கண்டுபிடிக்கப்





படவில்லை. தாசன என்கிற டாக்சி டிரைவர் வெள்ளியூர் பகுதியைச சோந்தவா. அந்த நபா கொலை செய்யபபட்டுவிட்டதாக அந்த ஊா மககள கருதுகிறாாகள். அக்கிரமமான முறையில் கொலை செயயப்பட்டாரா அல்லது விபத்தில் மரணம் அடைந்தாரா என்ற செய்தி மக்களுக்குத் தெரியாத காரணத்தால் அங்கே கொந்தளிப்பாக இருக்கிறது. டிரைவர் தாசன் கொலை வழக்கை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒவ்வொரு கட்சியைச் சேர்ந்த பெரியவர்கள் வரும்போது அலங்கார வளைவுகள் போடப்படுகின்றபோது காவல் துறையின் அனுமதியை வாங்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. ஒரு சில கட்சிகளுக்கு மட்டும் அந்தக் கட்டாயம்; எல்லாக் கட்சிகளுக்கும் அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை. ஆகவே பாரபட்சம் இல்லாமல் நடைபெற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பணியாற்றக்கூடிய காவலர்களுக்கும் மற்ற மாவட்டங்களில் பணியாற்றும் காவலர்களுக்கும் ஊதிய விகிதாச்சாரத்தில் வித்தியாசம் இருக்கிறது. அதை நிவர்த்தி பண்ண வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்ச்சியாக நான்கு எஸ்.பி.க்கள் மாறி, மாறி வந்திருக்கிறார்கள். இந்த நான்கு பேரும் வடநாட்டைச் சேர்ந்தவர்கள். வடநாட்டைச் சேர்ந்த அவர்களுக்கு இந்தியும், ஆங்கிலமும்தான் தெரியும், தமிழ் தெரிய வாய்ப்பு இல்லை. ஆகவே ஏழையெளிய மக்கள் தங்கள் குறைகளைச் சொல்லுவதற்கு இயலாத சூழ்நிலை இருக்கிறது. உதாரணமாக திரு. பரம்ஜித், அதற்கடுத்தபடியாக திரு. சவாணி, அதற்கடுத்தபடியாக திரு. அமீர்சர்மா, அதற்கடுத்தபடியாக திரு. தாபா ஆகியவர்கள் வந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் வட நாட்டைச் சேர்ந்தவர்கள். நான்கு எஸ்.பி.க்கள் தொடர்ச்சியாக வரும்போது தமிழ் தெரிந்தவராக இருந்தால் ஏழையெளிய மக்கள் தங்கள் குறைகளை எடுத்துக்கூற வாய்ப்பு இருக்கும். எனவே அந்தப் பகுதியில் தமிழ் தெரிந்த ஒருவரைத்தான் எஸ்.பி.யாக நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1987 மே 4

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் காவல் நிலையங்கள் பல்வேறு பகுதிகளில் இல்லாமல் இருந்தாலும், அவுட்-போஸ்ட் சிலவற்றையாவது ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். உதாரணமாக பள்ளியாடி பகுதியில் ஒரு அவுட்-போஸ்ட் வேண்டும் என்று வெகு காலமாக சொல்லி வருகிறேன். நான் சட்டமன்ற உறுப்பினராக வந்தே மூன்றாண்டுக் காலம் ஆகிறது. நானே ரெப்ரசென்டேஷன் கொடுத்திருக்கிறேன். அருமை அண்ணன் திரு. விஜயராகவன் அவர்களும் ரெப்ரசென்டேஷன் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியில் அதிகமாக கலாட்டா நடப்பதால் பள்ளியாடி பகுதியில் விரைவிலே ஒரு அவுட்-போஸ்ட்டை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தீயணைப்பு நிலையங்களைப் பார்க்கும்போது கருங்கல் பகுதியில் ஏழெட்டு கிலோமீட்டர் தூரத்திற்கு தீயணைப்பு நிலையம் இல்லை. ஆகவே கருங்கல் பகுதியை மையமாகக் கொண்டு அங்கே ஒரு தீயணைப்பு நிலையத்தை அமைத்துத் தந்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

போக்குவரத்து வசதிகளைப் பொறுத்தவரையில், குளச்சல் சப்-டிவிஷன் ஏ.எஸ்.பி.க்கு ஒரு ஜீப், ஒரு வேன்தான் இருக்கிறது. அவர் கவர் பண்ண வேண்டியது 15 காவல் நிலையங்கள். ஒரு பகுதியிலிருந்து மறு பகுதிக்குச் செல்ல வேண்டுமென்றால் 50, 60 கிலோமீட்டர்கள் இருக்கின்றன. இதற்கு இந்த வாகன வசதி போதுமா என்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்கே தீயணைப்புத் துறைக்கு 8 கோடி ரூபாயும், காவல் துறைக்கு 118 கோடி ரூபாயும், ஆக மொத்தம் 126 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்ய இருக்கிறோம். இந்த நேரத்தில், எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தளவில் நிர்வாகத் திறமையுள்ள, நல்ல அதிகாரிகளை நியமிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 மே 4] [டாக்டர் தே. குமாரதாஸ்]

அமைது பகுதிக்கு பற்றி வேதனையோடு சொல்ல விரும்புகிறேன். அங்கு ஒரு ஏ.எஸ்.பி. வந்திருக்கிறார். நல்லவர், பெரு மக்களுடைய குற்றங்களைக் கண்டுபிடிப்பவர் என்று சொல்லுகிறார்கள். அவர் லோக்கல் போலீசை அழைக்கும்போது, லோக்கல் போலீஸ் ஸ்டேஷனில் உள்ளவர்கள் கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களுக்குத் தகவல் கொடுத்து, அங்கேயிருந்து சாராயம் கடத்தப்பட்டுவிடுகிறது. அவர் பிடித்துவிடலாமென்று ஆவலாக வருகிறார். இங்கே எப்படி கேஸ்கள்தான் இருக்கின்றன. பொதுமக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தடுத்து நிறுத்தினால், அது பிரச்சினையாக மாறி, பப்ளிக் கிளாஷ் உருவாகும் என்பதால் சாராயம் கடத்தும் சூழ்நிலை இருக்கிறது. போலீஸ் கள்ளச் சாராயத்தைத் தடுக்க பொதுமக்கள் உதவி வேண்டுமென்று கருதினால், அந்த உதவியைத் தர ஜனதா பேரியக்கத்தைச் சேர்ந்தவர்கள் தயாராக இருக்கிறார்கள். கன்னியாகுமரி மாவட்டம் சின்ன மாவட்டம். அங்கே அதிகாரிகள் கண்ணுங்கருத்துமாகச் செயல்பட்டால், அந்த மாவட்டத்தைப் பொறுத்தளவில் மது விலக்கை நல்ல முறையில் செயல்படுத்த முடியும். (மணி அடிக்கப்பெற்றது) கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய கோரிக்கைகளை எல்லாம் நான் எடுத்து உரைத்திருக்கிறேன். அவற்றை எல்லாம் கவனத்திலே கொண்டு, நல்ல அதிகாரிகளை நியமித்து, கள்ளச் சாராயம், களவு, கொலை குற்றம் ஆகியவை அதிகமாக நடந்து வருவதைத் தடுத்திட எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகிறேன்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சார்பிலே மாண்புமிகு நிதி அமைச்சர் நாவலர் அவர்கள் கொண்டு வந்துள்ள மானியக் கோரிக்கை எண்கள் 15, 16 ஆகியவற்றின்மீது எனது சில கருத்துக்களை இங்கே முன்வைப்பது என் கடமை என்று கருதுகிறேன்.

[திரு. கடலூர் இ. வி. வேலு] [1987, மே 4

தமிழகக் காவல் துறையைப் பொறுத்தளவில் உலகத்திலேயே இரண்டாம் இடத்தையும், இந்தியாவிலே முதலிடத்தையும் பெற்று, பல பாராட்டுக்களைப் பெற்றிருக்கிறது. சென்ற ஆண்டைப் பொறுத்த அளவில் உயர் காத்தல் பணிக்காக இந்தியாவினுடைய பிரதம அமைச்சராக விளங்கிக்கொண்டிருக்கும் திரு. ராஜீவ் காந்தி அவர்களிடமிருந்து தமிழகக் காவல் துறை 5 பதக்கங்களைப் பெற்றிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், குடியரசுத் தலைவரிடமிருந்து நம்முடைய தமிழ்நாடு காவல்துறை 29 பதக்கங்களைப் பெற்றிருக்கிறது. தமிழகத்தின் தன்னிகரில்லாத, ஏழைகளின் ஒளி விளக்காக விளங்கிக்கொண்டிருக்கும் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் திருக்கரத்தால் காவல் துறை 58 பதக்கங்கள் பெற்றிருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல், காவல் துறையில் உள்ள நண்பர்கள் எல்லாம் 10 ஆண்டுக்காலம் சீராகவும், செம்மையாகவும் பணிகள் ஆற்றினால் அவர்களுக்குப் பதக்கம் கொடுக்கும் வகையில், சென்ற ஆண்டு காவல் துறையைச் சேர்ந்தவர்கள் 1,366 பதக்கங்களைப் பெற்றிருக்கிறார்கள். எனவே இந்தத் துறை பாராட்டுக்குரிய துறையாக நாட்டிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

தமிழகத்தைப் பொறுத்தளவில், தமிழகம் பொருளாதார முன்னேற்றம் பெற்று, சமுதாயத்தில் உள்ளவர்கள் பயனடைந்திருக்கிறார்கள் என்றால் அதற்கு காவல் துறை உதவி செய்திருக்கிறது. அதோடுமட்டுமல்லாமல், காவல் துறையைப் பொறுத்த மட்டில் குறைந்த எண்ணிக்கையை வைத்துக்கொண்டு, இன்றைக்கு நாட்டிலே நற்காரியங்களைச் செய்து கொண்டிருப்பது பாராட்டுக்குரிய செயலாகும். தமிழகத்தைப் பொறுத்த வரையில் 989 காவல் நிலையங்களையும், 185 புறக் காவல் நிலையங்களையும் வைத்து, 63,974 காவல் துறை நண்பர்களை வைத்து சீராகவும், செம்மையாகவும் காவல் துறை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

சென்ற ஆண்டு திருநெல்வேலி, அருப்புக்கோட்டை இடைத் தேர்தல்கள் நடந்தன. அதற்கு முன்னால் நடந்த இடைத் தேர்தல்களைப் பார்த்தால், அங்கே சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் சீர்குலைந்து பல்வேறு சாதிக் கலவரங்கள் உருவாகிய வரலாற்றைக் கண்டிருக்கிறோம். சென்ற ஆண்டு திருநெல்வேலியிலும் அருப்புக்கோட்டையிலும் ஜாதி கலவரம் என்றெல்லாம் சொன்னார்கள். பத்திரிகைக்காரர்கள் கணிப்பாகக் கூறினார்கள். ஆனாலும்கூட சென்ற ஆண்டு இடைத் தேர்தல் மிகவும் நல்ல முறையிலே பாதுகாப்போடு நடைபெற்றது. இப்படி நடைபெறக் கூடிய அளவில் காவல்துறை தன்னுடைய பணியினை செய்து கொண்டிருந்தது.



1987 மே 4] [திரு. கடலூர் இ. வி. வேலு]

(பிற்பகல் 1-20)

இந்திய எல்லைக் கோட்டிலே எப்படி ராணுவ வீரர்கள் எல்லாம் இந்த நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற உணர்வோடு—தியாக உணர்வோடு—இருக்கின்றார்களோ அதைப்போல இந்தியாவிலே உட்பகுதியிலே இருக்கின்ற காவல்துறையைச் சார்ந்தவர்கள், நம்முடைய நண்பர்கள் இந்த நாட்டிலே இருக்கின்ற உடைமைகளை நல்ல முறையிலே காப்பாற்றுகின்றார்கள். சமுதாயப் பற்றோடு இன்றைக்கு நாட்டைக் காத்துக்கொண்டிருக்கின்றார்கள் என்பதை என்னால் சொல்ல முடியும்.

சென்ற ஆண்டுகூட, திரு. குமாரதாஸ் அவர்கள்கூட இங்கே பட்டியல் போட்டுக் காண்பித்தார்கள். புகார் எல்லாம் அதிகமாக வருகிறது. விசாரணை என்று வருகின்றபோது குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். ஒரு கணக்கில் சென்ற ஆண்டைவிட, இந்த ஆண்டு அதிகமாகக் கண்டுபிடித்ததாகவும், சென்ற ஆண்டைவிட, .6 சதவிகிதம் குற்றங்கள் எல்லாம் சமுதாயத்தில் இருந்தே களையப்பட்டது. சென்ற ஆண்டு 69.8 சதவிகிதம் கண்டுபிடித்து இருக்கின்றார்கள். இந்த ஆண்டு 69.2 சதவிகிதமாகக் குற்றம் குறைந்திருக்கிறது என்று சொன்னால், .6 சதவிகிதமாகத் தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் குறைந்திருக்கிறது. அதற்குக் காரணம் காவல்துறை சீராகவும் செம்மையாகவும் செயல்பட்டிருக்கிறது என்பதுதான் என்று நான் சுட்டிக் காட்ட முடியும்.

தமிழ்நாட்டு காவல் துறையைப் பொறுத்தமட்டில் குடியுரிமை பாதுகாப்புச் சட்டம், வரதட்சணை கொடுமைச் சட்டம் போன்ற சமுதாயச் சீர்திருத்தச் சட்டங்களை நாட்டிலே அமுல்படுத்துவதில் காவல்துறை உறுதுணையாக இருக்கின்றது என்று

என்னால் சொல்ல முடியும். சாதிச் சண்டையைப் பொறுத்த மட்டில், வட ஆற்காடு மாவட்டத்தில் பேரணாம்பட்டிலே கடந்த இரண்டாண்டு காலமாக அது நடைபெறவில்லை என்று சொன் னால், அதற்கு காரணம் காவல்துறை நண்பர்கள் பெரு முயற்சி எடுத்துக்கொண்டதுதான். அந்த பேரணாம்பட்டு அளவில் ஒரு சமுதாய அமைதிக் குழுவை உருவாக்கி அதன்மூலம் சாதி சண்டையில்லை என்ற நிலைமையை ஏற்படுத்தியிருக்கின்றார்கள். இந்த ஆண்டு சென்ற மாதத்தில்கூட நம்முடைய தென்காசி சட்டப் பேரவை உறுப்பினராக இருக்கின்ற, திரு. வேங்கட ரமணன் அவர்கள் தொகுதியில் ஒரு பிரச்சினை ஏற்பட்டது. 15—9—1986 அன்று மொகரம் பண்டிகை நடைபெற்றது. அந்தப் பகுதியிலே ஊர்வலம் போகின்றபோது சட்டமன்ற உறுப் பினர் வீட்டிலே சென்று தாக்கியதாக அன்றைக்குப் பத்திரிகை யிலே பார்த்தோம். உடனே தொகுதியில் 17—9—1986 அன்று அமைதிக் குழுவை நம்முடைய காவல் துறையைச் சார்ந்தவர்கள் அங்கே உருவாக்கித் தந்தார்கள்.

அதேபோன்று இன்றைக்குக் கற்பழிப்பு பற்றிச் சொன் னார்கள். நாட்டிலே கற்பழிப்பு என்பது காவல் துறையை வைத்துக் கொண்டு செய்வதல்ல. சமுதாயத்திலே நடைபெறுகிற ஒரு தவறு, அதைக் களைய காவல் துறை முயற்சி எடுக்கிறது. ஆனாலும் இதில் சமுதாயத்திலே இருப்பவர்களாகப் பார்த்துத்தான் திருந்த வேண்டுமே ஒழிய, இதிலே காவல்துறையைக் குறை சொல்வதில் பயனில்லை. எனவே சமுதாயத்தில் இருப்பவர்கள் கற்பழிப்புச் செய்பவர்களுக்கு உடந்தையாக இல்லாமல், அதுபோன்றவர்களை கண்டிக்கின்ற வகையிலே சமுதாயத்தை உருவாக்குவதற்கு முன்னோடியாக எல்லோரும் இருக்கவேண்டும் என்று இந்த நோக்கிலே கேட்டுக் கொள்கிறேன். கற்பழிப்பைப் பொறுத்த அளவில் அந்த வழக்குகளை விசாரணை செய்யப் பெரிய பெரிய நகரங்களிலே பெண்கள் காவல் நிலையம் இருக்கின்றன. அங்கு பெண் போலீஸ் இருக்கிறது. ஆனால் ரூரல் ஏரியாக்களிலே உள்ள போலீஸ் ஸ்டேஷனில் ஆண்கள்தான் இருக்கின்றார்கள். இந்தக் கற்பழிப்பு கேஸ்கள் அங்கே வருகின்றபோது, ஆண் போலீஸ்காரர்களிடத்திலே சரியான முறையிலே பெண்களால்





உண்மையைச் சொல்ல முடியவில்லை. பெண்கள் உடலிலே இருக் கின்ற அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு குணங்கள் காரணமாக சொல்ல முடியவில்லை. அவர்கள் சொல்வதற்கு அச்சப்படுகின் றார்கள். எனவே ஒவ்வொரு காவல் நிலையத்திலும் ஒரு பெண் காவல் பிரிவு உருவாக்குவதுதான் நல்லது. அதன் மூலமாக கற்பழிப்பு கேசினை விசாரித்து உண்மையை அறிய ஒரு வாய்ப் பாக அது இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று இந்த வரதட்சணைக் கொடுமையை நாம் பார்க் கிறோம். மாமியார் பிடிக்கவில்லை என்று சொன்னாலும்கூட வரதட்சணை கொடுமை என்று அப்பாவின் மூலமாக புகார் கொடுத்து விடுகின்றார்கள். போலீஸ் ஸ்டேஷனிலே கொடுத்து விடுகின்றார்கள். உடனே காவல்துறையைச் சேர்ந்தவர்கள் எப்.ஐ.ஆர். போட்டு விட்டுத்தான் விசாரணையை ஆரம்பிக்கி றார்கள். தன்னுடைய வீட்டுக்காரர் பிடிக்கவில்லை என்று சொன்னாலும் வரதட்சணைக் கொடுமை என்று புகார் கொடுத்து விடுகிறார்கள். அவர்கள் உடனே எப்.ஐ.ஆர். போட்டுவிட்டுத் தான் விசாரிக்கிறார்கள். ஆகவே அந்த எப்.ஐ.ஆர். போடுவதற்கு முன்னாலேயும் விசாரிக்க வேண்டும். ஏனென்று சொன்னால் புகார் வந்து கொடுக்கின்ற பெண் பற்றி எப்படி புரிந்துகொள்வது? எனவே எப்.ஐ.ஆர். விசாரணைக்குப் பின்னால் போடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மசாஜ் கிளப்பைப்பற்றி சென்ற முறை சட்டப் பேரவையிலே திரு. சைதை துரைசாமி அவர்கள் பேசினார்கள். இந்த ஆண்டை எடுத்துக்கொண்டால் சென்னையைப் பொறுத்த அளவில் மசாஜ் கிளப்புகள் பூராவையுமே ஒழித்துவிட்டோம். ஆனாலுங்கூட பெரிய பெரிய ஓட்டல்களிலே கேபரே டான்ஸ் என்ற முறையிலே அங்கே ஆடை அவிழ்ப்பு நடைபெறுகிறது. அந்த ஆடை அவிழ்ப்பை ஒழிக்க வேண்டுமென்றால் அதற்காக சட்டம் கொண்டு வந்து பெரிய பெரிய ஓட்டல்களிலே கேபரே டான்ஸ் நடப்பதை அகற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[ம.ச 11—17

[திரு. கூடலூர் இ. வி. வேலு] [1987 மே 4

திருட்டுக்களைக் கண்டுபிடிப்பதற்காக சென்ற ஆண்டு மானியத்திலே சொன்னேன். சென்னையிலே திருட்டைப் பிடிக்க நாய்கள் வைத்திருக்கின்றார்கள். இது ஒரு மாவட்டத்திலேயிருந்து வேறு மாவட்டத்திலே வந்து பிடிக்கவேண்டும் என்று சொன்னால் அந்த தடையங்கள் மாறி விடுகின்ற நிலைமைகள் இருக்கின்றன. உடனடியாக செயல்படவேண்டும் என்ற கோரிக்கையை வைத்தேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய புரட்சித் தலைவர் அவர்கள் நான் சொன்னதை ஏற்றுக் கொண்டிருக்கின்றார்களா என்பது தெரியவில்லை. இந்த ஆண்டு வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், தஞ்சாவூர், இராமநாதபுரம், சிதம்பரனார் ஆகிய ஆறு மாவட்டங்களின் தலைநகர்களிலும் திருட்டுக்களைக் கண்டுபிடிக்க மோப்ப நாய் பிரிவுகளை அமைப்பதாக தெரிவித்திருக்கிறார்கள். அதுபோல சென்னையிலே குதிரை படைகளின் துணையுடன் சட்டம் ஒழுங்கை பராமரிக்கின்ற முறை நடைமுறையில் இருக்கிறது. இன்றைக்கு மதுரை, திருச்சி, கோவை போன்ற பெரிய பெரிய நகரங்களிலும் இந்த குதிரைப் படைகளை அமைத்து சட்டம் ஒழுங்கைப் பராமரித்து அமைதிப் படுத்த ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அந்த வகையில் நாட்டிலுள்ள பல்வேறு சமுதாயப் பிரச்சினைகளை அன்றாடம் காவல் துறையினர் சந்தித்து, சமுதாயத்தை சீர்படுத்திக்கொண்டு வருகிறார்கள்.

அதேநேரத்தில் இன்றைக்கு அரசியல் கட்சியைச் சார்ந்த சில பேர்கள் மேடையிலே ஏறி பேசி, சமுதாயத்தை தூண்டிவிட்டு சண்டை சச்சரவை உருவாக்கி, லா அண்ட் ஆர்டர் பாதுகாப்பாக இல்லாத நிலையில் ஒரு நிலைமையை உருவாக்குவதற்காக தங்களுடைய பேச்சுக்களை மேடையிலே அமைத்துக்கொள்கிறார்கள். எப்படியாவது நாட்டிலே குழப்பத்தை உண்டு பண்ண வேண்டும் என்று பார்க்கிறார்கள். குட்டையை குழப்பி இறால் பிடிக்கலாம், நண்டு பிடிக்கலாம் என்று கிராமத்தில் சொல்லுவார்களே, அதுபோல இவர்கள் எப்படியாவது பேசி நாட்டிலே குழப்பத்தை உண்டு பண்ணி இறால் பிடிக்கலாம் என்று பார்க்கிறார்கள். அது முடியாது. தமிழ்நாட்டிலே இன்றைக்கு தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி [illegible] [illegible] வைத்துக்கொண்டு,



1987 மே 4] [திரு. கூடலூர் இ. வி. வேலு]

அவர் அமர்ந்து சமுதாயம் புறம் நல்லவைகளை பார்க்க வேண்டியவர், [illegible] [illegible] மேடையிலே 'தமிழ்நாடு பஞ்சாபாக உருவாக வேண்டும்' என்று பேசுகிறார். தமிழ்நாட்டிலே அவர்கள் செய்துகொண்டிருக்கின்ற குழப்பம் போதாதாம். தமிழ்நாட்டிலே புதிதாக குழப்பத்தை பஞ்சாப் மாதிரி கொண்டு வரவேண்டுமென்று பேசுகிறார். ஏன் இப்படி தமிழகத்தை அவர்கள் குழப்ப வேண்டும்? இது ஒரு முகப்பு. அதுபோல கருணாநிதி அவர்கள் ஒன்றை பேசியிருக்கிறார். 'யுத்தப் பிரகடனம் செய்வேன்' என்று சொல்லுகிறார் என்றால் இவர் என்ன இராணுவ அமைச்சரா அல்லது பிரதம அமைச்சரா? தமிழ்நாட்டிலே உள்ள போலீசோடு யுத்தம் நடத்த வேண்டிய நிலை வந்துவிடும் என்று சொல்லுகிறார். போலீசோடு நான் போராடுவேன் என்று பேசுகிறார். அப்படி என்றால் நாட்டிலே சட்டம் ஒழுங்கை காப்பாற்ற விடாமல் தடுக்க வேண்டும் என்பதுதானே பொருள். அதுமட்டுமல்ல சொல்லிய நேரத்தில் சொன்னபடி வராதாம் புரட்சி. நோட்டீஸ் கொடுத்துவிட்டு வராதாம் புரட்சி. பூகம்பத்தைப்போல திடீரென்று புரட்சி வெடிக்குமாம். புரட்சி திடீரென்று வெடிக்குமளவிற்கு அதற்குரிய ஆயத்தங்கள் மவுனமாக நடைபெறும் என்றும் சொல்லியிருக்கிறார். அப்படி என்றால் நல்ல ஒரு சமுதாயமாக இருப்பதை எப்படியாவது குட்டிச்சுவராக ஆக்க வேண்டும் என்பதுதானே அவர்கள் திட்டம். தமிழ்நாட்டில் எப்படியாவது குழப்பத்தை உண்டு பண்ணியாவது ஆட்சியை பிடித்து விட வேண்டுமென்று கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள். நல்ல முறையில் இருக்கின்ற இந்த சமுதாயத்தை எப்படியாவது கெடுத்துவிட வேண்டும், நாட்டிலே இப்படிப்பட்ட பேச்சுகளின் மூலமாக குழப்பத்தை உண்டுபண்ணிவிட வேண்டுமென்று நினைக்கிறார்கள் என்றால், இவர்களுக்கு பதவி ஆசை பிடித்து விட்டது என்றுதான் பொருள். அதற்காகத்தான் மேடையிலே இப்படிப்பட்டப் பேச்சுக்களை அவர்கள் பேசுகிறார்கள். இப்படி எல்லாம் பேசுவது நல்ல சமுதாயத்தை குட்டிச்சுவராக ஆக்கிவிடும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கலைஞர் அவர்கள் மேடையிலே பேசியதுபற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இந்தப் பேச்சுகளுக்கும் இந்த காவல் துறை மானியத்திற்கும் என்ன சம்பந்தம் என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர் திரு. ரகுமான் கான் பேசும்போது மேடை பேச்சுப் பற்றி குறிப்பிட்டார். அதற்காகத்தான் வெளியிலே நடப்பதை இங்கே பேச வேண்டாமென்று குறிப்பிட்டேன். இனிமேல் வெளியே நடப்பதை இங்கே பேச வேண்டாம்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சமுதாயத்தை நல்ல முறையில் சீர்படுத்த வேண்டுமென்றால் அனைவரின் நல் ஒத்துழைப்பும் வேண்டும். நல்ல சமுதாயம் உருவானால்தான் நாட்டிலே சட்டம் ஒழுங்கு நல்லமாதிரி இருக்கும் என்று நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். ஆனால், அதற்கு மாறாக மேடைப் பேச்சுகளிலே இப்படிப்பட்ட பேச்சுக்களை பேசுவதன் மூலம் நாட்டிலே உணர்ச்சியை ஏற்படுத்துகிறார்கள், சண்டை பிரசண்டம் செய்கிறார்கள். இந்த சமுதாயத்தை குழப்ப வேண்டும் என்பதற்கான அடிப்படை காரணமோ என்கிற சந்தேகம் எனக்கு இருக்கிறது * *

**திரு. எஸ். ரெத்தினராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** ** என்று எதை ஆதாரமாக வைத்து மாண்புமிகு உறுப்பினர் பேசுகிறார்.

அவர் ஆதாரத்தை வைத்துக்கொண்டுதான் பேச வேண்டும் * * என்று சொன்னார்கள்.

(பிற்பகல் 1-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது நீக்கப்படுகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**திரு. கூடலூர் இ. வி. வேலு:** எதை சார் நீக்கியிருக்கிறீர்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** ** முடித்து விடுங்கள்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** என் தொகுதி பிரச்சினையைப் பற்றிப் பேச வேண்டும். அடுத்து, இந்த அரசாங்கத்திலே வேலை செய்கின்ற அதிகாரிகளெல்லாம் சில நேரங்களிலே தவறுகள் செய்கிறார்கள் என்று கண்டு பிடிக்கிறோம். கண்டு பிடித்து அவர்கள்மீது வழக்கு போடுகிறோம். ஆனால் அந்த வழக்கு போட்டவுடன் என்ன ஆகிறது என்று சொன்னால், அந்த வழக்கு நீண்டுகொண்டே போய் விடுகிறது. அவர் ரிடையர் ஆகிப் போய் விடுகிறார் அல்லது இறந்து விடுகிறார். அதன் நிலை என்னவென்றே புரியவில்லை. எனவே, இதுபோன்று அரசாங்கத்திலே யாராவது அதிகாரிகள் தவறு செய்தால், அவர்கள்மீது காவல்துறை வழக்கு போடுமேயானால் ஒரு குறிப்பிட்ட கால வரையறையை நிர்ணயம் செய்து உருவாக்கி, இந்தத் தேதிக்குள் இந்தக் கேசை முடித்துவிட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். அதற்காகத் தனி நடவடிக்கையைக் காவல் துறை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னையைப் பொறுத்தவரைக்கும் ரியல் எஸ்டேட்பற்றித் தினம் பார்த்தால் விளம்பரம் வந்துகொண்டே இருக்கிறது. குறைந்த விலையில் நாங்கள் வீடு தருகிறோம் என்று சொல்லி விளம்பரம் தினம் வருவதைப் பார்க்கிறோம. பக்கம் பக்கமாக வருகிறது. என்னடா விளம்பரம் என்று போய்ப் பார்த்தால், போர்டுதான் போடப்பட்டிருக்கிறது, அங்கே போய் பாதிப்பேர் பணத்தைக் கொடுத்துவிட்டு, அட்வான்ஸ் கொடுத்துவிட்டு, இடமும் இல்லை, ஒன்றுமில்லை என்று திரும்பி வந்துவிடுகிறார்கள். ஆனால், சாதாரணமானவர்கள் தவறு செய்தால் காவல் துறை அவர்கள் மீது கிரைமிலே வழக்குகளைக் கடுமையாகப்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

போட்டு உள்ளே தள்ளி எல்லாம் செய்கிறது. ஆனால், இப்படி
யெல்லாம் எட்டு என்று சொல்லி விளம்பரம் செய்து, பொய்
விளம்பரத்தைக் கொடுத்து, போர்டு வைத்து இருப்பவன்மேலே
எந்த வழக்கும் போடுவதும் இல்லை, அதை நாகரீகமாக விட்டு
விடுகிறோம். எனவே அவர்கள் மீது White-Collar Crime of
Cheating என்ற அடிப்படையிலே வழக்குகளைப் பதிவு செய்து
விவரமாக விசாரிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், இந்தக் காவல்துறையைப் பொறுத்த
வரைக்கும் நான் பார்க்கிறேன், காவல்துறை ஏதோ தவறு செய்த
தைப்போல ஏதாவது தவறாகப் புகார் வந்து—மாண்புமிகு
உறுப்பினர் திரு. ரகுமான்கான் நம்முடைய விழுப்புரம் தொகுதி
யிலே நடைபெற்ற வளவனூர் சம்பவத்தை இங்கே சுட்டிக்காட்டி
னாரே, அதைப்போல தவறான செய்தியை வைத்துக்கொண்டு,
காவல் துறையைப்பற்றி, சட்டமன்றத்திலே சட்டமன்ற உறுப்பி
னர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் சொல்லுகின்றபொழுது,
விமர்சனம் செய்கின்றபொழுது, எதிர்க்கட்சியிலே உள்ளவர்களெல்
லாம் கேட்கிறார்கள் என்பதற்காக அரசாங்கத்திலே என்ன செய்
கிறோம் என்றால், ஒரு விசாரணைக் கமிஷன் அமைத்து விடுகி
றோம். ஆனால், காவல்துறைக்காக இந்தச் சட்டமன்றத்திலே
நாம் பேசுவது இல்லை. அவர்களுக்கு உரிய பாது
காப்பு கொடுத்தாக வேண்டும். சட்டமன்றத்திலே சட்டமன்ற
உறுப்பினர்களெல்லாம் காவல்துறைக்குப் பாதுகாப்பு கொடுத்தால்
தான், சமூகத்திலே சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாப்பதற்கு
ஒரு வாய்ப்பாக இருக்கும் என்று இந்த நேரத்திலே சொல்லி,
மக்களுடைய நண்பர்களாகத்தான் காவல் துறை இருக்க முடியும்.
(மணியடிக்கப்பட்டது) என்னுடைய தொகுதி பிரச்சினையைப்
பற்றி மட்டும் சொல்லி முடித்துவிடுகிறேன்.

சென்ற ஆண்டு நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர்
அவர்கள் என்னுடைய தொகுதிக்கு ஒரு நீயணைப்பு நிலையம்
அமைக்க தண்டராம்பட்டுக்கு—ஆணை பிறப்பித்தார்கள்.
ஆனால் இன்னும் அதனுடைய நிலை அது ஆணையாகவே இருக்
கிறது. எனவே, நான் புரட்சித் தலைவரவர்களைக் கேட்டுக்
கொள்வதெல்லாம், எங்கள் பகுதி மக்களெல்லாம் நீயணைப்பு



நிலையம் வந்ததாகத்தான் கருதிக்கொண்டிருக்கிறார்கள்.
இன்னும் வரவில்லை. அதற்கு வேண்டிய ஆயத்தமான வேலை
களைச் செய்து, இந்த ஆண்டாவது அவர்களுடைய திருக்கரத்
தாலே எங்களுடைய தண்டராம்பட்டிலே துவக்கி வைக்க வேண்டு
மென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு வாய்ப்பளித்த பேர
வைத் தலைவரவர்களுக்கு மீண்டும் ஒருமுறை நன்றி சொல்லி
என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**திரு. எஸ். ரெத்தினராஜ்:** தலைவரவர்களே, மாண்புமிகு
உறுப்பினர் திரு. வேலு அவர்கள் பேசுகிறபோது எஃப்.ஐ.ஆர்.
எழுதுவதற்கு முன்னாலே விசாரணைகளை—கற்பழிப்பு வழக்கு
களிலும், மாமியார் மருமகள் வழக்குகளிலும், வரதட்சிணை
வழக்குகளிலும், விசாரணை—நடத்த வேண்டும் என்று சொன்
னார்கள். நீங்கள் ஒரு வழக்கறிஞர். அப்படிப்பட்ட ஒரு
நிலைமையை வலியுறுத்தலாமா? எஃப்.ஐ.ஆர். என்று சொன்
னாலே, (First Information Report) அல்லவா? அவர்கள் சொல்
வதை ரிக்கார்டு செய்வதற்கு முன்பே விசாரணை செய்ய வேண்டு
மென்று திரு. வேலு அவர்கள் சொல்கிறார்களே.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** You can treat it as a
petition எஃப்.ஐ.ஆர். தேவை இல்லை.

***திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் தலைவரவர்களே, இங்கே
அமைச்சரவர்களால் முன் வைக்கப்பட்டிருக்கின்ற காவல்துறை
மற்றும் நீயணைப்புத் துறையின் ஆய்வுரையின்மீது இந்தியக்
கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாகச் சில கருத்துக்களைச் சொல்ல
விரும்புகிறேன். இங்கே வைக்கப்பட்டிருக்கிற தமிழ்நாடு காவல்
துறையினுடைய விவரங்களைப் பற்றிய குறிப்புக்கு 'ஆய்வுரை'
என்று பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. ஆய்வுரை என்பதற்கு
என்ன பொருள்? ஆய்வுரை என்று எந்தப் பொருளை
உணர்ந்து, உணர்ந்தவர்கள் பெயர் சூட்டியிருக்கிறார்கள் என்றே
எனக்குத் தெரியவில்லை. ஆய்வுரை என்று சொன்னால், அது
விருப்பு வெறுப்பற்ற நிலையில், பிரச்சினையின் முழுத் தன்மை [illegible]
[illegible]

காரியத்தோடு விமர்சனத்தை உள்ளடக்கியதாகவும்தான் ஆய்
வுரைகள் இருக்க வேண்டும். ஆனால் தமிழ்நாடு காவல்துறை
ஆய்வுரை என்று அரசினால் முன் வைக்கப்பட்டிருப்பது என்பது
விவரங்களின் தொகுப்பே தவிர, ஆய்வுரை அல்ல என்கிற
விமர்சனத்தை நான் முதலிலே தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அடுத்து, ஒரு விஷயத்தை நான் குறிப்பிட விரும்புகிறேன்.
சட்டம் ஒழுங்கைப்பற்றிப் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்கள்
குறிப்பிட்டிருக்கிறார்கள். சட்டம் ஒழுங்கு என்பது சட்ட
ஒழுங்குக்காக அல்ல. சட்டம் ஒழுங்கு என்பது மக்களுக்காகத்
தான்.

மக்களுக்காக சட்டம் ஒழுங்கு என்ற அடிப்படையில் இருந்து
சிந்தனை செய்து, செயல்படுத்த வேண்டும். சட்டம் ஒழுங்கை
வெறும் சட்டம் ஒழுங்கு பாதுகாப்பது என்ற நிலைக்கு நாம்
கீழே இறங்கி போவோமேயானால் பல்வேறு விபத்துக்கள்
நேரிடும் என்பதை இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய தேசியப் போலீஸ் கமிஷன் ரிப்போர்ட்
டிலே கூட குறிப்பிட்டிருப்பதை அமைச்சர் அவர்களுடைய கவ
னத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சட்டம் ஒழுங்கை
அமல்படுத்தும் அதிகாரிகளாக இருப்பவர்கள் தங்கள் அதிகா
ரத்தை துஷ்பிரயோகம் செய்யாமல் பாதுகாப்பதும், கடமைப்
பொறுப்பிலிருந்து வழுவாமல் இருப்பதும் அவர்களுக்குள்ள
தனியான சுயேச்சையான அதிகாரங்களைப் பயன்படுத்தும்
போது எந்த ஒரு குடிமகனையும் அது காயப்படுத்தாமல்,
எரிச்சல் ஊட்டாமல், வேண்டாத சர்ச்சையை அவர்களுக்கு உரு
வாக்காமல் பாதுகாப்பதே ஜனநாயகத்தில் நல்ல அறமாகும்
என்று போலீஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் குறிப்பிடப்பட்டிருக்
கிறது. அதை இங்கே நான் குறிப்பிட்டு சுட்டிக்காட்ட
விரும்புவது ஒரு ஜனநாயகத்தில் நல்ல அறம் என்று சொல்லுகிற
போது, தங்கள் அதிகாரங்களை தறிகெட்டதனத்தில் பயன்
படுத்துவது என்ற நிலை ஏற்படுகிறபோது அரசின் நோக்கத்தை,
நடைமுறையை மக்களுக்குத் தவறாகச் சித்தரிக்கப் பயன்





படுத்தும் நிலை ஏற்பட்டுவிடும். ஆகவேதான் இங்கே நான்
வலியுறுத்திச் சொல்ல விரும்புவது, இன்றைய தமிழ்நாட்டுக்
காவல்துறை நடவடிக்கையைப் பொறுத்தவரைக்கும் இந்தக்
கொள்கைக் குறிப்பில் பல்வேறு விஷயங்கள் சொல்லப்பட்டிருக்
கின்றன. மக்கள் நலனே பிரதானமாக இந்த மாநில அரசுக்கு
இருக்கிறது, மக்கள் நலனே முக்கியக் குறிக்கோளாக இருக்கிறது
என்று இந்த ஆய்வறிக்கையில் குறிப்பிட்டிருப்பதால் மக்கள்
நலன் இந்த காவல் துறையின் நடவடிக்கையால் எந்த அளவுக்குப்
பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் குறிப்பிட்டு குற்றச்சாட்
டாகச் சொல்லுகிறபோது காவல் துறையின் ஒட்டுமொத்த
அமைப்பே இத்தகைய நிலைக்கு இரையாகி இருக்கிறது என்று
குறிப்பிடவில்லை. ஆனால் காவல் துறையில் ஒரு குறிப்பிட்ட
பகுதி மீட்க முடியாத அளவுக்கு அழுகிப் போய்விட்டிருக்கிறது
என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். ஏதோ
போகிற போக்கிலே பொறுப்பற்ற முறையில் சொல்லிவிட்டு
போவதல்ல இது. அதற்குரிய காரண காரியங்களை எடுத்துச்
சொல்ல விரும்புகிறேன்.

இன்னொரு விஷயமும் இங்கே அரசினுடைய ஆய்வு அறிக்கை
யில் சொல்லப்பட்டிருக்கிறது. சமுதாயத்தின் தீய சக்திகளைக்
கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்து
அமைதி மற்றும் பாதுகாப்பு நிரம்பிய சூழ்நிலையை உருவாக்கிக்
கொடுப்பதிலும் காவல் துறையினர் சிறந்த வெற்றி பெற்றுள்ளனர்
என்று பெருமைப்படுத்துவதற்கு முற்றிலும் பொருத்தமான
சூழ்நிலை நடைமுறையில் இல்லை என்று சுட்டிக்காட்ட
விரும்புகிறேன். இதே தமிழ்நாட்டில் பல்வேறு பத்திரிகைகள்,
குறிப்பாக 'தினமலர்' பத்திரிகையில் சென்னை மாநகரிலும்
கோவை நகரிலும் ஆயிரக்கணக்கான ஜேப்படித் திருடர்கள்
சுதந்திரமாக உலாவுவதாகக் குறிப்பிட்டு கட்டுரை எழுதியிருக்கி
றார்கள். சென்னையில், தமிழ்நாட்டின் தலைநகரில், ஐயாயிரத்
திற்கு மேற்பட்ட ஜேப்படித் திருடர்கள் இருக்கிறார்கள் என்று
சொல்லியிருக்கிறது அல்லவா? அவர்களை வைத்து தமிழ்நாட்டுக்
காவல் துறைக்கு ஏதாவது வீரச்சக்கர விருது கொடுத்தாலும்

[திரு. கே. சுப்பராயன்] [1987 மே 4

கொடுக்கலாம். அந்த அளவுக்கு ஜேப்படித் திருடர்கள் இந்த சென்னை மாநகரில் பெருகியிருக்கிறார்கள். அவர்கள் போலீசாருடைய கண்களுக்குப் புலப்படவில்லையா? அவர்களைக் கண்டறியக்கூடிய நுட்பக் கருவிகள் இல்லையா? அவர்களைக் கண்டும் காணாததுபோல் விட்டு விட்டார்களா? என்ன காரணம் என்பதை அமைச்சரவர்கள் தெரிவிக்க வேண்டும்.

இன்னொன்றையும் இங்கே நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். சில குறிப்பிட்ட பேருந்துகளில் அமைச்சர்களே சென்றாலும்கூட ஜேப்படித் திருடர்களிடமிருந்து தப்பிச் செல்ல முடியாது. அந்தப் பேருந்துகளில் அமைச்சர்களே பயணம் செய்தால் கூட பாக்கெட் காலியாகிவிடும். இங்கே அந்த அளவுக்கு பாதுகாப்பற்ற நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, குற்றவாளிகள் பற்றி மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு பிரச்சினைகளைத் தீர்த்து அமைதியை நிலைநாட்டி, தமிழ்நாட்டு காவல்துறை முன்னேறி இருப்பதுபற்றி பெருமைப்படுகிறார்கள். அப்படிப் பெருமைப்படுவதற்கு எந்தவிதமான அடிப்படையும் இல்லை என்று குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் இனப் பூசல் அதிகமின்றி பொதுவாக அமைதி காத்து வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. பொதுவாக என்று சொல்வதற்கு என்ன பொருள் என்று தெரியவில்லை. பொதுவாக அமைதி காத்து வருகிறது என்று சொல்லுகிறபோது அந்த செய்திக்குக் கீழே தமிழ்நாட்டில் இனக் கலவரங்கள் எங்கெங்கே நடைபெறுகின்றன என்ற விவரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அப்படியானால் இது முன்னுக்குப் பின் முரண் இல்லையா? தமிழ்நாட்டில் இனக் கலவரங்கள் நடைபெறுகின்றன; இதுவரை இல்லாத அளவுக்கு நடைபெறுகின்றன என்பது முழு உண்மை அல்லவா? அதுபற்றியும் இங்கே குறிப்பிட வேண்டும். இங்கே சில அமைச்சர்களுக்கு குறிப்பிட விரும்புகிறேன். ஆட்சியிலே இருக்கிறோம் என்பதாலே அதிகாரிகளுடைய எல்லா நடவடிக்கைகளையும் நியாயப்படுத்துவது என்று நீங்கள் அணுகிவிடுவீர்களானால் அது தவறாகப் போய்விடும். கடந்தகால வரலாற்றை தயவுசெய்து திரும்பிப் பார்க்க வேண்டும். இன்றைக்கு தமிழக



1987 மே 4] [திரு. கே. சுப்பராயன்]

(பிற்பகல் 1-40)

அமைச்சரவையிலே நான் பெரிதும் மதிக்கிற பல அமைச்சர்கள் இருக்கிறார்கள். அவர்கள் மீது தமிழக காவல் துறையினர் கடந்த காலங்களில் பொய் வழக்கு போடவில்லையா? 1972-லே இதே தமிழ்நாட்டில் அண்ணா தி.மு.க. தோற்றுவிக்கப்பட்ட போது போலீசார் அண்ணா தி.மு.க. வினரோடு யுத்தம் நடத்தவில்லையா? இது குறித்து நீங்கள் குற்றம் சாட்டவில்லையா? பல்வேறு வழக்குகளில் அவர்களைச் சிக்கவைக்கவில்லையா? அன்றைக்கு நாம் என்ன சொன்னோம்? நாங்களும் உங்களோடு இருந்து சொன்னோம் என்பதை மறந்துவிடவில்லை. அன்றைக்கு போலீசார் பொய் வழக்கு போடுகிறார்கள் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட பல பொதுக் கூட்டங்களில் சொல்லவில்லையா? ஆனால் நீங்கள் இன்றைக்கு ஆட்சிக்கு வந்திருக்கிற நிலைமையில் நான் வேறு ஒன்றும் கேட்க விரும்பவில்லை. அந்தப் பொய் வழக்குகளை நியாயப்படுத்துவது என்று நீங்கள் முடிவெடுத்து விட்டால்—மங்கை சூதகம் அடைந்து விட்டால் கங்கைக்குப் போகலாம், கங்கையே சூதகம் அடைந்துவிட்டால் என்ன செய்வது?—எனவே அரசாங்கமே இதை நியாயப்படுத்தத் தொடங்கிவிட்டால் . . . .

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** தலைவர் அவர்களே, கங்கையைச் சுத்தப்படுத்த ஆரம்பித்திருக்கிறார்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி. அது சுத்தப்படுத்தப்படுகிறதா இல்லையா என்பது பற்றி வாரணாசிக்குப் போய்விட்டு வந்தவர்களுக்குத் தெரியும்; அதற்குள் நான் போக விரும்பவில்லை.

ஜாதீய, இன உணர்வு மோதல்களைப் பொறுத்தவரையில் இங்கே சொல்லப்பட்டிருக்கிற விஷயங்களில் நான் சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன். தமிழ்நாட்டில் ஜாதீய, மதக் கலவரங்கள் தங்குதடை இல்லாமல் நடக்கின்றன. நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். இந்த ஜாதி, மத, இனக் கலவரங்களைத் தடுப்பதில் இந்த மாநில அரசின் ஆக்கப்பூர்வமான செயல்திட்டம், ஆலோசனைகள் என்ன? ஜாதீய அமைப்பில் ஆளுகிற கட்சி யாராவது பங்கு பெறவோ தடை செய்யப்படுமா? அதிகாரிகள்

அத்தகைய ஜாதீய விழாக்களிலும், ஜாதீய அமைப்புக்களிலும் பங்கு பெறுவதையாவது தடை செய்ய ஏற்பாடு செய்யப்படுமா? ஜாதீய அமைப்புக்கள் ஊக்குவிக்கப்படுவது தடுக்கப்படும் வரையில் ஜாதீய விஷச் செடிகளுக்கு உரம் போடுவது தடுக்கப்படுகிற வரையில் இத்தகைய நிலை நீடித்துக் கொண்டுதான் இருக்கும். எனவே அதுபற்றியும் மாநில அரசு அக்கறையோடு சிந்திக்க வேண்டும் என்று நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

இதிலே சில சாதனை விவரங்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. பல்வேறு விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஏன், ஒரு விஷயத்தைப் பற்றி மட்டும் குறிப்பிடவில்லை? தமிழ்நாட்டில் இதுவரையில் போலீஸ் அத்துமீறல்கள் நிகழவே இல்லையா? காவல் துறையினர் அட்சர சுத்தமாக நடந்து கொள்கிறார்களா? தமிழ்நாடு போலீசார் முற்றிலும் சட்டத்திற்கு பொருத்தமான முறையில், நூலில் நடை போடுவதைப்போல நடை போட்டுக் கொண்டிருக்கிறார்களா? இல்லை என்பதைப் பொறுத்தவரையில் கைப் புண்ணுக்குக் கண்ணாடி வேண்டியதில்லை என்று சொல்ல விரும்புகிறேன். இது தலாம்பர உண்மை. ஆகவே ஒன்றிரண்டு சம்பவங்களையாவது சொல்ல வேண்டாமா? நாமே, நடந்தவற்றை மறைத்து அத்தகைய நிலை இந்த காவல் துறையில் நடக்கவில்லை என்ற வகையில் நியாயப்படுத்தலாமா? நீங்கள் எதிர்க்கட்சி என்று ஏற்படுகிறபோது என்ன ஆகும்? அப்போது இதே போலீஸ் தடி ஆளுகிற கட்சிக்குச் சாதகமாக எதிர்க்கட்சிக்கு எதிராகச் சுழற்றப்படும். அத்தகைய விபத்து ஏற்படும் அல்லவா? ஆகை ஆட்சியில் இருக்கிறபோதே தடுக்க இந்த ஆட்சியிலாவது ஒருசில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் நான் இதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இன்னொரு விஷயம். நான் சொன்னால் கூட கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து சொல்கிறார்கள் என்று சொல்வார்கள்; அல்லது சோவியத் யூனியன் பற்றிச் சொன்னால்கூட அது கம்யூனிஸ்ட் நாடு என்று கூடச் சொல்வார்கள். ஆனால் லண்டன் மாநகரத்தைச் சேர்ந்த போலீஸ் கமிஷனர் ராபர்ட்மார்க் ஒன்றைக் குறிப்பிட்டிருக்கிறார், போலீஸ் கையிலே உள்ள ஆயுதங்கள், முற்றிலுமாக மக்களின் நலனுக்காகச் செயல்படுத்துகிறோம் என்ற உணர்வும் மக்களின் நம்பிக்கையும் ஆதரவும்தானே தவிர துப்பாக்கிகளும் தோட்டக்களும் அல்ல என்று லண்டன் போலீஸ் கமிஷனர் சொல்கிறார்.





நம்மைப் பொறுத்தவரையில் விடுதலை பெற்றுவிட்டோமே தவிர இன்னும் பிரிட்டிஷ்காரர்களுடைய பழைய பழக்கவழக்கங்களிலிருந்தும் மரபுகளிலிருந்தும், சிந்தனையிலிருந்தும், செயல்முறைகளிலிருந்தும் முற்றிலும் விடுபடவில்லை. இதைப் பொறுத்தவரையில் போலீசாரின் நிலையே அதைத் தெளிவாகக் காட்டுகிறது. சுதந்திரப் போராட்டத்தை ஒடுக்க பயிற்றுவிக்கப்பட்ட இந்த காவல்துறை சுதந்திரம் பெற்றதற்குப் பிறகு, சட்டத்தின்முன் எல்லோரும் சமம் என்று சொல்லப்படுகிற அரசியல் சட்டம் இருக்கிற இந்த நிலையில் குடிமக்களைத் துன்புறுத்துவதும், சட்டவிரோதமாக சித்திரவதை செய்வதும் தொடர்கிறது என்று நான் சொல்லவில்லை. உச்ச நீதிமன்றம் கூட தமிழ்நாட்டின் காவல் துறையைக் கண்டித்து இருக்கிறது. தமிழ்நாட்டின் காவல்துறையினுடைய கஸ்டடியில் நடைபெறுகிற பல்வேறு இறப்புக்களைப் பற்றிக் கடுமையாகக் குற்றம் சாட்டியிருக்கிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். அது பற்றியும் அவர்கள் சிந்திக்க வேண்டும்.

சில சம்பவங்களை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இது போகிறபோக்கில் சொல்லப்படுகிற குற்றச்சாட்டுகள் அல்ல. கோவை மாவட்டத்தில் திருப்பூர் சட்டமன்றத் தொகுதிக்குள் உள்ள பாமசிவம்பாளையத்தில் கடந்த 2—12—1985 அன்று மாலை 6 மணிக்கு பூவாத்தாள் என்ற கருப்பாத்தாள், 26 வயதுடைய பெண்மணி கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டு அவளுடைய நகைகள் கொள்ளை அடிக்கப்பட்டு இருக்கின்றன. இது குறித்து அவளுடைய சகோதரன் பெருமாநல்லூர் காவல் நிலையத்திலே புகார் கொடுத்தார். ஆனால் நடந்தது என்ன? இன்னார் கொலை செய்தார் என்று பெயர் சொல்லி புகார் கொடுத்தும் நடவடிக்கை இல்லை. அதாவது கண்ணுசாமி என்ற கருப்பசாமி—பாமசிவம்பாளையம், மற்றும் குமார், முருங்கப்பாளையம்—திருப்பூரைச் சேர்ந்தவர்கள்—ஆகிய இரண்டு பேரும்தான் என்னுடைய

தங்கையை கற்பழித்துக் கொன்றுவிட்டு நகையைக் கொள்ளை அடித்துச் சென்றார்கள் என்று குற்றம் சாட்டியிருக்கிறார். இன் றைக்கு வரையில் அந்தக் குற்றவாளி மீது நடவடிக்கை இல்லை. அதுமட்டுமல்ல கற்பழித்து, கொலை செய்து அவர் அணிந்திருந்த 7 பவுன் தாலிக்கொடி, ஒரு பவுன் காதுக்கம்மல் ஆகியவை கொள்ளை அடிக்கப்பட்டு இன்றைக்கு அவினாசித் தாலுக்காவை சேர்ந்த கோதபாளையம் மொட்டையப்ப கவுண்டர் வசம் அடகில் வைக்கப்பட்டிருக்கிறது என்று பொறுப்போடு போலீ சிலே புகார் கொடுத்தும் கூட அந்த போலீஸ் நடவடிக்கை எடுக்க வில்லை. நான் அரசாங்கத்தைக் குற்றம் சாட்டவில்லை; அரசு தான் காரணம் என்று நான் பொறுப்பற்ற முறையில் குற்றம் சாட்டவில்லை—ஆனால் அந்த அதிகாரிகள் இப்படிச் செய்கிறார்களே, கற்பழித்து கொள்ளை அடிக்கப்பட்ட நகை இன்ன இடத்தில் இருக்கிறது, கொலை செய்தவர் இன்னார் என்று சொன்னதற்கு பிறகு, கொடுமையிலும் கொடுமை என்ன தெரியுமா? கொல்லப்பட்ட சகோதரியின் சகோதரனை அவினாசியின் இன்ஸ்பெக்டர் ஆக இருந்த மாரப்பன் என்பவர் கடுமையாக மிரட்டியிருக்கிறார், நீ இப்படி எழுதக் கூடாது என்று சொல்லியிருக்கிறார் என்றால் என்ன அர்த்தம்? இதை அரசு கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அடுத்து மிக முக்கியமான விஷயம். கோவை மாவட்டத்தில் வால்பாறையில் நடைபெற்றிருக்கிற சம்பவம். 24—8—86 அன்று சுபைதா என்று சொல்லப்பட்ட பெண் காணாமல் போய்விடுகி றார். சில நாட்களுக்குப் பின்னர் 29—8—1986 அன்று காப்முடி எஸ்டேட் அருகில் ஒரு பெண் புதைக்கப்பட்டிருப்பதாக காப்முடி எஸ்டேட் போலீஸ் நிலையத்தில் பெண் தொழிலாளர்கள் புகார் கொடுத்த பிறகு அது தோண்டி எடுக்கப்பட்டது. அதைப் பரிசீலித்த மருத்துவர், அந்த மருத்துவ பரிசோதனையிலேயே என்ன சொல்லியிருக்கிறார் என்றால், 7, 8 பேர் சேர்ந்து அந்தப் பெண்ணை கற்பழித்துக் கொன்றிருக்கிறார்கள் என்று சொல்லி யிருக்கிறார். அந்தப் பெண்ணை மேலும் டெஸ்ட் செய்து 24 மில்லி கிராம் செமன் இருந்ததாக கூட ரிப்போர்ட் செய்திருக் கிறார் என்று அறிகிறேன். அப்படிச் சொல்லப்பட்டு மருத்துவர்





சான்றுதழ் வழங்கப்பட்ட அந்த கொலையில் யாரும் கைது செய்யப்படாமல் இருந்ததோடு சந்தேகத்தின் பேரில் ஒருவரை போலீஸ் நிலையத்திற்கு கொண்டு வந்து விசாரித்தபோது அவர் ஒரு முக்கியமான தகவலைக் குறிப்பிட்டிருக்கிறார். வால் பாறையைச் சேர்ந்த மாவு மில் அதிபர் ஆண்டியப்பனுடைய மகன் பீட்டர் என்பவர்தான் அவர். அவர் வாக்குமூலம் ஒன்றைப் போலீஸ் நிலையத்திலேயே கொடுத்திருக்கிறார். 24—8—1986 ஆம் தேதி இரவு வால்பாறையில் ஒரு பார்ட்டி நடந்தது. அந்தப் பார்ட்டியில் சில நண்பர்கள் வந்தார்கள். அதில் சுபைதா என்ற பெண்ணும் இருந்தாள். அதிலே என்னை முதலில் அவளை கற்பழி என்று சொன்னார்கள். நான் மறுத்து விட்டேன்; அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று எனக்குத் தெரியாது என்று அவர் போலீஸ் நிலையத்திலேயே வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். அந்த வாக்குமூலம் கொடுத்தவரை வீட்டுக்கு அனுப்பிவிட் டார்கள். அதனடிப்படையில் உண்மைக் குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை. இது நடந்து ஒரு மாதத்திற்குப் பின்னர் வேறு இடத்தில் நடைபெற்ற கொலையில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஷண்முகம், ராமய்யன் என்கிற இருவரை கைது செய்து இன்றைக்கு அவர்கள் சுபைதா கொலை வழக்கிலே இணைக்கப்பட்டுவிட்டார்கள். ஆகவே இது குறித்து ஒரு முழுமையான நீதி விசாரணை கட்டாயம் நடத்தப்பட வேண்டும். அப்போதுதான் முழு உண்மையும் வெளியே வரும் என்பதோடு வால்பாறை இன்ஸ்பெக்டர் சுந்தரம் இந்த விஷயத்தில் எவ்வளவு ஒழுங்கீனமாக நடந்துகொண்டு இருக்கி றார்கள் என்பதை குறிப்பாகச் சுட்டிக் காட்டுவதோடு சுபைதா சம்பந்தப்பட்ட கொலை விஷயங்கள் குறித்து மக்கள் புகார் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் புகார் மீது இன்றுவரையில் நடவடிக்கை இல்லை. அதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதையும் இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து ஒரு விஷயத்தை நான் இங்கே குறிப்பிட விரும்பு கிறேன். ராஜபாளையத்திலே இப்போது நடைபெற்றுக் கொண் டிருக்கின்ற பிரச்சினை. நான் மாநில அரசு கவனிக்க வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். ராஜபாளையத்திலே நடந்தது

பற்றி டி.ஐ.ஜி. ஜூனியர் விகடனில் ஒரு பேட்டி கொடுத்திருக்கிறார்கள். "அது ஜாதிய மோதல் அல்ல, இரண்டு ரௌடி கும்பல்களுக்கு இடையிலே நடைபெற்ற மோதல்" என்று பேட்டி கொடுத்திருக்கிறார்கள். நான் கேட்கிறேன். குண்டர்கள் சட்டம் இருக்கிறதா இல்லையா? அவர்கள் குண்டர்கள், ரௌடிகள் என்று டி.ஐ.ஜி.யே ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார்களே, அந்த ரௌடிகள் சுதந்திரமாக ராஜபாளையத்திலே உலா வருகிறார்கள். பொது மக்களை சுதந்திரமாக வெட்டிப் போடுகிறார்கள். படுகொலை செய்கிறார்களே அவர்களை குண்டாஸ் ஆக்டின் கீழ் பிடிக்க மாட்டார்களா? பிடிப்பது இல்லை. பலபேர் சேர்ந்து அவர்களுக்கு ஆதரவு அளிக்கிறார்கள்.

அங்கே நடைபெற்றிருக்கிற அந்தச் சம்பவம், குண்டர்களுடைய தாக்குதல் ஜாதிய சண்டை என்று சாயம் அடிக்கப்பட்டு வேறு பக்கம் திசை திருப்பப்பட்டிருக்கிறது. இந்த ராஜபாளையம் பிரச்சினையைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கக்கூடிய காவல்துறையினுடைய அனுசரணையான முற்றிலும் இசைவான ஆதரவோடுதான் அந்த ரௌடிக் கும்பல் வாழ்ந்து கொண்டிருக்கிறது. அந்த ரௌடிக் கும்பலை யாரும் எதுவும் பேச முடியாது. பேசினால் தாக்குவார்கள்; பேசினால் வெட்டப்படுவார்கள். இதற்கு ஒரே ஒரு உதாரணம். ராஜபாளையம் கோர்ட்டிலே ஒரு வழக்கு இருக்கிறது. நீதிபதியின் முன்னால் ஒரு ரௌடியை நிறுத்தியிருக்கிறார்கள். ரௌடி சொல்லுகிறார் என்னை ஆஸ்பத்திரிக்கு அனுப்புங்கள் என்று. மாஜிஸ்ட்டிரேட் உனக்கு எந்தக் காயமும் இல்லையே எதற்காக ஆஸ்பத்திரிக்கு அனுப்ப வேண்டும் என்று கேட்கிறார். அனுப்பவில்லை என்றால் உன்னை வெளியிலே வந்து வெட்டுவேன் என்று கோர்ட்டிலேயே ஒரு ரௌடி சொல்லுகிறார் . . . .

**திரு. வி. பாலகிருஷ்ணன்:** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள் சொல்கிற அந்த ரௌடியை ஏற்கெனவே குண்டாஸ் சட்டத்தின் கீழ் கைது செய்திருக்கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.



(பிற்பகல் 1-50)

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்லிக்கொள்ள விரும்புவது எவ்வளவு சுதந்திரமாக ரவுடிகள் நடமாடுகிறார்கள் என்பது பற்றி, ஒரு நீதிபதிக்கே அந்த நிலையென்றால், சாதாரண பிரஜைகளின் கதி என்ன என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

* * * *

* * * *

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இது எப்படி சரியாக இருக்கும்? பலமுறை சொன்னாலும் கேட்க மாட்டேன் என்கிறீர்கள். ஒரு நிகழ்ச்சியைச் சொன்னீர்கள், அனுமதித்தேன்.

* * *

என்ற பகுதியை நீக்கிவிட உத்தரவிடுகிறேன். ஸ்பெசிபிக்காகச் சொன்னால் சர்க்காருக்கும் பிரயோஜனம், உங்களுக்கும் பிரயோஜனம்.

**மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்:** துணைத் தலைவர் அவர்களே, தனிப்பட்ட •வழக்குகளைப் பற்றி பேரவையில் பேசி காலத்தை எடுத்துக் கொள்வதைவிட பொதுவாக நாட்டில் இருக்கிற நிலைமை பற்றியும், காவல் துறை பற்றியும் பேசினால் பயனுள்ளதாக இருக்கும். தனிப்பட்ட வழக்குகளைப் பற்றி பேசினால் எப்படி பதில் சொல்வது என்று தெரியவில்லை. தனிப்பட்டவர்களுடைய பெயரைச் சொல்லி எஸ்.ஐ. இப்படி செய்தார், இன்ஸ்பெக்டர் இப்படி செய்தார் என்று சொல்வது, நடவடிக்கை எடுப்பதற்கே தடங்கலாக குறுக்கே நின்று விடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[1987 மே 4

**திரு. கே. சுப்பராயன்:** ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு தான் பதம் பார்க்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படி சொல்ல முடியாது. ஒரு நிகழ்ச்சியை சொல்லிவிட்டு ஓரேயடியாக போலீஸ் ஃபோர்சே இப்படி இருக்கிறது என்று திட்டுவதை அனுமதிக்க முடியாது.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலே சொன்னேன். ஒட்டுமொத்தமாக நான் காவல் துறையை குற்றம் சாட்டவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அப்படி சொல்லி விட்டு இந்தத் துறையே மோசம், அழுகிப் போச்சு, புழுத்துப் போச்சு என்று சொல்லுகிறீர்கள். அது சரியாக வராது. ஒரு நாள் போலீஸ்காரர்கள் எல்லாம் லீவு போட்டால் என்னவாகும்? உங்களுக்கும் கஷ்டம், எனக்கும் கஷ்டம். ஸ்பெசிபிக்காக சொன்னால் அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வாய்ப்பிருக்கும். சொல்வதை ஸ்பெசிபிக்காகச் சொல்லுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** துணைத்தலைவர் அவர்களே, இராஜ பாளையத்தில் குறிப்பாக சுட்டிக்காட்ட விரும்புவது, இத்தகைய ரவுடிகள் சுதந்திரமாக நடப்பது என்பது பொறுப்புள்ள தொழிலதிபர்களும், அரசியல் கட்சிகளைச் சேர்ந்த ஒருசிலரும் தொடர்ந்து ஆதரவளிப்பதன் விளைவுதான்; அதனால்தான் ரவுடிகள் இப்படி சுதந்திரமாக செயல்படுகிறார்கள் என்று சொல்லி தஞ்சையில் ஒரே ஒரு சம்பவத்தை குறிப்பிட விரும்புகிறேன்.

தஞ்சை மாவட்டம் மன்னார்குடியில் ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவருடைய மகன் கல்யாணசுந்தரம் என்பவரை யாரோ சிலருடைய தூண்டுதல் பெயரால் காவல்நிலையத்தில் வைத்து அடித்து அவருடைய கால் முறிக்கப்பட்டிருக்கிறது. கால் முறிக்கப்பட்டு இதையொட்டி நடந்த தொடர்ச்சியான இயக்கத்தின் காரணமாக ஒருசில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. நான் சுட்டிக்காட்ட விரும்புவது, இத்தகைய சம்பவங்களிலிருந்து படிப்பினை பெற்று அரசாங்கம் திருந்த முயன்றால்



[திரு. கே. சுப்பராயன்] [1987 மே 4

முயலலாம் அல்லது நியாயப்படுத்த முயற்சித்தால் எனக்கு ஆட்சேபனை இல்லை. பொதுமக்களுக்குப் பாதுகாப்பற்ற நிலையில் காவல்துறை இயங்குமானால், பொதுமக்கள் தாயற்ற அநாதைகளாக ஆவார்கள். ஆகவே தாயற்ற அநாதைகளாக தமிழகம் இருப்பதை எதிர்க் கட்சிகளால் ஒருபோதும் ஒப்புக் கொள்ள இயலாது என்பதைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன்.

**திரு. ஏ. வே. கி. ச. இளங்கோவன்:** துணைத் தலைவர் அவர்களே, இன்று நிதியமைச்சர் அவர்களால் சபையின் முன்னால் வைக்கப்பட்டிருக்கிற மானியக்கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன். பல காலமாக மிகச் சிறப்பாகச் செயல்பட்டு வருகிற நம்முடைய காவல்துறை இன்றைய நிலையில் அந்த நல்ல பெயருக்கு ஏற்புடையதாக இருக்கிறதா என்று ஆய்வு செய்து கொள்வதில் தவறு எதுவுமில்லையென்றே கருதுகிறேன்.

இந்த நடப்பாண்டில் நடைபெற்ற சில நிகழ்ச்சிகளை இந்தக் காவல் துறை கையாண்டவிதமும், புலனாய்வு செய்தவிதமும் கண்டிப்பாக அவர்களுக்கு மேலும் சிறப்பினைச் சேர்க்கும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். குறிப்பாக அரியலூரில் நடந்த ரெயில் விபத்தைப் பற்றி இங்கே கூறவேண்டும். சில வன்முறையாளர்கள் பாலத்திற்கு வெடி குண்டு வைத்து அந்தப் பாலத்தைப் பிளந்து அந்த வழியாக வந்த ரெயிலைக் கவிழ்த்து, சில அப்பாவி உயிர்களையெல்லாம் கொன்றார்கள். அந்தக் கொலைகாரர்களை மிகக் குறுகிய நாட்களில் இந்த நாட்டிற்கு அடையாளம் காட்டிய இந்தக் காவல்துறையை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதைப்போல சமீபத்தில் தமிழகத்தில் சில போராட்டங்கள் நடந்தன. அந்தப் போராட்டங்கள் மூலம் கைதான சில தலைவர்கள் தாங்கள் கைதாவதன் மூலம் மக்களிடையே மீண்டும் செல்வாக்கு கிடைக்குமென்ற நிலையில் எண்ணி, நினைத்தது ஒன்று. நடந்தது ஒன்று என்ற நிலையில்தான் விரக்தியடைந்த நிலையில்தான் வெடிகுண்டு சம்பவங்கள் தலைகாட்டின. இந்த

[திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்] [1987 மே 4

வெடிகுண்டு சம்பவங்களை முளையிலேயே கிள்ளியெறிந்து, இங்கே நடைபெற்ற நிகழ்ச்சிகளால் எத்தனை பெரிய அரசியல சக்திகள பின் நின்று முடுக்கி விட்டாலும் அதைக் கண்டுபிடிக்கிற ஆற்றல் தமிழகக் காவல் துறைக்கு உண்டு என்று நிரூபித்துக் காட்டிய பிறகுதான் அந்தப் பதவி போனவர்கள், மக்களிடையே செல்வாக்கற்றுப் போனவர்கள் நிறுத்திக் கொண்டார்கள் என்பதைக் கூறிக்கொள்வதில் நான் சிறிதுகூடத் தயங்க மாட்டேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. சமீபத்திலே மே 1 ஆம் தேதி சேலத்திலே பாரதப் பிரதமர், எங்களது அருமைத் தலைவர், திரு. ராஜீவ் காந்தி அவர்கள் வந்தபோது, சேலத்திலே மக்கள் கடலென, மிகப் பெரிய அளவிலே திரண்ட நேரத்திலே, எந்தவிதமான அசம்பாவிதமும் நடைபெறாமல் மிக அழகாக, மிக நேர்த்தியாக அந்த நிகழ்ச்சியை இந்தக் காவல்துறையினர் நடத்திக் காட்டிய விதத்திற்காக அவர்களுக்குக் கண்டிப்பாக நன்றியைச் சொல்வதோடு இவ்வளவு பெரிய பாதுகாப்பைச் செய்கின்ற, அருமையாக, மிகத் திறமையாகச் செய்கின்ற இந்தக் காவல்துறையினர், ஏன் சிறு சிறு விஷயங்களில் மட்டும் தங்களுடைய திறமையைக் காட்டத் தவறிவிடுகிறார்கள் என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

உதாரணமாக நான் சொல்வது, மிக அற்பமான விஷயமாகக் கூட இருக்கலாம். ஆனால் பல ஆண்டுக்காலமாக, கடந்த 2, 3 ஆண்டுக்காலமாக இந்தச் சபையிலே பேசப்பட்டு வருகிற ஒரு விஷயத்தை நான் கண்டிப்பாகச் சொல்லியாக வேண்டும். இங்கே சென்ட்ரல் நிலையத்திலே வருகின்ற பிரயாணிகளை இந்த ஆட்டோக்காரர்கள் ஒழுங்காக ஏற்றிச் செல்வதில்லை. அதோடு மட்டுமல்ல, மீட்டருக்கு மேல் அதிகமாகப் பணம் வாங்குகிறார்கள். பெரிய பெரிய விஷயங்களைப் பற்றி பேசும்போது, இந்தச் சின்ன விஷயம் மிகவும் அற்பமான விஷயமாகக் கூட தெரியலாம். ஆனால் நடைமுறையில் ஆயிரக்கணக்கான பிரயாணிகள் இதனால் சங்கடப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சொல்லியாக வேண்டும். அங்கே வெள்ளை உடை அணிந்த காவல்துறையினர் இருந்தாலும் கூட, வருகின்ற பிரயாணிகளுக்கு ஆட்டோக்களை ஒழுங்குபடுத்துவதுபோல்



1987 மே 4] [திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்]

ஒரு பாவனையைச் செய்தாலும்கூட—ஏதோ ஒருசில ஆட்டோக்கள் ஒழுங்காகச் சென்று கொண்டு இருக்கின்றனவே தவிர—பெரும்பாலான ஆட்டோக்கள் அப்படியலல. எனவே அங்கேயிருக்கின்ற அந்த டிரைவர்களுடைய சாம்ராஜ்யத்தை அருள்கூர்ந்து நீங்கள் உடைக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போலவே, கள்ளச் சாராயத்தைப் பற்றியும் நான் இங்கே கூற விரும்புகிறேன். ஒரு இடத்திலே 4 லட்சம், 5 லட்சம் என்றெல்லாம் மக்கள் கூடும்போது, அதைக் கட்டுப்படுத்தக்கூடிய திறன் படைத்த நீங்கள், கள்ளச் சாராயத்தை ஏன் ஒழிக்க முடியவில்லை என்று நான் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் மூலமாக இந்த அரசைக் கேட்க விரும்புகிறேன். ஏன் என்றால், நல்ல உள்ளத்தோடு ஏழை எளியவர்கள் குடிக்கக்கூடாது என்ற நல்ல உள்ளத்தோடு மாண்புமிகு முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் கள்ளச் சாராயத்தை ஒழித்தது, வெறும் செயலாகததான் சென்றுவிட்டதே தவிர, உண்மையான பயன் இதனால ஏழை எளியவர்களுக்குச் செல்ல வில்லை. ஆகவே, அருள் கூர்ந்து, காவல்துறையினர் இதை மிகக் கடுமையாக மனதிலே வைத்துக் கொண்டு, இந்தக் குற்றங்களைச் செய்கின்றவர்கள் எப்பேர்ப்பட்ட பெரியவர்களாக இருந்தாலும் சரி—அந்தஸ்திலேயும் சரி, சமுதாயத்திலேயும் சரி, செல்வாக்கிலேயும் சரி, அரசியலிலேயும் சரி—அவர்கள் எவ்வளவு பெரியவர்களாக இருந்தாலும், அவர்களைக் கண்டிப்பாகக் கைது செய்து உரிய தண்டனையை வாங்கித் தர வேண்டும் என்று நான் கேட்டுக் கொளகிறேன்.

இன்னொன்று, இந்தக் காவல்துறையைப் பொறுத்தவரையில் அதில் பணியாற்றுகிற உயர் அதிகாரிகளுடைய பதவியின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதில் எந்தவிதமான அதிகப்படியான நன்மைகளும் கண்டிப்பாக விளைந்துவிடாது என்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாறாக, டி.எஸ்.பி. ரேங்கிலிருந்து, வரிசையாக Inspector, SubInspector, Head-Constable, Constabie Grade I and Grade II என்று காவலர்கள் வரையில் இருக்கின்ற அந்தப் பதவிகளை நீங்கள் அதிகமான எண்ணிக்கைக்கு உயர்த்தினால்தான், நடைபெறுகின்ற குற்றங்களுக்கு ஏற்ப அவர்கள் நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை நான் கூறிக்கொள்ள

விரும்புகிறேன். இப்போது என்ன நடக்கிறது என்றால், எங்கே
குற்றங்கள் நடந்தாலும் சரி, எங்கே கலவரங்கள் நடந்தாலும்
சரி, அங்கேயுள்ள காவல் நிலையத்திற்குச் செல்வோமேயானால்,
அங்கே உட்கார்ந்து கொண்டிருக்கிற ஹெட்-கான்ஸ்டபிளாகட்டும்,
அல்லது ரைட்டராகட்டும், என்ன சொல்கிறார்கள் என்றால்,
எங்களிடம் மேன்-பவர் இல்லை, ஃபோர்ஸ் இல்லை, அவர்கள்
வந்த பிறகு நாங்கள் வருகிறோம் என்று சொல்கிறார்கள்.
எப்போது ஹெட்-குவார்ட்டர்சிலிருந்து ஃபோர்சும், மேன்-பவரும்
வந்து, எப்போது இந்தக் கலகக்காரர்களை, குற்றம் செய்பவர்
களைப் பிடிப்பது என்பதை உணர்ந்து பார்க்க வேண்டும்.
ஆகவே கண்டிப்பாக இந்தக் காவல் துறையிலே, மேலேயிருந்து
எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்
கொள்கிறேன்.

அதைப்போல, காவல்துறையை நாம் நவீனப்படுத்தியாக
வேண்டும். இன்னும் சொல்லப்போனால் They should be well-
equipped and well-armed என்பதை நான் வலியுறுத்திச்
சொல்ல விரும்புகிறேன். இன்னும் ஹைதர் அலி காலத்து
துப்பாக்கிக் கட்டைகளை வைத்துக்கொண்டு, எத்தனை காலம்
நாம் இவைகளைக் கடைப்பிடிக்கப் போகிறோம் என்பதை
நீங்கள் உணர்ந்து பார்க்கவேண்டும். ஏன் என்றால், தமிழகத்தில்
புதிதாக வெடிகுண்டுகள் குடியேறியிருக்கின்ற இந்தக் கால
கட்டத்தில், நாமும் அவர்களைச் சமாளிப்பதற்காக, Well-
equipped ஆகவும், well-armed ஆகவும் கண்டிப்பாக இருக்க
வேண்டும். அதோடு மட்டுமல்ல. வெடிகுண்டு மூலம் அப்பாவி
மக்களைக் கொலை செய்பவர்களை, மத்திய, மாநில அரசுகளின்
பொதுச் சொத்துக்களுக்கு நாசம் விளைவிப்பவர்களை
தயவுதாட்சண்யம் இல்லாமல், அவர்கள் மீது கடுமையான
நடவடிக்கை எடுத்து, அவர்களை நசுக்கவேண்டும் என்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் காவல்துறையை நவீனப்படுத்துவதற்காக, 1981-லே
யிருந்து 5 ஆண்டுக்காலத்திற்கு, 1986 வரையில், மத்திய அரசு
3½ கோடி ரூபாய்க்கு மேல் உதவி செய்திருக்கிறது. அதோடு





மாநில அரசும் 3¼ கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, நவீனப்
படுத்துவதற்கான வழிவகையைச் செய்திருக்கிறது.

(பிற்பகல் 2-00)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அவையின்
அனுமதியுடன் அலுவல் நேரம் சிறிது நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் :** இந்த நிதி கண்டிப்பாகப்
போதாது. இன்னும் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்து இதை
விநியோகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள
விரும்புகிறேன்.

அதைப்போலத்தான், ஓய்வு பெறுகின்ற காவலர்களுடைய
நிலை மிகவும் மோசமாக இருக்கிறது. இன்னும் சொல்லப்போ
னால் மிகவும் கேவலமாக இருக்கிறது. தங்கள் வாழ்நாள் முழு
வதும் அரசுக்கும் மக்களுக்கும் சேவை செய்த அவர்கள் ஓய்வு
பெற்றவுடனே, அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய பென்ஷனைப்
பார்ப்பீர்களேயானால் மிகவும் பற்றாக்குறையாக இருக்கிறது.
ஆகவே, அதைப் போக்கிக்கொள்வதற்காக, தங்களுடைய வயிற்றை
நிரப்பிக் கொள்வதற்காக அவர்கள் சின்னச் சின்ன வேலைகளைச்
செய்கின்ற நிலையைப் பார்க்கின்றபோது மிகவும் கஷ்ட
மாக இருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியிலே திரு. அருள் அவர்கள்
பணியிலே இருந்த காலத்திலே இப்படி ஓய்வு பெறுகின்ற காவலர்
களுக்கு பென்ஷனுக்குப் பதிலாக 100 மாத ஊதியத்தை ஒட்டு
மொத்தமாகக் கொடுக்கவேண்டுமென்ற ஒரு திட்டத்தை வைத்தி
ருந்தார்கள். அதை ஏன் இந்த அரசு செயல்படுத்தக்கூடாது
என்பதை நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தது எல்லாக் காவல் நிலையங்களிலும் நடைபெறுகின்ற
யதார்த்தமான ஒரு உண்மையை நான் சொல்லிக் கொள்ள
விரும்புகிறேன். காவல் நிலையங்களில் உபயோகப்படுத்த
வதற்கு ஸ்டேசனரிகளைத் தாராளமாக அனுமதிக்க வேண்டும்.
தன்னுடைய குறையைச் சொல்வதற்கு ஒருவர் ஸ்டேஷனுக்குச்
சென்றால், முதலிலே போலீஸ்காரர்கள் கேட்பது ஒரு குயர்
பேப்பரைக் கொண்டு வா என்பது. எதற்கு இதைச் சொல்கிறேன்
என்றால், காவல் நிலையங்களிலே போதுமான ஸ்டேஷனரி

இல்லை என்பதை நான் சொல்ல விரும்புகிறேன். ஆகவே தாராளமான அளவுக்கு எல்லா காவல் நிலையங்களுக்கும் ஸ்டேஷனரி தந்தாக வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, வாகன வசதிகளை இப்போது அதிகமாக, தேவைக்கு ஏற்ப கண்டிப்பாக நாம் செய்து தரவேண்டும். ஏனென்றால் குற்றம் நடந்த இடத்திற்கு அவர்கள் செல்ல வேண்டுமென்றால், யார் குற்றம் செய்யப்பட்டவராக இருக்கிறாரோ அல்லது யார் வந்து குற்றத்தைச் சொல்கிறாரோ அவர்களைக் காவல்துறையினர் கார் கொண்டு வா என்றும், டாக்சியை எடுத்துக்கொண்டு வா என்றும் சொல்கிறார்கள். ஆகவே இந்த நிலையெல்லாம் மாற வேண்டுமென்பதோடு அங்கே காவல்துறையில் பணிபுரிகின்ற அதிகாரிகளுக்கு, குறிப்பாக, டி.எஸ்.பி. பதவியிலே இருக்கின்ற அதிகாரிகளுக்கு வாகன வசதி செய்து தரும்போது மாதத்திற்கு 115 லிட்டர் பெட்ரோல்தான் உபயோகப்படுத்தப்படவேண்டுமென்று அரசு ஆணையொன்று இருக்கிறது. குறைந்தபட்சம் அவர்களுக்கு 300 லிட்டர் பெட்ரோலாவது இருந்தால்தான் அவர்கள் தேவைக்குட்பட்ட இடங்களுக்கு, குற்றங்கள் நடைபெறும் இடங்களுக்கு உடனுக்குடனே சென்று, குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதை நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, தேசிய நெடுஞ்சாலைகளில் நடைபெறுகின்ற வழிப்பறிக் கொள்ளைகள் நாளுக்குநாள் அதிகமாகிக் கொண்டிருக்கின்றன என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். 1985-ல் இத்தகைய குற்றங்கள் 415 நடைபெற்றன. ஆனால் 1986-ல் 446 ஆக இது உயர்ந்து இருக்கிறது. ஆகவே இதைக் கட்டுப்படுத்துவதற்கு 'ஹைவேஸ் பெட்ரோல் ஸ்குவாட்' ஒன்றைக் கண்டிப்பாக அமைக்கவேண்டும். இன்னும் சொல்லப்போனால் அந்த ஹைவேஸ் பெட்ரோல் ஸ்குவாடிலே செல்லுகின்றவர்களுக்கு நாம் கண்டிப்பாக மெஷின்-கன்களை வழங்கவேண்டுமென்று இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதைப்போல இந்த 'ஸ்குவாடிலே' ஹெலிகாப்டர் விங்' ஒன்றையும் கண்டிப்பாக ஏற்படுத்தியாக வேண்டும். இது சமீபத்திலே விரைவாக நடைபெறுவதற்கு சாத்தியமில்லை என்றாலும்கூட ஒரு





மனதிலே வைத்து நாம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தாக வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு, கடைசியாக, டி.ஐ.ஜி. ஆப் போலீஸ் என்று இரண்டு மூன்று மாவட்டங்களுக்கு ஒருவர் இருக்கிறார். அவர்களுக்கு அதிகாரங்கள் அதிகமாக வழங்கப்படவேண்டும். ஏனென்றால், சின்னச் சின்னக் காரியங்களுக்குக்கூட சென்னைக்குத் தொடர்பு கொண்டு இருக்கின்றவர்களின் ஆணையின் பேரில்தான் செயல்படக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. அதையும் கண்டிப்பாக மாற்றி ஆகவேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். என்னுடைய தொகுதியில், சத்தியமங்கலம், பங்களாபுதூர் காவல் நிலையங்களில் காவலர் மற்றும் ஆய்வாளர்கள் குடியிருப்புகள் கட்டித் தரப்பட வேண்டும். அதோடு பங்களாபுதூர் காவல் நிலையத்தில் ஒரு காம்பௌண்ட் வாலையும் கட்டித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் சத்தியமங்கலம் தொகுதியில் தாளவாடி மலைப் பிரதேசத்தில் புறநகர் காவல் நிலையமான ஆசனூர் காவல் நிலையத்தை 'பக்கா' காவல் நிலையமாக ஆக்குவதோடு அந்தக் காவல் நிலையத்திற்கு உடனடியாக ஒரு ஜீப் வசதியையும் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, அதற்கு அடுத்தாற்போல், எனது தொகுதியில் கடமலைக்குன்று மலைப் பிரதேசத்தில், கடம்பூரிலே ஒரு காவல் நிலையத்தையும் கண்டிப்பாக ஏற்படுத்த வேண்டும். இது கடந்த 10 ஆண்டுகளாக இருந்து வருகின்ற கோரிக்கை, அதை இந்த ஆண்டாவது கண்டிப்பாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு சின்ன விஷயம்தான், ஈரோடு, கருங்கல்பாளையம் என்பது ஊருக்கு மையத்தில் இருக்கும் ஒரு பகுதி, அந்தப் பகுதியிலே காவல் நிலையம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு ஏறத்தாழ 10, 15 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இன்றுவரை அந்தக் காவல் நிலையத்துக்குத் தொலைபேசி இல்லை. இதைப்பற்றி பல தடவை எழுதியும்கூட தொலைபேசி வைப்பதற்கு நிதி நிலைமை சரியில்லை என்று சொல்கிறார்கள். அதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். மாறாக இந்த மாதிரி சின்னச் சின்ன விஷயங்களில் கூட இந்த அரசு இவ்வளவு மெத்தனப் போக்கோடு நடந்துகொள்ளுவது சரியல்ல என்பதை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன்] [1987 மே 4

கடைசியாக, செஞ்சியில் காவலர்களுக்கு என்று 23 வீடுகள் இருக்கின்றன. அந்த வீடுகள் இன்று விழுமோ அல்லது நாளை விழுமோ என்ற நிலையில் இருக்கின்றன. அதை மாற்றி விரைவில் புதிய வீடுகளைக் கட்டித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். செஞ்சி தாலுக்கா ஹெட்குவார்ட்டர்ஸ் காவல் நிலையத்தில் கைதிகளை வைக்க ஒரு லாக் அப்பை உருவாக்கித் தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு காவல் நிலையத்திலே Lantern and Van தேவை. வேன் இல்லாததால் உடனடியாக நடவடிக்கை எடுக்க முடியவில்லை. இவைகள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. முருகானந்தம் அவர்கள் கோரிக்கைகள். அவைகளையும் செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (5–5–1987) காலை 10-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 2-06 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

90. தமிழ்ப் பல்கலைக்கழக இணை வேந்தரால் மூன்று உறுப்பினர்களை ஆட்சிப் பேரவைக்கும், ஒரு உறுப்பினரை ஆட்சிக் குழுவிற்கும் நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 25–6–1986 ஆம் நாளிட்ட 47541/என்.யு./86-2 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

91. தமிழ்ப் பல்கலைக்கழக வேந்தரால் ஆட்சிப் பேரவைக்கு ஐந்து உறுப்பினர்களை நியமிப்பது குறித்து கல்வித் துறையின் 30—6—1986 ஆம் நாளிட்ட 52776/என். யு. 2/86-1 ஆம் எண் கடிதத்தில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]



1987 மே 4]

92. பேராசிரியர் எஸ். அகஸ்தியலிங்கம் அவர்களை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமனம் செய்வது குறித்து கல்வித் துறையின் 4-12-1986 ஆம் நாளிட்ட 1958 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1982 ஆம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1982) 49 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

93. 1981-82 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பதினொறாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.] (தமிழ், ஆங்கிலம்).

94. 1982-83 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பன்னிரெண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).] (தமிழ், ஆங்கிலம்).

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

210. தமிழ்நாடு காவல்துறை குறித்த ஆய்வுரை, 1986—87 (தமிழ், ஆங்கிலம்).

211. கோரிக்கை எண். 16—தமிழ்நாடு இயனைப்புத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1987–88 (தமிழ், ஆங்கிலம்).

212. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கை.

## இணைப்பு—I

(342-ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண். 580க்கான விடையைக் காண்க.)

| | | வழங்கப்பட்டுள்ள | | |
|---|---|---|---|---|
| | | மொத்தத் தொகை. | முதல் தவணை. | இரண்டாம் தவணை. |
| | | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| ஆ. | 1984–85 | | | |
| 1. | மாமல்லபுரத்தில் நீர் விளையாட்டுகளை மேம்படுத்துதல். | 6.39 | 5.00 | 0.75 |
| 2. | மாமல்லபுரத்தில் நிலத்தினை அழகு படுத்துதல் (Land scaping) | (பணி முடிக்கப்பட்டு விட்டது.) 15.32 | 5.00 | 5.00 |
| | 1985–86 | | | |
| 3. | திருக்கழுக்குன்றத்தில் பெருவழி வசதிகள் செய்தல். | 3.92 | 1.96 | |
| 4. | திருத்தணியில் பெருவழி வசதிகள் செய்தல். | 3.92 | 1.96 | .. |
| 5. | கன்னியாகுமரியில் 8 கடற்கரை குடில்கள் கட்டுதல். | 13.36 | 10.00 | .. |
| 6. | காஞ்சிபுரத்தில் "யாத்திரி நிவாஸ்" எனும் தங்குமிடம் கட்டுதல். | 34.00 | 5.00 | .. |
| 7. | இராமேஸ்வரத்தில் தங்குமிட வசதியுடன் கூடிய சுற்றுலா வரவேற்பு மையம் கட்டுதல். | 18.45 | 7.00 | . |
| 8. | உதகை ஏரிக்குக் கூடுதல் படகுகள் வாங்குதல். | 4.14 | 3.60 | .. |
| 9. | பழவேற்காடு ஏரியில் படகு விடும் வசதிகள் செய்தல். | 2.85 | 2.50 | .. |
| 10. | சிதம்பரத்தில் சுற்றுலா வசதிகள் செய்தல். | 7.86 | 4.00 | .. |
| 11. | திருச்சிராப்பள்ளி மலைக் கோட்டையினை ஒளி விளக்குகளால் அலங்கரித்தல். | 5.25 | 4.725 | .. |
| 12. | காஞ்சிபுரத்தில் பல்லவபுர சுற்றுலா மையம் அமைத்தல். | 20.00 | 5.00 | .. |
| 13. | குற்றாலத்தில் உணவு விடுதி கட்டுதல். | 5.44 | 2.00 | .. |
| 14. | "டிரெக்கிங்" உபகரணங்கள் வாங்க. | 4.655 | 4.1895 | .. |
| 15. | முதுமலை வனவிலங்குகள் சரணாலயத்திற்கு இரண்டு சிறிய ஊர்திகள் வாங்குதல். | 2.5237 | 1.26185 | .. |
| 16. | பிச்சாவரத்தில் உணவு விடுதி வளாகம் கட்டுதல். | 5.91 | 2.00 | .. |
| | மொத்தம் .. | 153.9887 | 63.19635 | 5.75 |



## இணைப்பு—II.

(352 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 583-க்கான விடையைக் காண்க.)

(அ) கலப்பு மணம் செய்துகொள்ளும் தம்பதியர்களுக்கு கீழ்க்காணும் சலுகைகள் வழங்கப்படுகின்றன :—

1. தம்பதியரின் ஆண்டு வருவாய் ரூ. 6,000 அல்லது அதற்குக் குறைவாய் இருந்தால், தம்பதியரின் திருமணச் செலவிற்கென ரூ. 300 ரொக்கமாக அளிக்கப்பட்டு வருகின்றது.

2. 1978-ம் ஆண்டு செப்டம்பர் 18 முதல் கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதியருக்கு பாராட்டுச் சான்றிதழ் வழங்குவதுடன், 14 காரட் தங்கத்தில் செய்த 8 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் வழங்க ஆணை வழங்கப்பட்டது. 1979–80 முதல் 1983-84 ஆம் ஆண்டு வரை தகுதி வாய்ந்த தம்பதியர்களுக்குத் தங்கப் பதக்கங்கள் வழங்க தங்க நகைகள் செய்யும்

நிறுவனங்கள் 14 காரட்டால் ஆன தங்கப்பதக்கங்கள் செய்ய தற்சமயம் முன்வராததால் 22 காரட்டால் ஆன தங்கப்பதக்கங்கள் வழங்குவது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

3. தம்பதியரின் இணைந்த ஆண்டு வருவாய் ரூ. 6,000 அல்லது அதற்குக் குறைவாய் இருந்தால், அத்தம்பதியர்களின் இணைந்த பெயரில் தேசிய சேமிப்புப் பத்திரமாக ரூ. 4,000 ஆறு ஆண்டுகளுக்கு முதலீடு செய்யப்படும். ஆறாம் ஆண்டின் முடிவில் வட்டியுடன் கூடிய தொகையை அத்தம்பதியினர் இருவரும் பிரியாதிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

4. சிறு தொழில்களுக்கான கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் சிறு தொழில்கள் தொடங்குவதற்கு ஆதிதிராவிடர் வகுப்பைச் சேர்ந்த தம்பதியருக்கு வட்டியில்லாக் கடன் வழங்கப்படுகின்றது.

5. சென்னையைத் தவிர மற்ற இடங்களில் வசிக்கும் தம்பதியினருக்கு அவர்களுக்கென சொந்தமாக மனை/வீடு இல்லாமல் இருப்பின், 3 சென்ட் பரப்புள்ள வீட்டு மனை ஒப்படை செய்யப்படுகின்றது.

6. சென்னையில் வசிக்கும் தம்பதியினருக்கு தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், குடிசைப்பகுதி மாற்று வாரியம் மூலமாக கைத்திறன் பணியாளர்களுக்கான மனை/வீடு இவற்றினை தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ் வாங்குவதற்கென ரூ. 1200 முன் பணமாக (அதாவது முதல் தவணைத் தொகையாக) செலுத்தும் பொருட்டு மொத்த மானியமாக வழங்கப்படுகின்றது.

7. மாதம் ரூ. 250-க்குக் குறைந்த வருமானமுள்ள கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு தவணைக் கொள்முதல் திட்டத்தின் கீழ், ஒவ்வோராண்டும் 10 வீடுகளைத் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியம் ஒதுக்கீடு செய்கிறது.

8. கலப்புத் திருமணம் செய்து கொண்ட தம்பதியினருக்குப் பிறக்கும் குழந்தைகள் அப்பெற்றோர்கள் அளிக்கின்ற உறுதிமொழிக்கு ஏற்ப தந்தையின் சாதியைச் சேர்ந்தவர்களாகவோ அல்லது தாயின் சாதியைச் சேர்ந்தவர்களாகவோ கருதப்படுவர். ஒரு குழந்தை தொடர்பாக அளிக்கப்படும் உறுதிமொழி இத்தம்பதியினரின் எல்லாக் குழந்தைகளுக்கும் பொருந்தும்.



9. கிறித்துவ மதத்திற்கு மாறிய ஆதி திராவிட மக்களுக்கும் 1976-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ந் தேதி முதல் இத்திட்டம் பொருந்துமாறு செய்யப்பட்டது.

10. கலப்புத் திருமணத் தம்பதியருக்குப் பிறந்த குழந்தைகளுக்கு எம்.பி.பி.எஸ். முதலாண்டு வகுப்பில் சேர 12 இடங்களும், இந்திய மருத்துவக் கல்லூரியில் சேர 2 இடங்களும், இந்திய மருத்துவப் பட்டய வகுப்பில் சேர ஓர் இடமும் பொறியியல் கல்லூரியில் சேர 5 இடங்களும் ஒதுக்கப்படுகின்றன.

(ஆ) வேலை வாய்ப்பகங்களில், கலப்புமணத் தம்பதியரில் யாரேனும் ஒருவர் ஆதிதிராவிடர் (அல்லது) பழங்குடியினராக இருந்தால் அத்தம்பதியருக்கு மட்டும் ஆதி திராவிடர் (மற்றும்) பழங்குடியினருக்கான இட ஒதுக்கீட்டில் தொகுதி 1 -ல் முதல் முதல் முன்னுரிமை அளிக்க ஆணை வழங்கப்பட்டுள்ளது.

## இணைப்பு—III.

(381 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாடு காவல் துறை.

### ஆய்வுரை.

1. ஒரு நாட்டின் வளர்ச்சியும், அதனுடைய மக்களின் முன்னேற்றமும், அந்த நாட்டில் நிலவி வரும் சூழ்நிலையைப் பெருமளவு பொறுத்துள்ளது. நாட்டு வளர்ச்சிக்கு அடிகோலும் வகையில் தகுந்த சூழ்நிலையை உருவாக்குவது அந்த நாட்டு அரசின் தலையாய பொறுப்பாக அமைகின்றது. பல ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் சட்டம், ஒழுங்கு போன்றவற்றைப் பாதுகாப்பது மட்டும் அரசினுடைய முக்கிய கடமையாக இருந்தது. அத்துடன் பொது நலனில் சிறிதளவு மட்டுமே ஈடுபாடு காட்டினால் போதுமெனவும் கருதப்பட்டு வந்தது. ஆனால் இன்றைய அரசு செயல்படும் முறைகளைப் பற்றிய தத்துவங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றில் பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இன்று மக்கள் நலனே அரசினுடைய முக்கிய குறிக்கோளாக விளங்குகிறது. மக்கள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு வழிவகை செய்யும் அளவுக்குத் தேவையான பொருளாதார அடிப்படையை உருவாக்குவதும் அரசினுடைய முக்கிய கடமையாக உள்ளது. பொருளாதார வளர்ச்சியைத்

தொடர்ந்து சமுதாயத்தில் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. புராதன சமுதாய மற்றும் பண்பாட்டுக் கோட்பாடுகள் விரைவாக பல மாறுதல்களைப் பெறுகின்றன. அதே நேரத்தில் இந்த மாறுதல்களில் சில மக்களுக்குத் தீமை விளைவிக்கக்கூடிய தாகவும் உள்ளன. பொருளாதார வளர்ச்சியும், தொழில் துறை முன்னேற்றமும் ஒன்றோடொன்று இணைந்து செல்கின்றன. இவை இரண்டும் புதிய சமூக நிலைகளை உருவாக்குகின்றன. பொருளாதார மற்றும் சமுதாய வளர்ச்சிப் பணியில் அரசு ஈடு பட்டிருக்கும் நிலையில் மக்களுடைய கருத்துக்கள், கோட்பாடு கள் போன்றவற்றில் பல சிக்கலான பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடுகிறது.

2. மக்கள் நல அரசு என்கின்ற கருத்து எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நம் நாட்டிலும் மைய மற்றும் மாநில அரசுகள் அளவில் ஏழை மக்களுக்கான முன்னேற்றத் திட்டங்கள் பெருமளவில் தீட்டப்பட்டு நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அதே நேரத்தில் இந்தத் திட்டங்களை அமுல்படுத்துவதாலேயே ஏற்படக்கூடிய மாறுபட்டு வரும் சமுதாயச் சூழலில் வரும் புதிய பிரச்சினைகளை எதிர் நோக்கியும் சமாளிக்கவும் வேண்டி யுள்ளது. சட்ட ஒழுங்கு நிலைகள் நல்ல முறையில் பராமரிக்கப் படவில்லை என்றால் மக்கள் தங்களுடைய வாழ்வின் தேவை களை அமைதியான முறையில் நிறைவேற்ற இயலாது. நாட்டினும் முன்னேற்றத்தைக் காண்பது அரிதாகிவிடும். தற்போதுள்ள சூழலில் பல மாற்றங்கள் விரைவாக நிகழ்ந்து வரும்போது சட்டம் மற்றும் ஒழுங்கினை நல்ல முறையில் பராமரித்தல் என்பது சிக்கல் நிறைந்த ஒன்றாகிறது. குறிப்பாக நம் நாட்டில் மிகச் சாதாரண பிரச்சினைகள் மீது சமுதாய மற்றும் இன அடிப்படையில் நெருக்கடிகள் உருவாக்கப்படுகின்றன. சமுதாயத் தில் நிலவி வரும் தீய சக்திகள் சாதாரண சம்பவங்களைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு வன்முறை நிகழ்ச்சிகளாக மாற்றிவிடுகின்றன.

3. சட்டம் மற்றும் ஒழுங்குப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் காவல் துறையினர் நெருக்கடி நிலவும் சூழ்நிலைகளில் மிகுந்த பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டியுள்ளது. எனவே காவலர்களின் பணி சிக்கல்கள் நிறைந்ததாக ஆகிவிட்டது.





4. காவல் துறையினர் குற்றங்கள் மற்றும் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். குற்றங்களின் தன்மைகளும், குற்றவாளிகளின் செயல்முறைகளும் மாறி வருகின்றன. சமுதாய நெறிகள் மாறிவரும் பொழுது குற்றங் களைப் பற்றிய மக்களின் எண்ணங்களும் மாறுபட்டு அமைகின்றன. குற்றங்களைச் செய்வது ஒரு தொழிலாகி வருகின்றது. முன்பு இருந்ததைப் போலன்றி தற்போது குற்ற வாளிகள் புதிய முறைகளையும், உத்திகளையும் கையாளு கின்றனர். எனவே, குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு அவர் களுடைய முறைகளைவிடச் சிறந்த, திறமை மிக்க தொழில் நுட்பமும், வசதிகளையும் காவல் துறை கொண்டிருக்க வேண்டி யுள்ளது.

5. தமிழ்நாடு காவல் துறை எல்லா வகைகளிலும் சிறந்த சாதனைகளைப் புரிந்த நீண்ட வரலாற்றினைப் பெற்ற பெருமை யைக் கொண்டுள்ளது. மக்களுக்குச் சிறந்த தொண்டினைப் புரிந்தும் தனது திறமையைப் பல்வாறு வெளிக்காட்டியும் தமிழ் நாடு காவல் துறை பல சாதனைகளைக் கடந்த காலத்தில் புரிந்துள்ளது. அன்றுபோல் இன்றும் தமிழ்நாடு காவல் துறை யினர் தங்களுடைய பொறுப்புகளை முற்றிலும் உணர்ந்தவர் களாக ஆர்வத்துடனும் சேவை மனப்பான்மையுடனும் தொடர்ந்து தங்களுடைய பணியினை நிறைவேற்றி வருகின்றார்கள். இம் மாநிலத்தில் அமைதி மற்றும் சுமுகமான சூழ்நிலையை உருவாக்குவதில் காவல் துறை பெரும் பங்கு கொண்டு தொடர்ந்து பணியாற்றி வருவதாலேயே தமிழகத்தில் பொருளாதார மற்றும் சமுதாயத் துறைகளில் சிறந்த பலன்களைக் காண முடிகின்றது.

6. ஆய்வாண்டில் தமிழகக் காவல் துறை பல முக்கிய சட்டம் மற்றும் ஒழுங்குப் பிரச்சினைகளை முன்நோக்குடனும், மிகத் திறமையாகவும் கையாண்டுள்ளது. சமுதாயத்தின் தீய சக்தி களைக் கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்து அமைதி மற்றும் பாதுகாப்பு நிரம்பிய சூழ்நிலையை உருவாக்கிக் கொடுப்பதிலும் காவல் துறையினர் சிறந்த வெற்றி பெற்றுள்ளனர். இனப் பிரச்சினைகள் தலைதூக்கும் போதெல்லாம் அந்தச் சூழ்நிலையை நன்கு உணர்ந்தவர்களாக காவல் துறையினர் பிரச்சினைகளை மிகுந்த பொறுப்புணர்ச்சி

யுடன் தீர்த்து அமைதியினை நிலைநாட்டி வருகின்றனர். அதே போல குற்ற நிகழ்வுகளிலும் காவல் துறையினர் திறமையுடனும், கடமை உணர்ச்சியுடனும் பணியாற்றி வருகின்றனர். அவர்களுடைய விழிப்புணர்ச்சி மற்றும் உறுதியுடன் பணியாற்றும் தன்மை பல சிக்கலான வழக்குகள் நல்ல முறையில் கையாளப் படுவதற்கு உதவி புரிந்துள்ளன. குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம், வரதட்சணைத் தடுப்புச் சட்டம் போன்ற சமுதாயச் சீர்திருத்தச் சட்டங்களை நல்ல முறையில் செயல்படுத்த காவல் துறையினர் பெரிதும் உதவி வருகின்றனர். அவர்கள் தங்களது பல்வேறு பணிகளைப் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் நிறைவேற்றி வருவதால் பொதுமக்கள் மற்றும் காவலர்களுக்கிடையே நிலவி வரும் உறவு மேலும் வலுப்படுத்தப்படுகிறது.

7. காவல் துறையினர் தங்களுடைய பெரும் பொறுப்புகளைச் சிறந்த முறையில் நிறைவேற்ற வழி வகை செய்யும் பொருட்டு, வேகமாகச் செல்வதற்கான வாகன வசதிகளையும், விரைந்து செயலாற்ற நல்ல செய்தித் தொடர்பு அமைப்பினையும், தமிழக அரசு, காவல் துறையினருக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. குற்றங்களைப் புலனாய்வு செய்வதில் அறிவியல் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கும், அன்றாட நிர்வாகத்தில் நவீன முறைகளைக் கையாளுவதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1986-87-ஆம் ஆண்டில் காவல் துறையைப் பற்றியும் அதனுடைய முக்கிய சாதனைகளைப் பற்றியும் பின்வரும் பத்திகளில் விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன.

8. சிறந்த முறையில் பயிற்சி பெற்ற பணியாளர்களும், அதிகார வரம்புகள் தெளிவான முறையில் ஏற்படுத்தப்பட்டுள்ள சிறந்த அமைப்பு முறையும் காவல் துறை நன்கு பணியாற்றுவதற்கு இன்றியமையாததாகும். பணியாளர் தொகுதியைப் பற்றியும் காவல் துறையினுடைய அமைப்பைப் பற்றியும் பகுதி 1-ல் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

9. காவல் துறையில் உள்ள செய்தித் தொடர்பு, வாகன வசதி ஆகியவை பற்றிய குறிப்புகள் பகுதி 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

10. காவல் துறையினரின் பணிப் பளுவினைக் குறைப்பதற்காகக் காவல் துறையில் பயன்படுத்தப்படும் கம்ப்யூட்டர், விரல் ரேகைப் பதிவுக் கூடம் போன்ற அறிவியல் சாதனங்களைப் பற்றிய குறிப்புகள் பகுதி 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன.



11. காவலர்கள் திறம்படப் பணியாற்றி சாதனை புரிய வேண்டும் என்றால் அவர்களுக்கு ஊக்கமளித்து பல நற்பணித் திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். காவலர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்தவும், பணியாற்றுகின்ற சூழ்நிலைகளை மேம்படுத்தவும் இவ்வரசு அவ்வப்போது புதுத் திட்டங்களைத் தீட்டி வருகின்றது. பகுதி 4-ல் இத்திட்டங்கள் பற்றிக் கூறப் பட்டுள்ளன.

12. பகுதி 5-ல் மைய அரசு அளித்துவரும் உதவி பற்றிய விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. 1986 ஆம் ஆண்டில் நிகழ்ந்த சட்டம், ஒழுங்கு மற்றும் குற்றம் தொடர்பான முக்கிய நிகழ்ச்சி களைப் பற்றிபகுதி 6-ல் உள்ள குறிப்புகள் விளக்குகின்;ன.

13. பொது மக்களின் நன்மதிப்பைப் பெறுவதிலும் மற்றும் அவர்களிடையே நல்லுறவை ஏற்படுத்திக்கொள்வதிலும் தமிழகக் காவல் துறையினரின் சிரிய முயற்சிகளைப் பகுதி 7 தெளிவு படுத்துகிறது. 1986-87-ஆம் ஆண்டில் நிறைவேற்றப்பட்டு வரும் பல்வேறு திட்டங்கள் பற்றிய விவரங்கள் பகுதி 8-ல் கொடுக்கப் பட்டுள்ளன. பின் இணைப்புகளில் சில புள்ளி விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

## பகுதி 1.

### அமைப்பும் பணியாளர் தொகுதியும்.

14. தமிழ்நாடு காவல் துறை, காவல் துறை இயக்குநரின் தலைமையின் கீழ் இயங்கி வருகிறது. இவர் சட்டம் ஒழுங்குப் பணி உட்பட, மொத்தமாக மாநிலத்தின் காவல் துறையின் நிருவாகப் பொறுப்பினையும் கவனித்து வருகிறார். காவல் துறை இயக்குநர் (குற்றப் புலனாய்வுத் துறை) அவர்களின் பொறுப்பில் நுண்ணறிவு, குற்றம், பாதுகாப்பு மற்றும் தொழில் நுட்பப் பிரிவுகள் இயங்கி வருகின்றன. காவல் துறை இயக்குநரின் கீழ் பணியாற்றும் காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (சட்டம் மற்றும் ஒழுங்கு) அன்றாட நிருவாகப் பணிகளையும், சட்டம் மற்றும் ஒழுங்கினை நிலை நாட்டும் பணியினையும் மேற்கொண் டுள்ளார். காவல் துறை இன்ஸ்பெக்டர்-ஜெனரல் (குற்றம்) மாநிலம் முழுவதும் உள்ள குற்ற வழக்குகளைத் துப்புத் துலக்கும் பணியினை மேற்கொண்டுள்ளார். காவல் துறை இன்ஸ்பெக்டர்

ஜெனரல் (வனத் துறை) வனவளத் திருட்டு சம்பந்தமான குற்றங்களைக் கண்டுபிடிக்கும் பணியினை மேற்கொண்டுள்ளார். காவல் துறை இன்ஸ்பெக்டர் ஜெனரல் (ஊர்க்காவல் படை) மாநிலத்திலுள்ள குடிமைப் பாதுகாப்பு மற்றும் ஊர்க் காவல் படை நிருவாகத்தினைக் கவனித்து வருகிறார்.

15. தமிழ்நாட்டிற்காக ஒதுக்கப்பட்ட இந்திய காவல் பணிப் பதவிகள் 160 ஆகும். இந்த ஆண்டில் இரண்டு இந்தியக் காவல் பணி அதிகாரிகள் பணியிலிருந்து ஓய்வு பெற்றனர். நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்தியக் காவல் பணி அதிகாரிகள் எவரும் இந்த ஆண்டு தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்படவில்லை. மாநில காவல் பணியிலுள்ள அதிகாரி ஒருவர் பதவி உயர்வு பெற்று தமிழ்நாட்டிற்கு ஒதுக்கப்பட்ட இந்திய காவல் பணிப் பதவியில் நியமிக்கப்பட்டார். 1986-ஆம் ஆண்டு காவல் துணைக் கண்காணிப்பாளர் நிலை-1 பதவிக்கு எவரும் நேரடியாக நியமிக்கப்படவில்லை.

16. 1987-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாடு காவல் துறையில் உள்ள காவல் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை 63,974 ஆகும். இது பற்றிய விவரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டில் மொத்தம் 3,252 காவல் நிருவாகப் பணியிடங்களும், 23 அமைச்சுப் பணியிடங்களும், வேறு சில பணியிடங்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளன இது பற்றிய விவரங்கள் இணைப்பு 2-ல் தரப்பட்டுள்ளன.

17. தமிழ்நாடு சேமக் காவல் படையின் 189 பிரிவுகளும், தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 9 அணிகளும் சட்டம் மற்றும் ஒழுங்கினைத் திறம்படப் பேணிக் காத்திட உள்ளூர் காவல் துறையினருக்கு உதவி வருகின்றனர். தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் 6-வது அணி இம்மாநில அரசுக்கு வெளியே மைய அரசின் கீழ் புதுடில்லியில் தொடர்ந்து அயற் பணியில் உள்ளது.

18. இம்மாநிலத்தில் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய நான்கு இடங்களில் உள்ள துப்பறியும் நாய்ப் படைகள் குற்றங்களைக் கண்டுபிடித்து காவல் துறையினருக்குத் துணை புரிவதில் சிறப்பான பணியினை ஆற்றி வருகின்றன. இவைகளின் பணி 1986-ஆம் ஆண்டு 628 வழக்குகளில் பயன்படுத்தப்பட்டு இவற்றில் 221 வழக்குகளில் அவை



பயன் உள்ளவையாக இருந்தன. இது தவிர வட ஆற்காடு, தென்னாற்காடு, சேலம், தஞ்சாவூர் (மேற்கு), இராமநாதபுரம் மற்றும் சிதம்பரனார் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நாய்ப் படை வீதம் ஆறு நாய்ப் படைப் பிரிவுகளை ஏற்படுத்த அரசு அனுமதியளித்துள்ளது.

19. மக்கள் கூட்டங்களைக் கட்டுப்படுத்துவதிலும், போக்குவரத்தினை ஒழுங்கு படுத்துவதிலும் குதிரைப் படை தனது பணியினைத் தொடர்ந்து திறமையாகச் செய்து வருகிறது. சென்னையிலுள்ள குதிரைப் படைப் பிரிவு 34 குதிரைகளுடன் செயல்படுகிறது. மதுரை, கோயம்புத்தூர் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிற்கும் 10 குதிரைகள் வீதம் மூன்று குதிரைப் படைப் பிரிவுகளை ஏற்படுத்த அரசு அனுமதி அளித்துள்ளது.

20. மைய அரசின் உதவியோடு சென்னை-திண்டுக்கல் தேசிய நெடுஞ்சாலையில் 10 போக்குவரத்து உதவி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவை நெடுஞ்சாலைகளின் அருகில் உள்ள அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்த காவல் நிலையங்களில் பணியாற்றி வருகின்றன. சாலை விபத்துக்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு முதல் உதவி செய்தல், தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுத்தல், சாலைத் தடைகளை அகற்றுதல், போக்குவரத்தினை மேற்பார்வையிடுதல் போன்ற பணியினைச் செய்வதோடு மட்டும் அல்லாமல் நெடுஞ்சாலையில் நிகழும் விபத்துகள் குறித்து அருகில் உள்ள காவல் நிலையங்களுக்கு உடனடியாக தகவல்களைத் தெரிவிப்பது இந்தப் போக்குவரத்து நிலையங்களின் தலையாய நோக்கமாகும்.

### மக்கள் குடியுரிமைச் சட்டத்தை அமுல்படுத்துதல்.

21. இதர இனத்தவர்களால் ஆதி திராவிடர் மக்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகள் மற்றும் தீண்டாமை ஆகியவற்றை ஒழிக்கும் நோக்கத்தைச் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காகக் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்தின் விதிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருவதில் அரசு தக்கிய கவனம் செலுத்தி வருகிறது.

22. ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும் ஒரு காவல் ஆய்வாளர், ஒரு சார்பு ஆய்வாளர், இரண்டு தலைமைக் காவலர்கள், இரண்டு இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் ஒரு ஜீப்பும் கொண்ட 23 நடமாடும் காவல் அணிகள், இந்தச் சட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்துவதற்காக 23 காவல் மாவட்டங்களில் பணியாற்றி வருகின்றன. இந்த நடமாடும் காவல் அணிகள் அந்தந்த மாவட்டக் காவல் கண்காணிப்பாளரின் நேரடி மேற்பார்வையில், மாவட்ட குற்றப் பதிவு வைப்பறைக் கூடக் காவல் துணைக் கண்காணிப்பாளரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு வருகின்றன. சென்னையைத் தலைமை இடமாகக் கொண்டுள்ள குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டத்திற்கான காவல் துறை துணைத் தலைவர், இச்சட்டம் திறம்படச் செயல்படுவதைக் கண்காணித்து வருகிறார். இது தவிர இச்சட்டத்தைச் செயல்படுத்துவதில் ஏற்படுகின்ற முன்னேற்றத்தைப் பற்றிய புள்ளி விவரங்களை அவ்வப்போது முறைப்படி கண்காணிக்க மாவட்டந்தோறும் (அண்ணா மற்றும் சிதம்பரனார் மாவட்டத்தைத் தவிர) ஒரு புள்ளியியல் ஆய்வாளர் வீதம் 21 புள்ளியியல் ஆய்வாளர்களும், மற்றும் ஒரு சார்பு ஆய்வாளர் என்ற அடிப்படையில் 23 காவல் சார்பு ஆய்வாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்டங்களில் மேற்கண்ட பணியாளர்களின் உதவியோடு ஒரு பொருளாதார நிபுணர் மற்றும் ஒரு சமூக இயல் வல்லுநர் அடங்கிய ஒரு ஆராய்ச்சி மற்றும் மதிப்பாய்வுப் பிரிவு, தீண்டாமை அதிகமாகத் தென்படும் இடங்களில் ஆய்வுகள் நடத்திக் குறைகளைக் களைவதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிக்கை அனுப்புகிறது. தனியாகத் தாழ்த்தப்பட்ட பிரிவினருக்கு குடிநீர், தெரு விளக்குகள், வீட்டுமனை, இடுகாட்டிற்கு செல்வதற்கான பாதை போன்ற அடிப்படை வசதிகளைச் செய்ய அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதற்காக மாவட்டங்களில் உள்ள குடியுரிமைப் பாதுகாப்புப் பிரிவுகள் மாவட்டங்களிலுள்ள அலுவலர்களுடன் நெருங்கி மாவட்டக் காவல் கண்காணிப்பாளரின் நேரடி மேற்பார்வையில், ஒத்துழைக்கின்றன.

23. நீதித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் ஒரு முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதி மற்றும் பணியாளர்கள் அடங்கிய நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் தஞ்சாவூர் மேற்கு மாவட்டத்தில் கும்பகோணம், திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும்



திருநெல்வேலி கட்டபொம்மன் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இத்தகைய சிறப்பு நீதிமன்றங்கள் செயல்படும் மேற்கூறிய நான்கு இடங்களிலும் நீதிமன்றப் பணிகள் அதிகமாக நிலுவையில் இருக்கின்ற தென்னாற்காடு, கோயம்புத்தூர் (ஊரகம்) மற்றும் அண்ணா ஆகிய மாவட்டங்களிலும், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு காவல் சார்பு ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர் மற்றும் ஒரு இரண்டாம் நிலைக் காவலர் ஆகியோர் அடங்கிய 7 வழக்குத் தொடுப்பு அணிகளும் பணியாற்றி வருகின்றன. 1986-ஆம் ஆண்டில் இவ்வழக்குத் தொடுப்பு அணிகள் 617 வழக்குகளைப் பதிவு செய்தன. மொத்தம் 59 வழக்குகள் தண்டனையில் முடிவடைந்தன.

### பெண் காவலர்கள்

24. தமிழ்நாடு காவல் துறையில் பெண் காவலர்களின் பணி பயன் நிறைந்ததாக உள்ளது. போக்குவரத்தினை ஒழுங்கு படுத்தல், பெண் கைதிகளைச் சோதனையிடல், இளம் குற்றவாளிகளைக் கைது செய்து நீதிமன்றங்களுக்குக் கொண்டு செல்லுதல் மற்றும் பொது மக்களுக்கு உதவி புரிதல் போன்ற பணிகளை இவர்கள் திறமையாகச் செய்து வருகின்றனர். தற்பொழுது தமிழ்நாடு காவல் துறையில் உள்ள பெண் காவலர் பிரிவில் 84 சார்பு ஆய்வாளர்கள், 79 தலைமைக் காவலர்கள் மற்றும் 690 காவலர்கள் உள்ளனர்.

### தேர்வும் பயிற்சியும்.

25. 1986 ஆம் ஆண்டு இரண்டாம் நிலைக் காவலர்கள் எவரும் தேர்வு செய்யப்படவில்லை. ஆயினும் 1985-ஆம் ஆண்டு இரண்டாம் நிலைக் காவலர்களுக்காக நடைபெற்ற தேர்வில் காத்திருப்போர் பட்டியலில் இடம் பெற்றிருந்த 1,095 பேர்கள் 15—9—1986 அன்று கோயம்புத்தூர் மற்றும் வேலூரிலுள்ள காவலர் பயிற்சி பள்ளிக்கு பயிற்சி பெறும் பொருட்டு அனுப்பப் பட்டனர். இவர்கள் தங்களது பயிற்சியினை 14—3—1987 அன்று நிறைவு செய்தனர்.

26. தமிழ்நாடு காவல் சார்நிலைப் பணி மற்றும் தமிழ்நாடு சிறப்புக் காவல் படை சார்நிலைப் பணியின் கீழ் பணியாற்ற தேவைப்படும் காவல் சார்பு ஆய்வாளர் மற்றும் சேமப்படை சார்பு ஆய்வாளர் தேர்வு பணி விரைவில் முடிக்கப்படும்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் சென்னையிலுள்ள காவலர் பயிற்சிக் கல்லூரி மற்றும் வேலூரிலுள்ள காவலர் பயிற்சிப் பள்ளி ஆகியவற்றில் ஓராண்டு தீவிர பயிற்சி பெறுவதற்காக அனுப்பப் படுவர்.

## பகுதி 2.

## செய்தித் தொடர்பு.

27. மனித உடலுக்கு மூளை எவ்வளவு இன்றியமையாததோ அதுபோல காவல் துறை அமைப்பிற்கு செய்தித் தொடர்பு அமைப்பு தேவையானது. மாநில செய்தித் தொடர்பு அமைப்பு முறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், மாநிலத்திலுள்ள அனைத்து காவல் நிலையங்களையும் மற்றும் ரேடியோ பொருத்தப்பட்ட அனைத்து வாகனங்களையும் மாநிலக் காவல் தலைமையகத்துடன் இணைத்து சிறப்பான மற்றும் விரைவான செய்தித் தொடர்பு வசதிகளை ஏற்படுத்தவகை செய்துள்ளன. இச்செய்தித் தொடர்பு அமைப்பின் மூலம் முக்கிய பிரமுகர்கள் வருகை, தேர்தல்கள் மற்றும் சட்ட ஒழுங்கை நிலை நாட்டல் போன்ற பொறுப்புமிக்க பணிகள் திறம்பட நிறை வேற்றப்பட்டு வருகின்றன.

28. அனைத்து மாவட்டத் தலைமையிடங்களும் மாநிலக் காவல் தலைமையகத்துடன் நுண்ணலை மீவுயர் அலை அல்லது அதி மீவுயர் அலை வானொலிச் சாதனங்களுடன் இணைக்கப் பட்டுள்ளன. இம்முறையின் வழியாக ஒலி மற்றும் தொலை யச்சுப் பொறி நேரடித் தொடர்பு வசதி செய்து தரப்பட்டுள்ளது.

29. தமிழ்நாட்டில் உள்ள 989 காவல் நிலையங்களில் 918 காவல் நிலையங்களும், 103 உட்கோட்டங்களில் 75 உட்கோட்டங்களும் மீவுயர் அலை பிணைப்புக் கருவிகள் மூலமாக மாவட்டத் தலைமையகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இவைகளும் மாநிலத் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளும் வகையில் இணைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் மாநிலத் தலைமையகத்தி லிருந்து எல்லாக் காவல் நிலையங்களுக்கும் உட்கோட்டங் களுக்கும் செய்தித் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள இயலும். இது தவிர தற்போது 959 காவல் நிலையங்களுக்கும், 164 புறக் காவல் நிலையங்களுக்கும் தொலை பேசி வசதி செய்து கொடுக்கப் பட்டுள்ளது.



30. காவல் துறையினை நவீன மயமாக்கும் திட்டத்தின் கீழ் மைய அரசு அளித்த நிதி உதவிகள் மற்றும் மாநில அரசின் நிதி ஆகியவற்றைக் கொண்டு 1,800 வாக்கி-டாக்கி கருவிகள் வாங்கப் பட்டு அவை மாவட்டங்களில் உள்ள பல்வேறு காவல் நிலையங்கள், தமிழ்நாடு சிறப்புக் காவல் படை, சென்னை நகரக் காவல் படை மற்றும் இருப்புப் பாதைக் காவல் படை ஆகிய வற்றில் பயன்படுத்தப்படுகின்றன. இது தவிர எல்காட் நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட கையில் எடுத்துக் செல்லக் கூடிய 324 கருவிகள் புறக்காவல் நிலையங்களின் உபயோகத் திற்காக வழங்கப்பட்டுள்ளன.

31. வானொலிச் செய்தித் தொடர்பை மேம்படுத்துவதற்காக ரூ. 120 லட்சம் செலவில் "பலவழி அதி மீவுயர் அலை" முறை துவக்கப்பட்டது. 1985—86-ல் வேலூர், நாகர்கோவில் தவிர்த்து பிறமாவட்டங்களிலுள்ள மீவுயர் அலைத் தொடர்புகள் அதிமீவுயர் அலைகளாக மாற்றப்பட்டுள்ளன. குடியாத்தம், தெற்குகள்ளிக்குளம் ஆகிய இடங்களில் கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்ட பின் வேலூர், நாகர்கோவில் ஆகிய இடங்களிலும் அதிமீவுயர் அலைத் தொடர்பு துவங்கப்பட்டுவிடும். சென்னை நுண்ணலைத் தொடர்பகத்தில் அமைக்கப்பட்டுள்ள 200 இணைப்புகள் கொண்ட மைக்ரோ தானியங்கித் தொடர்பு முறை
E.P. A. X.] வானொலித் தேவைகளுக்குப் பேருத வியாக இருந்து வருகிறது. மேலும், வேலூர், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய சரகத் தலைமையிடங்களில் நுண்ண லைத் தொடர்புத் திட்டத்திற்காக அரசு ரூ. 162 லட்சம் வழங்கி யுள்ளது. இத்திட்டத்திற்கான கருவிகள் ஏற்கெனவே பெறப் பட்டு காசியாபாத் பாரத் எலக்ட்ரானிக்ஸ் நிறுவனத்தினரின் மேற்பார்வையின் கீழ் நிறுவப்பட்டு வருகின்றன.

32. ஆய்வு ஆண்டில் ரூபாய் 220.98 இலட்சம் செலவில் காவல் துறையின் பல்வேறு பிரிவுகளுக்குத் தேவைப்படும் 277 மோட்டார் வாகனங்களை வாங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. காவல் துறையினரின் பணித்திறனை மேம்படுத்தும் வகையில் அவர்கள் பல இடங்களுக்கு விரைந்து சென்று செயல்படுவதற்காக ஒவ்வொரு ஆண்டும் அரசு காவல் துறைக்குத் தேவையான வாகனங்களின் எண்ணிக்கையைக் கூடுதலாக்கி வருகிறது.

பயனற்றதெனக் கழிக்கப்பட்ட வாகனங்களுக்குப் பதிலாக ரூபாய் 118.94 இலட்சம் செலவில் புதிய வாகனங்களை வாங்க அரசு அனுமதி அளித்துள்ளது. வாகனங்களை நல்ல முறையில் பராமரிப்பதற்காக அரசு ஆவடியில் ஏற்படுத்தியுள்ள பணி மனை சென்னை நகரக் காவல் படை மற்றும் தமிழ் நாடு சிறப்புக் காவல் படையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. இதே போன்று திருச்சிராப்பள்ளியில் ஒரு பணிமனை ஏற்படுத்துவதற்கு தேவையான கட்டிடங்கள் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணிமனைக்குத் தேவையான இயந்திரங்கள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் ஏற்கெனவே வாங்கப் பட்டுள்ளன.

## பகுதி 3.

### அறிவியல் சாதனங்கள்.

33. அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியலில் ஏற்பட்ட முன்னேற்றம் மற்றும் கம்ப்யூட்டர் கருவிகள் ஆகியவற்றின் உபயோகம் காரணமாக அனைத்துலகிலும் நிர்வாக முறைகள் வேகமாக நவீனமடைந்து வருகின்றன. தமிழ்நாடு காவல் துறை இதனை நன்கு பயன்படுத்திக் கொண்டு, குற்றங்கள் பற்றிய விவரங்கள் மற்றும் குற்றங்களைத் துப்புத் துலக்கல் போன்ற பணிகளில் புதிய உத்திகளைக் கையாண்டுள்ளது.

### கம்ப்யூட்டர் பிரிவு.

34. குற்றத் தடுப்புப் பணிகளிலும் மற்றும் அது தொடர்பான பணிகளிலும், அறிவியல் நுட்பங்களை முறையாகவும், கூடுதலாகவும் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் 1971 ஆம் ஆண்டு மாநில காவல் துறையை நவீனமாக்கும் மைய அரசின் திட்டத்தின்கீழ் மாநிலக் காவல் கம்ப்யூட்டர் பிரிவு துவக்கப் பட்டது. இதன் மூலம் வெகு தொலைவில் உள்ள காவல் துறை அதிகாரிகளுக்கும் குறைந்த நேரத்தில் விரல் ரேகை மற்றும் அது சம்பந்தமான வகைப்படுத்தப்பட்ட தகவல்களை அனுப்ப முடியும்.



35. காவல் துறையிலுள்ள கம்ப்யூட்டர் பிரிவு (1) சொத்து சம்பந்தப்பட்ட பிரிவுகளில் குற்றங்கள் மற்றும் குற்றவாளிகள் பற்றிய விவரம், (2) விரல் ரேகைப் பதிவுகளைக் கொண்டு முன்னாள் குற்றவாளிகள் பற்றிய விவரம் ஆகிய செய்திகளைச் சேகரித்து வைத்துக் கொள்வதில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு சேகரிக்கப்பட்ட செய்திகள் டெலிபிரிண்டர் வழியாக மாநிலத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. இதுவரை 1,45,000 குற்றவாளிகள் சம்பந்தப்பட்ட தகவல்கள் கம்ப்யூட்டரில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. கண்டு பிடிக்கப்படாத குற்ற வழக்குகளில் குற்ற முறைகளின் அடிப்படையில் சந்தேகப்படும் குற்றவாளிகள் பற்றிய பட்டியல் தயார் செய்யப்பட்டு 1986 ஆம் ஆண்டு இம்முறையின் வழியாக 15,553 தகவல்கள் மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டன. காவல் துறையில் பல்வேறு பணிகளில் பயன்படுத்தப்பட்ட மனித ஆற்றலைப் பற்றிய விவரங்கள் கணக்கிடப்பட்டு கம்ப்யூட்டரில் வகைப்படுத்தப்பட்டு, இதன் பயனாக கிடைக்கக்கூடிய தகவல் களை வைத்து மனித ஆற்றலை மேலும் சிறப்பாகப் பயன் படுத்த மேற்பார்வை அதிகாரிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

36. தற்போதைய நடைமுறைக்கேற்ப நிர்வாகத்தினை நடத்திச் செல்லும் வகையில் காவல் துறை பணியாளர் பற்றிய செய்திகளைக் கம்ப்யூட்டரில் வகைப்படுத்தும் வகையில் பல்வேறுபட்ட தகவல்களை சேகரிக்கும் பணியில் காவல் துறை கம்ப்யூட்டர் பிரிவு ஈடுபட்டு வருகிறது. இது தவிர மோட்டார் வாகனங்கள், சாலை விபத்துக்கள் மற்றும் இதுபோன்ற பிற செய்திகளைக் கம்ப்யூட்டரில் வகைப்படுத்தி வேகமாகச் செல்லும் வாகனங்களைக் கொண்டு குற்றம் செய்பவர்களையும், தவறான முறையில் வாகனங்களை ஓட்டிச் செல்பவர்களையும் கண்காணிக்கும் நோக்கத்துடன் கம்ப்யூட்டர் மூலமாகத் தகவல் சேகரிப்பதற்காக ஒரு திட்டம் தயார் செய்யப் பட்டு வருகிறது. பெரிய நகரங்களில் சாலைப் போக்குவரத்து குறித்த தகவல்களை வகைப்படுத்துவதின் மூலம், எதிர்காலத்தில் போக்குவரத்துத் திட்டங்களை ஏற்படுத்தும்போது இந்த விவரங்கள் பயனுள்ளவையாக அமையும்.

37. மேலும் தற்போதைய டி.டி.சி. 3:6 கம்ப்யூட்டருக்குப் பதிலாக நவீன கம்ப்யூட்டர் அமைக்கலாமென்று அண்மையில் புதுடெல்லியிலுள்ள தேசிய குற்றவியல் ஆவணக்கூடம் பரிந்துரை செய்துள்ளது. சென்னையில் என்.டி. 550 என்ற சக்தி வாய்ந்த கம்ப்யூட்டர் நிறுவலாமென அரசு திட்டமிட்டுள்ளபடியால் இது சம்பந்தமாக என்.டி. 550 கம்ப்யூட்டர் சம்பந்தப்பட்ட வல்லுநர்களுடன் தமிழ்நாடு காவல் கம்ப்யூட்டர் பிரிவு அடிக்கடி தொடர்பு கொண்டு வருகிறது. இக்கம்ப்யூட்டர் அறிமுகப்படுத்தப்பட்டால் துறையின் பிற்காலத் தேவைகள் முறைப்படுத்தப்பட்டு திட்டமிட்ட வகையில் செயலாக்கம் நடைபெறும். இது குறித்து பணிகள் நடைபெற்று வருகின்றன.

**தமிழ்நாடு விரல் ரேகைப் பிரிவு.**

38. தற்காலத்தில் குற்றப் புலனாய்வுகளின்போது அறிவியல் கருவிகள் குற்றங்களைக் கண்டு பிடிக்கும் பணிக்கு மிகுந்த பயனுள்ளதாக அமைந்துள்ளன. இன்றைய குற்றவாளிகள் மேற்கொள்ளும் நவீன குற்ற முறைகளைக் கருத்தில் கொண்டு இத்தகைய குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு புதிய முறைகளைப் பயன்படுத்திக்கொள்ள அரசு தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறது. இதன் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டதுதான் தமிழ்நாடு விரல் ரேகைப் பதிவுக் கூடமாகும்.

39. திருநெல்வேலி மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டதையொட்டி தூத்துக்குடியில் ஒரு விரல் ரேகைப் பதிவுக்கூடம் ஒன்று துவக்கப்பட்டுள்ளது. அனைத்துக் காவல் மாவட்டங்களிலும் இத்தகைய ஒரு விரல் ரேகைப் பதிவுக் கூடங்கள் துவக்கப்பட்டதன் விளைவாக குற்றச் சம்பவம் நடைபெற்ற இடங்களிலிருந்து எடுக்கப்பட்ட விரல் ரேகைப் பதிவுகளைக் கொண்டு துப்பு துலக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை 960-ஆக அதிகரித்துள்ளது. இந்தியாவில் இது ஒரு சாதனையாகும்.

40. தகவல் கிடைத்தவுடன். விரல் ரேகைப் பிரிவில் பணியாற்றும் பணியாளர்கள் குற்றச் சம்பவங்கள் நடைபெறும் இடங்களுக்கு நேரில் சென்று அவ்விடங்களில் உள்ள விரல் ரேகைப் பதிவுகளை விரிவுபடுத்தி விரல் ரேகைப் பதிவு கூடத்தில் உள்ள விரல் ரேகைப் பதிவுகளுடன் ஒப்பிட்டுப்பார்த்து



குற்றவாளிகளைக் கண்டுபிடித்து புலன் விசாரணை செய்யும் அதிகாரிகளுக்குத் தெரியப் படுத்துவர். நீதிமன்ற விசாரணையின் போது இவர்கள் ஆஜராகி குற்றச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் இருந்து எடுக்கப்பட்ட விரல் ரேகைகளைப் பற்றி சாட்சியம் அளிக்கின்றனர்.

41. சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகளில் தண்டிக்கப்பட்ட சுமார் 1,65,612 குற்றவாளிகளின் விரல் ரேகைகள் சேகரிக்கப்பட்டு ஒரு விரல் ரேகைப் பிரிவுகளில் வைக்கப்பட்டுள்ளன. இவை குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு அடிப்படையாக விளங்குகின்றன.

42. காவல் துறையை நவீனமயமாக்கும் திட்டத்தின்கீழ் மாநிலத் தலைமையிடத்தில் "மிராகோட்" என்ற மின்னணுச் சாதனம் அமைக்கப்பட்டுள்ளது. குற்றச் சம்பவம் நடைபெற்ற இடங்களில் இருந்து எடுக்கப்பட்ட விரல் ரேகைகள் தானியங்கி சோதனைமூலம் விரைவாகத் தேடப்பட்டு குற்றவாளிகள் அடையாளம் கண்டுபிடிக்கப்படுகின்றனர். இம் முறையில் சுமார் 3 இலட்சம் விரல் ரேகைப் பதிவுகள் வகைப்படுத்தப்பட்டு நுண்ணிய அளவில் படம் எடுக்கப்பட்டு உள்ளன.

43. சென்னை நகரைச் சுற்றியுள்ள இடங்களில் நடைபெற்ற முகமூடிக் கொள்ளைச் சம்பவங்களில் குற்றம் நடைபெற்ற இடங்களில் இருந்து எடுக்கப்பட்ட விரல் ரேகைப் பதிவுகளைக் கொண்டு குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டதால் காவல் துறையினரின் பணி எளிதாயிற்று.

44. அனைத்துக் காவல் மாவட்டங்களில் இயங்கும் ஒருவிரல் ரேகைப் பதிவுக் கூடங்கள் புலனாய்வு அதிகாரிகளுக்கு குற்றவாளிகளைப் பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ளப் பயன்பட்டு வருகின்றன. கொலை, கொள்ளை, வழிப்பறி ஆகிய சம்பவங்களில் குற்றம் நடைபெற்ற இடங்களிலிருந்து எடுக்கப்பட்ட விரல் ரேகைப் பதிவுகளைக் கொண்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க அவர்களை கைது செய்ய புலனாய்வு அதிகாரிகளுக்கு உதவுகின்றன. சென்னை விரல் ரேகைப் பதிவுக் கூடத்தில் 5.89 இலட்சம் தண்டிக்கப்பட்ட குற்றவாளிகளின் விரல் ரேகை அட்டைகள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன.

## தடய அறிவியல் துறை.

45. தடய அறிவியல் துறையானது தமிழ்நாட்டில் உள்ள எல்லா நீதித் துறை நிறுவனங்களுக்கும், சில தரக் கட்டுப்பாடு மற்றும் ஒழுங்கு முறை நிறுவனங்களுக்கும் மற்றும் மைய அரசின் தமிழ்நாடு பிரிவுகளுக்கும் தேவைப்படும் வகையில் தனது பணியை செவ்வனே செய்து வருகிறது. இத்துறையானது தற்போது ஒரு துறைத் தலைவரின்கீழ் தனி இயக்கமாக இயங்கி வருகிறது.

46. இத்துறைகள் இந்தியாவிலேயே மிகத் தொன்மையான தடய அறிவியல் நிறுவனமாகும். சென்னையில் உள்ள பரிசோதனைச் சாலையில் பதிமூன்று பிரிவுகளையும் (துப்பாக்கியியல், உயிரியல், வேதியியல், ஆவணம், கருவியியல், போதைப் பொருட்கள் பிரிவு, ஆயம், தெரியியல், நிழற்படப் பிரிவு, மதுவிலக்கு, ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி, குருதி நீரியல் மற்றும் நஞ்சியல்), ஆறு மண்டலத் தடய அறிவியல் ஆய்வகங்களையும் (கோவை, மதுரை, தஞ்சாவூர், திருநெல்வேலி கட்டபொம்மன், வேலூர் மற்றும் சேலம்), இரு மாவட்ட தடய அறிவியல் ஆய்வகங்களையும் (திருச்சி மற்றும் கடலூர்) மற்றும் காவல் மாவட்டத்திற்கு ஒன்றாக, இருபத்து நான்கு இயங்கும் தடய அறிவியல் ஆய்வகங்களையும் தன்னிடத்தே கொண்டு தற்போதைய இயக்ககம் செயல்படுகிறது. தமிழ்நாடு அரசு அண்மையில் சென்னை பெருநகருக்கென 'இருபத்து நான்கு மணி நேரமும் இயங்கும் தடய அறிவியல் பணிப் பிரிவு' ஒன்றினை ரூபாய் 3.22 இலட்சம் செலவில் ஒப்பளித்துள்ளது. இந்தியாவிலேயே இத்தகைய வசதி சென்னைப் பெருநகரில் தான் முதலில் ஆரம்பிக்கப்படுகிறது.

47. இத்துறையில் தற்போது இயக்குநர் உட்பட 182 விஞ்ஞானிகளும், 201 பிற பணியாளர்களும் பணியாற்றுகின்றனர். நடப்பு ஆண்டில் பெருகி வரும் மது விலக்கு வழக்குகளை உடனுக்குடன் ஆய்வு செய்ய 1 கூடுதல் இயக்குநர், 2 உதவி இயக்குநர்கள். 3 அறிவியல் அலுவலர்கள், 1 உதவியாளர் மற்றும் 4 அலுவலகப் பணியாளர்கள் சென்னையிலும், வேலூரிலும் பணியாற்ற ஒப்பளிக்கப் பட்டுள்ளனர்.



48. இந்தியாவிலேயே இந்தத் துறை ஒன்றில்தான் முழு நேர ஈராண்டு தடய அறிவியல் முதறிவியல் பட்டப் படிப்புக்கான வகுப்புகள் நடத்தப்படுகின்றன. இப்படிப்பிற்கென ஆண்டு தோறும் 15 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். இதில் இரு இடங்கள் பிறமாநிலங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு ஒதுக்கப் பட்டிருக்கின்றன. மேலும் தரமணியில் உள்ள அடிப்படை மருத்துவ அறிவியல் நிறுவனத்தினரால் சுற்றுப்புற நஞ்சியல்—முதறிவியல் பட்ட மேல் படிப்பிற்கான வகுப்புகளை நடத்து வதிலும் இத்துறை உதவி புரிந்து வருகிறது. தடய அறிவியல் முனைவர் பட்டத்திற்காக (Ph.D. Degree) ஆராய்ச்சிகளை நடத்தத் தக்க நிலையமாக இத்துறையை சென்னைப் பல்கலைக் கழகம் அங்கீகரித்துள்ளது. தற்போது இந்த ஆராய்ச்சியில் 4 முழு நேர ஆராய்ச்சி மாணவர்களும், 8 பகுதி நேர ஆராய்ச்சி மாணவர்களும் ஈடுபட்டுள்ளனர்.

49. தடய அறிவியல் பணியில் மிகவும் முன்னேறியுள்ள இத்துறைக்கு மேன்மேலும் நுண்ணிய ஆய்வுக் கருவிகள் தொடர்ந்து வாங்கப்பட்டு வருகின்றன. மருந்துகள், போதைப் பொருட்கள் மற்றும் நஞ்சுப் பொருட்கள் ஆகியவற்றை விரைவாகவும் மற்றும் உறுதியாகவும் அடையாளம் காண உதவும் பொருள் திணிவு பகுப்பாய்வுடன் கூடிய வாயு நிற ஆய்வுக் கருவி (Gc. Ms.) ஒன்று ரூபாய் 8.50 இலட்சம் செலவில் வாங்கப்பட்டுள்ளது. புறச் சிகப்பு பகுப்பாய்வுக் கருவியொன்றும் (I.R. Speet) வாங்கப்பட்டுள்ளது. இது தவிர நுண்ணாய்வு மின் அணு நுண்பெருக்கு, பூரியர் டிரான்ஸ் பார்ம், புறச் சிகப்பு நிறப் பிரிகைமானி, தடய அறிவியல் நுண்பெருக்கி ஆகிய கருவிகள் வாங்கவும் இத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

50. சென்னையில் இத்துறைக்கு சொந்தமான 'தடய அறிவியல் இல்லத்தில் இதன் தலைமை ஆய்வகம் இயங்கி வருகிறது. மைய அரசின் நவீன மயமாக்குதல் திட்டத்தின்கீழ் ரூபாய் 10 இலட்சம் செலவில் இத்துறையில் கல்விப் பணிக்கான கட்டிடங்கள் கட்டும் பணி துவக்கப்பட்டுள்ளன. மதுரை மண்டலத் தடய அறிவியல் ஆய்வகம் ரூபாய் 7.20 இலட்சம் செலவில் கட்டப்பட்ட புதுக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. மற்ற மண்டலத் தடய அறிவியல் ஆய்வகங்களுக்குக் கட்டிடங்கள் ஒன்றின்பின் ஒன்றாகக் கட்டுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருகின்றன.

[1987 மே 4

51. 1986 ஆம் ஆண்டில் இத்துறையின் பல பிரிவுகளை உள்ளடங்கிய சென்னையில் உள்ள தலைமை ஆய்வகத்திலும், ஏனைய வட்டார மற்றும் மாவட்ட தடய அறிவியல் ஆய்வகங் களிலும் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்ட வழக்குகளும் அதற்கான மாதிரிகளும் பற்றிய விவரங்கள வருமாறு:

| | |
|---|---|
| வழக்குகளின் எண்ணிக்கை | 74,882 |
| மாதிரிகளின் எண்ணிக்கை | 1,75,823 |

## பகுதி 4.

## காவலர் நலம்.

52. காவல்துறையினர் ஆற்றும் பணியானது பலவகைப் பட்டது; பொறுப்புள்ளது; கடினமானதும் கூட. உறுதியுடன் கூடிய கடமைப் பற்று காவலர்களிடமிருந்து எதிர்பார்க்கப் படுகிறது. அவர்களுடைய பணித் திறனைக் கூட்டுவதில், அவர் களுக்கு ஊக்கமளிக்கும் நடவடிக்கைகள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு அரசு காவலர்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இவற்றில் ஒன்று காவல் துறையில் பணியாற்றும் காவலர் முதல் ஆய்வாளர் வரை உள்ள அனைவருக்கும் மானிய விலையில் இன்றியமையா உணவுப் பொருட்களை வழங்குவதாகும். காவல் வானொலிப் பிரிவிலுள்ள தொழில் நுட்பப் பணியாளர்கள் மற்றும் சுருக்கெழுத்துப் பணியாளர்கள் ஆகியோரும் இத்திட்டத்தின் மூலம் பயனடைய வழி செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் தற்போதைய அங்காடி விலையில் ஏறக்குறைய 50 சதவிகிதத்தினை அரசு மானியமாக வழங்குகிறது. இத் திட்டத்திற்காக அரசு ஒவ்வொரு ஆண்டும் சுமார் ரூ. 200 இலட்சத்தை மானியமாகச் செலவிடுகிறது.

## காவல் துறை வீட்டு வசதித் திட்டம்.

53. காவல் துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவும், அதற்குத் தேவையான நிதியினை ஒதுக்கீடு செய்வதிலும், மாநில அரசு மிகுந்த அக்கறையுடன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. 1979—80 முதல் 1983—84 வரையிலான காலத்தில் காவல்துறை மேல்நிலை சார் பணியாளர்களுக்கான குடியிருப்புகள், காவல் துறை கீழ்நிலை சார் பணியாளர் களுக்கான குடியிருப்புகள் மற்றும் படை வீடுகள் கட்டுவதற்கு



1987 மே 4]

ஏழாவது நிதிக் குழு ரூ. 6.75 கோடி நிதி ஒதுக்கியது. இதனைப் பயன்படுத்தி மேல்நிலை சார் பணியாளர்களுக்கு 523 குடியிருப்பு களும், காவல்துறை கீழ்நிலை சார் பணியாளர்களுக்கு 3,487 குடியிருப்புகளும், 2,445 படைவீடுகளும் கட்டுவதற்கு ஏழாவது நிதிக்குழு அளித்த தொகையைக் காட்டிலும் கூடுதலான ரூ. 16.65 கோடிக்கு அரசு அனுமதியளித்தது. இதற்காகும் கூடுதல் செலவினை மாநில அரசு ஏற்றுக்கொள்ளும்.

54. 1986–87 ஆம் ஆண்டு புதுக்கோட்டையில் படைவீடுகள் கட்டுவதற்காக அரசு ரூ. 10 இலட்சத்தை அனுமதித்துள்ளது. மேலும், சென்னை நகரில் பணியாற்றும் காவல் துறையைச் சேர்ந்த உயர் அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு ரூ. 50 இலட்சம் அனுமதி அளித்துள்ளது. இதுவரை 3,523 குடியிருப்புகளும், 2,045 படைவீடுகளும் ஏழாவது நிதிக் குழுவின் மானியத்தைக் கொண்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள குடியிருப்புகள் மற்றும் படை வீடுகளுக்கான கட்டுமானப் பணி பல்வேறு நிலையில் உள்ளது.

## தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் :

55. காவல்துறையில் பணியாற்றும் பணியாளர்களுக்குச் சொந்த வீடு கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகம் ரூ. 100 இலட்சம் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் 1980 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் காவல் துறையில் பணியாற்றும் அலுவலர்களும், காவலர்களும் பணியிலிருந்து ஓய்வுபெறும்போது சொந்தமாக வீடு பெற இயலும். அரசின் நிதி உதவியுடன் இவ்வீட்டு வசதிக் கழகம் கட்டித் தரும் வீடுகளை இதன் உறுப்பினர்கள் சுலபமான மாதத் தவணைகளில் திருப்பிச் செலுத்தி சொந்தமாக்கிக்கொள்ள முடியும்.

56. திருச்சிராப்பள்ளி மாவட்டம், நாவல்பட்டில் ரூ. 164 இலட்சம் செலவில் 670 வீடுகள் கட்டும் திட்டத்தைக் காவலர் வீட்டு வசதிக் கழகம் முதன் முதலில் ஏற்றுக்கொண்டு அட்கோ (HUDCO) அளித்த கடனுதவியான ரூ. 88.05 இலட்சத்தினைக் கொண்டு கட்டி முடித்தது. தமிழ்நாடு அரசும், இத் திட்டத் திற்குத் தனது பங்காக ரூ. 50 இலட்சத்தினை நிதி உதவியாக அளித்தது. இவ்வீடுகள் அனைத்தும் கட்டி முடிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டு விட்டன.

57. மேலும். இக்கழகம் அடுத்தபடியாக கோயம்புத்தூர் மாவட்டம் கணபதி என்ற இடத்தில் "அட்கோ" (HUDCO) அளித்த ரூபாய் 74.49 இலட்சம் கடனுதவியுடன் ரூபாய் 194 இலட்சம் செலவில் 432 வீடுகளைக் கட்டியுள்ளது.

58. மேலும் வட ஆற்காடு மாவட்டம் வேலூருக்கு அருகி லுள்ள தொரப்பாடியில் ரூ. 35 இலட்சம் செலவில் 65 வீடு களையும், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் திம்மராஜ புரத்தில் ரூபாய் 116.93 இலட்சம் செலவில் 247 வீடுகளையும் கட்டுவதற்கான இரண்டு திட்டங்களை இவ்வீட்டு வசதிக் கழகம் மேற்கொண்டு வீடுகளைக் கட்டி முடித்துள்ளது. இதற்காக "அட்கோ" (HUDCO) முறையே ரூபாய் 25.46 இலட்சம் மற்றும் ரூபாய் 22.72 இலட்சம் கடனாக அளித்துள்ளது. இது வரை இக்கழகம் ரூபாய் 507 இலட்சம் செலவில் 1,414 வீடு களைக் கட்டி முடித்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் காரைக்குடி அருகிலுள்ள கரனி வாசல், தென்னாற்காடு மாவட்டம் திண்டிவனம் அருகிலுள்ள மேல்பாக்கம், தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகிலுள்ள ஆரூர் ஆகிய இடங்களில் வீடுகள் கட்டுவதற்கு காவலர் வீட்டு வசதிக் கழகம் திட்டங்களைத் தீட்டியுள்ளது.

59. மேலே கூறியவை தவிர, செங்கல்பட்டு மாவட்டம் அலமாதியில் ரூபாய் 62.31 இலட்சம் செலவில் தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் எட்டாவது அணிக்கான 84 குடியிருப்புகள் கட்டும் வேலையை இக்கழகம் மேற்கொண்டுள்ளது. மேலும், புதிதாக ஏற்படுத்தப்பட்ட பசும்பொன் முத்துராமலிங்கர், காமராசர், இராமநாதபுரம் மற்றும் அண்ணா ஆகிய மாவட்டங் களில் வாடகைக் குடியிருப்புக்கள் கட்டும் பணியினை மேற் கொள்ள இக்கழகம் கருதியுள்ளது.

60. இத்திட்டத்தின்கீழ் அரசு, இக்கழகத்திற்கு ஒவ்வோர் ஆண்டும் ரூபாய் ஒரு கோடியை முன் பணமாக ஒதுக்கி உள்ளது. இக்கடன் தொகை வீடுகள் ஒதுக்கப்படும் தகுதியுள்ள பணியாளர் களுக்கு வழங்கப்படும் வீடு கட்டுவதற்கான [illegible] [illegible]த்தில் இருந்து சரி செய்து கொள்ளப்படும்.





**காவல் நிலையக் கட்டிடங்கள் :**

61. எல்லாக் காவல் நிலையங்களும் அரசு கட்டிடங்களில் இயங்க வேண்டும் என்பது அரசின் கொள்கையாகும். தற்போது மாநிலத்தில் உள்ள 989 காவல் நிலையங்கள் மற்றும் 185 புறக் காவல் நிலையங்களிலே 287 காவல் நிலையங்களும் 78 புறக்காவல் நிலையங்களும் வாடகைக் கட்டிடங்களில் இயங்கி வருகின்றன.

62. அரசு ரூபாய் 682 இலட்சம் செலவில் 245 காவல் நிலையக் கட்டிடங்களைக் கட்டுவதற்கு அனுமதி அளித்துள்ளது. இது வரை 182 காவல் நிலையங்கள் கட்டி முடிக்கப்பட்டு அவை காவல் துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

63. இது தவிர அரசு மாநிலத்தில் உள்ள பெண் காவல் பிரிவு களுக்காக ரூ. 28.50 இலட்சம் செலவில் 60 இணைப்புக் கட்டிடங் களைக் கட்டுவதற்கு ஒப்புதல் வழங்கியது. இதுவரை 48 பெண் காவல் பிரிவுக்கான இணைப்புக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப் பட்டு காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

**காவலர் பதக்கங்கள் :**

64. காவலர்கள் ஒழுக்க உணர்வுடன் செயல்படுவதற்கும் அவர்கள் தங்கள் திறனை மேலும் வளர்த்துக் கொள்வதற்கும் அவர்கள் மிகத் திறமையுடன் செயல்படும்போது அதனை அறிந்து அவர்களின் செயலினைப் பாராட்டுவது மிகவும் அவசிய மாகும். காவல் துறையினர் தங்கள் வசமுள்ள ஆற்றலைக் கொண்டும், தங்களது பணியில் தொழில் ரீதியாகப் பெற்ற அறிவு மற்றும் திறமை ஆகியவைகளைக்கொண்டும் சமுதாயத்திற்குச் சிறந்த முறையில் பணியாற்ற முயன்று வருகின்றனர். இப்படிப் பட்ட தொழில் ரீதியான திறமைகளை வளர்த்து அதிகப்படி யான நன்மைகளைப் பெற அவர்களின் மெச்சத் தகுந்த பணி யினைப் பாராட்டி பல்வேறு பதக்கங்களை அரசு அளித்து வருகிறது.

### குடியரசுத் தலைவரின் காவல் பதக்கமும் காவல் துறைப் பதக்கங்களும்.

65. 1986-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவரின் காவல் பதக்கம் காவல் துறையினைச் சார்ந்த காவல் அதிகாரிகள் மற்றும் காவலர்கள் ஆகிய 29 பேர்களுக்கு வழங்கப்பட்டது. 1986-ஆம் ஆண்டு மூன்று ஊர்க்காவல் படையினருக்கு குடியரசு தின ஊர்க் காவல் படைப் பதக்கமும், இரண்டு ஊர்க்காவல் படையினருக்கு சுதந்திர தின ஊர்க்காவல் படைப் பதக்கமும் வழங்கப்பட்டது.

### உயிர் மீட்டல் போன்ற வீரச் செயலுக்கான பிரதமரின் விருது.

66. உயிர் காத்தமைக்கான இந்திய பிரதமரின் பதக்கங்கள் காவல் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் மற்றும் காவலர்கள் ஆகிய 5 பேர்களுக்கு வழங்கப்பட்டன.

### தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம்.

### (வீரச் செயல் மற்றும் கடமையில் பற்றுணர்விற்காக)

67. 1986-ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றும் அதிகாரிகள், காவலர்கள் ஆகிய 10 பேருக்கு வீரச் செயலுக்கான தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காவல் பதக்கம் வழங்கப்பட்டது. மேலும் காவல் துறை அதிகாரிகள் மற்றும் காவலர்கள் ஆகிய 45 பேருக்குச் சிறப்பான பணி புரிந்ததற்கான தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களின் காவல் பதக்கம் வழங்கப்பட்டது. 1986-ஆம் ஆண்டு ஒரு பெண் உட்பட 3 பேர்களுக்கு முதலமைச்சரின் தமிழ் நாடு ஊர்க்காவல் படையினருக்கான பதக்கம் வழங்கப்பட்டது.

### தமிழ்நாடு முதலமைச்சரின் காவலர் பதக்கம்.

### (பாராட்டத்தக்கப் பணிக்காக)

68. 1982-ஆம் ஆண்டு பொங்கல் தினத்தன்று அரசு முதன் முதலாக இத்திட்டத்தினை அறிவித்தது. தமிழ் நாடு காவல் துறையில் பணி புரியும் தலைமைக் காவலர்கள், காவலர்கள் மற்றும் அதற்குச் சமமான பதவியிலுள்ளவர்கள் 10 ஆண்டு காலம் தண்டனை ஏதுமின்றி பணி புரிந்திருந்தால் இத்திட்டத்





தின்கீழ் பதக்கங்கள் பெற தகுதியுடையவர்கள் ஆவர். 1986-ஆம் ஆண்டு 1,359 பேர்களுக்கு இப்பதக்கங்கள் வழங்கப்பட்டன. 1987-ஆம் ஆண்டு 1366 பேர்களுக்கு இப்பதக்கங்கள் வழங்கப் பட்டன.

### தமிழ்நாடு காவலர் சேமநல நிதி.

69. தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றும் அனைத்து சார் நிலைப் பணியாளர்களின் நிலையினை மேம்படுத்துவதற்காகத் தொடங்கப்பட்ட தமிழ்நாடு காவலர் நல நிதித் திட்டம் மற்றொரு பெரிய நலத் திட்டமாகும். இந்நிதியின் வருவாய், இத்திட்டத்தில் தாமாகவே சேருபவர்களிடமிருந்து பெறப்படும் சந்தா தொகை மற்றும் அதிகாரிகளிடமிருந்து பெறப்படும் நன்கொடை ஆகியவை மூலம் திரட்டப்படுகிறது. மேலும் இத் திட்டத்திற்கு அரசு ஆண்டுதோறும் ஒரு தொகையினை நன்கொடையாக வழங்கி நிதியைப் பெருக்கி வருகிறது.

70. இந்நிதி கீழ்க்கண்டவாறு பயன்படுத்தப்படுகிறது :—

(அ) காவலர் குடியிருப்புகளில் நூல் நிலையங்கள் அமைத்தல், மற்றும் இதழ்களை வாங்குதல்.

(ஆ) சார்நிலைப் பணியாளர்களின் குழந்தைகளின் தொழில் நுட்பக் கல்விக்கு உதவித் தொகை அளித்தல்.

(இ) உறுப்பினர்களின் குடும்பத்தினருக்கு ஈமச் சடங்கு செலவிற்காக ரூ. 100 வழங்குதல்.

(ஈ) இறந்து போன உறுப்பினர்களின் மனைவி மற்றும் வாரிசுகளுக்கு நிதி உதவி செய்தல்.

(உ) காச நோய், புற்று நோய், தொழுநோய் போன்ற நோய்களினால் அல்லல் படுபவர்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொள்வதற்கும் ஊட்டச்சத்து பெறுவதற்கும் நிதி உதவி அளித்தல்.

(ஊ) காவல் துறைக் குழுவின் பரிந்துரையின்படி தேவையானவர்களுக்கு ஏற்ற பொது நல உதவி அளித்தல்.

71. இவை தவிர ஒவ்வொரு ஆண்டும் பொறியியல், மருத்துவம், கலை, அறிவியல் போன்ற பட்டப் படிப்பு மற்றும் பட்டயப் படிப்பிற்காக (Diplom.) சார்நிலைப் பணியாளர்களின் குழந்தைகளுக்குக் கல்லூரிப் படிப்பு, தொழில் நுட்பம் மற்றும் மேல் படிப்பு தொடர்வதற்கு உதவும் வகையில அவர்களுக்கு இந் நிதியிலிருந்து உதவித் தொகை வழங்கப்படுகிறது. படிப்பின் தன்மையைப் பொறுத்து ஆண்டு ஒன்றிற்கு ரூ. 250 முதல் ரூ. 625 வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. காவல் துறை பணியாளர்கள் இறந்தால் அவர் வகித்து வந்த பதவிக்கேற்ப ரூ. 300-லிருந்து ரூ. 700 வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. 1985-86 ஆம் ஆண்டு இத்திட்டத்தின் கீழ் ரூ. 2,93,550 செலவழிக்கப்பட்டது.

**தமிழ்நாடு காவல் துறை நூற்றாண்டு விழா படிப்புதவித் தொகை.**

72. மேற்கூறிய திட்டம் தவிர, சார்நிலைப் பணியாளர்களின் தகுதி வாய்ந்த குழந்தைகள் கல்லூரிகளில் தொழில் நுட்பம் மற்றும் மேல் படிப்பு தொடர்வதற்கு உதவும் வகையில் அவர்களுக்கு வருடாந்திர கல்வி உதவித் தொகை அளிக்கும் திட்டமும் செயல்படுத்தப்படுகிறது. வருடாந்திர நன்கொடை மற்றும் கொடை உள்ளம் படைத்தவர்கள் அளிக்கும் நிதி உதவியின் மூலம் இத் திட்டத்திற்கான நிதி திரட்டப்படுகிறது. 1985-86 ஆம் ஆண்டு இத் திட்டத்தின்கீழ் படிப்புதவித் தொகையாக ரூபாய் 41,500 வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு காவலர் நல அமைப்பு.**

73. காவலர் நலத் திட்டங்களில் ஒன்றான தமிழ்நாடு காவலர் நல அமைப்பு காவல் துறையில் பணி புரியும் அமைச்சு மற்றும் காவல் பணியாளர் குடும்பங்களின் வருவாயினைப் பெருக்கிடவும் அவர்களுக்கு கல்வி, மருத்துவம் மற்றும் பொழுது போக்கு வசதிகள் செய்து கொடுக்கும் நோக்கத்துடனும் செயல்பட்டு வருகிறது. அப்பணியாளர்களின் குடும்ப வருவாயினை அதிகரிப்பதற்காக நூல் நூற்றல், தையல் வேலை, பாய் முடைதல், கயிறு நெய்தல், தீக்குச்சி செய்தல், பால்பண்ணை, கோழிப்பண்ணை அமைத்தல் போன்ற திட்டங்களை நிறைவேற்றி வருகிறது.



136530
சென்னை 600 008.

74. காவலர்களின் குடும்பத்தினரின் வருமானத்தைப் பெருக்கும் நோக்கத்துடன், காவலர்களுக்கு பேட்டரிகளுடன் கூடிய நடைபாதைக் கடைகள் முழுப் பணியும் தமிழ்நாடு காவலர் நலக் கூட்டுறவு சங்கங்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

75. மேலும் காவலர்களின் குடும்பத்தினருக்கு வேலை வாய்ப்பு வசதிகளை அளித்திடவும், அவர்கள் வருமானத்தைப் பெருக்கிடவும், கம்ப்யூட்டர் மற்றும் வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டியை தயாரிக்கவும் தமிழ்நாடு காவலர் கம்ப்யூட்டர் தயாரிப்பு கூட்டுறவு சங்கம் ஒன்று 1984 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தொழில் மற்றும் வணிகத் துறை மற்றும் இந்தியத் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியோடு ரூபாய் 3.2 இலட்சம் முதலீட்டில் டிரான்சிஸ்டர்கள், வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி, கம்ப்யூட்டர் ஆகியவற்றை தயாரிக்க இதுவரை 20 பிரிவினர் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 19 ஆம் நாளன்று பாபி என்ற 20 அங்குல வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டி விற்பனை துவக்கி வைக்கப்பட்டது. அடுத்த கட்டமாக கம்ப்யூட்டர் தயாரிக்கும் பணியை எடுத்துக் கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பகுதி 5.**

**மைய அரசிடமிருந்து பெற்ற உதவி.**

76. 1969-70 ஆம் ஆண்டு முதல் 1978-79 ஆம் ஆண்டு வரையிலான 10 ஆண்டு காலத்திற்கு மாநில காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தை முதல் கட்டமாக மத்திய அரசு செயல்படுத்தியது. 1980-81 ஆம் ஆண்டு முதல் 1989-90 வரையிலான 10 ஆண்டு காலத்திற்கு காவல் துறையை நவீனப்படுத்தும் திட்டத்தை மத்திய அரசு மீண்டும் புதுப்பித்துள்ளது. 1980-81 ஆம் ஆண்டு முதல் 1985-86 ஆம் ஆண்டு வரையிலான 6 ஆண்டு காலத்தில் மைய அரசு உதவியுடன் ரூ. 354.49 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. மைய அரசின் மானியத்தைத் தவிர இதே காலத்தில் ரூபாய் 337.05 இலட்சத்தை மாநில அரசும் செலவிட்டுள்ளது. வி. எச். எப். கருவிகள், வாக்கி டாக்கி கருவிகள், வி. எச். எப். கருவிகள். மோட்டார் சைக்கிள்கள், கம்ப்யூட்டர் கருவிகள் மற்றும் புலன் விசாரணைக்கு உதவும் அறிவியல்

சாதனங்கள் வாங்கவும் இத் தொகை முழுவதும் செலவிடப் பட்டுள்ளது. 50 விழுக்காடு கடன் மற்றும் 50 விழுக்காடு மானியம் என்ற அடிப்படையில் மைய அரசு இத் திட்டத்திற்கு ஒவ்வொரு ஆண்டும் நிதி உதவி அளிக்கிறது.

## பகுதி C.

## குற்றம் மற்றும் சட்டமும் ஒழுங்கும்

77. குற்றம்.—தொழில் மயம், நவீன மயம், சமுதாய நிலையில் மாற்றம், இதுகாறும் ஊன்றிநின்ற சமுதாயக் கோட்பாடுகளின் சிதைவு ஆகிய காரணங்களால் குற்றங்களின் தன்மையிலும் குற்ற வாளிகளின் நடவடிக்கைகளிலும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. குற்றம் மற்றும் குற்றத் தடுப்பு ஆகியவற்றை சமுதாயம் அணுகும் முறையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஆதலின் காவலர்களின் பணி மேலும் சிக்கல் வாய்ந்ததாக ஆகி வருகிறது. குற்றங்களைக் கையாளுவதில் காவல் துறையினர் மிகுந்த தொழில் நுட்பத்தோடு செயல்படவேண்டியுள்ளது. இவற்றை உணர்ந்து குற்றவாளிகளைக் கண்டு பிடிப்பதிலும் அவர்கள் மீது வழக்குத் தொடுப்பதிலும் தமிழக காவல் துறை மிகவும் சிறப்புடனும், திறமையுடனும், விரைந்தும் செயல்பட்டு வருகின்றது.

78. அநேக வழக்குகளில் குற்றவாளிகளை வேறு பார்ப்பதிலும், எதிர் காலத்தில் குற்றம் நிகழாவண்ணம் தடுக்க புதிய முறைகளைக் கையாளவும் தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. சென்னை புறநகர்களில் வீடுகளைத் தாக்கிய கொள்ளைக் கூட்டங்களின் நடவடிக்கைகள் காவல் துறையின் இத்தகைய விரைந்த நடவடிக்கையால், முறியடிக்கப்பட்டன.

79. குற்றங்களை மிக சாமர்த்தியமாகத் தடுப்பதிலும் மற்றும் கண்டு பிடிப்பதிலும் நாட்டில் சிறந்தோம் பின்தங்கிய நிலையில் இல்லை என்பதனை தமிழகக் காவல் துறையினர் நிரூபித் துள்ளனர். குற்றவாளிகளை வெளிவிடுக் கண்காணிக்கும்



முயற்சியிலிருந்து அவர்கள் என்றும் பின்வாங்கியதில்லை. காவல் துறையின் திறமையைக் கீழ்வரும் புள்ளிவிவரங்கள் கோடிட்டுக் காட்டும்:—

### தமிழ்நாட்டில் சொத்து பற்றிய குற்றங்களும் கண்டுபிடிப்புகளும்.

| குற்றத் தலைப்பு | 1985 | | 1986 | |
|---|---|---|---|---|
| | புகார் செய்யப் பட்டவை. | கண்டு பிடிக்கப் பட்டவை. | புகார் செய்யப் பட்டவை. | கண்டு பிடிக்கப் பட்டவை. |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ஆதாயத்திற்கான கொலை | 76 | 60 | 68 | 45 |
| கொள்ளை | 53 | 33 | 79 | 43 |
| வழிப்பறி | 415 | 285 | 444 | 299 |
| வீடுபுகுந்து திருட்டு | 9,237 | 5,161 | 8,899 | 4,922 |
| பெரிய திருட்டு | 22,643 | 16,417 | 22,461 | 16,164 |
| சிறிய திருட்டு | 1,788 | 1,691 | 1,735 | 1,625 |
| கால்நடைத் திருட்டு | 1,064 | 975 | 1,009 | 927 |
| மொத்தம் .. | 35,276 | 24,622 | 34,695 | 24,025 |
| கண்டுபிடிப்புகளின் விழுக்காடு | 69.8 | | 69.2 | |

80. சென்னையிலுள்ள விரல் ரேகைப் பதிவுக்கூடம், மாவட்டங்களிலுள்ள ஒரு விரல் ரேகைப் பதிவுக் கூடம், தமிழ்நாடு தடய அறிவியல் ஆய்வகம், நாய்ப் படை மற்றும் கம்ப்யூட்டர் பிரிவு ஆகியவை அறிவியல் அணுகு முறையோடு துப்பு துலக்கும் பணியில் தொடர்ந்து செவ்வையாகப் பயன்படுத்தப்பட்டன.

81. "இந்தியாவில் குற்றங்கள்" (Crimes in India) வெளியீட்டின்படி 1982 ஆம் ஆண்டில் அகில இந்திய அளவின் அடிப்படையில் மீட்கப்பட்ட களவுபோன சொத்து விழுக்காடு 27.3 ஆகும். கடந்த ஐந்து ஆண்டுகளில் அனைத்திந்திய அளவில் மீட்கப்பட்ட திருட்டுச் சொத்துக்களின் விழுக்காடு எப்போதும் 40-ஐக் கடக்கவில்லை. ஆனால் தமிழ்நாட்டில் 1979 ஆம் ஆண்டு 40 விழுக்காட்டிலிருந்து 1986-ஆம் ஆண்டு 59.4 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

82. காவல் துறையினரின் விரைந்த நடவடிக்கையாலும், சிறந்த புலனாய்வினாலும் கண்டு பிடிக்கப்பட்டு, வழக்கு தொடரப்பட்ட சில வழக்குகள் பற்றிய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன :—

## கொலை.

83. சென்னை நகரம் மயிலாப்பூர் காவல் நிலையக் குற்ற எண் 265/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1986-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 ஆம் நாளன்று காலை சுமார் 5½ மணியளவில் மயிலாப்பூர் ராக்கியப்பத் தெருவில் வசிக்கும் பட்டம்மாள் என்பவர் கொலை செய்யப்பட்டு, அவர் அணிந்திருந்த ரூபாய் 30,000 மதிப்புள்ள தங்க நகைகள் களவாடப்பட்டிருந்தன. குறித்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தீவிரப் புலன் விசாரணையின் காரணமாக குற்றவாளிகள் அஞ்சுராம் மற்றும் கணேசன் என்பவர்கள் கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட அனைத்து சொத்துக்களும் அன்றே மீட்கப்பட்டன. குற்றவாளிகள் இருவருக்கும் 1986 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 28 ஆம் நாளன்று நீதி மன்றத்தில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

84. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் பாளையங் கோட்டை காவல் நிலையக் குற்ற எண் 863/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1986 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 25 ஆம் நாளன்று பாளையங்கோட்டையில் உள்ள கோட்டூர் தெருவில் திருபதி அம்மாள் என்பவர் அவரது வீட்டில் கொலை செய்யப்பட்டிருந்ததோடு அவர் அணிந்திருந்த ரூ. 35,000 மதிப்புள்ள நகைகள் களவாடப்பட்டிருந்தன. குறித்த காலத்தில் காவலரால் மேற்கொள்ளப்பட்ட அயராத புலன் விசாரணை காரணமாக



குற்றம் சாட்டப்பட்ட மாயாண்டி, காந்திமதிநாதன் மற்றும் முத்து ஆகியோர் கைது செய்யப்பட்டு, களவாடப்பட்ட அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

85. தஞ்சாவூர் (கிழக்கு) மாவட்டம் நன்னிலம் காவல் நிலையக் குற்ற எண் 234/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1986-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 24-ஆம் நாளன்று முடிகொண்டான் கிராமத்தில் மோகாம்பாள் என்பவர் கொலை செய்யப்பட்டு ரூபாய் 50,000 மதிப்புள்ள தங்கம் மற்றும் வைர நகைகள் களவாடப்பட்டன. அயராத புலன் விசாரணை காரணமாக 1986-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 28-ஆம் நாள் அன்று குற்றம் சாட்டப்பட்ட பக்கிரிசாமி என்பவர் கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட அனைத்து சொத்துக்களும் அன்றே மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

86. சேலம் மாவட்டம் மேச்சேரி காவல் நிலையக் குற்ற எண் 182/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1986 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 4-ஆம் நாள் சாமலூர் கிராமத்தில் சுந்தரம் செட்டியார் மற்றும் அவரது மனைவி கோவிந்தம்மாள் ஆகியோரை குற்றம் சாட்டப்பட்ட சண்முகம், முருகேசன், சுந்தரம் மற்றும் கிருஷ்ணன் ஆகியோர் கொலை செய்து ரூ. 40,000 மதிப்புள்ள தங்க நகைகளைக் களவாடினர். காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட துரித புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் முறையே 1986-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் நாள், 1986 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 15 ஆம் நாள் மற்றும் 1986-ஆம் ஆண்டு நவம்பர் 24-ஆம் நாளில் கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

87. 1986 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 19 ஆம் நாளன்று மேற்கு அண்ணா நகரில் பதினெட்டாம் பிரதான சாலையில் உள்ள பிளாட் எண் 1551-ல் உள்ள வீட்டில் திரைப்பட நடிகை ராணி பத்மினி மற்றும் அவரது தாயார் இந்திர குமாரி ஆகியோர் கொலை செய்யப்பட்டு அவர்களிடமிருந்த விலையுயர்ந்த பொருள்களும் மற்றும் தங்க நகைகளும் களவாடப்பட்டன. செங்கல்பட்டு (கிழக்கு) மாவட்டம், திருமங்கலம் காவல் நிலையக் குற்ற எண் 431/86-ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது. புலன்

[1987 மே 4

விசாரணையின் போது அவரிடம் வேலை செய்து வந்த கார் ஓட்டுநர் ஜெபராஜ், காவல் பணியாளர் இலட்சுமிநரசிம்மன் மற்றும் சமையல்காரர் கணேசன் ஆகியோரும் அவ் வீட்டிலிருந்த வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட கே.இ.ஆர். 3344 என்னுள்ள காரும் காணாமல் போனது தெரியவந்தது. குறித்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட அயராத புலன் விசாரணையால் ஜெபராஜ் மற்றும் இலட்சுமிநரசிம்மன் ஆகியோர் முறையே 1986-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 24-ஆம் நாள் மற்றும் 1986-ஆம் ஆண்டு நவம்பர் 3-ஆம் நாளில் கைது செய்யப்பட்டனர். மொத்தம் ரூ. 5,36,000 மதிப்புள்ள ஒரு சோனியோ டேப் ரிக்கார்டர், துணிகள், தங்க நகைகள் மற்றும் கே. இ. ஆர். 3344 என்ற எண்ணுடைய கார் ஆகியவைகள் கைப்பற்றப் பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

88. பெரியார் மாவட்டம் அரச்சலூர் காவல் நிலையக் குற்ற எண் 325/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1986 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 5-ஆம் நாள் அன்று டி. என். எக்ஸ். 8913 என்ற எண்ணுடைய காரை நான்கு பேர்கள் அரச்சலூரிலிருந்து வாடகைக்கு அமர்த்திக் கொண்டு ஈரோடுக்கு செல்லும் வழியில் வண்டியின் ஓட்டுநர் துரைசாமி என்பவரைக் கொலை செய்து, உடலினை சுண்ணாம்பு ஓடையில் வீசிவிட்டு ரூ. 1,25,000 மதிப் புள்ள காரை ஓட்டிக் கொண்டு சென்றுவிட்டனர். முறையான மற்றும் அறிவியல் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணை காரணமாக குணசேகரன், கணேசன், ரபீக் மற்றும் பன்னீர் செல்வம் ஆகியோர் 1986-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21-ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டனர். களவாடப்பட்ட காரும் அன்றைய தினமே மீட்கப்பட்டது. இவ் வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

**கொள்ளை :**

89. செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் திருவான்மியூர் காவல் நிலையக் குற்ற எண் 3/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில், 1985-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ஆம் நாள் அன்று அடையாளம் தெரியாத சிலர் கந்தன்சாவடியிலுள்ள அக்மால் தொழிற் சாலையின் வாயில் காவலரை கட்டிவைத்துவிட்டு ரூ. 84,000 மதிப்புள்ள 3,600 அலுமினியத் தகடுகளைக் களவாடிச்



1987 மே 4]

சென்றனர். அயராத புலன் விசாரணை காரணமாக தாமோதரன், இராசு, மனோகரன், இராசேந்திரன், விஜயன், சுவாமிலிங்கம் மற்றும் இராமமூர்த்தி ஆகிய ஏழு பேரைக் கொண்ட குழுவினர் முறையே 1986 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 16ஆம் நாள், 1986-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 21-ஆம் நாள் மற்றும் 1986 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 28 ஆம் நாளில் கைது செய்யப்பட்டனர். பொருட்களைக் களவாடிச் செல்ல பயன் படுத்தப்பட்ட டி.எம்.எம். 7236 என்ற எண்ணுள்ள வேன் மற்றும் களவாடப்பட்ட பொருட்களும் மீட்கப்பட்டன. வழக்கு நீதி மன்ற விசாரணையில் உள்ளது.

90. பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் பள்ளத்தூர் காவல் நிலையக் குற்ற எண் 13/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1986-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 13-ஆம் நாள் அன்று வேலன்குடியில் உள்ள முனியன் என்பவரது வீட்டில் குற்றம் சாட்டப்பட்ட குருசாமி, பாக்கியராஜ், முத்து, முனியாண்டி, மகாலிங்கம், அதியராசா மற்றும் விஜயராமன் ஆகியோர் புகுந்து அங்கிருந்த ரூ. 17,000 மதிப்புள்ள தங்க நகைகள், ரேடியோ, டிரான்சிஸ்டர் மற்றும் ரொக்கம் ஆகியவற்றைக் கொள்ளை யடித்துச் சென்றனர். அயராத புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் முறையே 1986-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 18-ஆம் நாள் மற்றும் 1986-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 20-ஆம் நாளில் கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ் வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

91. சேலம் மாவட்டம் சங்ககிரி காவல் நிலையக் குற்ற எண் 53/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1986-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 11ஆம் நாள் அன்று இரவு சூரி மலையிலிருந்து சங்ககிரி செல்லும் சாலையில் குற்றம் சாட்டப்பட்ட போஸ் மற்றும் அவனது 14 கூட்டாளிகள் ஒரு வெடி மருந்து கிடங்கினுள் நுழைந்து ரூ. 70,000 மதிப்புள்ள வெடி மருந்து பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றனர். அயராது மேற்கொண்ட புலன் விசாரணையின் காரணமாக 1986-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 13-ஆம் நாள் மற்றும் 1986-ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 25-ஆம் நாளில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் கைது செய் யப்பட்டு களவாடப்பட்ட அனைத்துப் பொருட்களும் மீட்கப் பட்டன. இவ் வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

[1987 மே 4

92. செங்கல்பட்டு மாவட்டம் மதுராந்தகம் காவல் நிலையக் குற்ற எண் 91/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1986-ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 24 ஆம் நாளன்று அடையாளம் தெரியாத கொள்ளைக் கூட்டம் ஒன்று சத்தியநேசன் என்பவரின் வீட்டினுள் புகுந்து ரூ. 16,500 மதிப்புள்ள தங்க நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றது. முறையான நடவடிக்கை காரணமாக, குற்றம் சாட்டப்பட்ட வெங்கடய்யா, பாரதி, லாடங்கோ, பூரி, கொர குரேஷ் மற்றும் கொர ராமணன் ஆகியோர் 1986 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 19-ஆம் நாள் அன்று கைது செய்யப் பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

93. சென்னை நகரம் வடக்குக் கடற்கரை காவல் நிலையக் குற்ற எண் 430/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 22-ஆம் நாள் அன்று லிங்கி தெருவில் கணேசன் என்பவரைக் குற்றம் சாட்டப்பட்ட கலைவாணன், வேலன், துரை, மனோகரன் மற்றும் நாகப்பன் ஆகியோர் வழி மறித்து அவரிடம் இருந்து ரூ. 18,000-ஐ வழிப்பறி செய்தனர். குறித்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணையின் காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் முறையே 1986-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ஆம் நாள், 1986-ஆம் ஆண்டு மே திங்கள் 1-ஆம் நாள், மற்றும் 1986 ஆம் ஆண்டு ஜூலை திங்கள் 8-ஆம் நாளில் கைது செய்யப்பட்டு, அவர்களிடமிருந்து ரொக்கம் ரூ. 11,000 கைப்பற்றப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

94. பெரியார் மாவட்டம், பெருந்துறை காவல் நிலையக் குற்ற எண் 221/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1986-ஆம் ஆண்டு மே திங்கள் 11-ஆம் நாள் அன்று ஆதிராத்தங்காடு தோட்டம் என்ற இடத்தில் குற்றம் சாட்டப்பட்ட பர்மையன், கோண வ்ராயன், சித்தன், சின்னப்பரமையன் மற்றும் எல்லப்பன் ஆகி யோர் ராமாயி அம்மாள் என்பவரது வீட்டினுள் நுழைந்து அங்கிருந்த ரூ. 15,000 மதிப்புள்ள தங்க நகைகளைக் கொள்ளை யடித்துச் சென்றனர். குறித்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள்



1987 மே 4]

முறையே 1986 ஆம் ஆண்டு மே திங்கள் 14 ஆம் நாள் மற்றும்
1986 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 14 ஆம் நாளில் கைது செய்யப்
பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு
நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

95. மதுரை மாவட்டத்தில் மதுரை நகர வடக்குக் காவல்
நிலையக் குற்ற எண். 3118/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில்
தாயமுத்து தெருவில் கதவிலக்கம் 13 எண்ணுடைய கடையில்
1986-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 1-ஆம் நாளன்று கண்ணன்,
மணிவண்ணன், ரவி, அனிபா மற்றும் அமர் ஆகியோர் புகுந்து
அங்கிருந்த ரூ. 39,000 மதிப்புள்ள 3 வி.சி.ஆர். டெக்குகளை
கொள்ளையடித்துச் சென்றனர். குற்றம சாட்டப்பட்டவர்கள்
முறையே 1986 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2 ஆம் நாள் மற்றும்
1986 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 30 ஆம் நாளில் கைது
செய்யப்பட்டு களவாடப்பட்ட பொருட்கள் அனைத்தும் மீட்கப்
பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

வழிப்பறி :

96. திருச்சி மாவட்ட கன்டோன்மென்ட் காவல் நிலையக்
குற்ற எண். 870/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1986 ஆம்
ஆண்டு மார்ச்சு திங்கள் 18-ஆம் நாள் அன்று திருச்சி, வ.உ.சி.
தெருவில் உள்ள பாலாஜி பலமாடிக் கட்டடத்தில் கதவிலக்கம்
5 எண்ணுடைய வீட்டின் உள்ளே விஜயகுமார், சந்தானம் மற்றும்
ஆரோக்கியம் ஆகியோர் கொண்ட கூட்டத்தினர் நுழைந்து
அங்கிருந்து ரூபாய் 1,00,000 மதிப்புள்ள தங்கம், வைர நகைகள்
மற்றும் ரொக்கம் ஆகியவற்றை கொள்ளை அடித்துச் சென்றனர்.
அயராத புலன் விசாரணை காரணமாகக் குற்றம் சாட்டப்
பட்டவர்கள் அனைவரும் 1986 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள்
20-ஆம் நாளன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட அனைத்து
சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற
விசாரணையில் உள்ளது.

97. செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் காவல்
நிலையக் குற்ற எண் 876/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில்
1986 ஆம் ஆண்டு மே திங்கள் 14 ஆம் நாள் அன்று குற்றம்
சாட்டப்பட்ட கிருஷ்ணமூர்த்தி என்பவர் திருவொற்றியூர்
நெடுஞ்சாலையில் தனபாக்கியம் என்பவரை வழிமறித்து அவர்

அணிந்திருந்த ரூ. 3,000 மதிப்புள்ள தங்கச் சங்கிலியை பறித்துச் சென்றார். காவலர்கள் மேற்கொண்ட அயராத புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர் உடனடியாக கைது செய்யப்பட்டு அவரிடமிருந்து நகை மீட்கப்பட்டது. குற்றவாளி அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் ரூபாய் 40,000 பெறுமானமுள்ள மேலும் 5 வழக்குகளில் சம்பந்தப்பட்ட தங்க நகைகளும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

98. மதுரை (புறநகர்) மாவட்டம், தேனி காவல்நிலையக் குற்ற எண். 315/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1986 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 2 ஆம் நாளன்று அடையாளம் தெரியாத நான்கு பேர்கள் தேனியில் உள்ள டி. ஜே. பிரியாக் என்பவரின் வீட்டினுள் நுழைந்து வாயிற்காவலரை துப்பாக்கி அரிவாள் மற்றும் கத்தி போன்ற ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்தி அவரை கட்டிப் போட்டு அங்கிருந்து ரூ. 1,00,000 மதிப்புள்ள நகைகள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றைக் களவாடிச் சென்றனர். அயராத புலன் விசாரணை காரணமாக 1986 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 29 ஆம் நாளன்று முருகேசன், அழகர், முருகானந்தம் மற்றும் சோணை ஆகியோர் கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

99. செங்கல்பட்டு மேற்கு மாவட்டம், திருப்போரூர் காவல் நிலையக் குற்ற எண். 265/86-இல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 1986 ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 9 ஆம் நாளன்று ஜோசப் மற்றும் பரமன் ஆகியோர் திரைப்பட நடிகை ராஜபிரியா என்பவரை திருப்போரூரில் பயமுறுத்தி அவரிடமிருந்து ரூ. 40,000 மதிப்புள்ள தங்கநகைகளை வழிப்பறி செய்தனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15 ஆம் நாள் அன்று கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து ரூ. 15,000 மதிப்புள்ள ஒரு பகுதி நகைகள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

100. சென்னை நகரம் தேனாம்பேட்டைக் காவல் நிலையக் குற்ற எண் 2192/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் கிரி சாலையில் கதவிலக்கம் 19 எண்ணுடைய ஜெயாமன் என்பவரது வீட்டில் 2—8—1986 அன்று கனகராஜ், சிராசுதீன் மற்றும் சிவதாஸ்





ஆகியோர் நுழைந்து அங்கிருந்து ரூ. 15,000 மதிப்புள்ள காமிரா, கணக்கீட்டுக் கருவி, கேசட்டுகள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றைக் களவாடிச் சென்றனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் 7—8—1986 அன்று கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் 12—8—1986 அன்று மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

101. தர்மபுரி மாவட்டம் போச்சம்பள்ளியில் 4–12–1986 அன்று குற்றம் சாட்டப்பட்ட மாணிக்கம் மற்றும் அவனது கூட்டாளிகள் பஞ்சாட்சரம், திருப்பதி மற்றும் பேரி ஆகியோர் சுப்பிரமணியன் என்பவரின் வீட்டினுள் புகுந்து அங்கிருந்து ரூபாய் 53,000 மதிப்புள்ள தங்க நகைகள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றைக் களவாடிச் சென்றனர். திறமையான புலன் விசாரணை காரணமாகக் குற்றம் சாட்டப்பட்டவர்கள் முறையே 18—12—1986 மற்றும் 25—12—1986 ஆகிய தேதிகளில் கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

102. சேலம் மாவட்டம், குமாரபாளையம் காவல் நிலையக் குற்ற எண். 859/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 5—12—1986 அன்று சீவகவுண்டம்பாளையம் கிராமத்தில் குற்றம் சாட்டப்பட்ட பழனிச்சாமி என்பவர், புகார் மனுதாரரை வழிமறித்து அவரிடமிருந்து ரூ. 35,000 மதிப்புள்ள தங்க நகைகளை வழிப்பறி செய்தார். அயராத புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர் 9—12—1986 அன்று கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் அன்றே மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

**கன்னக்களவு:**

103. புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி நகரக் காவல் நிலையக் குற்ற எண். 8/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 7—1—1986 அன்று அறந்தாங்கியில் நகைக்கடை ஒன்றினுள் அடையாளம் தெரியாத குற்றவாளிகள் புகுந்து அங்கிருந்து ரூ. 1,14,400 மதிப்புள்ள தங்கம், வெள்ளி நகைகள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றைத் திருடினர். அயராத உடனடி புலன் விசாரணை காரணமாகக் குற்றம் சாட்டப்பட்ட யூசுப் மற்றும்

இராஜா ஆகியோர் முறையே 3—9—1986 மற்றும் 14—11—1986 அன்று கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

104. செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம், மாதவரம் காவல் நிலையக் குற்ற எண். 44/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 16—1—1986 அன்று அடையாளம் தெரியாத சில குற்றவாளிகள் மாதவரத்திலுள்ள பாரதி தோல் நிறுவனத்தின் உள்ளே நுழைந்து அங்கிருந்து ரூபாய் 80,000 மதிப்புள்ள பாம்புத் தோலினை திருடினர். அயராத புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்ட இராதாகிருஷ்ணன் மற்றும் முகமது இக்பால் ஆகியோர் 30—1—1986 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட அனைத்துப் பொருட்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

105. செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் விருகம்பாக்கம் காவல் நிலையக் குற்ற எண். 178/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 15—3—1986 அன்று அடையாளம் தெரியாத சில குற்றவாளிகள் விருகம்பாக்கம் ஏ.வி.எம். அவின்யூவில் 3-வது தெருவில், கதவு இலக்கம் 73 எண்ணுள்ள வீட்டினுள் புகுந்து அங்கிருந்து ரூ. 95,000 மதிப்புள்ள தங்க நகைகள் மற்றும் டேப்ரிக்கார்டர் ஆகியவற்றைக் களவாடிச் சென்றனர். காவலரால் மேற்கொள்ளப்பட்ட முறையான நடவடிக்கை காரணமாக குற்றம் சாட்டப்பட்ட மூர்த்தி என்பவர் 20—3—1986 அன்று கைது செய்யப்பட்டார். வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

106. செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் விஷ்ணு காஞ்சி காவல் நிலையக் குற்ற எண். 532/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 7—5—1986 அன்று காஞ்சிபுரம் வரதராச சுவாமி கோயிலின் உள்ளே அடையாளம் தெரியாத சில குற்றவாளிகள் புகுந்து அங்கிருந்து ரூ. 3,00,000 மதிப்புள்ள தங்கம் மற்றும் வைர நகைகளைக் களவாடினர். காவல் துறையினரின் திறமையான புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்ட அரசு, சண்முகம், மணி மற்றும் விஸ்வநாதன் ஆகியோர் 8—6—1986 அன்று கைது செய்யப்பட்டு ரூ. 2,90,000 மதிப்புள்ள பொருட்கள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.



107. செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் வாலாஜாபாத் காவல் நிலையக் குற்ற எண். 107/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 29—5—1986 அன்று அய்யம்பேட்டை கிராமத்தில் சம்பந்தம் என்பவரது வீட்டினுள் குற்றம் சாட்டப்பட்ட ஆனந்தன் என்பவர் புகுந்து அங்கிருந்து ரூ. 88,000 மதிப்புள்ள தங்கம் மற்றும் வைர நகைகளைக் களவாடிச் சென்றார். குற்றம் சாட்டப்பட்டவர் 17—6—1986 அன்று கைது செய்யப்பட்டு அனைத்து பொருட்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு தண்டனையில் முடிவுற்றது.

108. சென்னை நகரம் யானைக்கவுனி காவல் நிலையக் குற்ற எண். 302/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 11—7—1986 அன்று இரவு அடையாளம் தெரியாத சிலர் வீரப்பன் தெருவில் கதவிலக்கம் 42 என் உள்ள துர்க்கா துணிக்கடையின் பூட்டினை உடைத்து உள்ளே புகுந்து அங்கிருந்து ரூ. 85,000 மதிப்புள்ள துணிகள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றைக் களவாடிச் சென்றனர். காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட முறையான புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்ட கபூர்சந்த், ராஜ் அன்வர் மற்றும் ராஜீவ்கான் ஆகியோர் 3—8—1986 அன்று கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் 4—8—1986 அன்று மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

109. தென்னாற்காடு மாவட்டம் திருப்பாப்புலியூர் காவல் நிலையக் குற்ற எண். 676/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 17—7—1986 அன்று அடையாளம் தெரியாத சிலர் திருப்பாப்புலியூரிலுள்ள ரத்னா நகைக்கடை ஒன்றின் பூட்டினை உடைத்து உள்ளே புகுந்து அங்கிருந்து ரூ. 3,12,750 மதிப்புள்ள தங்கம், வெள்ளி நகைகள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றைக் களவாடினர். குறித்த காலத்தில் காவலரால் மேற்கொள்ளப்பட்ட அயராத புலன் விசாரணையின் காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்களான பாபு மற்றும் ராஜன் ஆகியோர் 3—9—1986 அன்று கைது செய்யப்பட்டு ரூ. 2,64,010 மதிப்புள்ள சொத்துக்கள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

110. பெரியார் மாவட்டம் தாராபுரம் காவல் நிலையக் குற்ற எண். 319/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 21—7—1986 அன்று இரவு குற்றம் சாட்டப்பட்ட செல்வராஜ் தாராபுரம் சின்னக்கடை வீதியிலுள்ள ரங்கசாமி என்பவரது வீட்டின் பூட்டை உடைத்து

[1987 மே 4

உள்ளே புகுந்து அங்கிருந்து ரூபாய் 2,11,000 மதிப்புள்ள தங்க நகைகள் மற்றும் ரொக்கம் ஆகியவற்றைக் களவாடிச் சென்றார். காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட அயராத மற்றும் முறையான புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர் கைது செய்யப்பட்டு அவரிடமிருந்து களவாடப்பட்ட அனைத்து சொத்துக்களும் 31—7—1986 அன்று மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

111. புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி காவல் நிலையக் குற்ற எண். 551/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 8—11—1986 அன்று குற்றம் சாட்டப்பட்ட கண்ணப்பன் என்பவர் குப்பம்பட்டியில் உள்ள ஒரு வீட்டின் உள்ளே புகுந்து அங்கிருந்து ரூ. 1,50,000 மதிப்புள்ள தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் மற்றும் பட்டுச் சேலைகள் ஆகியவற்றைக் களவாடிச் சென்றார். குற்றம் சாட்டப்பட்டவர் 12—1—1987 அன்று கைது செய்யப்பட்டு அனைத்துப் பொருட்களும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

**சிலைத் திருட்டு:**

112. தென்னாற்காடு மாவட்டம் சின்ன சேலம் காவல் நிலையக் குற்ற எண். 33/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 20—1—1986 அன்று அடையாளம் தெரியாத சிலர் கொலந்தான் கிராமச் சாவடியின் பூட்டினைக் கள்ளச்சாவி போட்டுத் திறந்து உள்ளே புகுந்து அங்கிருந்து ரூ. 50,000 மதிப்புள்ள பஞ்சலோகத்தால் செய்யப்பட்ட சிலையினைக் களவாடி சென்றனர். காவல் துறையினர் மேற்கொண்ட திறமையான புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்ட ராசு, மாரிமுத்து மற்றும் சிவன் ஆகியோர் 21—2—1986 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட சிலை மீட்கப் பட்டது. குற்றம் சாட்டப்பட்ட முதல் குற்றவாளிக்கு 6 மாத சிறைத் தண்டனை விதிக்கப் பட்டது. மற்ற இருவர்மீதும் உள்ள வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

113. தென்னாற்காடு மாவட்டம் திருநாவலூர் காவல் நிலையக் குற்ற எண். 36/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 4—2—1986 அன்று அடையாளம் தெரியாத சிலர் திருநாரன் குன்றத்தில் உள்ள அப்பேந்தவர் ஜெயின் கோயிலின் உள்ளே



1987 மே 4]

நுழைந்து அங்கிருந்து ரூ. 1,00,000 மதிப்புள்ள ஐந்து பஞ்ச லோகத்தாலான சிலைகளைத் திருடிச் சென்றனர். காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட முறையான புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் 4—3—1986 மற்றும் 7—3—1986 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட சிலைகள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

114. செங்கல்பட்டு கிழக்கு மாவட்டம் பள்ளிப்பட்டு காவல் நிலையக் குற்ற எண் 44/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 27—2—1986 அன்று அடையாளம் தெரியாத சிலர் ஆதிமன்சாரி பேட்டையில் உள்ள கோதண்டராமர் கோயிலின் உள்ளே நுழைந்து அங்கிருந்து ரூ. 1,00,000 மதிப்புள்ள 4 பஞ்சலோகத் தாலான சிலைகளைக் களவாடினர். காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட அயராத புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்ட பெனிசிலய்யா, பலராமுலு, மல்லியம் ராஜுபகதூர் மற்றும் மல்லசுதர்சன் ஆகியோர் 1—3—1986 அன்று கைது செய்யப்பட்டு அனைத்து சிலைகளும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு தண்டனையில் முடிவுற்றது.

115. பசும்பொன் முத்துராமலிங்க மாவட்டம், உலகம்பட்டி காவல் நிலையக் குற்ற எண் 61/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 21—4—1986-லிருந்து 7—7—1986-க்கு இடைப்பட்ட காலத்தில் முசுண்டப்பட்டியில் உள்ள சூரவல்லி அம்மன் கோயிலில் இருந்து ரூ. 65,000 மதிப்புள்ள பஞ்சலோகத்தாலான மூன்று சிலைகளை குற்றம் சாட்டப்பட்ட அழகன் என்பவர் களவாடினார். குற்றம் சாட்டப்பட்டவர் 7—7—1986 அன்று கைது செய்யப்பட்டு அனைத்து சிலைகளும் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

116. திருச்சிராப்பள்ளி மாவட்டம், ஸ்ரீரங்கம் காவல் நிலையக் குற்ற எண் 601/85-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 4—8—1985 அன்று அடையாளம் தெரியாத சிலர் உத்தமர்சேரியில் உள்ள செங்கனிவாய் பெருமாள் கோயிலின் பூட்டினை உடைத்து உள்ளே புகுந்து கோயிலின் பாதுகாவலர் மற்றும் கோயில் அர்ச்சகரின் மகன் ஆகியோரைக் கொலை செய்து அங்கிருந்த ரூ. 1,00,000 மதிப்புள்ள வெண்கலத்தாலான இரண்டு சிலைகளைத்

[1987 மே 4

திருடிச் சென்றனர். குற்றவாளிகளைக் கண்டுபிடிக்க ஏற்படுத்தப்பட்ட தனிப் படையினரின் அயராத முயற்சியின் காரணமாக குற்றம் சாட்டப்பட்ட கல்குடியைச் சார்ந்த செல்வராஜ் மற்றும் சாம்பசிவம் ஆகியோர் 29—8—1986 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட சிலைகள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

117. திருச்சிராப்பள்ளி மாவட்டம், விக்ரமங்கலம் காவல் நிலையக் குற்ற எண் 68/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 12—8—1986 அன்று இரவு குற்றம் சாட்டப்பட்ட கன்னையன், சுவாமிநாதன், காளி, ரமேசு, சிவலிங்கம், ராஜாங்கம் மற்றும் அண்ணாதுரை ஆகியோர் ஸ்ரீபுரந்தான் வைத்தியநாராயணன் கோயிலின் உள்ளே புகுந்து அங்கிருந்த ரூ. 12 இலட்சம் மதிப்புள்ள பஞ்சலோகத்தாலான மூன்று சிலைகள் மற்றும் வெள்ளிக் கிரீடம் ஆகியவற்றைக் களவாடிச் சென்றனர். காவல் துறையினரால் விரைவாக மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் 20—8—1986 அன்று கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் மீட்கப்பட்டன. வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

118. வடாற்காடு மாவட்டம் ஆரணி காவல் நிலையக் குற்ற எண். 131/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 11—9—1986 அன்று குற்றம் சாட்டப்பட்ட விஜயகுமார் என்பவர் உக்கல் கிராமத்திலுள்ள ஆயிஅம்மன் கோயிலின் உள்ளே புகுந்து அங்கிருந்து ரூ. 25,000 மதிப்புள்ள பஞ்சலோகத்தாலான அம்மன் சிலையைக் களவாடிச் சென்றார். குற்றம் சாட்டப்பட்டவர் 17—9—1986 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட சிலை மீட்கப்பட்டது. இவ்வழக்கு தண்டனையில் முடிவுற்றது.

119. வடாற்காடு மாவட்டம், மோரணம் காவல் நிலையக் குற்ற எண் 78/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 29—9—1986 அன்று அடையாளம் தெரியாத சிலர் பெருங்காட்டூர் கிராமத்தில் உள்ள ஈசுவரன் கோயிலின் உள்ளே புகுந்து அங்கிருந்த ரூ. 60,000



1987 மே 4]

மதிப்புள்ள பஞ்சலோகத்தாலான பொன்னி அம்மன் சிலையினைக் களவாடிச் சென்றனர். காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட அயராத புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்ட முருகன் மற்றும் இராமானுசம் ஆகியோர் 31—10—1986 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட சிலை மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

திருட்டு:

120. சென்னை நகரம் கோடம்பாக்கம் காவல் நிலையக் குற்ற எண் 51/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 5—1—1986 அன்று இரவு அடையாளம் தெரியாத சிலர் வடபழனியில் பிள்ளையார் கோவில் தெருவில் கதவிலக்கம் 5 எண்ணுள்ள ஒரு வீட்டிலிருந்து ரூ. 30,000 மதிப்புள்ள டி.எம்.டபிள்யூ. 6057 என்ற எண்ணுள்ள அம்பாசிடர் காரை களவாடிச் சென்றனர். குற்றம் சாட்டப்பட்ட சந்திரசேகரன், அரிகிருஷ்ணன் மற்றும் ஸ்ரீதர் ஆகியோர் 19—1—1986 அன்று கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து களவாடப்பட்ட காரும் மீட்கப்பட்டது. அவர்களின் ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் சென்னை, செங்கல்பட்டு மற்றும் தென்னாற்காடு ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற 8 கன்னக் களவு மற்றும் இரண்டு திருட்டு வழக்குகளில் களவாடப்பட்ட ரூ. 15 இலட்சம் மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளி நகைகள், பாத்திரங்கள், கைக்கடிகாரங்கள், கார் மற்றும் டேப்ரிக்கார்டர்கள் ஆகியவைகள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

121. பெரியார் மாவட்டம் கருங்கல்பாளையம் காவல் நிலையக் குற்ற எண் 74/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 6—2—1986 அன்று குற்றம் சாட்டப்பட்ட கண்ணன் என்பவர் ஈரோட்டிலுள்ள பி.பி. அக்ரகாரம் என்ற இடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த ரூ. 1,00,000 மதிப்புள்ள எம்.எஸ்.எல். 3189 என்ற எண்ணுள்ள லாரியினை திருடி ஓட்டிச் சென்றுவிட்டார். குற்றம் சாட்டப்பட்டவர் அன்றே கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட லாரியும் மீட்கப்பட்டது. இவ்வழக்கு தண்டனையில் முடிவுற்றது.

122. செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் திருத்தணி காவல் நிலையக் குற்ற எண் 920/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 27—8—1986 அன்று குற்றம் சாட்டப்பட்ட லோகநாதன், மனோ

கரன் மற்றும் தனபால் ஆகியோர் ஆக்கூர் இந்திய உணவு கழகத்தின் சேமிப்பு கிடங்கிலிருந்து ரூ. 1 இலட்சம் மதிப்புள்ள 500 கோதுமை மூட்டைகளைக் களவாடிச் சென்றனர். குற்றம் சாட்டப்பட்டவர்கள் 10—11—1986 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட கோதுமை மூட்டைகள் மீட்கப்பட்டன. இவ் வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

123. பெரியார் மாவட்டம் வெள்ளக்கோவில் காவல் நிலையக் குற்ற எண். 241/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 12—9—1986 அன்று இரவு குற்றம் சாட்டப்பட்ட வெங்கடாச்சலம் என்பவர் நொய்யல் என்ற இடத்தில் இருந்து ரூ. 2,28,000 மதிப்புள்ள காற்று அழுத்தக் கருவியினை திருடினார். குற்றவாளி கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட பொருள் 27—9—1986 அன்று மீட்கப்பட்டது. இவ்வழக்கு தண்டனையில் முடிவுற்றது.

124. சென்னை நகரம் யானைக்கவுனி காவல் நிலையக் குற்ற எண். 382/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 17—9—1986 அன்று குற்றம் சாட்டப்பட்ட சுப்பையா என்பவர் டி.எம்.இ. 3246 என்ற எண்ணுடைய டாடாபென்ஸ் லாரியினை 130 ஏசியாடிக் ஆக்சிசன் சிலிண்டர்களுடன் கடத்திச் சென்றார். இவற்றின் மதிப்பு மொத்தம் ரூ. 5 இலட்சம் ஆகும். குற்றம் சாட்டப் பட்டவர் 18—9—1986 அன்று கைது செய்யப்பட்டு அனைத்து சொத்துக்களும் அன்றே மீட்கப்பட்டன. வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

125. சென்னை நகரம் திருவல்லிக்கேணி டி-1 காவல் நிலையக் குற்ற எண். 2355/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 30—9—1986 அன்று திருப்பூரைச் சேர்ந்த சரோஜினி என்ற சோபனா என்ற சீதா என்ற ஜானகி என்ற சுப்புலட்சுமி என்ற இராசலட்சுமி என்பவர் காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார். இவர் சென்னை நகரில் உள்ள பல வீடுகளில் தொடர்ச்சியாக ஒரே விதமாக நடைபெற்ற 18 திருட்டு வழக்குகளில், தன்னை அவ்வீடு களில் உள்ளவர்களின் உறவினர் மற்றும் நண்பர் என்று கூறிக் கொண்டு அவர்களிடமிருந்து விலைமதிப்புள்ள பொருட்களைக் களவாடினார். அவரது ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் ரூ. [illegible] மதிப்புள்ள பொருட்கள் மீட்கப்பட்டன. இவ்வழக்கு தண்டனையில் முடிவுற்றது.

1987 மே 4]

126. திருச்சிராப்பள்ளி மாவட்டம், டி.டி. பேட்டை காவல் நிலையக் குற்ற எண். 125/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 8—11—1986 அன்று குற்றம் சாட்டப்பட்ட நடராசன் மற்றும் சுகுமாரன் ஆகியோர் ரூ. 1,40,000 மதிப்புள்ள டி.சி.யு. 600 என்ற எண்ணுடைய அம்பாசிடர் கார் ஒன்றினைக் கலிங்கப்பட்டி என்ற கிராமத்திலிருந்து களவாடிச் சென்றனர். காவல் துறையினரால் குறித்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை காரணமாக குற்றம் சாட்டப்பட்டவர்கள் 10—11—1986 அன்று கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட கார் மீட்கப்பட்டது. இவ்வழக்கு தண்டனையில் முடிவுற்றது.

127. அண்ணா மாவட்டம் ஒட்டன்சத்திரம் காவல் நிலையக் குற்ற எண் 834/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 21—12—1986 அன்று குற்றம் சாட்டப்பட்ட சேகர் என்பவர் ஒட்டன்சத்திரத்திலுள்ள பழனி சாலையில் ரூ. 1,00,000 மதிப்புள்ள டி.என்.ஐ. 9272 என்ற எண்ணுள்ள கார் ஒன்றினைக் களவாடிச் சென்றார். குற்றவாளி கைது செய்யப்பட்டு களவாடப்பட்ட கார் மீட்கப்பட்டது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

**குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினரின் குறிப்பிடத்தக்க சில பணிகள்.**

128. பழவந்தாங்கல் காவல் நிலையக் குற்ற எண் 266/85-ல் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 498 (ஏ), 306 மற்றும் வரதட்சணை தடைச் சட்டத்தில் பிரிவு 4 ஆகியவற்றின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 17—10—1986 அன்று உஷாராணி என்ற பாக்கியராணி என்பவர் மண்ணெண்ணெய் அடுப்பினை பற்ற வைக்கும்போது ஏற்பட்ட தீக் காயங்களினால் மரணம் அடைந்தார். இறந்துபோன பெண்ணின் உடன் பிறந்த சகோதரன் தனது சகோதரியின் இறப்பில் சந்தேகம் இருப்பதாக அளித்த புகாரின் பேரில் இவ்வழக்கு குற்றப் புலனாய்வுத் துறையினரின் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இறந்துபோன பெண்ணின் கணவர் மீது 23—10—1986 அன்று குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினால் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. இவ்வழக்கு சைதாப்பேட்டை இரண்டாம் வகுப்பு குற்றவியல் நடுவர்மன்றத்தின் விசாரணையில் உள்ளது.

129. விழுப்புரம் ரயில்வே காவல் நிலையக் குற்ற எண் 475/86-ல் இ.த.ச. பிரிவுகள் 395 மற்றும் 420-ல் பதிவு செய்யப்பட்ட குற்ற வழக்கில் ஆந்திர மாநிலம் நெல்லூரைச் சார்ந்த காந்திலால் என்ற நகை வியாபாரி மதுரையிலிருந்து சென்னை செல்லும் கொல்லம் மெயில் வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தபோது 22—3—1986 அன்று இரவு சுங்க இலாகாவினர் போல் நடித்த சிலர் விழுப்புரம் ரயில் நிலையத்தில் அவரை சோதனையிட்டனர். பின்பு அவர்கள் அங்கிருந்து பண்ருட்டி சாலைக்கு அவரை அழைத்துச் சென்று, அவரிடமிருந்து 500 கிராம் தங்க நகைகள் மற்றும் ரூ. 84,000-ஐ கொள்ளையடித்துவிட்டு பின்பு சாலையில் தனியாக விட்டுவிட்டு தப்பிச் சென்றனர். அயராத புலன் விசாரணை காரணமாக குற்றம் சாட்டப்பட்ட பாண்டி, கண்ணன், கணேசன், நாகலிங்கம் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் 19—10—1986, 16—11—1986 மற்றும் 30—11—1986 ஆகிய தேதிகளில் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து 85 கிராம் தங்க நகைகள் மற்றும் ரொக்கம் ரூபாய் 48,000 கைப்பற்றப்பட்டது. குற்றவாளிகளில் ஒருவரான மகாராசன் என்பவர் சென்னை உயர்நீதிமன்றத்தின் எதிர்நோக்கு பிணையில் உள்ளார். மற்றொரு குற்றவாளி துரைப் பாண்டி தலைமறைவாக உள்ளார். வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

130. சிதம்பரனார் மாவட்டம் ஆழ்வார்திருநகரி காவல் நிலையக் குற்ற எண் 267/86-ல் இ.த.ச. பிரிவுகள் 457, 380 மற்றும் 120 (பி)ன் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 28—7—1986 அன்று இரவு தென்திருப்பேரையில் உள்ள திருமகரநெடுங்குழை காதர் கோவிலிலிருந்து ரூபாய் 25 இலட்சம் மதிப்புள்ள தங்க நகைகள் மற்றும் வெள்ளி நகைகள் களவாடப்பட்டன. இவ்வழக்கு 18—8—1986 அன்று குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையினரால் புலன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு அவர்களால் சாலமன், எட்வின் காமஸ், தர்மன், சிவான்குமார், புல்பாண்டியன், போஸ், கிருஷ்ண அய்யங்கார், லட்சுமணன் மற்றும் ராசலிங்கம் ஆகியோர் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து உருக்கப்பட்ட தங்க நகைகள், புதியதாக வாங்கப்பட்ட நகைகள் மற்றும் ரொக்கம் ஆகியவை கைப்பற்றப்பட்டன. குற்றம் சாட்டப்பட்ட முத்துராமலிங்கம்





என்பவர் சாத்தூர் இரண்டாம் குற்றவியல் நடுவர் முன்பு சரண் அடைந்தார். அவர் காவல் துறையினரிடம் விசாரணையின் போது கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் அவரிடமிருந்து உருக்கப்பட்ட தங்க நகைகள் மற்றும் ரொக்கம் ஆகியவை மீட்கப்பட்டன. குற்றம் சாட்டப்பட்ட அனைவரும் நீதிமன்றக் காவலில் உள்ளனர். இதில் சாலமன் என்பவர் குற்றம் ஒப்பிய சான்றுரைஞராக மாறினார். இவ்வழக்கில் புலன் விசாரணை முடிவு பெற்று நீதிமன்றத்தில் குற்றப் பத்திரிகை விரைவில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

131. 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் நாளன்று குஜராத் மாநிலத்தில் சூரத் பிரிவிலுள்ள பாங்க் ஆப் பரோடாவில் ரூ. 2 இலட்சம் கொள்ளை அடிக்கப்பட்ட சம்பவம் ஒன்று நடைபெற்றது. இது பற்றிய செய்தி 18—4—1986 அன்று வெளியான செய்திப் பத்திரிகைகளில் இடம் பெற்றிருந்தன. இதன் அடிப்படையில் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினர் இவ்வழக்கில் துப்பு துலக்க தாங்களாகவே திட்டங்களை வகுத்தனர். திருச்சிராப்பள்ளி மாவட்டம் ராம்ஜி நகரைச் சார்ந்த குற்றவாளிகள் இதில் சம்பந்தப்பட்டிருப்பதாக காவல் துறையினருக்கு நம்பத்தகுந்த இடத்திலிருந்து செய்தி கிடைத்தது. குற்றப் புலனாய்வுத் துறையினரின் தனிப் பிரிவினைச் சார்ந்த குழுவினரின் திறமையான புலன் விசாரணையின் காரணமாக ராம்ஜி நகரைச் சார்ந்த ரத்தினம் மற்றும் இடும்பன் ஆகியோர் 29—4—1986 அன்று கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து களவாடப்பட்ட தொகையான ரூ. 1,90,000 அன்றைய தினமே மீட்கப்பட்டது. இச் சம்பவம் தொடர்பாக திருச்சி கண்டோன்மெண்ட் காவல் நிலையக் குற்ற எண் 582/86-ல் குற்றவியல் சட்டப் பிரிவு 41(1) மற்றும் 102-ன்கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. வழக்கு தண்டனையில் முடிவுற்றது.

132. 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17 ஆம் நாள் அன்று உத்திரப் பிரதேச மாநிலம் மதுரா ரயில்வே நிலையத்தில் இருந்து அடையாளம் தெரியாத இரண்டு குற்றவாளிகள் ரொக்கம் ரூ. 1,90,443 அடங்கிய பணப் பெட்டியைக் களவாடிச் சென்றனர். குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினர் இவ்வழக்கில் புலன் விசாரணை செய்து திருச்சிராப்பள்ளி மாவட்டம் ராம்ஜி நகரைச் சார்ந்த பிரகாஷ் மற்றும் பாபு ஆகியோரை 8—8—1986 அன்று கைது செய்து அவர்களிடமிருந்து ரூ. 1,60,000 அன்றைய

திருமேனி கைப்பற்றப்பட்டது. இச் சம்பவம் தொடர்பாக 8—8—1986 அன்று திருச்சி கண்டோன்மென்ட் காவல் நிலையக் குற்ற எண் 1142/86-ல் குற்றவியல் சட்டப் பிரிவு 41 (1) மற்றும் 102-ன்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

133. திருச்சிராப்பள்ளி கண்டோன்மென்ட் காவல் நிலையக் குற்ற எண் 1264/86-ல் குற்றவியல் சட்டம் 41 (1) மற்றும் 102 ஆகிய பிரிவுகளின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 31—8—1986 அன்று ராம்ஜி நகரைச் சார்ந்த கலைமணி என்பவர் சந்தேகத்திற்குரிய சூழ்நிலையில் குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டார். புலன் விசாரணையின் போது அவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் மூலம் பெங்களூர் கப்பன் பார்க் காவல் நிலையக் குற்ற எண் 365/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் களவு போன ரூ. 32,000 மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் அவரிடமிருந்து அன்றே மீட்கப் பட்டன. இவ்வழக்கின் மீது மேல் நடவடிக்கை தொடர்வதற்காக, 12—9—1986 அன்று பெங்களூர் நகர கப்பன் பார்க் காவல் நிலையத்திற்கு மாற்றப்பட்டது.

**சிலைத் திருட்டு பிரிவிற்கான குற்றப் புலனாய்வுத் துறையினரின் குறிப்பிடத் தக்க சில பணிகள்.**

134. திருச்சிராப்பள்ளி மாவட்டம் கண்டோன்மெண்ட் காவல் நிலையக் குற்ற எண் 900/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 23—6—1986 அன்று திருச்சிராப்பள்ளியில் எம்.கே.டி. பாகவதர் சாலையில் குற்றம் சாட்டப்பட்ட சேதுராமலிங்கம் மற்றும் உதயகுமார் ஆகியோர் பஞ்சலோகத்தாலான நடராசர் சிலையுடன் கைது செய்யப்பட்டனர். புலன் விசாரணையின் மூலம் இந்தச் சிலையானது சிதம்பரனார் மாவட்டம் மொரப்பநாடு காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வல்லநாடு கிராமத்திலுள்ள திருமூலீஸ்வரர் கோயிலிலிருந்து 25—7—1985 அன்று களவாடப் பட்டது என்று தெரியவந்தது. இந்தச் சிலை கி.பி. 15-ம் நூற்றாண்டினைச் சார்ந்தது ஆகும். இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

135. சென்னை நகரம் சைதாப்பேட்டை குற்றப் பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக் குற்ற எண் 41/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் 5—9—1986 அன்று சைதாப்பேட்டையில் லோகநாதன்



என்பவர் சந்தேகத்திற்குரிய சூழ்நிலையில் கைது செய்யப்பட்டு அவரிடமிருந்து பஞ்சலோகத்தாலான ஆறு சிலைகள் மீட்கப் பட்டன. புலன் விசாரணையின் மூலம் இந்தச் சிலைகள் 17—11—1985 அன்று திருச்சிராப்பள்ளி செந்துறை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட வேலூர் என்ற கிராமத்திலுள்ள அருள்மிகு வைத்தியநாத சுவாமி ஆலயத்திலிருந்து திருடப் பட்டவை என்று தெரிய வந்தது. இவ்வழக்கு புலன் விசாரணையில் உள்ளது.

136. சென்னை நகரம் குற்றப் பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையினரால் குற்ற எண் 21/86-ல் பதிவு செய்யப்பட்ட வழக்கில் புரசைவாக்கத்தில் ஸ்ரீனிவாசன் என்பவர் 5—5—1986 அன்று சந்தேகத்திற்குரிய சூழ்நிலையில் கைது செய்யப்பட்டு அவரிட மிருந்து பஞ்சலோகத்தாலான வள்ளியம்மன் சிலை ஒன்று கைப்பற்றப்பட்டது. அவரது ஒப்புதல் வாக்கு மூலத்தின் மூலம் மேலும் இரண்டு பஞ்சலோகத்தாலான சிலைகள் கைப்பற்றப் பட்டன. புலன் விசாரணையின்போது இந்த சிலைகள் வடஆற்காடு மாவட்டம் பெரியகுளப்புதூரிலுள்ள ஈஸ்வரர் கோயிலிலிருந்து 18—9—1983 அன்று இரவு திருடப்பட்டவை என்று தெரிய வந்தது. இவ்வழக்கு நீதிமன்ற விசாரணையில் உள்ளது.

**சட்டம் மற்றும் ஒழுங்கு.**

137. தமிழ்நாடு இனப்பூசல் அதிகமின்றி பொதுவாக அமைதி காத்து வருகிறது. ஆயினும் நீண்ட காலமாக இருந்து வந்த பகைமை உணர்வு, நிலத் தகராறு, மதம் மற்றும் விழாக் கால ஊர்வலங்கள் மற்றும் கேலி செய்தல் ஆகியவை காரணமாக சில சம்பவங்கள் நடைபெற்றன. ஆனால் உடனுக்குடன் காவலர் விழிப்புடன் செயல்பட்டு, இரு சாரரையும் கூட்டி, சமரசம் செய்வித்தும் சமூகவிரோதிகளைக் கைது செய்தும், நிலைமையைக் கட்டுப்படுத்தினர்.

**இனக் கலவரங்கள்.**

138. திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம் தென்காசியில் 15—9—1986 அன்று மொகரம் பண்டிகையினை முன்னிட்டு இஸ்லாமியர்கள் தங்கள் மத சின்னத்தினைப் பல்லக்கில் வைத்துத் தூக்கிக் கொண்டு தெற்கு ரதவீதி வழியாக ஊர்வலம் சென்றனர்.

வீட்டில் இருந்துகொண்டு ஊர்வலத்தைப் பார்த்துக்கொண்டிருந்த சட்டமன்ற உறுப்பினர் திரு. வேங்கடரமணன் வீட்டினர்மீது சமூக விரோதிகள் செருப்புகளையும் செங்கற்களையும் எறிந்ததில் திரு. வேங்கடரமணனின் உறவினர்களுக்கு காயம் ஏற்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த சுமார் 200 இந்து முன்னணி உறுப்பினர்கள் அருகிலுள்ள உள்ளூர் கோயிலின் அருகே கூடி இஸ்லாமியர்கள் இதற்கு மன்னிப்பு கேட்கவேண்டும் என்று கோரினர். காவல் துறையினரால் தகுந்த நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை காரணமாக ஒரு பெரிய மோதல் ஏற்படுவது தவிர்க்கப்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக 17—9—1986 அன்று அமைதிக் குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டு இரு தரப்பினரும் அமைதி காக்க ஒப்புக்கொண்டனர்.

139. வடஆற்காடு மாவட்டம் உத்திரப்பள்ளியில் 6—10—1986 அன்று இரு வகுப்பினர்களுக்குமிடையே நிலவி வந்த மனக்கசப்பின் காரணமாக சுமார் 50 வன்னியர்கள் ஒரு மதம் மாறிய இஸ்லாமியரை தாக்கியும் மற்றும் ஒரு மதம் மாறிய இஸ்லாமியருக்குச் சொந்தமான மோட்டார்சைக்கிளுக்கு சேதமும் விளைவித்தனர். இச்சம்பவம் தொடர்பாக உமராபாத் காவல் நிலையக் குற்ற எண் 194/86-ன் கீழ் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

140. தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோவிலில் 29—7—1986 அன்று மாரியம்மன் கோவில் திருவிழா தொடங்கியது. 6—8—1986 அன்று நடைபெறவிருந்த திருவிழா காட்டுமன்னார் கோவிலிலுள்ள தனியார் மோட்டார் தொழிலாளர் சங்கத்தின் ஆதரவால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அப்பகுதியில் காவல் சட்டப் பிரிவு 30 (ii)-ன் கீழ் அமுலில் இருந்த தடை உத்தரவை மீறி, சங்கத்திலுள்ள வன்னிய இனத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் திருவிழா கொண்டாட்டத்தின்போது முரசு கொட்டுவதற்காக ஏற்பாடு செய்திருந்தது தெரியவந்தது. உள்ளூர் ஆதி திராவிடர்கள் இவ்வாறு முரசு கொட்டுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். அமைதிக்குக் குந்தகம் விளையும் என்பதை எதிர் நோக்கி தடுப்பு நடவடிக்கையாக 21 சாதி இந்துக்கள் உள்ளூர் காவலர்களால் கைது செய்யப்பட்டு காட்டுமன்னார் கோவிலில் ஒரு பெரிய மோதல் ஏற்படுவது தவிர்க்கப்பட்டது. 9—8—1986 அன்று கைது செய்யப்பட்ட அனைவரும் விடுதலை செய்யப்பட்டு,





இவ்வழக்கில் அவர்கள்மீது மேற்கொண்டு எடுக்கப்படவிருந்த நடவடிக்கைகளும் கைவிடப்பட்டன. 10—8—1986 அன்று தனியார் மோட்டார் தொழிலாளர் சங்கத்தினரால் மாரியம்மன் கோவில் திருவிழா எவ்வித அசம்பாவித சம்பவமுமின்றி அமைதியாகக் கொண்டாடப்பட்டது.

141. திருச்சிராப்பள்ளி மாவட்டம் நெய்குப்பையில் உள்ள சாதி இந்துக்கள், கூலித் தகராறு காரணமாகத் தங்கள் வயல்களில் வேலை செய்வதற்கு வெளி ஆட்களைக் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ததினால். 2—9—1986 மற்றும் 9—9—1986 ஆகிய தேதிகளில் சாதி இந்துக்களுக்கும் ஆதி திராவிடர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டு வன்முறையில் ஈடுபட்டனர். உள்ளூர் காவலர்கள் செய்த முயற்சியினால் 14—9—1986 அன்று அமைதிக் குழு கூட்டம் நடைபெற்று நிலைமை கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

142. கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காட்டில் 1982 ஆம் ஆண்டு நடைபெற்ற பகவதி அம்மன் கோயில் திருவிழாவின்போது ஏற்பட்ட சம்பவங்களைக் கருத்தில் கொண்டு 1986 ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் நடைபெற்ற மண்டைக்காடு பகவதி அம்மன் கோயில் திருவிழாவிற்கு தகுந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. சமூக விரோத சக்திகள் இடையூறுகள் செய்ய முயற்சித்தும், காவல் துறையினர் உடன் நடவடிக்கை மேற்கொண்டு சிற்சில இடங்களில் ஏற்பட்ட பதட்ட நிலைமையைத் தவிர்த்தமையால் திருவிழா அமைதியாக நடைபெற்றது.

### தீவிரவாதிகளின் நடவடிக்கை.

143. ஆய்விலுள்ள இவ்வாண்டில் பல்வேறு தீவிரவாதிப் பிரிவுகள் மற்றும் முன்னணி அமைப்புகளின் நடவடிக்கைகள் குறைந்திருந்தன.

144. 1986 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29 ஆம் நாளன்று தஞ்சாவூருக்கும் திருவையாறுக்கும் இடையில் குடமுருட்டி பாலத்தில் குண்டு வெடிப்பு சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. பாலத்தின் கைப்பிடிச் சுவர் சுமார் 2 மீட்டர் நீளத்திற்கு சேதமடைந்தது. வெடிக்காமல் இருந்த ஒரு வெடிகுண்டு கண்டு பிடிக்கப்பட்டது. காவிரி நீர்ப் பிரச்சினை போன்றவற்றில் தீர்வு காணாமைக்காக இந்திய பிரதமரைக் குறை கூறும்

வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் அங்கு காணப்பட்டன. இச்சம்பவம் தொடர்பாக திருவையாறு காவல் நிலையக் குற்ற எண் 53/86-ல் இ.த.ச. பிரிவு 427 உடன் கூடிய வெடிமருந்து பொருள்கள் சட்டப் பிரிவு 3-ல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றப் புலனாய்வுத் துறையின் புலன் விசாரணையில் உள்ளது.

145. 1986 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 17 ஆம் நாளன்று முற்போக்கு இளைஞர் அணியைச் சேர்ந்த 53 பேர் தர்மபுரி மாவட்டம் கொல்லப்பட்டி கிராமத்தில் பூதல் மகன் இராஜகோபால் என்பவரது வீட்டினுள் நுழைந்து அவரையும், அவரது மனைவியையும் அச்சுறுத்தி மொத்தம் ரூ. 50,000 மதிப்புள்ள 35 சவரன் தங்க நகைகள், டேப் ரிக்கார்டர் மற்றும் துணிகள் ஆகியவற்றினை எடுத்துச் சென்றனர். இச்சம்பவம் தொடர்பாக மதிகோணபாளையம் காவல் நிலையக் குற்ற எண் 26/86-ல் இ.த.ச. பிரிவு 397-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு உள்ளூர் காவல் துறையினரால் புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது.

146. 1986-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 4-ஆம் நாளன்று முற்போக்கு இளைஞர் அணியைச் சேர்ந்த 3 பேர் தர்மபுரி மாவட்டம் போச்சம்பள்ளி காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சந்தூர் கொல்லக் கோட்டையில் தமிழரசன் என்பவரின் வீட்டினுள் புகுந்து அங்கிருந்தவர்களை அச்சுறுத்தி அங்கிருந்த 40 சவரன் தங்க நகைகளையும் மற்றும் ரொக்கம் ரூ. 13,000-யும் எடுத்துச் சென்றனர். காவல் துறையினர் மேற்கொண்ட நடவடிக்கையால் அவர்களிடமிருந்து ரொக்கம் ரூ. 2,500 மற்றும் 40 சவரன் தங்க நகைகளும் மீட்கப்பட்டன. இச்சம்பவம் தொடர்பாக போச்சம்பள்ளி காவல் நிலையக் குற்ற எண் 167/86-ன் கீழ் இ.த.ச. பிரிவு 397-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு உள்ளூர் காவலர்களால் புலன் விசாரணை செய்யப்பட்டு வருகிறது. நடப்பாண்டில் முற்போக்கு இளைஞர் அணியினர் நடவடிக்கைகள் விழிப்புடன் கண்காணிக்கப்பட்டன. சில பகுதிகளில் குடி தண்ணீர் பற்றாக்குறை போன்ற சில உள்ளூர் பிரச்சினைகளை இவர்கள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வது தெரியவந்தது. இது போன்ற உள்ளூர் பிரச்சினைகளில் அவர்களின் குறைகளைத் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



## விவசாய நிலைமை.

147. இவ்வாண்டு விவசாய நிலைமை பொதுவாக அமைதியாக இருந்தது. இந்திய உழவர் மற்றும் உழைப்பாளர் கட்சியினர் சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும் வகையில் எந்தவித பெரிய போராட்டங்களையும் இவ்வாண்டு நடத்தவில்லை.

## தொழிலாளர்கள்.

148. போக்குவரத்துத் தொழிலாளர்கள், நெசவாலைத் தொழிலாளர்கள் மற்றும் சில தொழிற் சங்கங்களினால் ஏற்பாடு செய்யப்பட்ட வேலை நிறுத்தம் தவிர 1986-ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் தொழிலாளர் நிலைமை பொதுவாக அமைதியாகவே தொடர்ந்து இருந்தது.

## போக்குவரத்துத் தொழிலாளர்கள்.

149. 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 20 ஆம் நாளன்று புதுக்கோட்டையிலிருந்து கொத்தமங்கலம் செல்லும் மருது பாண்டியர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்து ஒன்று திருவரன்குளம் என்ற இடத்தில் சைக்கிளில் பயணம் செய்து கொண்டிருந்த ஒருவரின் மீது மோதியதால் அவருக்குக் காயம் ஏற்பட்டது. இச்சமபவம் காரணமாக ஏற்பட்ட சட்டம் மற்றும் ஒழுங்கு பிரச்சினை காவலரால் குறித்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை காரணமாக கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. மேலும் இச்சம்பவம் தொடர்பாக போக்குவரத்துத் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட வேலை நிறுத்தம் மாவட்ட ஆட்சியாளரால் நடத்தப்பட்ட சமரச பேச்சு வார்த்தையில் எற்பட்ட ஒப்பந்தத்தைத் தொடர்ந்து 1986-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22-ஆம் நாளன்று கைவிடப்பட்டது.

## நெசவாலைத் தொழிலாளர்கள்.

150. பல்வேறு தொழிற் சங்கங்கள் மற்றும் அதன் முக்கிய தலைவர்களால் 1986 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 5 ஆம் நாளன்று கோயம்புத்தூரிலிருந்து தொடங்கப்பட்ட 101 பேரைக் கொண்ட பாதயாத்திரை 1986 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 29 ஆம் நாளன்று சென்னையை வந்தடைந்தது. அமலில்

இருந்த தடையுத்திரவினையும் மீறி, மூடப்பட்டுள்ள தொழிற்சாலையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்படி மாநில அரசினைக் கோரி தலைமைச் செயலகத்தின் முன் மறியல் செய்வதற்காக அவர்கள் 1986 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளன்று தேனாம்பேட்டையில் உள்ள ஜீவா இல்லத்தின் அருகில் இருந்து ஊர்வலமாகச் சென்றனர். முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அவர்கள் கைது செய்யப்பட்டு பின்பு அன்றே விடுதலை செய்யப்பட்டனர்.

151. மாநிலத்தில் மூடப்பட்ட தொழிற்சாலைகளை மீண்டும் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கக் கோரியும் மற்றும் சென்னையில் நெசவாலை தொழிலாளர்கள் மற்றும் தொழிற் சங்க தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும் கோயம்புத்தூர் ஊரகம் மாவட்டத்தில் 65 தொழிற்சாலைகள், கோயம்புத்தூர் புறநகர் மாவட்டத்தில் உள்ள 37 தொழிற்சாலைகள், மற்றும் பெரியார் மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலை ஆகியவற்றைச் சார்ந்த சுமார் 55,000 தொழிலாளர்கள் 1986 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாள் முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். நெசவாலைத் தொழிற் சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக் குழுவின் வேண்டுகோளிற்கிணங்க 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 9 ஆம் நாளன்று வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

152. ஒழுங்கு நடவடிக்கை காரணமாக ஒரு தொழிலாளர் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து 1986 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6 ஆம் நாள் முதல் செந்தண்ணீர்புரத்தில் உள்ள ஸ்டீல் ரோலிங் ஆலையின் தொழிலாளர்கள் உள்ளிருப்பு வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனை அடுத்து ஆலைக்கு உண்மையுள்ள தொழிலாளர்களுக்கும் மற்றும் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்களுக்கும் இடையே தொடர்ச்சியாகப் பல சம்பவங்கள் நிகழ்ந்தன. மொத்தம் 274 தொழிலாளர்களும் மற்றும் அவர்களது குடும்பத்தினரைச் சேர்ந்த 19 பேர்களும் கைது செய்யப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

153. தொழில் சங்கங்களுக்கிடையே நிலவி வந்த பகைமை காரணமாக சோளிங்கர் துணி ஆலையின் தொழிலாளர்களுக்கிடையே கசப்புணர்வு இருந்து வந்தது. 1986 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12 ஆம் நாள் மற்றும் 14 ஆம் நாளில் தொழிலாளர்



களுக்கிடையே தொடர்ந்து பல மோதல்கள் ஏற்பட்டன. காவல் துறையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை காரணமாக அமைதி திரும்பியது.

154. 1986 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 5 ஆம் நாள் அன்று மதுரை (புறநகர்) மாவட்டம் தேனியில் உள்ள ரேணுகா ஆலையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களில் ஒரு பிரிவினர் மற்றும் அவர்களது குடும்பத்தினர் ஆலையின் உள்ளே அத்து மீறி நுழைந்து அதன் வாயிற் காவலரைத் தாக்கி, தொழிற்சாலையின் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்து அதன் விசுவாச ஊழியர்கள் வேலை செய்வதை தடுக்கவும் செய்தனர். காவலர்கள் அவ்விடத்திற்கு விரைந்து சென்று 9 பெண்கள் உட்பட 170 பேர்களைக் கைது செய்தனர். அவர்கள் தாங்கள் கைது செய்யப்படுவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்போது கூட்டத்திலிருந்து வேறு சிலர் கல்லெறிந்தனர். அதன் பிறகு காவலர்கள் அவர்களை விரட்டினர். இச்சம்பவத்தில் ஒரு சார்பு ஆய்வாளர் மற்றும் ஒரு பெண் உட்பட ஆறு பேர்களும் மற்றும் பேருந்தில் பயணம் செய்துகொண்டிருந்த இருவரும் காயம் அடைந்தனர். இச்சம்பவம் தொடர்பாக காவல் துறையினர் இரண்டு வழக்குகளைப் பதிவு செய்துள்ளனர்.

155. நெசவாலைத் தொழிலாளர்கள் மேற்கொண்ட வேலை நிறுத்தம் காரணமாக கோயம்புத்தூர் புறநகர் மாவட்டத்தில் உள்ள 76 துணி ஆலைகளில் 1986 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6 ஆம் நாள் முதல் வேலை நடைபெறவில்லை. 5 ஆலைகளில் மட்டும் குறைவான பணியாட்களுடன் வேலை நடைபெற்றது.

156. 1986 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 7 ஆம் நாள் முதல் 9 ஆம் நாள் வரையிலான காலத்தில் நடைபெற்ற மூன்று சம்பவங்களில் கோயம்புத்தூர் ஊரகம் மாவட்டத்தில் உள்ள சோமனூர், அனுப்பர்பாளையம் மற்றும் கோயம்புத்தூரைச் சேர்ந்த புதூர் ஆகிய மூன்று இடங்களில் போக்குவரத்துக் கழக பேருந்துகளின் மீது கல்லெறிதல், அவைகளுக்குத் தீ வைத்தல் மற்றும் வாகனப் போக்குவரத்தினைத் தடை செய்தல் போன்ற வன்முறைச் சம்பவங்களில் அடையாளம் தெரியாத சிலர் ஈடுபட்டனர். மூடப்பட்ட பஞ்சாலைகளை மீண்டும் திறக்கக் கோரி 1986 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9 ஆம் நாளன்று [illegible] செய்யுமாறு பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத்

கூட்டுக்குழு விடுத்த வேண்டுகோளிற்கிணங்க கோயம்புத்தூரில் நடைபெற்ற கடையடைப்பு அமைதியாகவே இருந்தது. எனினும் கோயம்புத்தூர் நகரம் கௌண்டம்பாளையத்தில் சேரன் போக்கு வரத்துக் கழகத்திற்குச் சொந்தமான 3 பேருந்துகள் மீது சில சமூக விரோதிகள் கல்லெறிந்தனர். கோயம்புத்தூர் நகரம் மற்றும் ஊரக மாவட்டங்களில் சுமார் 100 பஞ்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்கள் மேலே கூறப்பட்ட காரணத்திற்காக 1986 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 6 ஆம் நாள் முதல் செய்து வந்த வேலை நிறுத்தத்தினை 1986 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9 ஆம் நாளன்று மாலையில் விலக்கிக் கொண்டு பணிக்குத் திரும்பினர். கைது செய்யப்பட்ட தொழிலாளர்கள் விடுதலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் முன்பாக 1986 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 4 ஆம் நாள் முதல் உண்ணாவிரதம் இருந்து வந்த பஞ்சாலைத் தொழிலாளர் சங்கத் தலைவர்கள் ஆறு பேர் 1986 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 13 ஆம் நாளன்று இரவு தங்களின் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர். பேச்சு வார்த்தையில் ஏற்பட்ட ஒருமித்த உடன்படிக்கையினை அடுத்து 1986 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21 ஆம் நாளன்று நடத்துவதாக இருந்த மாநிலம் தழுவிய வேலை நிறுத்தம் கைவிடப்பட்டது.

**1986 ஆம் ஆண்டில் காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூடுகள்.**

157. 1986 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் காவல் துறையினர் 26 முறை துப்பாக்கிச் சூடு நடத்தினர். இதில் 9 சம்பவங்களில் இன்றியமையாப் பண்டங்களை அண்டை மாநிலங்களுக்குக் கடத்திக்கொண்டு சென்ற வாகனங்களை நிறுத்த காவல் துறையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இச்சம்பவங்களில் எவரும் காயமடையவில்லை.

158. சில முக்கியச் சம்பவங்கள் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

159. 6—1—1986 அன்று கோயம்புத்தூர் ஊரக மாவட்டம் பொள்ளாச்சியில் விசாரணைக் கைதி ஒருவர் காவல் நிலையத்தில் உள்ள துப்பாக்கிகள் வைக்கப்பட்டுள்ள மரப்பெட்டியினை உடைத்து அதிலிருந்த துப்பாக்கியைக் கொண்டு தாறுமாறாகச் சுட்டதோடு காவல் நிலையத்திலுள்ள ஆவணங்களுக்கும் தீ





வைத்ததால் அவரை அடக்குவதற்காக காவல் துறையினர் துப்பாக்கியால் சுட்டதில் அக் கைதி காயமடைந்தார். இச்சம்பவம் தொடர்பாக இரு வழக்குகள் பதிவு செய்யப் பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும்படி கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலுவலர் பணிக்கப்பட் டுள்ளார். அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

160. 20—1—1986 அன்று சென்னை நகரம் வியாசர்பாடியில் சமூக விரோத சக்திகள் வன்முறையில் ஈடுபட்டபோது காவல் துறையினர் இரண்டு சம்பவங்களில் துப்பாக்கியால் சுட்டனர். இத் துப்பாக்கிச்சூட்டில் 3 பேர்கள் உயிர் இழந்தனர். மற்றும் 14 பேர்கள் காயமடைந்தனர். மேலும் காவல் துறையைச் சேர்ந்த 50 பேர்களுக்கு காயம் ஏற்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக வியாசர்பாடி காவல் நிலையக் குற்ற எண் 14/86 மற்றும் 15/86ன் கீழ் இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும்படி சென்னை மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளர் பணிக்கப் பட்டுள்ளார். அவரது அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

161. 5—2—1986 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம் வெள்ளனூரில் கூலித் தகராறு காரணமாக உள்ளூர் நிலக்கிழார் களுக்கும் மற்றும் பண்ணைத் தொழிலாளர்களுக்கும் ஏற்பட்ட மோதலில் சிலர் வன்முறையில் ஈடுபட்டதால் காவல் துறையினர் வானை நோக்கித் துப்பாக்கியால் சுட்டனர். இச் சம்பவம் தொடர்பாக லால்குடி காவல் நிலைய குற்ற எண்கள் 51/86 மற்றும் 52/86 கீழ் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்தும்படி கோட்ட வருவாய் அலுவலர், ஏசிறி பணிக்கப்பட்டார். தற்காப்பிற்காக காவலர்கள் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானது என்ற அவரது அறிக்கையை அரசு ஏற்றுக்கொண்டது.

162. 26—2—1986 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம் தொட்டியத்தில் உள்ளாட்சித் தேர்தலில் தோல்வியுற்ற ஒரு சுயேச்சை வேட்பாளரின் ஆதரவாளர்கள் வன்முறையில் ஈடுபட்டு காவலரைத் தாக்கி வாகனங்களுக்குச் சேதம் விளைவித்ததின் காரணமாக காவலர்கள் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை

வெடித்தும், தடியடி செய்தும் பின்பு துப்பாக்கியால் சுட்டனர். இத்துப்பாக்கிச் சூட்டில் 2 பேர்கள் உயிர் இழந்தனர். மற்றும் 15 பேர்கள் காயமடைந்தனர். இச்சம்பவம் தொடர்பான கோட்ட வருவாய் அலுவலரின் (முசிறி), விசாரணையில் காவலர்கள் தற்காப்பிற்காகத் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானது எனத் தெளிவாகியது. இதனை அரசு ஏற்றுக் கொண்டது.

163. 26—3—1986 அன்று மதுரை ஊரக மாவட்டம் தேவதானப்பட்டியில் சுமார் 1,000 பேர்கள் வன்முறையில் ஈடுபட்டு தேவதானப்பட்டி காவல் நிலையத்தைத் தாக்கியதால் காவலர்கள் துப்பாக்கியால் சுட்டு நிலைமையைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர். இத்துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் இறந்தார். காவல் துறையைச் சேர்ந்த 8 பேருக்கு காயம் ஏற்பட்டது. இச்சம்பவம் தொடர்பாக தேவதானப்பட்டி காவல் நிலையக் குற்ற எண் 90/86 மற்றும் 91/86 ஆகியவற்றில் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இச்சம்பவம் தொடர்பான மதுரை மாவட்ட வருவாய் அலுவலரின் விசாரணையில் காவலர்கள் தற்காப்பிற்காகத் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானது எனத் தெளிவாகியது. இதனை அரசு ஏற்றுக்கொண்டது.

164. 23—5—1986 அன்று, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திலுள்ள உவரியில் மீனவ வகுப்பினரின் ஒரு பிரிவினர் காவலர்களைத் தாக்கி அவர்களிடமிருந்து துப்பாக்கியைப் பறிப்பதற்கு முயற்சி செய்த போது காவல் துறையினர் துப்பாக்கியால் சுட நேரிட்டது. இத்துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிர் இழந்தார். இச்சம்பவம் தொடர்பாக உவரி காவல் நிலையக் குற்ற எண் 58/86-ன் கீழ் வழக்கு ஒன்று பதிவு செய்யப் பட்டது. இச்சம்பவம் தொடர்பான திருநெல்வேலி கட்ட பொம்மன் மாவட்ட வருவாய் அலுவலரின் விசாரணை அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

165. 15—6—1986 அன்று சிதம்பரனார் மாவட்டம் தூத்துக் குடியில் வன்முறையில் ஈடுபட்ட இரு பிரிவினரைக் கலைப் பதற்காக காவல் துறையினர் வானை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இத்துப்பாக்கிச் சூட்டில் இருவர் உயிர் இழந்தனர். இச்சம்பவம் தொடர்பாக தூத்துக்குடி காவல் நிலையக் குற்ற





எண்கள் 586/86 மற்றும் 587/86ன் கீழ் இரு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இச்சம்பவம் தொடர்பாக தூத்துக்குடி சார் ஆட்சித் தலைவர் நடத்திய விசாரணையில் காவலர் தற்காப் பிற்காக துப்பாக்கிச்சூடு நடத்தியது நியாயமானது எனத் தெளிவாகியது. இதனை அரசு ஏற்றுக்கொண்டது

166. 29—7—1986 அன்று சிதம்பரனார் மாவட்டம் மேலபாறை பட்டியில் ஒரு கொலை வழக்கில் சம்பந்தப்பட்ட இரண்டு பேர்களைக் கைது செய்ய காவலர் குழு ஒன்று முயற்சி செய்த போது குற்றவாளிகள் நாட்டு வெடி குண்டினால் அவர்களைத் தாக்கியதில் காவல் துறையைச் சேர்ந்த 9 பேர்களுக்குக் காயம் ஏற்பட்டது. காவலர்கள் துப்பாக்கியால் சுட்டதில் அவ்விருவரும் உயிர் இழந்தனர். இச்சம்பவம் தொடர்பாக வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. இச்சம்பவம் தொடர்பான மாவட்ட வருவாய் அலுவலரின் விசாரணையில் காவலர்கள் தற்காப் பிற்காகத் துப்பாக்கிச் சூடு நடத்தியது நியாயமானது எனத் தெளிவாகியது. இதனை அரசு ஏற்றுக் கொண்டது.

167. 17—8—1986 அன்று இராமநாதபுரம் மாவட்டம் இராமேஸ்வரத்தில் வன்முறையில் ஈடுபட்ட ஒரு கும்பலைக் கலைப்பதற்காகக் காவல் துறையினர் லேசாக தடியடி செய்யவும், இரு முறை வானத்தை நோக்கியும், ஒரு முறை கலவரத்தில் ஈடுபட்ட வன்முறை கும்பலின் மீதும் துப்பாக்கியால் சுடவும் நேர்ந்ததில் இருவர் காயமுற்றனர். இச் சம்பவம் தொடர்பாக இராமேஸ்வரம் காவல் நிலைய குற்ற எண்கள் 359/86 மற்றும் 360/86 ஆகியவற்றில் இரு வழக்குகள் பதிவு செய்யப் பட்டன. இச்சம்பவம் தொடர்பாக இராமநாதபுரம் சார் ஆட்சியரின் விசாரணையில் காவலர்கள் தற்காப்பிற்காகத் துப்பாக்கிச் சூடு நடத்தியது, நியாயமானது எனத் தெளிவாகியது. இதனை அரசு ஏற்றுக்கொண்டது.

168. 13—9—1986 அன்று மதுரை புற நகர் மாவட்டம் தே. கல்லுப்பட்டியில், வன்முறையில் ஈடுபட்ட பொதுமக்களில் சிலரை கலைப்பதற்காக காவல்துறையினர் துப்பாக்கியால் வானை நோக்கிச் சுட்டனர். இச் சம்பவம் தொடர்பாக காவல் துறையினரால் 5 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. மேலும் இச் சம்பவம் தொடர்பாக உசிலம்பட்டி சார் ஆட்சித் தலைவரின் விசாரணைக்கு ஆணையிடப்பட்டு அவரது அறிக்கை எதிர் பார்க்கப்படுகிறது.

169. 2—11—1986 அன்று தென்னார்க்காடு மாவட்டம் தேவனாம்பட்டினத்தில் மீனவக் கூட்டத்தினரைச் சேர்ந்த சிலர் காவல் துறையினரைத் தாக்கியதால், காவல் துறையினர் துப்பாக்கியால் சுட நேர்ந்தது. 3—11—1986 அன்று மேற்படி கிராமத்தின் ஆற்றங்கரையோரத்தில் குண்டுக் காயங்களோடு ராஜாங்கம் என்பவரின் உயிரற்ற உடல் காணப்பட்டது. இச் சம்பவம் தொடர்பாக கடலூர் காவல் நிலையக் குற்ற எண்கள் 870, 871, 872 மற்றும் 873/86 ஆகியவைகளின் கீழ் வழக்குகள் பதிவு செய்யப்பட்டன. இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய கடலூர் உதவி ஆட்சியரின் விசாரணை அறிக்கை எதிர் பார்க்கப்படுகிறது.

170. 19—12—1986 அன்று செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் கும்மிடிப்பூண்டியில், சமூக விரோதிகள் வன்முறையில் ஈடுபட்ட போது, காவல் துறையினர் இரண்டு முறை கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடித்து வானத்தை நோக்கித் துப்பாக்கியால் சுடவும் நேர்ந்தது. இச்சம்பவம் தொடர்பாக கும்மிடிப்பூண்டி காவல் நிலையக் குற்ற எண்கள் 362/86 மற்றும் 363/86-ல் இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

171. 24—12—1986 அன்று தென்னார்க்காடு மாவட்டம் சேத்தியாத் தோப்பில் வன்னியர் சங்க உறுப்பினர்கள் நடத்திய போராட்டத்தில் வன்முறையில் ஈடுபட்ட சிலரைக் கலைப்பதற் காகக் காவலர்கள் லேசான தடியடி செய்தனர். பின்னர் துப்பாக்கியால் சுட்டதில் 3 பேர்கள் காயமடைந்தனர். இச் சம்பவம் தொடர்பாக சிதம்பரம் கோட்டாட்சியரின் விசாரணைக்கு ஆணையிடப்பட்டு, அவரது அறிக்கை எதிர் பார்க்கப்படுகிறது.

## பகுதி 7.

## காவலர் மற்றும் பொது மக்கள் தொடர்பு.

172. பொது மக்களுடன் நல்ல முறையிலே தொடர்பு வைத்துக் கொள்வது காவலர்களின் இன்றியமையாத கடமையாகும் ஒவ்வொரு காவலரும் தமது அன்பார்ந்த நடத்தையாலும், மக்கள் குறைகளைத் தீர்ப்பதில் ஆர்வத்தோடு செயல்படுவதினாலும் பொது மக்களிடையே அரசைப் பற்றிய நல்லெண்ணத்தை



வளர்க்க முடியும். இவ்வழியிலேயே கண்ணியத்துடனும் நேர்மை யுடனும் உழைத்துப் பொது மக்களின் நல்லெண்ணத்தை என்றென்றும் பெறுமளவிற்கு தமிழ்நாடு காவல் துறையினர் நன்கு பயிற்றுவிக்கப்பட்டுள்ளனர்.

173. வெள்ளம், புயல், விபத்துக்கள் போன்றவற்றால் பாதிக்கப்
படும் மக்களைக் காப்பாற்றவும் அவர்களுக்குத் தேவையான
நிவாரணம் அளிக்கவும், அரசு எடுக்கும் எல்லா நடவடிக்கை
களிலும் காவல் துறை தன்னை முழுமையாக இணைத்துக்
கொண்டு எல்லா உதவிகளையும் செய்து வருகிறது. சாதிக்
கலவரங்கள் போன்ற நிகழ்ச்சிகளால் பதட்டமான சூழ்நிலை
தோன்றும்போது, பொறுப்புணர்ச்சியோடு காவல் துறை
யினரே முதன்மையாக முன்வந்து, உடன்பாட்டு பேச்சு
வார்த்தைகளுக்கு வழி கோலி சிக்கல்களில் சுமுகமான முறையில்
தீர்வு காண வகை செய்கின்றனர்.

174. 1986 ஆம் ஆண்டிற்கான மாநில காவல் துறை விளை
யாட்டுப் போட்டி சென்னையில் ஏப்ரல் மாதம் நடைபெற்றது.
திருச்சிராப்பள்ளியில் அனைத்து சரகங்களுக்கான விளையாட்டுப்
போட்டிகள் ஜூலை 31 முதல் ஆகஸ்டு 3 வரை நடைபெற்றன.
1986-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 7-ஆம் தேதி முதல் 11-ஆம் தேதி
வரை புதுடில்லியில் நடைபெற்ற முப்பத்தைந்தாவது அகில
இந்திய காவல் விளையாட்டுப் போட்டிகளில் நீச்சல் போட்டி
மற்றும் தடை தாண்டும் ஓட்டப்பந்தயங்கள் ஆகியவற்றில்
தமிழகக் காவல் துறையினர் பங்கு கொண்டனர். ஆந்திர
மாநிலம் ஹைதராபாத்தில் 1986 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 10
முதல் 17-ஆம் தேதி வரை நடைபெற்ற அகில இந்திய காவல்
துறை விளையாட்டுப் போட்டிகளில் தமிழகக் காவல் துறையினர்
பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டு ஐந்து
தங்கப் பதக்கங்கள், ஐந்து வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் ஐந்து
வெண்கலப் பதக்கங்களையும் வென்றுள்ளனர்.

175. கிராம விழிப்புக் குழு, பாதுகாப்பிக்கப்பட்ட மாவட்ட
போக்குவரத்துக் குழு மற்றும் புற நகர் குடியிருப்பு சங்கத்தினர்
செய்யும் சுற்றுக் காவல் போன்ற அமைப்புகளால் காவலர்-பொது
மக்களிடையே நெருங்கிய நல்லுறவு வளர்வதுடன், குற்றவாளி
களின் நடவடிக்கைகளையும் விழிப்போடு தடுப்பதற்கும் இயலு
கிறது.

[1987 மே 4

### ஊர்க் காவல் படை.

176. ஊர்க் காவல் படை அமைப்பானது காவல் துறையினருக்கு உறுதுணை அமைப்பாக விளங்குவதோடு பொது மக்களுக்கு தாமாகவே வந்து உதவும் ஒரு அமைப்பாகவும் விளங்குகிறது. சமுதாயத்திலுள்ள பல்வேறுபட்ட பிரிவினரும் இவ்வமைப்பில் இடம் பெற்றுள்ளனர். தற்போது 10,010 ஆண்களும், 550 பெண்களும் இவ்வமைப்பில் இடம் பெற்றுள்ளனர்.

177. போக்குவரத்தினை ஒழுங்குபடுத்தல், ரோந்துப் பணி, இரவு ரோந்துப் பணி, திருவிழாப் பாதுகாப்பு, அழைப்பாணை கொடுத்தல், முன் கூட்டி தகவல்களைச் சேகரித்தல், மீட்புப் பணி, தமிழ்நாடு ஊர்க் காவல் படை விதி 1963-ல் பிரிவு 11-ல் குறிப்பிட்டுள்ளவாறு தீயணைப்பு வேலைகளை நிர்மாணித்தல், வட கிழக்குப் பருவக் காற்றின்போது வெள்ள நிவாரணப் பணியில் பங்கு கொள்ளுதல், முப்படையில் பணியாற்றும் இராணுவ வீரர்களுக்காகக் கொண்டாடப்படும் கொடி தின விழாவின்போது உண்டியல் ஏந்தி நன்கொடை திரட்டல் போன்ற பல்வேறு பணிகளுக்காக 1986-ஆம் ஆண்டு ஊர்க் காவலர்களின் பணி பயன்படுத்தப்பட்டது. இது தவிர 1986-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் சென்னையில் சிதம்பரம் விளையாட்டு அரங்கில் இந்தியாவுக்கும் ஆஸ்திரேலியாவிற்கும் இடையே நடைபெற்ற முதலாம் கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியின்போது விளையாட்டினைக் காண வந்த கூட்டத்தினரைக் கட்டுப்படுத்துவதற்கும் மற்றும் விளையாட்டு அரங்கின் பல்வேறு நுழைவாயிலிலும், பாதுகாப்புப் பணிக்காக சென்னை நகரம் மற்றும் செங்கல்பட்டு கிழக்கு மாவட்டத்திலுள்ள ஊர்க் காவல் படையினரின் பணி பயன்படுத்தப்பட்டது. 1986-ஆம் ஆண்டு மே மற்றும் அக்டோபர் மாதங்களில் இரயில்வே அமைச்சகத்தினரால் மாநிலத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த "பொதுப் போக்குவரத்து முறை" என்ற கண்க்கெடுப்பிற்கும் ஊர்க் காவல் படையினர் பயன்படுத்தப்பட்டனர்.

178. 1986-ஆம் ஆண்டு குடியரசு தின பதக்கம் மூன்று ஊர்க் காவல் படையினருக்கும், 1986-ஆம் ஆண்டு சுதந்திர தின பதக்கம் இரண்டு ஊர்க் காவல் படையினருக்கும் மற்றும் 1986-ஆம் ஆண்டு முதலமைச்சர் ஊர்க் காவல் படைப் பதக்கம் 3 பேருக்கும் வழங்கப்பட்டது.



1987 மே 4]

### தேர்தல்.

179. தமிழ்நாடு ஊராட்சி மற்றும் நகராட்சிமன்றத் தேர்தல்கள் தமிழ்நாடு முழுவதும் 23—2—1986 அன்று நடைபெற்றன. இத்தேர்தல்களின் பாதுகாப்புப் பணிக்காக காவல் துறையினர் மட்டுமின்றி, ஊர்க் காவல் படையினர், தீயணைப்புப் படையினர், வனப் பாதுகாப்புப் படையினர், முன்னாள் பாதுகாப்புப் படையினர் மற்றும் ஓய்வு பெற்ற காவலர்கள் ஆகியோர் பயன்படுத்தப் பட்டனர். தேர்தல் பாதுகாப்புப் பணிகளில் உள்ளூர் காவலர் களுக்கு உதவியாக அண்டை மாநிலங்களிலிருந்தும் காவலர்கள் வரவழைக்கப்பட்டிருந்தனர். விரிவான பாதுகாப்பு ஏற்பாட்டி னால் எவ்வித வன்முறைச் செயல்களுமின்றி தேர்தல் அமைதி யாக நடைபெற்றது.

180. திருநெல்வேலி மற்றும் அருப்புக்கோட்டை சட்டமன்ற தொகுதிகளுக்கான இடைத் தேர்தல் 31—8—1986 அன்று நடை பெற்றது. மாநிலத்தில் அனைத்துச் சரகங்களிலிருந்தும் தேர்தல் பாதுகாப்புப் பணிக்காக காவலர்கள் வரவழைக்கப்பட்டிருந்ததால் இந்த இடைத் தேர்தல் மிகவும் அமைதியாக நடைபெற்றது.

### உயிர் மீட்டல் போன்ற வீரச் செயலுக்கான பிரதமர் விருது.

181. 9—12—1985 அன்று ஆசிரியர் போராட்டத்தைக் கண்டித்து பெற்றோர் சங்கத்தினர் கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தை நோக்கி ஊர்வலமாகச் சென்றனர். மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தினுள், ஊர்வலத் தினரிடையே அதன் தலைவர்கள் உரையாற்றிக்கொண்டிருக்கும் போது சுமார் 11-15 மணி அளவில் 27 வயதுடைய நேதாஜி பாபு என்பவர் தனது உடலில் மண்ணெண்ணெயை ஊற்றித் தீ வைத்துக்கொண்டு ஆசிரியர் போராட்டத்தைக் கண்டித்துக் குரல் எழுப்பினார். அச்சமயம் அங்கு பாதுகாவல் பணியில் ஈடு பட்டிருந்த காவல் சார்பு ஆய்வாளர் திரு. வெங்கடாசலம் ரத்தினசபாபதி என்பவர் தனது உயிரையும் பொருட்படுத்தாமல் விரைந்து சென்று அவர் மீது விழுந்து, அவரது உடைகளைக் களைந்து தீயினை அணைத்து அவரைக் காப்பாற்றினார். இவ்வாறு அவரைக் காப்பாற்றும் பொழுது சார்பு ஆய்வாள ருக்குத் தீக்காயங்கள் ஏற்பட்டன. இருவருக்கும் சி.எம்.சி. மருத்துவ மனையில் மருத்துவ உதவி அளிக்கப்பட்டது. தனது உயிருக்கு ஏற்பட்ட ஆபத்தினையும் பொருட்படுத்தாமல் தனது உடலில் தனக்குத்தானே தீ வைத்துக் கொண்டு தற்கொலை

முயற்சியில் ஈடுபட்ட ஒருவனைக் காப்பாற்ற நெருக்கடியான நேரத்தில் மேற்கொண்ட அவரது கருணைமிக்க வீரச் செயலுக் காக அவருக்கு பாரதப் பிரதமரின் வீரச் செயலுக்கான விருது அளிக்கப்பட்டது.

182. 1985-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னையில் அதுவரை கண்டிராத கடும் மழை காரணமாக ஏற்பட்ட பெருவெள்ளத தினால் சென்னை நகர மக்களின் அன்றாட வாழ்க்கை பாதிக்கப் பட்டது. ஆயிரக்கணக்கான மக்கள் தாழ்வான பகுதியில் சிக்கிக் கொண்டனர். இதனால் அடையாறு ஆற்றில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக ஆற்றின் கரையைச் சுற்றியுள்ள பகுதி களில் உள்ள பல மாடிக் கட்டிடங்களின் மேல்தளங்களை 11—11—1985 அன்று இரவு வெள்ளம் சூழ்ந்தது. வெள்ளத் தினால் அடித்துச் செல்லப்பட்டுவிடலாம் என்ற பீதியினால் ஆயிரக்கணக்கான மக்கள் கட்டிடங்களின் கூரைகளிலும், மேல் பகுதிகளிலும் தஞ்சம் அடைந்தனர். பொங்கி வரும் சுழலுடன் கூடிய வெள்ளத்தின் வேகத்தாலும், அதில் ஏற்பட்ட சுழற்சி யாலும் நீரில் சிக்கித் தவித்த மக்களை அடைவது அபாயம் நிறைந்ததாக இருந்தது. ஆயினும் கடும் மழையினையும் நீரின் வேகத்தையும் பொருட்படுத்தாது சென்னை நகரக் காவல் துறை ஆணையரின் தலைமையிலான வெள்ள மீட்புப் பணியில் முதன் நிலைக் காவலர்கள் கார்வண்ணன் மற்றும் பாலகிருஷ்ணன் தம்பி ஆகியோர் தாமாகவே பணியாற்ற முன் வந்து அங்குள்ள சிறு படகின் உதவியுடன் தயார்நிற்குட்பட்ட மக்களை மீட்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். எதிர்பாராத விதமாக இந்தப் படகு நீரின் வேகத்தில் சிக்கி வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டது. இந்த நிலையிலும், மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்தவர்கள் திறமையாகவும், துணிச்சலாகவும் செயல்பட்டு அங்கிருந்த புதரைப் பற்றிக்கொண்டு படகு வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படாமல் நிறுத்தி, பீதியுற்றிருந்த மக்கள் வீசிய கயிற் றின் உதவியால் கரை சேர்ந்தனர். பின்பு அந்தக் கட்டிடத் திலிருந்து கரை வரை கயிற்றைக் கட்டி அதன் உதவி யுடனும், படகின் உதவியுடனும் மீட்புப் பணியைச் செய்யத் தொடங்கினர். இவ்வாறு அவர்கள் 50 தடவைகள் சென்று ஏறத்தாழ 3,000 பேர்களைக் காப்பாற்றினர். கட்டுமரங்கள் மற்றும் கண்ணாடிகளினால் செய்யப்பட்ட படகுகளின் மூலம் இந்த மீட்புப் பணி மேலும் இரண்டு நாட்கள் நடைபெற்றது.



இந்த இரண்டு காவலர்களும் காவல் ஆணையர் அவர்களின் வழித் துணையால் பயங்கர வெள்ளத்தில் சென்றதோடுமட்டுமல்லாமல், தங்களது உயிரையும் பணயமாக்கி மேலும் இரண்டு நாட்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டனர். இவர்களின் திறமைமிக்க பணி யினால் அடையாறில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் எந்தவித உயிர்ச் சேதமும் ஏற்படவில்லை. தங்களது உயிருக்கு ஏற்பட்ட ஆபத்தையும் பொருட்படுத்தாது மீட்புப் பணியில் ஈடுபட்டிருந்த இவர்களின் செயல் பாரதப் பிரதமரின் வீரச் செயலுக்கான விருதினைப் பெற்றுத் தந்தது.

183. 17—2—1986 அன்று மாலை இராமநாதபுரம் மாவட்டம் ஆதப்பன் வயல் என்ற இடத்தில் உள்ள கல் உடைக்கும் பகுதியில் உள்ள குளத்தில் திருமலையம்மாள் என்பவர் உயிருக்காகப் போராடிக்கொண்டிருந்தார். கரையின் ஓரத்திலிருந்த சில பெண்கள் இதனைக் கண்டு கூச்சலிட்டனர். அச் சமயம் அங்கு மதுவிலக்கு சோதனைப் பணியில் காவல் சார்பு ஆய்வாளர் மற்றும் சில காவலர்களுடன் ஈடுபட்டுக் கொண்டிருந்த திரு. புகழேந்தி என்ற காவலர் (எண் 498) சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றார். முன்னமே அவ்விடத்தில் சிலர் வெறுமனே வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்க, காவலர் புகழேந்தி 15 அடி ஆழமுள்ள குளத்தில் குதித்து நீந்திச் சென்று அப்பெண்ணைக் கரை சேர்த்தார். கரையில் அந்த பெண்ணுக்கு முதலுதவி செய்து, பின்னர் அந்தப் பெண்ணுக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க ஏற்பாடு செய்தார். காவலர் தனது உயிருக்கு ஏற்படும் ஆபத்தையும் பொருட்படுத்தாமல் வீரத்துடன் அப்பெண்ணின் உயிரைக் காப்பாற்றியமையால் அவர் பிரதமரின் வீரச் செயலுக் கான விருதினைப் பெற்றார்.

184. திரு. நடராஜன் (காவலர் 2314) என்பவர் 1—10—1965 அன்று தஞ்சாவூர் மேற்கு மாவட்டத்தில் காவல் துறையில் சேர்ந்தார். தஞ்சாவூரில் 8—1—1985 முதல் 12—1—1985 வரை புனித தியாகராஜ ஆராதனை திருவிழா சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. இத் திருவிழாவிற்கு இந்தியாவின் பல பகுதியிலிருந்தும் பக்தர்கள் வந்தனர். இத் திருவிழாவின் பாதுகாப்புப் பணிக்காக தஞ்சாவூர் மேற்கு மாவட்டத்திலுள்ள அனைத்துக் காவல் நிலையங்களில் இருந்தும் காவலர்கள் வரவழைக்கப்பட்டிருந்

[1987 மே 4

னர். அதுபோல் கோட்டூர் காவல் நிலையக் காவலர்
டராஜனும் திருவையாற்றில் பாதுகாப்புப் பணிக்காக அழைக்கப்
பட்டிருந்தார். 11—1—1985 அன்று தென்னாற்காடு மாவட்டம்
சிதம்பரம் கரூர் வைஸ்யா பாங்கில் மேலாளராக பணி புரியும்
திரு. பத்திரிநாராயணன் என்பவர் திருவையாறு ஆராதனை
விழாவின்போது புனித தியாகராஜர் கோயில் அருகிலுள்ள புனித
காவேரி நதியில் குளிப்பதற்கு விரும்பினார். புனித காவேரி
ஆற்றில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் அதன் ஆழத்தினை அறியாத
திரு. பத்திரிநாராயணன் என்பவர் திருவையாறு ஆராதனை
காரணத்தினால் நீரின் சுழற்சியால் வெகு தூரம் அடித்துச்
செல்லப்பட்டார். அச் சமயம் அங்கு மலர்மண்டப படித்
துறையில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த நடராஜன்
ஆற்றுச் சுழலில் சிக்கி உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்த
திரு. பத்திரிநாராயணனை தன்னுடைய உயிரையும் பொருட்
படுத்தாது ஆற்றில் குதித்துக் காப்பாற்றி காவல் துறை மற்றும்
சமூகத்திற்கான தனது கடமைப் பற்றுணர்வு மற்றும் சேவை
யினை வெளிப்படுத்தினார்.

185. தனது உயிருக்கு ஏற்பட்ட ஆபத்தையும் பொருட்படுத்
தாது காவேரி ஆற்றின் வெள்ளத்தில் மூழ்கவிருந்த ஒருவரைக்
காப்பாற்றிய திரு. நடராஜனின் (எண் 2314) கருணை மிக்க
செயல் அவருக்கு இந்திய பிரதமரின் வீரச் செயலுக்கான
விருதினைப் பெற்றுத் தந்தது.

## பகுதி 8.

## நடப்பாண்டில் வழங்கப்பட்ட சில முக்கிய ஆணைகள்.

186. வளர்ந்து வரும் தேவையினைக் கருத்தில் கொண்டு
1986-87-ஆம் ஆண்டு காவல் துறையில் பணியிடங்கள் மற்றும்
கருவிகள் சம்பந்தப்பட்ட பல திட்டங்களுக்கு அரசு ஒப்புதல்
அளித்துள்ளது. சில முக்கிய ஒப்பளிப்புகள் பின்வருமாறு—

187. பெரியார் மாவட்டம் வரப்பாளையம், பசும்பொன்
முத்துராமலிங்கம் மாவட்டம், சிங்கம்புணரி ஆகிய இடங்களில்
உள்ள புறக்காவல் நிலையங்களை காவல் நிலையங்களாக தரம்
உயர்த்தவும், மற்றும் 50 இடங்களில் காவல் நிலையங்களைத்
தோற்றுவிக்கவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



1987 மே 4]

188. புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி, கீரனூர்,
மற்றும் பெரியார் மாவட்டத்தில் ஈரோடு ஆகிய இடங்களில் புதிய
உட்கோட்டங்கள் ஏற்படுத்துதல், பசும்பொன் முத்துராமலிங்கம்
மாவட்டம் முதுகுளத்தூரில் குற்றப் பிரிவில் ஒரு புதிய காவல்
வட்டம் ஏற்படுத்துதல், புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூரில்
ஒரு புதிய காவல் வட்டம் ஏற்படுத்துதல், இராமநாதபுரம்
மாவட்டம் கமுதியில் குற்றப்பிரிவில் ஒரு புதிய காவல் வட்டம்
ஏற்படுத்துதல், தஞ்சை கிழக்கு மாவட்டம் மயிலாடுதுறையில்
போக்குவரத்துப் பிரிவில் ஒரு புதிய காவல் வட்டம் ஏற்படுத்துதல்
ஆகியவற்றிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

189. சென்னை நகரில் எழும்பூரிலுள்ள பெண்கள் மற்றும்
குழந்தைகளுக்கான அரசு மருத்துவமனை மற்றும் இராயபுரத்தி
லுள்ள ஆர்.எஸ்.ஆர்.எம். மருத்துவமனைகளில் பெண் காவலர்
களுக்கான காவல் நிலையம் திறப்பதற்கு அரசு ஒப்புதல் அளித்
துள்ளது.

190. சட்டம் ஒழுங்கினைக் கருத்தில் கொண்டு மதுரை
ஊரகம், புதுக்கோட்டை, பசும்பொன் முத்துராமலிங்கம் மற்றும்
கோயம்புத்தூர் புறநகர் மற்றும் ஊரக மாவட்டங்களில் ஒவ்வொரு
மாவட்டத்திலும் ஒரு ஆயுதப் படைப் பிரிவினை ஏற்படுத்த
அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

191. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஒரு குதிரைப் படைப்
பிரிவினை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

192. குற்றங்களைத் துப்பு துலக்க காவலர்களுக்கு உதவி
புரியும் வகையில் திருநெல்வேலி கட்டபொம்மன், வட ஆற்காடு,
தென்னாற்காடு, சேலம், தஞ்சாவூர் (மேற்கு) மற்றும் இராமநாத
புரம் ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு நாய்ப் படைப்
பிரிவினை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

193. கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள காவல் மருத்துவ
மனைக்குத் தேவையான கருவிகளை வாங்குவதற்கும் கூடுதல்
பணியிடங்கள் தோற்றுவிக்கவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

194. காவல் துறையிலுள்ள அதிகாரிகள் மற்றும் காவல்
நிலையங்களின் உபயோகத்திற்காக ரூ. 44.10 இலட்சம் செலவில்
வாகனங்கள் வாங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

[1987 மே 4

195. சாலை விபத்துகளில் காயம் அடைபவர்களை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று, மருத்துவ உதவி அளிக்கும் பொருட்டு ரூ. 18.11 இலட்சம் செலவில் வாகனங்கள் வாங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

196. மாவட்டங்களில் சீர் பெருமக்கள் வருகையின் போது அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு ரூ. 19.35 இலட்சம் செலவில் அம்பாசிடர் கார்கள் வாங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

197. சிதம்பரனார் மாவட்டம் தூத்துக்குடியில் ஒரு காவல் கட்டுப்பாடு அறை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

198. குடிபோதையில் வண்டி ஓட்டிச் செல்பவர்களைக் கண்டறியும் மோப்பக் கருவிகளையும் ( Breath Analysers ) மற்றும் 100 வாக்கி-டாக்கி கருவிகளையும் போக்குவரத்து காவல் பிரிவினருக்கு வழங்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

199. தமிழக போக்குவரத்து காவல் பிரிவினை பலப்படுத்தும் பொருட்டு 1,913 கூடுதல் பணியிடங்களை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

200. காவல் துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு சட்ட ஆலோசனைப் பிரிவை ஏற்படுத்த அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

201. காவல் துறையிலுள்ள கட்டிடங்களைப் பழுது பார்ப்ப தற்கும், மற்றும் புதியதாகக் கட்டிடங்களைக் கட்டுவதற்கும் அரசு ரூபாய் எட்டு கோடி ஒப்புதல் அளித்துள்ளது.

202. தமிழ்நாடு காவல் துறையிலுள்ள காவல் நிலையங்களில் பார்வையாளர்களின் உபயோகத்திற்காக ரூபாய் இரண்டு இலட்சம் செலவில் பார்வையாளர்கள் இருக்கை வாங்குவதற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

203. சீர்பெருமக்கள் வருகையின்போது அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு அளிக்கும் பொருட்டு 1987-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் ரூ. 13,95,251 செலவில் மெட்டல் டிடெக்டர், தபால் மூலம் வரும் வெடிகுண்டுகளை சோதிப்பதற்கான டிடெக்டர் போன்ற தொழில் நுட்பக் கருவிகளை வாங்கி மாவட்டங்களி லுள்ள காவல் துறை அதிகாரிகளுக்கு அளிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



1987 மே 4]

204. நாச சம்பவங்களைத் தடுக்கவும், சீர் பெருமக்களுக்கு போதிய பாதுகாப்பு அளிக்கவும், மெட்டல் டிடெக்டர், கடிதங்களை சோதனையிடும் கையில் எடுத்துச் செல்லக்கூடிய எக்ஸ் கதிர்க் கருவிகள் போன்ற தொழில் நுட்பக் கருவிகளை ரூ. 5.50 இலட்சம் செலவில் வாங்கவும் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

205. காவல் துறையின் அமைச்சுப் பணிப் பிரிவை வலுப் படுத்தும் வகையில் 145 புதிய அமைச்சுப் பணியிடங்களைத் தோற்றுவிக்க அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

## பகுதி 9.

## முடிவுரை.

206. இந்திய அரசியலமைப்பின்கீழ் சமுதாயத்தின் பல்வேறு மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு அரசு மும்முரமாகச் செயல்பட்டு வருகிறது. எனவே, இன்றைய அரசு ஒரு மக்கள் நல அரசாகச் செயல்படுகிறது. இந்த மக்கள் நல அரசுப் பணிகள் பரந்தும் விரிந்தும் காணப்படுகின்றன. இப்பணிகள் நல்ல முறையில் நடைபெற வேண்டுமென்றால் குற்றங்கள் கட்டுப் படுத்தப்பட்டு, நாட்டில் சட்டம் மற்றும் ஒழுங்கு நல்ல முறையில் நிலவ வேண்டும். ஆகவே இவ்வமைப்பில் காவல் துறையினர் மிக முக்கிய பங்காற்ற வேண்டியுள்ளது. கடமையுணர்வோடும் மக்களுக்குத் தொண்டாற்ற வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத் தோடும் பொதுமக்கள் முன்னிலையில் காவல் துறையினர் மிகுந்த ஒழுக்க உணர்வோடு பணியாற்ற வேண்டும். ஆகவே, காவல் துறையில் பணியாற்றும் ஒவ்வொருவருக்கும் இதில் பெரும் பொறுப்புள்ளது. இதனைக் கருத்தில் கொண்டு கீழே கூறப் பட்டுள்ள நெறிமுறைகளைக் கடைப்பிடித்தொழுக தமிழ்நாடு காவல் துறையினர் பெரிதும் முயன்று வருகின்றனர் :—

(அ) தெரிவிக்கப்பட்ட எல்லாக் குற்றங்களும் புள்ளிவிவர நிலையைக் கருதாமல் கட்டாயமாகப் பதிவு செய்யப்படும். இவ்வாறு தெரிவிக்கப்படும் குற்றங்களைப் பதிவு செய்வதன் மூலம்தான் அக் குற்றங்களை வெளிப்படுத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ள இயலும்.

(ஆ) மிகச் சிறிய குற்றங்கள் குறித்து இயன்ற வரையில் அக்குற்றங்களைச் செய்தோரை எச்சரித்து விட்டுவிட வேண்டும். காவல் துறை நீதிமன்றங்கள், சிறைத் துறை மற்றும் குற்ற வாளிகள் நன்னடத்தையைக் கண்காணிக்கும் பிரிவு ஆகியவை

அடங்கிய மாநிலக் குற்றவியல் நிர்வாகம், தன் வசமுள்ள வரை
யறுத்த அளவு வசதிகளை அநாவசியமாகப் பயன்படுத்தவோ
சிதறடிக்கவோ கூடாது. மதுவிலக்கைப் பொறுத்தவரை காவல்
துறையினர் மதுவிலக்குச் சட்டத்தைத் தீவிரமாகவும் முழு
மனதுடனும் அமுல் செய்து, கள்ளச் சாராயம் காய்ச்சுவோர்
மற்றும சமூக விரோதிகள் ஆகியோர் மக்களுக்கு தீமை விளை
விக்கும் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடுவதைத் தவிர்க்க
எல்லா முயற்சிகளும் எடுக்கவேண்டும்.

(இ) காவலரிடம் முறையிடவோ, குற்றம் சாட்டப்பட்டவ
ராகவோ அல்லது உதவி கோரியோ வருபவர்களில் பெரும்
பான்மையான மக்கள் ஏழைகளாகவும் சமூகத்தின் கீழ்மட்டத்தில்
உள்ளவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதை காவல் துறையினர்
நன்கு புரிந்து கொள்ள வேண்டும். எனவே, அவர்களிடம்
காவலர் அன்புடனும், அனுசரணையுடனும் நடந்து கொள்ள
வேண்டும்.

(ஈ) காவல் துறையினர் நேர்மையாகவும் திறமையாகவும்
இருப்பார்கள். இதற்காகக் கட்டுப்பாடு மற்றும் எல்லாப் பணி
களிலும் உயர்வான தரம் ஆகியவை நிலை நாட்டப்படும். இவை
மேலும் குறிப்பாக நேர்மை மற்றும் திறமையற்றவர்களைப்
பொறுத்தவரை தயவு தாட்சண்யமின்றி செயல்படுத்தப்படும்.
இவ்வாறு செயல்படும்பொழுது காவலர்களை விடக் காவல்
துறை அதிகாரிகளைப் பொறுத்தவரை இது மேலும் தாக்
கண்டிப்புடன் கடைப்பிடிக்கப்படும்.

(உ) காவல் துறையினரின் தூய்மையையும், திறமையையும்
உறுதி செய்யும் பொருட்டு அவர்களது ஒழுங்குணர்வையும்
கட்டுப்பாட்டையும் உயரிய நிலையில் பேணிவர வேண்டும்.
இதைச் சாதிப்பதற்கு வேண்டிய இன்றியமையாத அடிப்படை
நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஊ) பொதுமக்கள் சிறந்த காவல் பாதுகாப்பிற்கு உரிமை
உடையவர்கள் ஆவர். எனவே, இதுகாறும் போதிய அளவு
காவலர்கள் பாதுகாப்பு இல்லாத பகுதிகளில் காவல்
நிலையங்கள் அமைத்து அவற்றில் நன்கு பயிற்சி பெற்ற
காவலர்கள் போதிய எண்ணிக்கையில் நியமிக்கப்படுவர்.



(எ) அவ்வாறு திறம்படைத்த காவல் பாதுகாப்புக் கிட்டு
வதை உறுதி செய்யும் பொருட்டு காவல் துறையின் பயிற்சி
வசதிகள் மேம்படுத்தப்படும். ஆராய்ச்சி வசதிகள் வலுப்படுத்
தப்படும். காவல் துறையை நவீனப்படுத்தலும் தொடரும்.

(ஏ) இயன்றவரை வனம் மற்றும் வனவிலங்குகளைப் பாது
காத்தல், விலங்குகளைக் கொடுமைப் படுத்துவதைத் தடுத்தல்,
சுற்றுப்புறச் சூழலுக்குக் கேடு, சப்தத்தால் வரும் கேடு, தூய்மைக்குக் கேடு
துப்புரவுக் கேடு, சப்தத்தால் வரும் கேடு, தூய்மைக்குக் கேடு
ஆகியவற்றைத் தவிர்த்தல் போன்ற ஏனைய பணிகளிலும் காவல்
துறை முனைப்புடன் உதவி புரிய வேண்டும்.

(ஐ) பொது மக்களின் நன்மதிப்புடன் பெறும் ஆதரவு
இன்றியமையாதது என்பதைக் காவல் துறையினர் உணர்ந்து
இத்தகைய ஒத்துழைப்பை மிக அதிக அளவில் பெறும் வகையில்
மக்கள் தொடர்பைச் சீர்படுத்திக் கொண்டு மேலும் தங்கள் பணி
களைத் தொடர வேண்டும்.

207. சமுதாயத்தின் நன்மதிப்பையும், அன்பையும் பெறுவது
தான் காவல் துறையினரின் தலையாய கடமையாகும். அதற்குப்
பின்னர்தான் அவர் தன் குடும்பத்தின் மீது அக்கறை செலுத்த
வேண்டும். அவர் தன் பணிக்காலத்தில் பெறுகின்ற வெகுமதிகள்
மற்றும் பதவி உயர்வுகள் போன்றவற்றால் பெறமுடியாத மன
நிறைவினை இதன் மூலம் மட்டுமே அவர்கள் பெற முடியும்.
இதனைக் கருத்திற்கொண்டு காவல் துறையினர் சட்டம்-ஒழுங்
கைக் காக்க கடும்பணி ஆற்றுவதோடு குற்றக் கண்டு பிடிப்பு,
மற்றும் சமூகப் பணி ஆகியவற்றில் அவர்கள் தங்களை ஈடுபடுத்
திக் கொள்ள வேண்டும். காவல் துறையினருக்கும் மக்களுக்கும்
இடையே ஒரு பாலமாக இருந்து அரசியல் தலைவர்கள் செயல்
பட்டு தங்களின் ஒத்துழைப்பை நல்கினால் காவல் துறையினரின்
பணி, மற்றும் கடமைகள் எளிதாகும்.

208. மேலே வரையறுத்துக் கூறப்பட்டுள்ள வழி முறை
களுக்கு ஏற்ப தமிழ்நாடு மாநில காவல் துறையினர் தொடர்ந்து
செயல்படுவர். வருங்காலத்திலும் மேலும் அவர்கள் திறம்படப்
பணியாற்றும் வகையில் எல்லா நடவடிக்கைகளையும் தமிழ்நாடு
காவல் துறை மேற்கொள்ளும்.

[1987 மே 4

பிறசேர்க்கை 1.

**1986ஆம் ஆண்டு டிசம்பர் 31ஆம் தேதியில் காவல் துறைப் பணியாளர்களின் மொத்த எண்ணிக்கை.**

| | |
|---|---|
| காவல் துறைத் தலைமை இயக்குநர்கள் | 2 |
| காவல் துறைத் தலைவர் | 4 |
| காவல் துறைத் துணைத் தலைவர்/ காவல் துறை ஆணையர். | 18 |
| காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் | 54 |
| காவல் துறை இணைக் கண்காணிப்பாளர்கள் | 9 |
| காவல் துறைக் கூடுதல் கண்காணிப்பாளர்கள் | 40 |
| தளவாய்கள் | 10 |
| துணைத் தளவாய்கள் | 5 |
| காவல் துறை உதவி கண்காணிப்பாளர்கள் | 14 |
| காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் நிலை-1. | 225 |
| காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர்கள் நிலை-2 | 51 |
| உதவித் தளவாய்கள் | 89 |
| அட்சுடண்ட் ஆய்வாளர்கள்/காவல் துறை ஆய்வாளர்கள் | 1,222 |
| காவல் துறை சேமப்படை ஆய்வாளர்கள் | 116 |
| காவல் துறை சார்பு ஆய்வாளர்கள் | 3,970 |
| காவல் துறை சேமப்படை உதவி ஆய்வாளர்கள் | 536 |
| தலைமைக் காவலர்கள் | 5,777 |
| ஹவில்தார்கள் | 872 |
| நாயக்குகள் | 772 |
| லான்ஸ் நாயக்குகள் | 697 |
| காவலர்கள் நிலை-1 | [illegible] |



1987 மே 4]

| | |
|---|---|
| காவலர்கள் நிலை-2 | 43,727 |
| காவல் துறை பெண் சார்பு ஆய்வாளர்கள் | 84 |
| காவல் துறைப் பெண் தலைமைக் காவலர்கள் | 79 |
| காவல் துறைப் பெண் காவலர்கள் | 690 |
| மொத்தம் | 63,974 |

பிறசேர்க்கை 2.

**1986 ஜனவரி 1 முதல் டிசம்பர் 31 வரை ஒப்பளிப்பு செய்யப்பட்ட கூடுதல் பணியாளர் பற்றிய விவரங்கள்.**

(அ) அமைச்சுப் பணியாளர்கள்:

| | |
|---|---|
| 1. காவல் துறைத் துணைத் தலைவர் | 1 |
| 2. காவல் துறை இணைக் கண்காணிப்பாளர். | 4 |
| 3. காவல் துறை கூடுதல் கண்காணிப்பாளர். | 1 |
| 4. காவல் துறை உதவி கண்காணிப்பாளர் | 2 |
| 5. காவல் துறைத் துணைக் கண்காணிப்பாளர். | 14 |
| 6. காவல் துறை ஆய்வாளர் | 34 |
| 7. காவல் துறை சேமப்படை ஆய்வாளர் | 25 |
| 8. காவல் துறை சார்பு ஆய்வாளர் | 100 |
| 9. காவல் துறை சேமப்படை சார்பு ஆய்வாளர். | 18 |
| 10. தலைமைக் காவலர்கள் | 239 |
| 11. காவலர்கள்-நிலை-1 | 198 |
| 12 காவலர்கள் நிலை-2 | 2,584 |
| 13. பெண் சார்பு ஆய்வாளர்கள் | 2 |
| 14. பெண் தலைமைக் காவலர்கள் | 6 |
| 15. பெண் காவலர்கள் | 24 |
| மொத்தம் | 3,252 |

(ஆ) அமைச்சுப் பணியாளர்கள்

| | |
|---|---|
| 1. உதவியாளர் | 8 |
| 2. சுருக்கெழுத்து தட்டச்சர் | 1 |
| 3. தட்டச்சர் | 7 |
| 4. இளநிலை உதவியாளர் | 3 |
| 5. இளநிலை உதவியாளர்/தட்டச்சர் | 1 |
| 6. பதிவுரு எழுத்தர் | 1 |
| 7. அலுவலக உதவியாளர் | 2 |
| மொத்தம் | 23 |

(இ) மற்றவர்கள் :

குதிரை பராமரிப்பவர்



## இணைப்பு IV

(381 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாடு தீயணைப்புத் துறை.

### மானியக் கோரிக்கை எண் 16.

### கொள்கைக் குறிப்பு 1987-88.

தீ விபத்துக்களைத் தடுப்பதும், தீயினாலும், இதர இயற்கைச் சீற்றங்களினாலும் பாதிக்கப்பட்டோரை மீட்டு அவர்களின் துயர் நீக்கி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதன் மூலம் அழிவைக் குறைப்பதும் தமிழ்நாடு தீயணைப்புத் துறையின் முக்கியக் குறிக்கோளாக இருந்து வருகிறது.

2. மத்திய அரசினால் அளிக்கப்படும் கடன் உதவித் தொகை களை ஏற்றுக்கொண்டும் மற்றும் மத்திய அரசால் அங்கீகரிக்கப் பெற்ற நிதி உதவி நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் கடன் வசதிகள் மூலமாகவும் இம்மாநிலத்தின் நிதி நிலைமைக்குட்பட் டும் முடிந்த அளவு தீயணைப்பு நிலையங்கள் தொடங்குவதே அரசின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். இம்மாநிலம் முழு வதும் 25 கி. மீ. தூரத்துக்கு ஒன்று வீதம் ஒவ்வோரிடத்திலும் தீயணைப்பு நிலையம் ஒன்று ஏற்படுத்துவதற்கு அரசு பெரு முயற்சி எடுத்து வருகிறது. இதனைக் கருத்தில் கொண்டு தீ விபத்துக்கள் ஏற்படுவதற்கு அதிகம் வாய்ப்புடைய தொழிற் சாலைகள் அல்லது குடிசைகள் நிறைந்த பகுதிகளுக்கு முக்கியத் துவம் கொடுத்து தமிழகத்தில் புதிய தீயணைப்பு நிலையங்கள் ஏற்படுத்த வேண்டிய நகரங்களின் முன்னுரிமைப் பட்டியல் ஒன்றிற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. ஒப்பளிக்கப்பட்ட முன் னுரிமைப் பட்டியலிலிருந்து நிதி நிலைமைக்கேற்ப ஒவ்வோ ராண்டும் தீயணைப்பு நிலையங்கள் தொடங்க அரசு ஒப்புதலளித்து வருகிறது.

3. சிறந்த நவீன தொழில் நுட்பம் வாய்ந்த புதிய ஊர்திகளை யும் இதர தீயணைப்பு சாதனங்களையும் வாங்குவதன் மூலம் இம்மாநிலத்தின் தீயணைப்புத் துறையை நவீனப்படுத்துவதற்கு அரசு பெரிதும் முயன்று வருகிறது. இதற்காக இந்தியப் பொது காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடன் பெறப்பட்டு வருகிறது.

தேவையான ஊர்திகளும் மற்ற தீயணைப்பு சாதனங்களும், கருவிகளும் வாங்க சென்ற ஆண்டில் (1986-87) ரூ. 162.46 இலட்சங்கள் ஈட்டுறுதிக் கழகத்திடமிருந்து கடனாகப் பெறப்பட்டது. இந்தக் கடன் மூலம் நவீன தீயணைப்பு கருவிகள் வாங்கப்படவுள்ளன.

4. தீயணைப்புத் துறையின் முக்கிய பணிகளும் 1986-87 ஆம் ஆண்டில் இத்துறையின் சாதனைகளும் பின்வரும் பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ளன. 1987 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் தனித்துறையாக இயங்கி வரும் தமிழ்நாடு தீயணைப்புத் துறை இந்தியாவிலுள்ள மிகத் திறமை வாய்ந்த துறைகளுள் ஒன்றாக இயங்கி வருவதோடு சீரிய திறன் வாய்ந்த துறைகளுள் ஒன்று என்ற நற்பெயரையும் தொடர்ந்து நிலை நாட்டி வருகிறது. தீ விபத்துக்களிலிருந்து உயிரையும், உடைமைகளையும் காப்பாற்றுவதே இத்துறையின் முக்கியப் பணியாகக் கருதப்படுகிறது. தீ விபத்தைத் தடுப்பதும், தீயை அணைப்பதும் இத்துறையின் தலையாய பணியாகும்.

இப்பணிகளுடன் அவசரக் கால இடர்தவிர்ப் பணியையும் செய்து வருகிறது. தீ விபத்துக்களால் மட்டுமின்றி, வெள்ளம், புயல், நில நடுக்கம், கட்டிடம் இடிதல் போன்ற இயற்கை சீற்றங்களாலும், விஷக்குளவிகள், விஷப் பாம்புகள், வெறிநாய்கள் போன்றவைகளால் ஆபத்து ஏற்படும்போதும் மற்ற எல்லாவித விபத்துக்களின்போதும் உயிரையும், உடைமைகளையும் பாதுகாப்பதில் தங்கள் சேவை முழுவதையும், இவர்கள் இலவசமாகவே அளிக்கின்றனர். பொருட்காட்சிகளிலும், திருவிழாக்களிலும் தீத் தடுப்பு ஏற்பாடுகளை மேற்கொள்வதுடன், சிதைந்த கட்டிடங்களின் இடிபாடுகளில் சிக்கியவர்களையும் ஆழ் கிணற்றில் வீழ்ந்தவர்களையும் வெள்ளத்தில் மூழ்கியவர்களையும் அபாயகரமான விஷக் கொட்டும் பூச்சிகள் ஆகியவற்றால் பாதிக்கப்பட்டவர்களையும் மற்றும் இது போன்ற பிற இடர்களில் சிக்கிய மக்களையும், கால்நடைகளையும் மீட்டு நற்பணி புரிந்து வருகிறது. மிகப் பெரிய நகரங்களிலுள்ள தீயணைப்பு நிலையங்களில் நோயாளர் ஊர்திகளையும் பராமரித்து வரும் இத்துறை, இவ்வூர்திகளின் மூலம் நோயுற்றவர்களையும், காயமுற்றவர்களையும் உடனடி மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்ல குறைந்த கட்டணத்தை வாடகையாகப் பெற்றுக்கொண்டு செயல்படுகிறது. ஏழை எளிய மக்களை இலவசமாக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லவும் பயன்படுத்தப்படுகிறது.



விபத்துக்கள் ஏற்படும் சமயம் தீயணைப்போர்கள் விபத்துக்குள்ளான நபருக்கு முதலுதவி அளிப்பதோடு உடனடியாக அவர்களை மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லவும் உதவுகிறார்கள். அரசுக் கட்டிடங்கள், தொழிற்சாலைகள் முதலியவற்றிற்கு குறிப்பிட்ட காலத்திற்கொரு முறை சென்று ஆய்வு செய்து தீ விபத்திலிருந்து பாதுகாத்துக் கொள்வது பற்றி அறிவுரை வழங்குவதும் இவர்களுடைய பொறுப்பாகும். தீ விபத்தின்போது எல்லாவிதமான உதவியும், நிவாரணமும் அளிப்பதில் இத்துறை தனித் தன்மையுடன் திகழ்கிறது. எரிவாயு சிலிண்டர்களில் ஏற்படும் தவறுதல்கள் காரணமாகத் தீ விபத்து ஏற்படுமென்று அஞ்சி சென்னை மாநகரிலுள்ள இல்லத்தரசிகளிடமிருந்து வரும் அவசர அழைப்புகளுக்கும் சென்று செயல்படுவது போன்ற அனைத்துச் சூழ்நிலைகளிலும் உதவி வேண்டுவோருக்கு இத் துறையினர் உதவி செய்கின்றனர். இவ்விதமாக இத்துறையினர் இரவு பகல் எனப் பாராது எந்நேரத்திலும் பொது மக்களுக்கு உதவுவதற்கெனவே காத்திருக்கின்றனர். தொற்று நோய்கள் பெருவாரியாகப் பரவும் காலங்களில், மக்கள் நல்வாழ்வுத் துறைக்கு இத்துறை பெரிதும் உதவி புரிகிறது. தேர்தல் காலங்களின்போதும், கலவரங்களின்போதும் பந்தோபஸ்து நடவடிக்கைகள் மேற்கொள்ளும்போதும், காவல்துறையினருடன் இணைந்து பணியாற்றத் தீயணைப்புப் பணியாளர்களும் அனுப்பி வைக்கப்படுகின்றனர். இவ்வாறு பலதரப்பட்ட வகையில் மனிதாபிமானத்துடன் பணியாற்றி வரும் இத்துறையைச் சேர்ந்த அலுவலர்கள், பல்வேறு விதிகளின் கீழ் உரிமம் பெறப்பட்ட அல்லது உரிமம் பெறப்பட வேண்டிய பல்வேறு இடங்களையும் ஆய்வு செய்கின்றனர். இவ்விதம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு பற்றிய விவரங்கள் இணைப்பு 1-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

சென்னையில் 1985 ஆம் ஆண்டு நடைபெற்ற அகில இந்திய தொழில் மற்றும் சுற்றுலா பொருட்காட்சியில் தீயணைப்புத் துறை முதல் முதலாகப் பங்கெடுத்துக்கொண்டு மேற்படி பொருட்காட்சியிலேயே சிறந்த அரங்கம் என்ற பரிசு பெற்றதோடு பொது மக்கள் மற்றும் இதர முக்கிய பிரமுகர்களது பாராட்டையும் பெற்றது. மேலும் 1986-ல் நடைபெற்ற அகில இந்தியத் தொழில் மற்றும் சுற்றுலா பொருட்காட்சியில் கலந்து கொண்டு, பொருட்காட்சியிலேயே சிறந்த அரங்கத்திற்கான இரண்டாவது

பரிசு பெற்றது. இந்த ஆண்டு நடைபெறும் பொருட்காட்சியில், இத்துறைக்கான ஒரு தனி அரங்கு நிறுவப்பட்டு, அதில் தீயணைப்புத்துறை பணியாளர்கள் தீ விபத்துக்களில் புரியும் உன்னதமான சாதனைகளை காட்டுவதோடல்லாமல், பொதுமக்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் தீ விபத்துக்களை ஆரம்பத்திலேயே தடுப்பது எப்படி என்பதை செயல் முறைகள் மூலம் விளக்கும் ஒலி, ஒளி போன்ற நிகழ்ச்சிகள் காட்டப்பட்டு வருகின்றன. இதனால் பொதுமக்களிடம் இத்துறையைப் பற்றி நல்ல அபிப்பிராயம் ஏற்பட்டுள்ளது.

**5. நிர்வாக அமைப்பு:**

தமிழ்நாடு தீயணைப்புத்துறை, இயக்குநரைத் தலைவராகக் கொண்டு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இம்மாநிலம் மூன்று மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒன்று சென்னையையும் இரண்டாவது மதுரையையும் மூன்றாவது திருச்சியையும் தலைமையிடமாகக் கொண்டு தனித்தனி துணை இயக்குநரின் கீழ் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டலமும் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கோட்டமும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்டு ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் கீழ் செயல்பட்டு வருகிறது. கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கு நிர்வாக மற்றும் செயல் பணிகளில் உதவிக் கோட்டத் தீயணைப்பு அலுவலர் உதவி புரிகிறார். அண்மையில் பல புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டதின் விளைவாக, ஒரு கோட்ட தீயணைப்பு அலுவலரின் அதிகார வரம்பிற்குட்பட்ட தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை அதிகமாகிவிட்டது. படிப்படியாக நிர்வாகத் திறமையினை அதிகரிக்கும் நோக்கத்துடன் தற்போதுள்ள கோட்டங்களை மேற்கொண்டு கீழ்க்கண்டவாறு பிரிக்க அரசு நடவடிக்கை எடுத்தது.



| பிரிப்பதற்கு முன் இருந்த கோட்டத்தின் பெயர். | ஆண்டு | பிரிக்கப்பட்ட பின் கோட்டத்தின் பெயர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 சேலம்-தர்மபுரி-வட ஆற்காடு கோட்டம். | 1982 | 1 சேலம்-தர்மபுரி கோட்டம்.<br>2 வடஆற்காடு கோட்டம். |
| 2 திருநெல்வேலி-கன்னியாகுமரி—இராமநாதபுரம் கோட்டம். | 1982 | 1 திருநெல்வேலி—கன்னியாகுமரி கோட்டம்.<br>2 இராமநாதபுரம் கோட்டம். |
| 3 திருச்சி-புதுக்கோட்டை-தஞ்சாவூர் கோட்டம். | 1983 | 1 திருச்சி-புதுக்கோட்டை கோட்டம்.<br>2 தஞ்சாவூர் கோட்டம். |
| 4 தென்னாற்காடு-செங்கற்பட்டு கோட்டம். | 1985 | 1 தென்னாற்கா கோட்டம்.<br>2 செங்கற்பட்டு கோட்டம். |
| 5 மதுரை கோட்டம் | 1985 | 1 மதுரை கோட்டம்.<br>2 அண்ணா கோட்டம். |
| 6 திருநெல்வேலி—கன்னியாகுமரி கோட்டம். | 1986 | 1 திருநெல்வேலி கோட்டம்.<br>2 கன்னியாகுமரி கோட்டம். |
| 7 திருநெல்வேலி கோட்டம். | 1986 | 1 திருநெல்வேலி கோட்டம்.<br>2 சிதம்பரனார் கோட்டம். |

[1987 மே 4

6. தீயணைப்பு நிலையங்கள்: இம்மாநிலத்தில் 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி 28 ஆம் நாள் நிலவரப்படி மொத்தம் 155 தீயணைப்பு நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றில் 22—3—1986 நாளில் திறக்கப்பட்ட ஒரு தீயணைப்பு நிலையமும் கடந்த நிதி ஆண்டில் திறக்கப்பட்ட 17 தீயணைப்பு நிலையங்களும் அடங்கும். (விவரங்கள் இணைப்பு 2-ல் கொடுக்கப்பட்டுள்ளன). இவைகளில் 21 தீயணைப்பு நிலையங்கள் சென்னையிலும் இதர 134 தீயணைப்பு நிலையங்கள் மாநிலத்தின் மற்ற பகுதிகளிலும் அமைக்கப்பட்டுள்ளன. மற்றும் 18 புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்க அரசு ஆணையிட்டுள்ளது. அரசு போக்குவரத்துக் கழக நிறுவனங்களிடம் தீயணைப்புத் துறை உபயோகத்திற்காக ஊர்திகளுக்கு நீர்த்தாங்கி வண்டிகள் கட்டுமானம் செய்வதற்காக ஒப்படைக்கப்பட்டுள்ள புதிய ஊர்திகள் தயார் ஆனவுடன் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 18 இடங்களிலும் புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்படும் (விவரங்கள் இணைப்பு 3-ல் கொடுக்கப்பட்டுள்ளன). புதிய தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட வேண்டிய முன்னுரிமைப் பட்டியலில் உள்ள நகரங்கள் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

7. பணியாளர் எண்ணிக்கை.—1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 28 ஆம் நாள் நிலவரப்படி தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் 5,236 பணியாளர்கள் பணி புரிகின்றனர். செயல் மற்றும் நிர்வாகப் பணியாளர்களின் எண்ணிக்கை விவரம் இணைப்பு 5-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

8. தீ விபத்து அழைப்புகள்.—1986 ஆம் ஆண்டில் இம்மாநிலத்திலுள்ள தீயணைப்பு நிலையங்களுக்கு 9,262 தீ விபத்து அழைப்புகள் வந்தன. மேற்படி தீ விபத்து அழைப்புகளில் 116 பெருந் தீ விபத்து அழைப்புகளாகும். இவை ஒவ்வொன்றிலும் ரூ. 50,000-க்கு மேற்பட்ட உடைமைகளுக்குச் சேதமோ அல்லது உயிரிழப்போ ஏற்பட்டது. இத் துறை தீயணைப்புப் பணியில் ஈடுபட்டு, கீழ்க்கண்ட முகவரிகளில் ஏற்பட்ட தீ விபத்துக்களில் எண்ணிலடங்கா உயிரினங்களைக் காப்பாற்றியது குறிப்பிடத்தக்கது.

1. 9—8—1986 அன்று நாகப்பட்டினம், மருந்து கொத்தலம் நொறுங்கிய இடத்திலும்



1987 மே 4]

2. 8—12—1986 அன்று சென்னை அண்ணா சாலையிலுள்ள வசந்தம் ரெஸ்டாரெண்ட் மற்றும் பேட்டா நிறுவனத்திலும்

இம்மாநிலத்தில் ஏற்பட்ட தீ விபத்துக்களினால் அழிந்துவிட்ட அல்லது சேதம் அடைந்த உடைமைகளின் தோராய மதிப்பு ரூ. 6.55 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தீயின் அழிவினின்றும் காப்பாற்றப்பட்ட உடைமைகளின் தோராய மதிப்பு ரூ. 56.67 கோடியாகும்.

9. உயிர் மீட்பு மற்றும் அவசர அழைப்புகள்.—1986 ஆம் ஆண்டில் 1995 அவசர மற்றும் மீட்பு அழைப்புகளை இத்துறை ஏற்றது. 8,340 நபர்களையும், 1,788 கால்நடைகளையும் இத்துறை மீட்டுக் காப்பாற்றியுள்ளது. 1986-87-ல் வடகிழக்கு பருவக் காலத்தில் 5 (ஐந்து) மீட்பு பணிகளை இத்துறை ஏற்றது.

10. நோயாளர்களைக் கொண்டு செல்லும் ஊர்தி.—ஒவ்வொரு நகரத்தின் தேவைக்கேற்ப அவசர சிகிச்சைக்கென நோயாளிகளை உடனுக்குடன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லும் ஊர்திகளும் சில தீயணைப்பு நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவ்வூர்திகள் 1986-87 ஆம் ஆண்டில் 4,100 அழைப்புகளை ஏற்றன. இவற்றில், கட்டண அழைப்புகளின் எண்ணிக்கை 3,795 ஆகும். நோயாளர் ஊர்திகளில் நோய்வாய்ப்பட்டவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனைக்குக் கொண்டு சென்றதற்காக வாடகை கட்டணமாக ரூ. 1,93,390 வசூலிக்கப்பட்டது.

11. ஊர்திகளும் சாதனங்களும்.—இத்துறையில் ஒரே ஒரு விபத்து உதவி வண்டி உள்ளது. இது, தென் சென்னைக் கோட்டத்தைச் சார்ந்த எழும்பூர் தீயணைப்பு நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சாலை விபத்துக்களில் கவிழ்ந்து சிதைந்த ஊர்திகளைத் தூக்கி அகற்றவும், இழுத்துச் செல்லவும், இடிந்த கட்டிடங்களில் மீட்புப் பணியின்போது அதிக எடையுள்ள கட்டிடப் பகுதிகளை அகற்றவும் ஏற்றவாறு இவ்வூர்தியில் தனித் துணை பாகங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

பலமாடிக் கட்டிடங்களில் ஏற்படும் தீ விபத்துக்களின்போது தீத் தடுப்பு மற்றும் மீட்புப் பணிகளுக்காக 1980 ஆம் ஆண்டு "ஸ்நார்க்கல்" என்ற நவீன வசதிகள் கொண்ட ஒரு ஊர்தி இங்கிலாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு சென்னை மாநகருக்கு வழங்கப்பட்டது. இப்புதிய ஊர்தி சென்னை மாநகரம் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் ஏற்படும் சில பெருந் தீ விபத்துக்கள் மற்றும் குடிசை தீ விபத்துக்களின்போது பங்கேற்று பணியாற்றுவதில் இத்துறைக்கு பெரிதும் உதவி புரிந்தது

துறை ஊர்திகள், சாதனங்கள் பெருமளவில் பழுதாகும்போது அவற்றைச் செப்பனிடுவதற்காகச் சென்னையில், மாநிலப் பட்டறையை இத்துறை பராமரித்து வருகிறது. மேலும், இத்துறையின் மாநிலப் பட்டறையை புனரமைக்கும் முகமாகவும் இப் பட்டறை செம்மையாக இயங்கவும் ஓர் உதவிப் பொறியாளர் (தானியங்கி) பதவி ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

12. **பயிற்சி.**—சென்னையிலுள்ள தமிழ்நாடு தீயணைப்புத் துறை மாநிலப் பயிற்சிப் பள்ளி நேரடியாக நியமிக்கப்பட்ட அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சியளித்து வருகிறது. இப்பயிற்சிப் பள்ளி ஒரு கோட்டத் தீயணைப்பு அலுவலரின் பொறுப்பில் செயல்பட்டு வருகிறது. கோட்டத் தீயணைப்பு அலுவலருக்கு, அவரது பணிகளில் நிலையத் தீயணைப்பு அலுவலர் இருவரும் மற்றும் முன்னணித் தீயணைப்போர் இருவரும் உதவி புரிகின்றனர். இப்பயிற்சி வகுப்புகளில் சென்ற ஆண்டில் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கை விவரங்கள் கீழே வருமாறு :—

| | **துறையைச் சார்ந்தவர்கள்.** | **மற்றவர்கள்.** |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **நிலைய தீயணைப்பு அலுவலர் பயிற்சி.** | **68** | .. |
| **தீயணைப்போர் பயிற்சி ..** | **188** | **38** |



| | துறையைச் சார்ந்தவர்கள். | மற்றவர்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| **தீயணைப்போர் ஓட்டி பயிற்சி** | 45 | .. |
| **இயந்திரக் கம்மியர் ஓட்டி பயிற்சி.** | 14 | .. |

1986ஆம் ஆண்டு மூன்று அலுவலர்கள் கீழ்க்கண்ட பயிற்சிகளுக்கு, நாகபுரி தேசிய தீயணைப்புக் கல்லூரிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்:—

| | |
|---|---|
| கோட்ட அலுவலர் பயிற்சி | 1 |
| நிலைய அலுவலர்கள் மற்றும் போதனையாளர் பயிற்சி | 2 |

13. **வெகுமதிகள்.**—தீயணைப்புத் துறையில் பணியாளர்களுக்கு 1986–87 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பதக்கங்கள் வழங்கப்பட்டன:—

**இந்திய அரசின் பதக்கங்கள்:**

தன்னிகரற்ற பணி புரிந்தமைக்காக, மைய அரசின் தீயணைப்புத்துறை பதக்கங்கள் மூன்று நிலைய தீயணைப்பு அலுவலர்களுக்கும் ஒரு முன்னணித் தீயணைப்போருக்கும் ஓர் இயந்திரக் கம்மியர் ஓட்டுநருக்கும், இரண்டு தீயணைப்போர் ஓட்டுநருக்கும், 2 தீயணைப்போர்களுக்கும் 1986ஆம் ஆண்டு சுதந்திர தினத்தன்று வழங்கப்பட்டன.

மேலும் தன்னிகரற்ற பணி புரிந்தமைக்காக தீயணைப்புத் துறை பதக்கங்கள் ஒரு தீயணைப்பு அலுவலருக்கும் 2 முன்னணி தீயணைப்போருக்கும் 1987 ஆம் ஆண்டு குடியரசு தினத்தன்று வழங்கப்பட்டன.

**மாநில அரசின் பதக்கங்கள்:**

1986ஆம் ஆண்டு செப்டம்பர் 15ஆம் நாள் அண்ணா பிறந்த நாளன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காவல்துறை பதக்கங்கள் ஒரு கோட்ட தீயணைப்பு அலுவலருக்கும், ஒரு நிலைய அலுவலருக்கும் (போக்குவரத்து), இரண்டு நிலைய தீயணைப்பு அலுவலருக்கும், 3 முன்னணித் தீயணைப்போருக்கும், 2 தீயணைப்போர் ஓட்டுநர்களுக்கும், ஒரு தீயணைப்போருக்கும் வழங்கப்பட்டன.

1987ஆம் ஆண்டு பொங்கல் நாளன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தீயணைப்புத் துறைக்கான பதக்கங்கள் 14 முன்னணித் தீயணைப்போர்களுக்கும், 5 இயந்திர கம்மியர் ஓட்டுநருக்கும், 21 தீயணைப்போர் ஓட்டுநருக்கும், 80 தீயணைப்போர்களுக்கும் வழங்கப்பட்டன.

14. செயல்திறனை அதிகரிப்பதற்காகச் செயற்படுத்தப்பட்ட சில திட்டங்கள்.—பெரும்பான்மையான தீ விபத்துக்கள் அடிக்கடி குடிசைப் பகுதிகளில் ஏற்படுகின்றன. இதனால் பெரும் இழப்பு ஏற்படுகிறது. தீ விபத்து அடிக்கடி ஏற்படும் காலங்களில் பற்கோல், கூரைத் தீக்கொக்கி முதலிய எளிய தீயணைப்புச் சாதனங்களுடன், 68 தற்காலிக புறநகர் தீயணைப்பு நிலையங்கள், குடிசைப் பகுதிகளில் நிறுவப்பட்டன. இப்புறநகர் தீயணைப்பு நிலையங்களில் எந்நேரமும் தீயணைப்போர் இயங்கி பணி புரிந்து இப்பகுதிகளை விழிப்புடன் கண்காணித்து வந்தனர். இந்த நிலையங்களில் காவல் துறையிலிருந்து மினி காம் செட்டுகள், இரவலாக பெற்று பொருத்தப்பட்டு, செய்திகள் அனுப்பும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தீயணைப்பதில் இந்நிலையங்கள் மிகவும் உதவியாக இருந்ததால் சென்னை மாநகரில் குடிசைப் பகுதிகளில் தீ விபத்து ஏற்படுவது மிகவும் குறைந்து விட்டது இதுபற்றிய விவரம் வருமாறு:—

| ஆண்டு. | தீயணைப்பு அழைப்புகள். |
|---|---|
| 1982 | 886 |
| 1983 | 362 |
| 1984 | 201 |
| 1985 | 80 |
| 1986 | 74 |

15. தீயணைப்புத் துறை சேம நல நிதி.—இயற்கை தீயணைப்புத்துறை பணியாளர்களுக்கு நிதி உதவி செய்யவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் 1962ஆம் ஆண்டில் தமிழ்நாடு தீயணைப்புத்துறை சேம நல நிதி தொடங்கப்பட்டது. காசநோய், தொழுநோய் அல்லது புற்று நோயினால் அவதியுறும் பணியாளர்களுக்கோ அல்லது அவரைச் சார்ந்தவர்களுக்கோ அவர்களின் சத்துணவிற்காகவும், பணியாளர்களுடைய பிள்ளைகளின் உயர் கல்விக்காகவும், பணியாளர்களோ, அவர்களைச் சார்ந்தவர்களோ,



இறக்க நேரிட்டால் அவர்களின் உபகரணம் செலவிற்கும், இந் நிதியிலிருந்து உதவித் தொகை அளிக்கப்படுகிறது. மேலும் எல்லாப் பணியாளர்களுக்கும் பகுதியிலிருந்து ஓய்வு பெறும் சமயம் தலா ரூ. 200 (ரூபாய் இருநூறு மட்டும்) இந்நிதியிலிருந்து அடையாள உதவித் தொகை அளிக்கப்பட்டு வருகிறது. 1986 ஆம் ஆண்டில் 15 ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு அடையாள நிதி உதவித் தொகையாக மொத்தம் ரூ. 3,000 வழங்கப்பட்டுள்ளது. இந்நிதியின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 4,367 ஆகும். 1986 ஆம் ஆண்டில் உறுப்பினர்களிடமிருந்து வசூலிக்கப்பட்ட மொத்த சந்தா தொகை ரூ. 73,104.05. 1986 ஆம் ஆண்டில், இந்நிதியிலிருந்து 231 உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட்ட உதவித் தொகையின் மதிப்பு ரூ. 35,747.95. இந் நிதிக்கான அரசின் மானியத்தை ரூ. 10,000-லிருந்து ரூ. 50,000 ஆக உயர்த்தி 1985 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகிறது.

16. நலன்.—உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர் பதவி அதற்கு கீழ்நிலைப் பதவிகளிலுள்ள பணியாளர்களுக்கு சில இன்றியமையாத உணவுப் பொருட்களை காவலர்களுக்கு வழங்குவது போன்று அரசு மலிவு விலையில் வழங்குகின்றது. இத் திட்டம் 1-1-1981 முதல் அமுலுக்கு வந்துள்ளது. இதற்காக கடந்த மூன்று ஆண்டுகளில் அரசு செய்துள்ள செலவுத் தொகையின் விவரம் பின்வருமாறு:—

| நிதியாண்டு. | செலவுத் தொகை (ரூபாய் இலட்சத்தில்.) |
|---|---|
| 1983-84 | 12.61 |
| 1984-85 | 14.49 |
| 1985-86 | 27.26 |
| 1986-87 | 28.76 |
| | (31—1—1987 வரை.) |

(2) அனைத்து அலுவலர்கள், மற்றும் பணியாளர்களுக்கு குடியிருப்பு வசதியளிக்கும் நோக்கத்துடன் மூநற்கல் தீயணைப்பு பணியாளர்களுக்கு ரூ. 40.50 இலட்சம் செலவில் உடுமலைப் பேட்டை, இராணிப்பேட்டை, சிவகாசி ஆகிய இடங்களில் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு பணியாளர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ் மற்ற நகரங்களிலுள்ள பணியாளர்களுக்கும் படிப்படியாக குடியிருப்பு வசதி செய்து தர திட்டமிடப்பட்டுள்ளது.

(3) கடந்த ஆண்டு தீயணைப்புத்துறை பணியாளர்கள் மற்றும் அலுவலர்கள் சம்பந்தமாக அரசு அளித்த சலுகைகளின் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

(i) தீயணைப்புத் துறையில் பணிபுரியும் உதவிக் கோட்ட தீயணைப்பு அலுவலர் மற்றும் அதற்கு கீழ் நிலையில் பணியாற்றும் பணியாளர்களுக்கு ஆண்டு ஒன்றிற்கு ஒவ்வொருவருக்கும் ஒரு செட் டெரிக்காட்டன் சீருடைகள் வழங்க ஆணையிடப்பட்டது.

(ii) தீயணைப்புத் துறையில் பணிக்காலத்தில் மரணமடைந்த வாரிசுதாரர்களின் குழந்தைகளுக்கு தீயணைப்போராக பணியமர்த்த தேவையான உடற்கூறு அளவுகளில், உயரம் மற்ற மார்பளவில் 1 செ. மீ. குறைவாக இருந்தாலும், தீயணைப்போராக பணியமர்த்தும் தேர்வில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

17. கடந்த ஆண்டு தீயணைப்புத்துறை பணியாளர்களுக்கு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்பின் விவரங்களும், அவைகள் நிறைவேற்றப்பட்ட விவரங்களும் இணைப்பு 6-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

18. பொது:

1986 ஆம் ஆண்டில், திருச்சியை தலைமையிடமாகக் கொண்ட மத்திய மண்டலம் என்ற புதிய மண்டலம் ஒன்று தோற்றுவிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி—கன்னியாகுமரி கோட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு, பாளையங்கோட்டையை தலைமையிடமாகக் கொண்ட திருநெல்வேலி கோட்டம் ஒன்றும், நாகர்கோவிலை தலைமையிடமாகக் கொண்ட கன்னியாகுமரி



கோட்டம் ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டன. அதன் பின்னர், திருநெல்வேலி கோட்டத்தை இரண்டாகப் பிரித்து, பாளையங் கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு திருநெல்வேலி கோட்டம் ஒன்றும், தூத்துக்குடியைத் தலைமையிடமாகக் கொண்டு சிதம்பரனார் கோட்டம் என மற்றொன்றும் தோற்றுவிக்கப்பட்டன.

இவ்வாறாக, தீயணைப்புத்துறை பொது மக்களுக்கு பயனுள்ள வகையில் தொடர்ந்து நற்பணியாற்றி வருகிறது.

## இணைப்பு 1.

தீயணைப்புப் பணியாளர்களால் பல்வேறு விதி மற்றும் சட்டங்களின் கீழ் ஆய்வு செய்யப்பட்ட இடங்களின் விவரங்கள்:—

| சட்டங்கள். | ஆய்வு செய்யப்பட்ட கட்டிடங்களின் எண்ணிக்கை. |
|---|---|
| (அ) தமிழ்நாடு திரைப்பட ஒழுங்குமுறை விதிகள் | 337 |
| (ஆ) 1948ஆம் ஆண்டு திரைப்படக் கருவிகள் விதிகள் | 133 |
| (இ) பொதுமக்கள் கூடுமிடங்கள் குறித்த சட்டம் | 192 |
| (ஈ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம்—மாநகராட்சிகள் சட்டம் | 1,080 |
| (உ) தமிழ்நாடு மாவட்ட குழுக்கள் சட்டம்—தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் | 747 |
| (ஊ) தொழிற்சாலை விதிகள் | 949 |
| (எ) ஆய்வு செய்யப்பட்ட அரசு கட்டிடங்கள் | 938 |
| (ஏ) படைக்கலச் சட்டம்—விதிகள் கீழ் ஆய்வு செய்யப்பட்டவை | 402 |



## இணைப்பு 2.

28-2-1987 நாள் நிலவரப்படி இயங்கும் தீயணைப்பு நிலையங்களின் எண்ணிக்கை.

| மாவட்டத்தின் பெயர். | செயல்படும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **வட மண்டலம், சென்னை.** | |
| **சென்னை மாநகர் (வடக்கு) கோட்டம்.** | |
| சென்னை மாநகர் | வண்ணாரப்பேட்டை |
| | எஸ்பிளனேடு |
| | இராயபுரம் |
| | வியாசர்பாடி |
| | செம்பியம் |
| | கீழ்ப்பாக்கம் |
| | வேப்பேரி |
| | தண்டையார்பேட்டை |
| | வ.உ.சி. நகர் |
| செங்கற்பட்டு | எண்ணூர் |
| | மணலி |
| **சென்னை மாநகர் (தெற்கு) கோட்டம்.** | |
| சென்னை மாநகர் | எழும்பூர் |
| | திருவல்லிக்கேணி |
| | மைலாப்பூர் |
| | தேனாம்பேட்டை |
| | அசோக் நகர் |

| மாவட்டத்தின் பெயர். | செயல்படும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| | சைதாப்பேட்டை |
| | கிண்டி |
| | கிண்டி ஆளுநர் மாளிகை வளாகம் |
| செங்கற்பட்டு | தாம்பரம் |
| | அம்பத்தூர் |
| **தென்னாற்காடு கோட்டம்.** | |
| தென்னாற்காடு | சிதம்பரம் |
| | கடலூர் |
| | நெல்லிக்குப்பம் |
| | பண்ருட்டி |
| | விருத்தாசலம் |
| | வேப்பூர் |
| | கள்ளக்குறிச்சி |
| | திருக்கோவிலூர் |
| | உளுந்தூர்பேட்டை |
| | விழுப்புரம் |
| | திண்டிவனம் |
| | செஞ்சி |
| | காட்டுமன்னார்கோவில் |



| மாவட்டத்தின் பெயர். | செயல்படும் தீயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **செங்கற்பட்டு கோட்டம்.** | |
| செங்கற்பட்டு | காஞ்சிபுரம் |
| | ஸ்ரீபெரும்புதூர் |
| | மதுராந்தகம் |
| | செங்கற்பட்டு |
| | திருவள்ளூர் |
| | கும்மிடிப்பூண்டி |
| | மறைமலை நகர் |
| **வட ஆற்காடு கோட்டம்.** | |
| வட ஆற்காடு | வேலூர் |
| | இராணிப்பேட்டை (சிப்காட்) |
| | இராணிப்பேட்டை (சிப்காட்) |
| | அரக்கோணம் |
| | வந்தவாசி |
| | ஆரணி |
| | திருவண்ணாமலை |
| | செங்கம் |
| | திருப்பத்தூர் |
| | வாணியம்பாடி |
| | ஆம்பூர் |
| | குடியாத்தம் |
| | போளூர் |
| | சோளிங்கர் |
| | நாட்டறம்பள்ளி |

| மாவட்டத்தின் பெயர். | செயல்படும் இயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **மத்திய மண்டலம், திருச்சிராப்பள்ளி.** | |
| **சேலம்—தர்மபுரி கோட்டம்.** | |
| சேலம் | சேலம் |
| | சேலம் உருக்காலை |
| | திருச்செங்கோடு |
| | ஆத்தூர் |
| | மேட்டூர் |
| | நாமக்கல் |
| | இராசிபுரம் |
| தருமபுரி | தருமபுரி |
| | ஓசூர் (சிப்காட்) |
| | கிருஷ்ணகிரி |
| | அரூர். |
| **திருச்சிராப்பள்ளி—புதுக்கோட்டை கோட்டம்.** | |
| திருச்சிராப்பள்ளி | திருச்சிராப்பள்ளி |
| | ஸ்ரீரங்கம் |
| | முசிறி |
| | துறையூர் |
| | பெரம்பலூர் |
| | ஜெயங்கொண்ட சோழபுரம் |
| | கரூர் |
| | மணப்பாறை |
| | அரியலூர் |



| மாவட்டத்தின் பெயர். | செயல்படும் இயணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| புதுக்கோட்டை. | புதுக்கோட்டை |
| | அறந்தாங்கி |
| | பொன்னமராவதி |
| | ஆலங்குடி |
| **தஞ்சாவூர் கோட்டம்.** | |
| தஞ்சாவூர் | தஞ்சாவூர் |
| | கும்பகோணம் |
| | மன்னார்குடி |
| | நாகப்பட்டினம் |
| | திருவாரூர் |
| | நன்னிலம் |
| | மயிலாடுதுறை |
| | பட்டுக்கோட்டை |
| | ஒரத்தநாடு |
| | சீர்காழி |
| | திருத்துறைப்பூண்டி |
| | பேராவூரணி |
| **கோயம்புத்தூர்—பெரியார்—நீலகிரி கோட்டம்.** | |
| கோயம்புத்தூர் | கோயம்புத்தூர் (தெற்கு) |
| | கோயம்புத்தூர் (வடக்கு) |
| | மேட்டுப்பாளையம் |
| | திருப்பூர் |
| | பொள்ளாச்சி |
| | உடுமலைப்பேட்டை |

[1987 மே 4

| மாவட்டத்தின் பெயர். | செயல்படும் தியணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| பெரியார் | ஈரோடு |
| | தாராபுரம் |
| | காங்கேயம் |
| | கோபிச்செட்டி பாளையம் |
| | சத்தியமங்கலம் |
| நீலகிரி | கூடலூர் |
| | உதகமண்டலம் |
| | குன்னூர் |

தென்மண்டலம், மதுரை.

மதுரைக் கோட்டம்.

| | |
|---|---|
| மதுரை | மதுரை |
| | தல்லாகுளம் |
| | மேலூர் |
| | உசிலம்பட்டி |
| | பெரியகுளம் |
| | தேனி—அல்லிநகரம் |
| | ஆண்டிப்பட்டி |
| | மயிலாடும்பாறை |
| | உத்தமபாளையம் |
| | போடிநாயக்கனூர் |
| | திருமங்கலம் |
| | கம்பம் |
| | சோழவந்தான் |



1987 மே 4]

| மாவட்டத்தின் பெயர். | செயல்படும் தியணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |

அண்ணா கோட்டம்.

| | |
|---|---|
| அண்ணா | நத்தம் |
| | வத்தலக்குண்டு |
| | திண்டுக்கல் |
| | பழனி |
| | ஒட்டன்சத்திரம் |

இராமநாதபுரம் கோட்டம்.

| | |
|---|---|
| இராமநாதபுரம் | இராமநாதபுரம் |
| | இராமேஸ்வரம் |
| | கமுதி |
| | பரமக்குடி |
| பசும்பொன் முத்துராமலிங்கம் | காரைக்குடி |
| | தேவக்கோட்டை |
| | சிவகங்கை |
| | சிங்கம்புணரி |
| | திருப்பத்தூர் |
| காமராஜர் | ஸ்ரீவில்லிப்புத்தூர் |
| | ராஜபாளையம் |
| | சாத்தூர் |
| | சிவகாசி |
| | அருப்புக்கோட்டை |
| | விருதுநகர் |

| மாவட்டத்தின் பெயர். | செயல்படும் தியணைப்பு நிலையங்களின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| **திருநெல்வேலி கோட்டம்.** | |
| திருநெல்வேலி-கட்டபொம்மன் | பாளையங்கோட்டை. |
| | திருநெல்வேலி (பேட்டை.) |
| | தென்காசி |
| | கடையநல்லூர் |
| | நாங்குனேரி |
| | அம்பாசமுத்திரம் |
| **கன்னியாகுமரி கோட்டம்.** | |
| கன்னியாகுமரி | நாகர்கோவில் |
| | கன்னியாகுமரி |
| | குழித்துறை |
| | குலசேகரம் |
| **சிதம்பரனார் கோட்டம்.** | |
| சிதம்பரனார் | கோவில்பட்டி |
| | தூத்துக்குடி |
| | தூத்துக்குடி அனல் மின் நிலையம் |
| | திருச்செந்தூர் |
| | சாத்தான்குளம் |
| | ஸ்ரீவைகுண்டம் |



## இணைப்பு 3.

அரசினரால் ஏற்கெனவே ஒப்பளிக்கப்பட்டு இன்னும் தொடங்கப் படாமல் உள்ள தீயணைப்பு நிலையங்களின் பட்டியல்.

| மாவட்டத்தின் பெயர். | தீயணைப்பு நிலையத்தின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 1. சேலம் | சங்ககிரி<br>ஏற்காடு |
| 2. திருச்சிராப்பள்ளி | அரவக்குறிச்சி |
| 3. இராமநாதபுரம் | வத்திராயிருப்பு |
| 4. கன்னியாகுமரி | பத்மநாபபுரம் அல்லது தக்கலை |
| 5. கோயம்புத்தூர் | வால்பாறை |
| 6. மதுரை | கொடைக்கானல் |
| 7. அண்ணா | வேடசந்தூர் |
| 8. திருநெல்வேலி கட்டபொம்மன் | சங்கரன்கோவில் |
| 9. சிதம்பரனார் | விளாத்திகுளம் |
| 10. வட ஆற்காடு | செய்யார் |
| 11. தென் ஆற்காடு | திட்டக்குடி<br>குறிஞ்சிப்பாடி |

[1987 மே 4

| மாவட்டத்தின் பெயர். | தீயணைப்பு நிலையத்தின் பெயர். |
|---|---|
| (1) | (2) |
| 12. புதுக்கோட்டை | திருமயம்<br>கீரனூர் |
| 13. தஞ்சாவூர் | பாபநாசம்<br>திருக்காட்டுப்பள்ளி |
| 14. செங்கல்பட்டு | செங்குன்றம் |

## இணைப்பு 4.

### தீயணைப்பு நிலையங்கள் தொடங்குவதற்கான முன்னுரிமைப் பட்டியலிலுள்ள நகரங்கள்.

1. சேலம் (ஹஸ்தம்பட்டி)
2. தஞ்சாவூர் (2-வது தீயணைப்பு நிலையம்)
3. ஊத்தங்கரை
4. கழுகுமலை
5. முதுகுளத்தூர்
6. பவானி
7. பாலக்கோடு
8. உத்திரமேரூர்
9. புல்லம்பாடி
10. இலுப்பூர்
11. கடமலைக்குன்று
12. சங்கராபுரம்



1987 மே 4]

13. பொன்னேரி
14. குடவாசல்
15. பென்னாகரம்
16. திருவிடைமருதூர்
17. கொல்லிமலை
18. ஜவ்வாதுமலை
19. கல்ராயன்மலை
20. தரங்கம்பாடி
21. வாசுதேவநல்லூர்
22. நிலக்கோட்டை
23. புதூர் வேலாயுதம்பாளையம்
24. வானூர்
25. சென்னிமலை
26. வேளச்சேரி
27. செங்கோட்டை
28. கோத்தகிரி
29. வள்ளியூர்
30. தண்டராம்பட்டு
31. கொட்டாம்பட்டி

## இணைப்பு 5.

1987 ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் இருபத்தெட்டாம் நாள் நிலவரப்படி தமிழ்நாடு தீயணைப்புப் படைப் பணியாளர்களின் எண்ணிக்கை.

| வரிசை எண்ணும் பதவிப் பெயரும். | பதவி எண்ணிக்கை |
|---|---|
| (1) | (2) |
| 1. தீயணைப்புத் துறை இயக்குநர் | 1 |
| 2. தீயணைப்புத் துறை துணை இயக்குநர்கள் | 3 |
| 3. கோட்டத் தீயணைப்பு அலுவலர்கள் | 15 |
| 4. உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர் | 16 |
| 5. உதவி கோட்டத் தீயணைப்பு அலுவலர் (போக்குவரத்து). | 1 |
| 6. நிலைய தீயணைப்பு அலுவலர்கள் | 171 |

| வரிசை எண்ணும் பதவிப் பெயரும். | பதவி எண்ணிக்கை. |
|---|---|
| (1) | (2) |
| 7. நிலைய அலுவலர் (போக்குவரத்து) | 12 |
| 8. உதவி நிலைய தீயணைப்பு அலுவலர்கள் | 15 |
| 9. முன்னணித் தீயணைப்போர்கள் | 555 |
| 10. ஓட்டுநர் இயந்திரக் கம்மியர் | 176 |
| 11. தீயணைப்போர் கம்மியர் | 8 |
| 12. தீயணைப்போர் ஓட்டுநர்கள் | 830 |
| 13. பற்றவைப்பாளர் (வெல்டர்) | 1 |
| 14. தீயணைப்போர் தச்சர் | 1 |
| 15. தீயணைப்போர் (அதற்கு நிகரான பதவித் தரத்திலுள்ளவர்கள்). | 3,230 |
| மொத்தம் | 5,035 |

நிர்வாகப் பணியாளர்கள்—

| | |
|---|---|
| 1. தீயணைப்புத்துறை இயக்குநரின் நிர்வாக நேர்முக உதவியாளர் | 2 |
| 2. கண்காணிப்பாளர்கள் (தேர்வு நிலை) | 2 |
| 3. கண்காணிப்பாளர்கள் | 18 |
| 4. உதவியாளர்கள் | 46 |
| 5. இளநிலை உதவியாளர்கள் | 51 |
| 6. சுருக்கெழுத்து தட்டச்சர்கள் | 4 |
| 7. தட்டச்சர்கள் | 18 |
| 8. பதிவுக்கட்டறை எழுத்தர்கள் | 17 |
| 9. அடிப்படை பணியாளர்கள் | 43 |
| மொத்தம் | 201 |



## இணைப்பு 6.

கடந்த ஆண்டு தீயணைப்புத் துறையினருக்கு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் விவரங்களும் அவை நிறைவேற்றப்பட்ட விவரங்களும்.

| அறிவிப்பு | நிறைவேற்ற ஆணையிடப்பட்ட அரசாணை எண்ணும் நாளும் |
|---|---|
| (1) | (2) |
| தமிழ்நாடு தீயணைப்புத் துறையில் ஆண்டுதோறும் கோட்ட விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு ஆகும் செலவினத்தொகை ரூ. 750-ஐ ரூ. 1,000 ஆக உயர்த்துதல் | 9—7—1986 ஆம் நாளிட்ட உள்துறை அரசாணை எண் 1741. |
| தமிழ்நாடு தீயணைப்புத் துறை இசைமேளக் குழுவிற்கு அரசு ஒவ்வொரு ஆண்டும் அளித்து வரும் ஈடான மானியத் தொகையான ரூ. 1,200-ஐ முற்றிலும் மான்யமாக மாற்றியமைக்க அரசு ஒப்புதலளிக்கிறது. | 19—6—1986 ஆம் நாளிட்ட உள்துறை அரசாணை எண் 1516. |
| தீயணைப்புத் துறையில் நிர்வாகத் திறனை அதிகரிக்கும் நோக்கத்தோடு தற்போதுள்ள திருநெல்வேலி கன்னியாகுமரி கோட்டத்தை இரண்டாகப் பிரிக்க அரசு ஒப்புதலளிக்கிறது. | 9—7—1986 ஆம் நாளிட்ட உள்துறை அரசாணை எண் 1745. |

| அறிவிப்பு | நிறைவேற்ற ஆணை பிடப்பட்ட அரசாணை எண்ணும் நாளும் |
|---|---|
| (1) | (2) |
| 4. தமிழ்நாட்டில் தேர்ந்தெடுத்த 10 தீயணைப்பு நிலையங்களுக்கு கட்டுப்பாட்டு அறையை நிர்வகிப்பதற்கு 10 முன்னணித் தீயணைப்போர் பதவிகளை ஏற்படுத்த அரசு ஒப்புதலளிக்கிறது. | 12—6—1986 ஆம் நாளிட்ட உள்துறை அரசாணை எண் 1487. |
| 5. தமிழ்நாடு தீயணைப்புத் துறை தீயணைப்பு நிலையங்களில் வான் தந்தி தொடர்பு வசதிகளை வலுப்படுத்தி நவீனப்படுத்த அரசு ஒப்புதலளிக்கிறது. | 19—6—1986 ஆம் நாளிட்ட உள்துறை அரசாணை எண் 1547. |
| 6. தமிழ்நாடு தீயணைப்புத் துறை தலைமையகத்தில் மூன்றாவது தணிக்கைக் குழு ஒன்று அமைக்க அரசு ஒப்புதலளிக்கிறது. | 12—6—1986 ஆம் நாளிட்ட உள்துறை அரசாணை எண் 1488. |
| 7. தமிழ்நாட்டில் கீழ்க்கண்ட 9 இடங்களில் புதிய தீயணைப்பு நிலையங்கள் துவங்கப்படும். | தீயணைப்பு நிலையங்கள் தொடங்குவதற்கான முன்னுரிமைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. |



1987 மே 4]

1. சங்காரபுரம்
2. குடவாசல்
3. பொன்னேரி
4. உத்திரமேரூர்
5. பெண்ணாகரம்
6. வாசுதேவநல்லூர்
7. புள்ளம்பாடி
8. கொட்டாம்பட்டி
9. தண்டராம்பட்டு.

சென்னை-600 008. 136530